## போலீசே இல்லை! கர்த்தரே காவல்துறையான அதிசயம்!
## 9 1/2 பவுன் நகையை மீட்டுத் தந்த அதிசய தேவன்.



எனது பெயர் ஜெனிதா, திருவரம்பு பகுதியில் நான் வாழ்க்கைப் பட்டேன். என்னுடைய பூட்டிய வீட்டிலிருந்து 9 1/2 பவுன் நகை திருட்டு போனது. காவல்துறையிலும் புகார் கொடுத்தேன். யாரையும் சந்தேகப்பட முடியவில்லை. மனம் கசிந்து அழுதேன்.

திடீர் என்று ஜீவஒளி ஜெபக் கோபுரம் புத்தகத்தைப் நான் படித்த போது எனக்கு அதிக நம்பிக்கை கூடியது. ஊழியக்காரர் ஜேப்பியாரிடம் இந்த விபரத்தை எல்லாம் சொன்னேன்.

அவர் சொன்னார் காவல்துறைக்கு நீ போகக் கூடாது ஆனாலும் கர்த்தர் சத்துருவுக்கு பயத்தை உண்டாக்கி நகைளை மீட்டுத்தருவார் என்று நம்பிக்கையாய்ப் பேசினார். ஏப்ரல் மாத உபவாசக் கூட்டத்துக்க நான் சென்றேன். ஜெப முடிவில் சொன்னால் உனக்கு நகை கிடைக்கும் நீ பயப்படாமல் போ என்றார்.

மே மாதம் 5-ம் தேதி கூட்டத்தில் கடந்து சென்றேன். ஜெபமுடிவில் ஒரு பெண் ஸ்திரீயை அடையாளம் காட்டுகிறார். நான் சொல்லும்போது நீ ஒரு சகோதரனை அழைத்துக் கொண்டு போ! கர்த்தர் பயத்தையும் நடுக்கத்தையும் கலக்கத்தையும் கொடுத்து நகையை திரும்பத் தரவைப்பார்!

8-ம் தேதி கர்த்தர் சொன்னதாக காலையில் அவள் வீட்டிற்கு போ என்றார்.

சொன்னபடியே சென்றோம். நகை கேட்டோம், உடனே மறுதலித்து அதன் பின் பயந்து 9 1/2 பவுன் நகையை திரும்பத்தந்தார். எனக்க எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? நானும் என் குடும்பத்தாரும் ரொம்ப ரொம்ப சந்தோஷப் பட்டோம். கர்த்தரின் செய்கையையும் அவர் நடப்பித்த விதவும் கண்டு நாங்கள் மகிழ்ச்சியில் திகைத்து நிற்கிறோம். எல்லாவற்றிற்கும் மேல கர்த்தர் அந்த சகோதரியைக்கூட மன்னித்தார்! இது தான் நம்ம அதிசய தேவன் இயேசு.

ஜெனிதா, திருவரம்பு.

## முறிந்த கால்களைச் சொஸ்தமாக்கினார்



எனது பெயர் ரெபேக்காள். திருநெல்வேலி மாவட்டம். நான் விபத்தில் சக்கி கால் முறிந்து நடக்க முடியாமல் கிடந்தேன். தினம் தினம் வலியால் துடித்தேன். ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகத்தை ஒரு நாள் நான் படித்து அவரைத் தொடர்பு கொண்டு ஜெபித்தேன். அவர் டெலிபோனில் ஜெபித்து முடித்து உன் கால்கள் சொஸ்தம் என்று சொன்னார். சொல்லிவிட்டு வரும் உபவாசக் கூட்டத்தில் வந்து கலந்து கொள்ளுமாறுச் சொன்னார். அதற்கு நான் படுத்த படுக்கையாகக் கிடக்கிறேன். எப்படி இவ்வளவு தூரம் வரமுடியும் என்று கேட்டேன். அதற்கு அவர் இந்த கூட்டத்தில் நீங்கள் நடந்து வருவீர்கள். உன் கால்கள் சொஸ்தம் என்று தான் கர்த்தர் சொன்னார் என்று சொன்னார். அதுபோல நானும் நடந்து இவ்வளவு தூரம் பிரயாணம் பண்ணி 50 படிகளுக்கு மேல் ஏறி வந்து இந்த சாட்சியை சொல்லுகிறேன்.



# நீ 4 மாதத்தில் கற்பமாவாய்! நான்காவது மாதத்தில் கற்பம் தரித்தேன்!



எனது பெயர் அனுஜா. நான் கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பகுதியிலிருந்து வருகிறேன். அனேக ஆண்டுகள் நான் பிள்ளை இல்லாமல் மலடியாக சுற்றித் திரிந்தேன்.

ஆலயங்கள், உபவாசக் கூட்டங்கள், நற்செய்திக் கூட்டங்கள், மருத்துவமனைகள் கடந்து சென்றேன். மருத்துவர்கள் எனக்கு குழந்தை வாய்ப்புக்கே வழி இல்லை என்று சொன்னார்கள். அனேகர் என்னை மலடி என்றே அழைத்தார்கள்.

என் மனம் கசிந்து அழுதேன். கதறி துடித்தேன். வெந்துருகினேன், ஆண்டவர் சமூகத்தில் அன்னாளைப் போல கண்ணீராய் கரைந்தேன். மனோவாவின் மனைவியைப் போல பதறி நின்றேன். அப்பொழுது என் கையில் ஜீவஒளி ஜெபக்கோபுர மாதப்பத்திரிகை கிடைத்தது. அதில் வெளியிட்டிருந்த அற்புத சாட்சிகளைப் படித்தேன். நான் ஊழியக்காரரை தொடர்பு கொண்டு எனக்கு பிள்ளை செல்வத்திற்காக ஜெபிக்கச் சொன்னேன். அவர் ஜெபித்துவிட்டு சொன்னார் ஒரு முறை உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள் பிள்ளை ஆசீர்வாதத்தோடு செல்லலாம் என்றார். நியாயாதிபதிகள் 13-ம் அதிகாரத்தை வாசித்து கர்த்தருக்கென்று ஒரு பொருத்தனையை நிறைவேற்றி தேவசமூகத்தில் நில் என்று சொன்னார்.

ஒரு மாதத்தினுடைய உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கடையாலுமூட்டில் நடைபெற்ற உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கூட்டம் முடிவில் என் தலையில் கை வைத்து ஜெபித்த போது **நீ 4 மாதத்தில் கற்பமாவாய் என்று கர்த்தரால் ஏவப்பட்டு சொன்னார். ஒரு ஆண் பிள்ளையை பெற்றெடுப்பாய் என்றும் சொன்னார். அவர் சொன்னபடி நான்காவது மாதத்தில் கற்பம் தரித்தேன்.** இந்த செய்தியை உடனே கர்த்தருடைய ஊழியக்காரருக்கு நான் அறிவித்தேன். குழந்தை கற்பத்தில் அழகாக வளர்ந்தது. அருமையான ஒரு பிரசவத்தை கர்த்தர் எனக்கு ஆசீர்வாதமாக தந்து ஆண் பிள்ளையை பெற்றெடுக்க உதவி செய்தார்.

குழந்தை பிறந்து 3 மாதங்கள் ஆகி விட்டது. நான் குழந்தையோடு வந்து சகல ஜனங்களுக்கு முன்பாக சாட்சி சொல்லுவேன் என்று தீர்மானித்திருந்தேன். ஆகவே இன்று நான் உங்கள் மத்தியில் வந்து என் தேவன் செய்த மகிமையை உங்களுக்கு தெரியப்படுத்தி சாட்சி சொல்கிறேன். என் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

**அனுஜா, கருங்கல்.**

**பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்து பாடு; கர்ப்பவேதனைப் படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்த சத்தமிடு; வாழ்க்கைப் பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லகிறார். (ஏசாயா 54:1)**

## 50க்கு மேற்பட்ட இன்டர்வியூக்களில் கலந்து கொண்டேன். வேலை கிடைக்காமல் விரக்தியில் இருந்தேன். கர்த்தர் சொன்னார் 3நாளில் அற்புதம் செய்வேன் என்றார். சொன்னவர் செய்து முடித்தார்.



எனது பெயர் லொரைன். நான் கேரளாவில் உள்ள எர்ணாகுளம் பள்ளிப்புறத்திலிருந்து வருகிறேன். எனக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. நன்றாக படித்திருந்தும் எனக்கு வேலை மாத்திரம் கிடைக்காமல் இருந்தது.

என்னோடு படித்தவர்கள் எல்லாம் வேலையில் அமர்ந்தார்கள். சுமார் 50க்கு மேற்பட்ட இன்டர்வியூக்களில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால் எனக்கு வேலை கிடைக்காது, வேலை கிடைப்பது போல் இருக்கும். ஆனால் வேலை வராது. ஊழயக்காரர் அவர்களிடம் ஜெபித்து வந்தேன். நீ நம்புவதும் நீ தேடிக்கொண்டிருக்கும் அதிசயமான வேலையை கர்த்தர் உன் மடியில் போடுவார் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று அவர் எனக்கு சொல்லி வந்தார்.

ஒவ்வொரு முறை இன்டர்வியூ முடித்து வந்தும் அழுவேன். சகதோழிகள் உனக்கு வேலை கிடைத்ததா? வேலை கிடைத்ததா? என்று நச்சரிப்பார்கள். ஒவ்வொரு விசாரணையும் அம்பு போல் என் இருதயத்தை குத்திக் கிழக்கும். சமீபமாக 3 மாதங்களாக எங்கள் வீட்டில் பிசாசின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. எங்கள் வீட்டில் ஊழிடியக்காரரை வந்து ஜெபிக்கும்படி அழைத்து வந்தோம். ஆனால் அவருக்கு வர முடியாமல் 3 மாதம் கடந்து போனது. நவம்பர் மாத கடைசியல் ஊழியக்காரர் அவர்கள் நடுராத்திரி 12 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார். வந்ததும் ஜெபத்தை ஆரம்பித்தார். விடியற்காலம் 4 மணி வரைக்கும் ஜெபித்துக் கொண்டிருந்தார். சரியாக 4 மணிக்கு என் சிரசில் கரம் வைத்து ஜெபிக்கும் போது அவர் சொன்னார் 3 நாளிலே உனக்கு ஒரு அதிசயத்தை செய்வேன் என்று மும்முறை திரும்ப திரும்ப சொன்னார்.

என்னா ஆச்சரியம்! ஊழியக் காரார் சொன்ன 3-ம் நாளிலே எனக்கு ஒரு அப்பாயின்மெண்ட் ஆர்டர் வந்தது. Central Marine Fisherirs Research Institute இதில் இருந்து ஒரு ஆர்டர் உடனடியாக ஜாயின் பண்ண வந்தது. இது ஒரு சென்ரல் கவர்மென்ட் கன்ரோலில் உள்ள நிறுவனம். அப்பாயின்மென்ட் ஆர்டரை கண்டதும் திகைத்துப் போனேன். பிரமித்துப் போனேன். எங்கள் வீட்டிலே பயங்கர சந்தோஷம். பாலை வனத்தில் அலைந்து திரிந்த ஆகாருக்கு நீரூற்றை உண்டுபண்ணின தேவன் எனக்கும் ஒரு அருமையான தண்ணீர் ஊற்றை ஏற்படுத்தினார். 50 முறை இன்டர்வியூ சென்று வேலைகிடைக்க வில்லை. கோணலானவைகளை செம்மையாக்குவார் என்று வேதத்திலே அறிந்திருக்கிறோம். ஆனால் உண்மையிலேயே என் வாழ்க்கையில் கோணலானவைகளை செம்மையாக்கி எனக்கு ஒரு ஆசீர்வாதமான வாசலை திறந்தார். நான் ஸ்டேட் கவர்மென்டில் ஒரு வேலையைக் கேட்டேன். ஆனால் எனக்கு சென்றல் கவர்மென்டிலேயே தந்தார். வேலை தந்த கர்த்தருக்கு கோடி கோடி ஸ்தோத்திரம்.



## பழுதடைந்த இருதயத்தை சொஸ்தமாக்கினார். மரணத்தின் வாசலை கர்த்தர் அடைத்தார்.

எனது பெயர் திருமதி சந்திரா. நான் லேப் டெக்னீசியன் ஆக எஸ். எஸ். மருத்துவ மனையில் பணிபுரிந்தேன். அப்போது எனக்கு 14 வருடமாக பயங்கரமான நெஞ்சு வலி இருந்து வந்தது. இதய மருத்துவர் மூன்று பேரிடம் பரிசோதனை பண்ணினேன். அவர்கள் என்னை மரணத்தின் விளிம்பில் இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். பிறகு சி.எம்.சி மருத்துவமனை வெல்லூருக்கு போகச் சொன்னார்கள். அப்போது நான் பணிபுரிந்த மருத்துவமனையில் மார்க்ரெட் என்ற நோயாளி மூலம் ஊழியக்காரர் ஜேப்பியார் அவர்களை அறிந்தேன்.

அனேக ஊழியக்காரார்கள் மூலம் நான் ஜெபித்திருக்கிறேன். ஆனால் எனக்கு இந்த வியாதியிலிருந்து விடுதலை ஏற்படவில்லை. நானும் சின்ன சின்ன ஊழியங்களை செய்து கொண்டு தான் வந்தேன். இப்பொழுது ஜேப்பியார் அவர்களிடம் தொலைபேசி மூலம் ஜெபிக்கச் சொன்னேன். அப்போது அவர் ஜெபித்து சொன்னார் நீ இன்றையோ நாளையோ மரித்து போகும் நிலையில் இருக்கிறாய். உன் இருதயம் பழுதடைந்துள்ளது. உன் பிள்ளைகள் சாபத்தின் நிமித்தம் குள்ளமாய் பிறந்திருக்கிறார்கள். நான் நடுங்கித்தான் போனேன். ஏன்னனில் ஐ.சி.-ல் இருந்து ஒரு நாள் முன்பு தான் இருதய சிகிச்சையிலிருந்து வெளியே வந்தேன். மட்டுமல்லாமல் அவர் சொன்னபடி என் பிள்ளைகள் உண்மையிலேயே

**சந்திரா**



குள்ளமானவர்கள் தான். நான் அவரை வீட்டுக்கு ஜெபிக்க அழைத்தேன். அதிகாலை 4.30 மணிக்கு வந்தார். குளிக்கச் சொன்னார் குளித்தேன். முழங்காலிடச் சொன்னார் முழுங்கா லிட்டேன். சிரசின் மேல் கரம் வைத்தார். உன் இருதய வியாதி சொஸ்தம். கர்த்தர் உனக்கு புது இருதயத்தை சிருஷ்டித்தார். நீ இனி மருத்துவமனை யில் போய் பரிசோதித்துப் பார் என்றுச் சொன்னார். உடனே அவர் கிளம்பி சென்னைக்கு சென்றார். நான் போய் பரிசோதித்த போது வழக்கம் போல 14 விதமான டெஸ்ட் எடுத்தார்கள். எந்த டெஸ்டிலும் எனக்கு வியாதிக்கான அறிகுறி இல்லை என்று சொன்னார் கள். நான் உடனே டெலிபோனில் அவருக்கு இந்த சந்தோஷ செய்தியைச் சொன்னேன். என்னு டைய 14 வருடமான இருதய வியாதியை சொஸ்தமாக்கி மரண வாசலை அடைத்து என் கர்த்தர் ஜீவ வாசலை திறந்து தந்தார். கர்த்தரின் மகிமையைக் கண்டு சகல மருத்துவர்களும் ஆச்சரியப்பட்டு உன் கர்த்தர் உண்மை யிலேயே பெரியவர் தான் என்று மருத்துவர்களே சாட்சி சொன்னார்கள்.

சந்திரா, குமாரபாளையம், ஈரோடு.

# அதிசய அரசு வேலை கிடைத்தது

தேவனுக்கே மகிமை உண்டாவதாக

என் பெயர் சுமதி. நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தவள். நான் 9-ம் வகுப்பு கிறிஸ்டியன் ஸ்கூலில் படிக்கும் போது இயேசுவை ஏற்றுக் கொண்டேன். இயேசப்பாவிடம் 10-ல் 450 மார்க்குக்கு மேல் எடுக்கவும் ஜெபம் செய்தேன். இயேசப்பா எனக்கு 452 மார்க் தந்தார்கள். ஆனால் என் வீட்டில் என்னை இயேசப்பாவிட மிருந்து பிரித்தார்கள். இந்த சூழ்நிலையில் என்னை இந்து பள்ளியில் சேர்த்தார்கள். நான் பில்லி சூன்ய அசுத்த ஆவியின் கட்டுகளால் பாதிக்கப் பட்டேன். பைத்தியமானேன்.

ஆனாலும் என் இயேசு என்னோடிருந்தார். நான் காலேஜ் படிக்கும் போது ஞாபக சத்தியை இழந்தேன்.மரணத்தின் விளிம்பில் வாழ்ந்தேன். தேவன் என்னை படிக்க வைத்தார்.

குருவாக இருந்து அதிகாலையில் என்னை எழுப்பி எனக்கு சுயநினைவைக் கொடுத்து பரீட்சை ஹாலில் ஒரு மணி நேரம் மட்டுமே பரீட்சை எழுதுவேன். பின் மயங்கி விடுவேன். இதில் நான் ஒரு தடவை கூட தோற்றுப் போகவே இல்லை. முதல் வகுப்பில் பாஸ் பண்ண கர்த்தர் கிருபை செய்தார்.

இதோடு என்னால் இனி படிக்கவே முடியாது என்று இருந்த நேரத்தில் கூட இயேசப்பா பி.ஏட் ஆச்சரியமாக படிக்க வைத்து முதல் வகுப்பில் பாஸ் ஆனேன்.

ஆனால் எனக்கு வேலையே கிடைக்கவில்லை. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்து வழிநடத்திய என் தேவாதி தேவனை என் திருமண வாழ்க்கைக்கு பின்பு மறந்தேன்.

விக்கிரக ஆராதனைக்கு அடிமையானேன். 5 வருடம் தேவனை விட்டுப் பிரிந்தேன். ஆனாலும் தேவன் நீ என்னால் மறக்கப் படுவதில்லை என்ற வார்த்தையின் மூலம் பேசி என்னை இழுத்துக் கொண்டார் 2014-ம் ஆண்டு. அதன் பிறகு ஞானஸ்நானம் எடுத்து முழுவதுமாக தேவ பிள்ளையாக மாறினேன். கடந்த 2016 டிசம்பரில் தங்களது கடிதம் எனக்கு வந்தது. நான் உங்களோடு போனில் தொடர்பு கொண்டேன். நீங்கள் 2017-ல் எனக்கு அரசு வேலை கிடைக்கும் என்று சொன்னீர்கள். அப்போதைய சூழ்நிலையில் டெட் எஸ்சாம்-க்கான வாய்ப்பே இல்லை. ஆனாலும் நான் விசுவாசித்தேன். ஏப்ரல் 30-ல் எக்ஸாம் எழுதினேன். மிகவும் கடினம் கர்த்தரு டைய கிருபையால் பாஸ் ஆகி விட்டேன். 26-07-2017-ல் எனக்கு சர்டிபிகேட் வெரிபிகேசன். ஆனால் என்னுடைய யுஜி டிகிரி முதல் 5 செமஸ்டர் மார்க் ஷீட் என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. ஆனாலும் தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். அவர் செய்ய நினைத்தது தடைபடாது என்று விசுவாசிக்கிறேன்.

எம் சுமதி, 5/51, சோழியக் குறிச்சி.



# 4 வருட மூச்சுத்திணறல் மாறியது




ஜான்சி.
குளச்சல்

என் பெயர் ஜான்சி. நான் குளச்சல் பகுதியைச் சேர்ந்தவள் எனக்கு 4 வருடமாக மூச்சுத்திணறல் இருந்தது. இந்த மூச்சுத் திணறல் இரவில் தூக்கத்தில் தான் ஏற்படும். துவக்க நாட்களில் கொஞ்சம் நேரம் தான் இருக்கும். அது ஏற்படும் முன் பொல்லாத கனவு தோன்றும்.

அதன் பின்பு நாள் செல்ல செல்ல மிகவும் அதிகமாக ஏற்பட்டது. இதனால் இரவில் தூங்கவே பயமாக இருக்கும்.

நினைத்துக் கொண்டே படுப்பேன். ஒரு நாள் தூக்கத்தில் செத்துக் கிடப்பேன் அப்படி பயமாக இருக்கும். என்னுடைய அம்மா மருத்துவ மனைக்கு அழைப்பார்கள். நான் தான் மறுத்துப் போகமாட்டேன். எல்லாம் ஆண்டவர் பார்த்துக் கொள்ளட்டும் என் சூழ்நிலை அவருக்குத் தெரியும் என்று சொல்வேன்.

அப்படி இருக்கும் போது தான் ஒரு நாள் பாஸ்டரிடம் செல்போன் மூலமாக பேசினேன். அப்பொழுது அவர் செல்போனில் உடனே ஜெபித்தார்கள். அதுவும் மிக சிறிய ஜெபம். இது ஒரு தற்கொலை ஆவியின் செயல் என்று ஜெபித்தார். அந்த நிமிடத்திலிருந்து கர்த்தர் எனக்கு விடுதலை கொடுத்தார். எனக்காக ஜெபித்த ஊழியக்காரருக்கு நன்றி. எனக்கு உயிர் கொடுத்து தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

## கண் நரம்பு பாதிப்பின் நிமித்தம் கண் இரத்தம் மாறியது.

2019 டிசம்பர் மாதம் கண்வலி இருந்தது. கண் நரம்பு பாதிக்கப்பட்டு இரத்தம் மாதிரி கண் சிவந்து காணப்பட்டது. கண்ணால் வெளிச்சத்தைப் பார்க்க முடியாது. பயங்கர வலி ஏற்பட்டது. வேலைக்கு போக முடியாது. நான் ஊழியக்காரரிடம் ஜெபித்தேன். அவர் சொன்னார் கண் ஆனபடியினால் மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள் என்று சொன்னார். மருத்துவ சிகிச்சை செய்தேன். ஒரு குறைவும் மாற்றமும் ஏற்படவில்லை.

அப்பொழுது இந்த தகவலை ஊழியக்காரரிடம் சொல்லி ஜெபித்தேன். அப்பொழுது அவர் ஜெபித்து சொன்னார் மருந்தை தூக்கிப் போடு கர்த்தர் அதிசயம் காணப்பண்ணுவேன் என்று சொன்னார். எனக்கு எத்தனையோ அற்புதங்களை செய்தவர் இப்பொழுதும் விசுவாசித்தேன். மருந்தை தூக்கிப் போட்டேன்.



என் குடும்பம் இந்த ஊழியத்தில் 8 வருடமாக வந்து கொண்டிருக்கிறோம். மருந்தே எடுக்காமல் இந்த 8 வருடத்தை நடத்தின தேவன் எனக்கும் இந்த நோயிலிருந்து விடுதலை தருவார் என்று விசுவாசித்தேன். மருந்துகளை தூக்கி எறிந்தேன். அந்த மாத்திரத்தில் கண்ணில் உறைந்திருந்த இரத்தமும் கடும் சிவப்பும் மாறிப் போய்விட்டது. என் தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைத் தந்தார்.

மது, திருவட்டார்.

# முடவனை நடக்க வைத்து பரீட்சை எழுத வைத்த தேவன்.

அன்புள்ள சகோதரர் ஜே. ஜேப்பியார் அவர்களுக்கு,

எனது பெயர் எஸ். செல்ஜின். கன்னியாகுமரி மாவட்டம் வயது 22. நான் டிப்ளமோ நர்சிங் நெய்யூர் மருத்துவமனையில் படித்து முடித்து விட்டு இப்போது நெய்யூர் மருத்துவமனையில் 2-ம் ஆண்டு பாண்ட் பார்க்கிறேன். வருகிற 2018 ஆம் ஆண்டு மார்ச் 1-ம் தேதி அன்று பாண்ட் முடிவடையும்.

நான் உங்களிடம் பல முறை தொலைபேசியில் பேசி இருக்கிறேன். நான் ஒரு முறை விபத்திற்குள்ளாகி என்னை தேர்வு எழுத விடமாட்டேன் 6 மாதம் தாண்டி நீ எழுது என்று கூறினார்கள். அப்போது நான் உங்களை தொடர்பு கொண்டு ஜெபித்தபோது நீங்கள் சொன்னீர்கள், கண்டிப்பாக நீ தேர்வு எழுத தேவன் உதவி செய்வார்.

எனக்காக நீங்கள் மருத்துவரிடம் பேசினீர்கள். நான் உங்களிடம் தொலைபேசியில் பேசும் போது நீங்கள் சொன்னீர்கள், உன்னை தேர்வு எழுத அனுமதிக்கவில்லை என்றால் அந்த அதிகாரியை தேவன் அந்த இடத்தில் இருந்து மாற்றி போடுவார். நீ கண்டிப்பாக தேர்வு எழுதுவாய் என்று கூறினீர்கள்.

கடைசியில் என் கால் சரியாகி நான் நடக்க ஆரம்பித்து கல்லூரி சென்றேன். தேர்வு எழுத வேண்டிய நாள் நெருங்கியது. என் பிரின்சிபால் என்னிடம் கூறினார்கள் நான் எதாவது வாய்ப்பு உண்டா என்று பார்க்கிறேன் என்றார். கடைசியில் கர்த்தர் கிருபையால் என்னை தேர்வு எழுத சம்மதித்தார்கள். மேலும் 2 மாதம் நீ பாண்ட் கூட பார்க்க வேண்டும் என்று கூறினார்கள். நான் உங்களை பார்த்தது கூட இல்லை. ஆனால் நான் உங்களை தொடர்பு கொண்ட போது எனக்காக பல மருத்துவரிடம் பேசி உதவினீர்கள். எனக்கு ஆறுதல் கூறினீர்கள். எனக்காக ஜெபித்தீர்கள் அதற்காக உங்களுக்கு நன்றி. நான் இப்போது பரீட்சை எழுதி முடித்து வேலையும் பார்க்கிறேன். எனக்கு உதவி செய்த இயேசு அப்பாவிற்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்.



எஸ். செல்ஜின்.



# அதிசய திருமணமும் அதிசய குழந்தையும்

எனது மனைவி பெயர் கௌரி. திருவனந்தபுரம் டெக்னோபார்க்கில் வேலை செய்து வருகிறாள். இவளுக்கும் எனக்கும் கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தின் படி திருமணம் நடந்தது. கௌரி திருமணமே வேண்டாம் என்று இருந்திருக்கிறாள். தாய் கண்ணகி ஊழியக்காரரிடம் செலுத்தின ஒரு பொருத்தனையின் நிமித்தம் 90 நாட்களுக்குள் உன் மகளுக்கு திருமணம் நடக்கும் என்று கர்த்தர் அறிவித்திருக்கிறார். விருதுநகர் மாவட்டத்திலிருக்கிற என்னை கர்த்தர் அதிசயம் செய்து கடந்த வருடம் 2017 திருமணம் நடந்தது.

என் மனைவிக்கு ஒரு வியாதி உண்டு. இரத்தம் உறையும். தினம் 1500 ரூபாய்க்கு ஊசி போட வேண்டும். இதை பிரதரிடத்தில் சொன்னேன். அதற்கு அவர் 36 வயதில்அதிசயமாய் திருமணம் செய்தவர் அதிசயமான குழந்தையும் கொடுப்பார். உன் சந்ததியிலிருந்து எலியாக்கள் தோன்றுவார்கள். ஆண் ஒன்று பெண் ஒன்று கொடுப்பேன் என்று சொன்னார். அதிலும் 90 நாட்களுக்குள் அவள் கற்பம் ஆவாள் என்று சொன்னார். அதே மாதிரி அவர் கற்பம் ஆனாள். கிம்ஸ் மருத்துவமனையில் அவளுள்கு மருத்துவ சிகிச்சையும்



ஜெபமும் ஏரெடுக்கப் பட்டது. மருத்துவர்கள் சொன்னார்கள். 36 வாரம் முடிந்ததும் ஆப்பரேசன் பண்ணி குழந்தையை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஊழியக்காரர் உறுதியாய்ச் சொன்னார். அவளுக்கு சுகப்பிரசவம் நடக்கும் என்று சொன்னார். பிரசவத்திற்கு 2 நாட்களுக்கு முன்பு பிரசரும் அதிகமாக இருந்தது. மருத்துவமனையில் அட்மிட் ஆனோம். அப்பொழுதும் மருத்துவர்கள் சொன்னார்கள் ஆப்பரேசன் என்று. மறுபடியும் ஊழியக்காரரிடத்தில் சொன்னேன். மருத்துவர்கள் ஆப்பரேசன் என்று சொல்லுவார்கள். இஸ்ரவேல் குமாரத்திகள் மருத்துவச்சிகள் வருவதற்கு முன்புதங்கள் பெலத்தில் குழந்தையை பெற்றெடுத்தது போல உன் மனைவியும் குழந்தை பெற்றெடுப்பாள். 10-2-2018 அன்று இப்படியாக ஜெபித்து இப்பொழுதே அது நடக்கும் என்று சொன்னார். அதன்டி அந்த நேரத்திலேயே அவளுக்கு பிரசவவலி ஏற்பட்டது. ஒரு அழகான பெண் குழந்தையை பெற்றெடுத்தாள்.

சதீஷ் கபரியேல், ஸ்ரீவில்லிப்புத்தூர்.

# பேசாமல் இருந்தேன் கர்த்தர் பேச வைத்த மகிமைக்காக ஸ்தோத்திரம்

எனது பெயர் சுப்பையா. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் லைன்மேனாக பணியாற்றி தற்போது ஈரோடு மாவட்டத்தில் பள்ளி பாளையத்தில் குடியிருக்கிறேன்.

எனது கழுத்துப் பகுதியில் ஒரு தைராய்டு கட்டி இருந்தது. அதனை ஆப்பிரேசன் மூலம் அகற்றினார்கள். அதன் பின் தொண்டைடி பகுதிக்குள் கேன்சர் கட்டி வளர்ந்தது. அதனையும் மருத்துவத்தால் அகற்றினார்கள். அதன் பின் எனக்கு பேசவே முடியாது. தொண்டை வலி அதிகமாகும். மறுபடியும் கட்டி வளர்ந்து தொண்டையை அடைத்துக் கொண்டிருந்தது. அப்போது பாஸ்டர் நடத்தும் கடையாலுமூடு சபைக்குச் சென்று விண்ணப்பித்து ஜெபித்தேன். அவர் பேசலாம் என்றார். அதன் பின் நான் இப்பொழுது பேசுகிறேன். தொண்டை வலியும் இல்லை. கேன்சர் கட்டி அதன் பின் வளரவே இல்லை. கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

சுப்பையா, ஈரோடு.

## கர்த்தர் அதிசயமாய் குழந்தையைக் கொடுத்தார்

பிள்ளையில்லாமல் இருந்தேன் கர்த்தர் பிள்ளையை கொடுத்தார்

எனது பெயர் ஜெயசீலி. எனது கணவர் பெயர் பிரகாஷ். நான் பாண்டிசேரி பிம்ஸ் மருத்துவமனையில் செவிலியராகவும் எனகது கணவர் அட்டண்டராகவும் பணியாற்றினார். எங்களுக்கு திருமணம் ஆகி நான்கு வருடம் ஆகிறது எனக்கு பிள்ளையில்லாமல் கடும் அவமானங்களை சந்தித்து கொண்டிருந்தேன். நாங்கள் பிறப்பிலும் வளர்ப்பிலும் இந்துக்கள். நான் பணி செய்யும் மருத்துவமனையில் பணி செய்யும் இன்னொரு கிறிஸ்தவ சகோதரி மூலம் ஜீவ ஒளி ஜெபக்கோபுர மாத பத்திரிக்கையை படித்து இயேசு ஜனங்களுக்கு செய்த அற்புதங்களை தெரிந்துகொண்டேன். நான் சகோதரர் ஜேப்பியாரிடம் டெலிபோன் செய்து பிள்ளை கிடைக்க வேண்டி ஜெபிக்க சொன்னேன். அவரும் டெலிபோனில் ஜெபித்து உடனே பதில் தந்தார். இந்த ஆண்டிலே ஆண்குழந்தை கிடைக்கும் என்றார். அதன்படி நான் கற்பந்தரித்தேன். ஆனாலும் கற்பம் நிற்கவில்லை. இரண்டாவது கற்பமும் கலைந்தது. முன்றாவது முறையில் கற்பந்தரித்தேன். இயேசு எனக்கு ஆசீர்வாதமாய் கொடுத்தார். அழகான ஆண் குழந்தையை பெற்று எடுத்தேன். இயேசு எனக்கு செய்த அற்புத்தை எண்ணி தினமும் மகிழச்சி அடைகிறேன்.

ஜெயசீலி , பாண்டிச்சேரி.



# கூடாதது ஒன்றுமில்லை, எலும்பும் தோலுமாய் குச்சியாய் இருந்த சகோதரியை குணமாக்கின கர்த்தர்.

ஆந்திரா மாநிலத்தில் நர்சிங் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவி சரீரத்தில் ஒரு தேவதை உள்ளே நுழைந்து நல்ல செழித்த ஆட்டுக் கடா போல் இருந்த இவளை எலும்பும் தோலும் குச்சியுமாக மாற்றியது.

என்ன சாப்பிட்டாலும் வாந்தி. நடக்க முடியாது, மீறி நடந்தால் ஒடிந்து விழுவாள். சாய்ந்து விழுவாள். கால், கை சூம்பியது. தொண்டை வறண்டது. மூச்சு விட முடியவில்லை. மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றார்கள். இவளுக்கு எந்த வியாதியும் இல்லை என்று திருப்பி அனுப்பினார்கள். நிஜத்தில் இவள் பார்ப்பதற்கு மரித்து அடக்கம் செய்யப்பட்டு 7வது நாள் எழும்பி வந்தவள் போல் இருப்பாள். பார்க்க சகிக்க முடியாது. இவள் பக்கம் படுக்க சக மாணவிகள் பயந்தார்கள்.

சக மாணவிகள் சிலர் இவளை நேசித்த படியினால் இவளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். பால் காய்ச்சி இங்க் பில்லரில் எடுத்து ஒரு சில துளிகளால் வாய்க்குள் செலுத்துவார்கள். பற்களை பூட்டி வைத்திருப்பாள்.

இவர்கள் மாட்டுக்கு கொடுப்பது போல பால் துளிகளை செலுத்தி வந்தார்கள். குமரி மாவட்டத்தைச் சேர்ந்த சீபா என்ற சக மாணவி என்னை டெலிபோனில் தொடர்பு கொண்டு இந்த விபரங்களை எல்லாம் சொன்னாள். கர்த்தரின் கிருபையால் நான் ஜெபம் ஏரெடுத்தேன். 4விதமான வாதைகளும் சர்ப்பமும் இறங்கி இருந்ததை காணும் படி கர்த்தர் கிருபை செய்தார்.

இவைகளை அழிக்கும் படி கர்த்தரின் நாமத்தில் ஜெபம் ஏரெடுத்தபோது கர்த்தர் இவளை அழித்த வாதைகளை அழித்துப் போட்டார்.

படுக்கையிலிருந்து எழும்பினாள். சாப்பிட ஆரம்பித்தாள். சரீரம் கொழு கொழு என்று மாறியது. தடை பட்ட படிப்பை தொடர்ந்தாள். பரீட்சை எழுதினாள், ஜெயித்தாள். நர்சிங் மேற்படிப்பையும் படித்து முடித்தாள். தற்போது வேலை பார்க்கிறாள். இப்படி மகா பெரும் அதிசயம் ஜீவனுள்ள கர்த்தர் செய்தார். நீங்களும் ஜீவனுள்ள தேவனைத் தேடுங்கள்.

# 24 மணி நேரத்தில் திருமண தேவையை பூர்த்தி செய்த தேவன்

எனது மகளுக்கு ஆகஸ்ட் மாதம் 30-ம் தேதி திருமணம் நிச்சயம் பண்ணியிருந்தேன். திருமணம் நிச்சயமானபோது நான் பலத்த கடனாளியாக இருந்தேன். 75 பவுன் நகையும் 3 லட்சம் ரூபாயும் மற்றும் திருமண செலவுக்காக 10 லட்சம் ரூபாயும் தேவைப்பட்டது.

இந்த சூழ்நிலையில் கடந்த 3 மாதமாக ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் பிரவேசித்து ஜெபித்து கர்த்தர் திருமணத்தை கெம்பீரித்து நடத்துவார் நீ கலங்காதிரு. அனால் ஒரு ரூபாய் கூட எனக்கு கிடைக்கவில்லை. பலமுறை தற்கொலை செய்து கொள்வதற்கே முடிவெடுத்தேன். வீட்டிலும் பயங்கர போராட்டமாக இருந்தது. தினமும் எங்களுக்குள் சண்டை. திருமணம் நடப்பதற்கு எந்த சூழ்நிலையும் இல்லை.

திருமணத்திற்கு இன்னும் 10 நாட்கள் தான் இருந்தன. நாங்கள் திருமண அழைப்பிதழ்களை போடவில்லை. கடன் தரலாம் என்று சொன்னவர்கள் எல்லாரும் கைவிட்டார்கள். **தீக்குளித்து சாவதற்கு பெட்ரோல் வரைக்கும் வாங்கி வைத்திருந்தேன்.** அனேகருக்கு உதவி செய்து கடன்பட்டவன் நான்.

நன்றாக இருந்து ஒன்றுமில்லாமல் இருந்தவன் நான். திடீரென்று ஊழியக்காரர் எனக்கு போன் செய்து ஒழுங்காக திருமண அழைப்பிதழ்களை எல்லாருக்கும் கொடுக்க உத்தரவிட்டார். திருமணம் கெம்பீரமாய் நடக்கும் என்று உற்சாகப் படுத்தினார்.

வீட்டிலே பலத்த போராட்டத்தின் மத்தியிலும் திருமண அழைப்பிதழை மிகுந்த சிரமத்தில் போட ஆரம்பித்தோம். திருமணத்திற்கு இனி 24 மணி நேரம் தான் உண்டு. பந்தல் கூட கட்டவில்லை. 29-8-2018 காலையில் ஊழியக்காரர் அவர்கள் வந்தார்கள். அப்போது கூட 100 ரூபாய் எங்கள் கைவசம் இல்லை. அவருக்கு காணிக்கை கொடுப்பதற்கு கூட திகைத்து நின்றோம். அப்பொழுதும் அவர் என் தலைமேலும் என் மகள் தலை தலைமேலும் கைவைத்து ஜெபித்தார். அதே வாக்குத்தத்தத்தை திரும்பவும் கொடுத்தார். நான் ஓஓஓ என கதறி அழுதேன்.

ஜெபித்து முடித்து அவர் ஒரு சிறு தொகையை என் மகள் கையிலும் ஒரு சிறு தொகையை என்னிடத்திலும் கொடுத்தார். பெருமகிழ்ச்சி அடைந்தோம். கர்த்தர் ஊழியக்காரர் மூலம் துவக்கி வைத்தார். 30-8-2018 அன்று அவன் நகைகளோடும் வீடு காணும் படலத்துக்கு சுமார் 8 லட்சம் பொருட்களும் மகளுக்கு கொடுத்தோம். என் தேவன் சத்துருக்கள் மத்தியில் என் தலையை உயர்த்தினார். நான் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



# வனாந்தரத்தில் வந்து காப்பாற்றிய கர்த்தர்

எனது மகன் ஷெலின். மலேசியாவில் விசா எடுத்து கப்பல் வேலைக்காகப் போனான். ஆனால் ஏஜென்சிகள் நடுக்காட்டிலேயே மகனை இறக்கி விட்டு விட்டு ஓடிவிட்டார்கள். வனாந்தரத்திலே உணவு தண்ணீர், செல்போன் இணைப்பு எதுவும் இல்லாமல் உயிர் போகும் நிலையில் 7 நாள் காட்டிலேயே தங்கினான். எங்களுக்கு எந்த தகவலும் இல்லை.

நாங்கள் பதட்டத்தோடும் பயத்தோடும் இருந்தோம். நான் ஜேப்பியார் பிரதருக்கு போன் செய்தேன். வனாந்தரத்தில் ஜொரத்தோடு காட்டு விலங்குகளுக்கொப்பாய் படுத்து கிடக்கிற உன் பிள்ளையை கர்த்தர் இப்பொழுதே தொடுகிறார். நான் இதோ கடந்து போகிறேன் என்று ஆண்டவர் பேசினார்.

அடுத்த ஒரு மணி நேரதிற்குள் காட்டிலே படுத்திருந்த என் மகன் டெலிபோனில் தொடர்பு கொண்டான். நடந்த விபரத்தை எல்லாம் சொன்னான். நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். இந்த ஒரு மணி நேரத்தில் பஞ்சாபி வேஷம் போட்டு ஒருவர் ஒரு சிம்கார்டு, அப்பம், தண்ணீர் ஆகியவற்றை கொண்டு வந்து அவர் கொடுத்ததாக சொன்னான். மனிதர் நடமாட்டம் இல்லாத இந்த காட்டுக்கு அவர் எப்படி வந்தார் என்பது எங்களுக்கு இன்றும் ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த விபரத்தை ஊழியக்காரருக்கு தெரிவித்த போது இன்னும் 7 நாளைக்குள்ளே ஒரு கப்பல் வரும். அவன் கப்பல் ஏறி செல்வான் என்றும் நீ கலங்காதே என்று சொன்னார். அவன் கையில் ஒரு ரூபாய் கூட இல்லை. ஏஜென்சிகள் அவன் கையில் இருந்த பணத்தை எல்லாம் பறித்து விட்டு தான் காட்டில் விட்டுச் சென்றார்கள். இந்த விபரத்தையும் ஊழியக்காரரிடத்தில் சொன்னேன். அப்போது இதோ கர்த்தர் கோணலானவைகளை செவ்வையாக்குகிறார் என்று சொன்னார்.

அடுத்த அரை மணி நேரத்தில் மறுபடியும் அந்த பஞ்சாபி வந்திருக்கிறார். ஒரு பேங்க் அக்கவுண்ட் நம்பரைக் கொடுத்து அதில் உன் அம்மாவை பணம் போடச் சொல் என்று சொல்லியிருக்கிறார். மகன் இதை அம்மாவிடம் தெரிவித்து பணம் போடச் சொன்னான்.

நாங்கள் உடனே இதை ஊழியக்காரரிடம் தெரிவித்தாம். அவர் தைரியமாய் பணத்தை போடுங்கள் என்று சொன்னார். நாங்கள் அந்த அக்கவுண்டில் பணத்தை செலுத்தினோம். அந்த பஞ்சாபி அந்த பணத்தை எடுத்து என் மகனிடத்தில் கொடுத்து கப்பல் வரும் அதில் நீ ஏறி போய் விடு என்று சொன்னார்.

7 நாள் தாண்டி கப்பல் வந்தது. அவன் பணத்தை கொடுத்து ஏறிச் சென்றான். கப்பல் அவனை சேர வேண்டிய நாட்டில் கொண்டு சேர்த்தது. இவ்விதமாய் வனாந்தரத்திலே என் கர்த்தர் சென்று அப்பம் தண்ணீர் பணம் கொடுத்து வனாந்திர மிருகங்கள் தொடாமல் பாதுகாத்து ஜொரத்திலிருந்தும் விடுதலை கொடுத்து பாதுகாத்தார். அவருக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்.

## 15 நாளில் மூன்று லட்சம் ரூபாய் தந்து என் மகனை சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்ற தேவன்.

எனக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. என்னுடைய மூத்த மகன் சிங்கப்பூருக்கு போகும் படியான பரீட்சை எழுதினான். அந்த பரீட்சை தோல்வியில் முடிந்தது. என் சபைப் பாஸ்டரிடம் 2-ம் கட்டமாக பரீட்சை எழுத தீர்மானிக்க அவரிடம் சென்று ஜெபித்தேன். ஆனால் அவர் சொன்னார் அவன் சிங்கப்பூருக்கு போகமாட்டான். அவன் பரீட்சை எழுதினால் தோல்வியைக் காண்பான் என்றுச் சொன்னார்.

நாங்கள் மிகவும் கவலையோடு இருந்து வந்த வேளையில் இந்த ஜெபக்கோபுர புத்தகத்தைப் படித்து அதன் சாட்சிகளை படித்து ஊழியக்காரரிடம் ஜெபித்தோம். ஜேப்பியார் ஊழியக்காரர் ஜெபித்துச் சொன்னார் அவன் சிங்கப்பூருக்கு செல்வான். பரீட்சை எழுதச் சொன்னார். அவன் வெற்றி பெறுவான் என்றும் சொன்னார்.

நாங்கள் விசுவாசித்தோம். அவன் பரீட்சை எழுதினான். என்னா ஆச்சரியம்! அவன் பரீட்சையில் வெற்றி பெற்றான். எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. இன்னும் 15 நாட்களில் சிங்கப்பூருக்கு செல்ல 3 லட்சம் ரூபாய் வேண்டும். எங்களிடம் ஒரு ரூபாய் கூட



இல்லை. கலங்கிப் போய் ஊழியக்காரரிடம் மறுபடியும் ஜெபித்தோம். அவர் சொன்னார் எந்தத் தடையும் இல்லை. எந்த பணப் பஞ்சமும் ஏற்படபோவதுமில்லை. கர்த்தர் அதிசயங்களைச் செய்து சிங்கப்பூருக்கு கர்த்தரே தூக்கிச் சுமப்பார் என்றார்.

என்னா ஆச்சரியம்! இந்த 15 நாளில் கர்த்தர் அதிசயம் செய்து பணத்தேவையை சந்தித்தார். மேலும் என் குடும்பத்தில் ஒரு சகோதரி பணம் தேவை என்றார் நான் தருகிறேன் என்றுச் சொல்லி பணம் கொடுக்க வந்தாள். என் தேவாதி தேவன் மீதி எடுக்கும்படி செய்தார்.

என் மகன் மெடிக்கல் முடித்து அதிசயமாய் சிங்கப்பூருக்கு பறந்தான். கர்த்தர் ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் இன்றும் பிரகாசிக்கிறார் என்பதனை அனுபவ ரீதியில் உணர்ந்தேன். என் இயேசுவுக்க நன்றி!

## ஐ.சி.யூ-விலிருந்து கர்த்தர் தந்த விடுதலை



என் பெயர் பனித்தாசன். என்னுடைய பேரக்குழந்தை லேடன்ஸ்காட் 9.1.2020 அன்று உடல்நலக்குறைவால் நாகர்கோவில் மோரீஸ் மருத்துவமனையில் ஐ.சி.யூ-வில் வைத்திருந்தோம். அன்று இரவு பிரதர் ஜேப்பியார் அவர்களுக்கு போன் செய்து ஜெபித்தோம். அவர்கள் ஜெபித்து விட்டு குழந்தையை இயேசு தொட்டு குணப் படுத்துகிறார் என்று கூறினார்கள். மறுநாளே குழந்தையை ஐ.சி.யூ-விலிருந்து வெளிவரச் செய்து பரிபூரண சுகம் கொடுத்து தேவனுக்கு கோடி நன்றிகள்.

பனித்தாசன், புன்னைநகர், நாகர்கோவில்



## வெளிச்சத்திற்குள் நான் நிற்பதை நானே கண்டேன்.

எனது சொந்த ஊர் மிடாலம். நான் கடந்த 3-12-2016 அன்று சீயோன் மண்டபத்தில் நடைபெற்ற ஜீவஒளி ஜெபக்கோபுர உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டேன். எளியவன் என்றைக்கும் மறக்கப் படுவதில்லை. சிறுமைப் பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப் போவதில்லை (சங்கீதம் 9:18)

இந்த வசனத்தைச் சொல்லி ஊழியக்காரர் ஜேப்பியார் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு கட்டத்தில் அக்கினி ஸ்தம்பம் போன்ற ஒரு மகா பெரிய வெளிச்சம் என் அருகில் வந்து நின்றது. அந்த வெளிச்சத்திற்குள் நான் மகிமையாய் பிரகாசமாய் வெளிச்சத்திற்குள் நான் நிற்பதை கண்ணாடியில் முகம் பார்ப்பது போல் என்னை நானே கண்டேன்.

என் தேவன் எனக்கு தரிசனமாகி என்னை அவரோடு சேர்த்துக் கொண்டார். எனக்கு மிகவும் சந்தோஷமாய் இருந்தது. கூட்ட முடிவில் ஊழியக்காரரிடம் இந்த தரிசனத்தை நான் சொன்னேன். அதற்கு அவரும் சந்தோஷப் பட்டு விளக்கத்தைச் சொன்னார்.

கர்த்தர் உங்களை பரிசுத்தம் பண்ணி அவரோடு அணைத்துக் கொண்டார். உங்களை புது சிருஷ்டியாக புதுப்பித்திருக்கிறார். அவருடைய வெளிச்சத்திற்குள் பிரவேசிக்க கிருபை செய்திருக்கிறார். நீங்கள் கர்த்தரை முகமுகமாய் பார்த்திருக்கிறீர்கள். இயேசு அதிசயமானவர்.

இனி மேல் ஜாக்கிரதையாய் இருந்து ஜெபியுங்கள். பரிசுத்தத்தை காத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஜெபித்து வாழ்த்தினார்.

ஜாண்சன், மிடாலம்.

**உங்கள் காணிக்கைகளையும் நன்கொடைகளையும் அனுப்பஅனுப்ப**

JEEVA OLI JEBAKKOPURM, **IOB Bank, Branch:Kaliyal.**

**C/A/NO: 094302000001039, IFSC.Code: IOBA0000943**

**MICR Code: 629020109, Scheme Code:cdpub**

**J. JAEPPIYAR, State Bank of India, Branch: Arumanai.**

**A/No: 30381308788, IFSC Code: SBIN0002199**

**ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகம் அச்சிட**

**VIZHIKALPUBLICATION, IOB Bank, Branch:Kaliyal.**

**A/c. No: 094302000001017, IFSC.Code: IOBA0000943**

**இங்கு அனுப்புகிற எந்த வகையான பணமும் திரும்ப செலுத்த தக்கதல்ல. அதனால் விரும்புகிறவர்கள் செலுத்தலாம்.**

**தபால்நிலையம் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**ஜே. ஜேப்பியார், பத்திரிகையாசிரியர், இயேசு பெரியவர் வருகையின் ஊழியங்கள், ஜீவஒளி ஜெபக்கோபுரம், கடையல், களியல் அஞ்சல்,**

குமரி மாவட்டம். 629101. Web: WWW.jeevaolitv.in

Email: paralohavasal@gmail.com. Facebook: jeevaolijebakkopuram.

**உங்கள் காணிக்கைகளை வெப்சைட்டிலும் அனுப்பலாம்.**

**Youtube: jeevaolijebakkopuram,** போன் : **9442131629,**

# நீ இனி கற்பம் தரிக்க கூடாது மருத்துவர் சொன்னார் ஊழியக்காரர் சொன்னார் நீ கற்பந்தரித்து ஆண்குழந்தை பெற்றெடுப்பாய்



எனது பெயர் சாராள். நான் வேலூர் மருத்துவ மனையில் நர்ஸாக பணிபுரிந்து வருகிறேன். எட்டு ஆண்டுகளுக்கு முன் நான் பிரசவத்திற்கு முன்பே மரித்தேன். இயேசு ஊழிய்யகாரர் மூலம் பிழைக்க வைத்து ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். எனக்கு இருதயத்தில் வியாதி உண்டு. இருதய துடிப்பு மருத்துவர்கள் பிரமிக்கும்படி ஏறிக் கொண்டேயிருக்கும் . மருத்துவர்கள் நீ இனி கற்பந்தரித்தால் நீ உயிரோடு இருக்கமாட்டாய் என எச்சரித்தார்கள்.

ஆனால் ஜேபபியார் அங்கிள் சொன்னார்கள் மறுபடியும் கர்த்தரின் மகிமையில் ஒரு அழகான ஆண்குழந்தையை பெற்று எடுப்பாய் என்றார். 2015ல் மறுபடியும் நான் கற்ப்பந்தரித்து கொண்டேன். என் உயிரை பாதுகாக்கும் பொருட்டு மருத்துவர்களின் ஆலோசனை படி கற்பத்தை கலைத்து விட்டேன். இந்த ஆண்டினுடைய துவக்கத்தில் மறுபடியும் கர்த்தர் அறிவித்தருந்தார் நீ ஒரு குழந்தையை பெற்று எடுப்பாய் என்று. ஏழு மாதங்கள் எந்த விதமான பிரச்சனையும் இல்லாமல் சுகமாய் இருப்பீர்கள் என்றார்.

அதன்படி நான் கற்பம் தரித்தேன். ஆனாலும் என் உயிருக்கு பயந்து கற்பத்தை கலைக்க மருத்துவரை நாடினேன். பலமுறை கற்பத்தை கலைக்க முயற்சி பண்ணியும் அதற்குரிய சூழ்நிலை அமையவில்லை. கற்பத்தில் இருப்பது ஆண் குழந்தை. 7 மாதம் வரைக்கும் உன்னை கர்த்தர் கெம்பீரமாய் பாதுகாப்பார். 7 மாதம் முடிந்ததும் மருத்துவ மனையில் அட்மிட் ஆகு என்று சொன்னார். அதன்படியே குழந்தை கற்பத்தில் வளர துவங்கியது. ஆனாலும் நான் கற்பத்தை கலைக்க ஓடினேன். மருத்துவர்களின் அப்பாயின்மென்ட் கிடைக்கவில்லை. எனக்கு சிகிச்சை தருவதற்கு கூட முன்வரவில்லை. ஊழிய்காரர் சொன்னபடியேஏழு மாதமும் சராசரி மனுஷியை போல் நான் வேலைசெய்து நடந்து வந்தேன். ஏழு மாதம் முடிந்ததும் ஊழியக்காரர் சொன்னார் மருத்துவமனையில் அட்மிஸன் ஆகிவிடு என்று சொன்னார். அதன்படி மருத்துவமனையில் விதவிதமான மருத்துவர்களை சந்தித்தேன்.

மருத்துவர்கள் டிசம்பர் மாதம் 12ம் தேதி என்னை அடமிட் செய்தார்கள். அன்று இரவே 11 மணிக்கு ஆப்பரேன் செய்து ஒரு ஆண் குழந்தையை எடுத்தார்கள் குழந்தையை மருத்துவ மனையின் கண்காணிப்பில் வைத்துள்ளார்கள் நாங்கள் சுகமாய் இருக்கிறோம் கர்த்தர் எனக்கு பயங்கர அற்புதம் செய்தார். இவ்விதமாய் இயேசு என் வாழக்கையில் இரண்டாம் முறையாக அதிசயம் செய்து அற்புதம் செய்தார். என் இயேசுவிற்கு கோடான கோடி ஸ்தோத்திரம் சாராள், சத்துவாச்சேரி, வேலூரர்.



# கர்த்தர் கலிபோர்னியாவில் செய்த அதிசயம்



என் பெயர் பெனில்டா .நாங்கள் அமெரிக்கா கலிப்போர்னியா மாநிலத்தில் வசிக்கிறோம்.இந்த 2019 ம் வருடம் ஆரம்பத்தில் இருந்தே கணவருடைய வேலை காரியங்களில் பல தடைகளை எதிர் கொண்டு வந்தோம். குறிப்பாக வருட ஆரம்பத்தில் கணவருடைய வேலை விசாவில் பெரும் தடை ஏற்பட்டது. நாட்டை விட்டு வெளியேறும் சுழ்நிலை வரும் என பயந்தோம். இதன் பொருட்டு குடும்பமாக ஊக்கமாக ஜெபித்தோம். சுழ்நிலைகள் எல்லாம் எதிராய் இருந்த போதிலும் தேவன் மகா அற்புதம் செய்தார். எல்லோரும் வியக்கத்தக்க வகையிலே அதிகபட்ச கால விசாவை கர்த்தர் தந்தார். அதற்கடுத்து வேலை காரியத்தில் தடை எதிர் கொண்டோம். பல வேலைகள் கிடைக்கும் தருவாயில் வந்து தவறிப் போயின. இந்த சோதனையான வேளையில் பிரதர் ஜேப்பியார் அவர்களை தொடர்பு கொண்டு ஜெபித்தோம். அவர் ஏசாயா 49:19 இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.

இந்த வசனத்தைச் சொல்லி ஜெபித்து நிச்சயமாக இந்த வசனத்தின்படி அற்புதம் நடக்கும் என்றுச் சொன்னார். நாங்களும் அந்த வசனத்தை சொல்லி மனஉருக்கமாய் உபவாசித்து ஜெபித்தோம். அதன்படியே அற்புதம் நடந்தது. எங்களுடைய வேண்டுதலின் படியே இதே இடத்தில் வேலையைக் கட்டளையிட்டார். இன்னும் ஒரு சோதனையாக எங்களுடைய கார் திருடப்பட்டது. அந்த விஷயத்திற்காகவும் பிரதரிடம் தொடர்பு கொண்டு ஜெபித்தோம். தேவன் கார் திரும்ப கிடைக்கச் செய்தார். ஜெயம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்

பெனில்டா, கலிப்போர்னியா.

# இது உலக அதிசயம் அதிர்ச்சி! ஆனந்தம்! ஆச்சரியம்! கூடாதது ஒன்றுமில்லை!

## படியுங்கள்! பயப்படுவீர்கள்! என் கர்த்தரின் யுத்தத்தைக் கண்டு

திடீர் என்று ஒரு போண்! ஒரு சகோதரியிடமிருந்து. வாழப்பிடிக்கல! தற்கொலை செய்யப் போகிறேன்!

ஏன் சிஸ்டர்!

என் புருஷன் என்னிடத்தில் படுக்காமல் அவன் அம்மாகிட்டேயே போய் படுத்திருக்கிறார்! ஒரு ராத்திரி ஐம்பது முறைக்கு கூப்பிட்டாலும் வரமாட்டேங்கிறார்.... இங்க நான் இனிமே வாழக்கை நடத்த முடியாது! அவர் சுத்த மன்னு!

புரிந்து விட்டது! நீ செய்த பாவம் உன் புருஷன் மண் மாதிரி ஆயிட்டான்!

என்ன சொல்றீங்க பிரதர்!

உன் பாவத்தை கர்த்தர் காண்பித்தார்! இவன் உனக்கு எத்தனாவது புருஷன்!

பாஸ்டர்! எனக்கு இது முதல் கல்யாணம்!

யஸ்! உண்மைதான்! ஆனால் இவன் உனக்கு எத்தனாவது புருஷன்? மறுபடியும் கர்த்தரின் ஏவுதலில் கேட்டேன்!

அழுதாள்! பள்ளி பருவம் முதல் கல்லூரி பருவம் முதல் எல்லாம் கொட்டி தீர்த்தாள்.

நீ பாவியாய் இருக்கிறாய்! அவன் பரிசுத்தமாய் இருக்கிறான்! இதுதான் பிரச்சனை சிஸ்டர்!

கர்த்தர் எல்லாரையும் பரிசுத்தத்திற்கு அழைத்தார். பிசாசு பாவத்திற்கு அழைக்கிறான்! நம்முடைய எதிரியே பாவம்தான். பாவியாயிருக்கிற ஒரு மனுஷன், மனுஷி திருமணத்திற்கு முன்பு மனந்திருந்தி பாவ மன்னிப்பை பெற்று புது மனுஷியாய் புதுவாழ்வு பெற திருமணத்தில் பிரவேசிக்கும் போது கர்த்தர் குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதிப்பார்!

இல்லையேல் ஆண்டு கொள்ள திராணியில்லாத புருஷர்களைத்தான் பெண்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன். வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார். (ஆதி 3:16)

திருமண வாழ்க்கையே சாபமாகி ஆரம்பமாகிறது. இங்கு தான் டைவர்ஸ் முதற்கொண்டு திருட்டு காதலர்களும், திருட்டுப் புருஷர்கள் உட்பிரவேசிக்கிறார்கள்.



பாவம் பச்ச தண்ணீர் மாதிரி விழுந்து விழுந்து குடிப்பீர்கள்! சூப்பராத்தான் இருக்கும் அதன் பின் உன் வாழ்க்கையே சுடுகாடாக மாற்றும்!

நகையும் போச்சு!

ஆஸ்தியும் போச்சு!

ஒரு குழந்தை பாக்கியத்துக்கு அழுது தொலைப்பீங்க....

அங்கு வியாதி! இங்கு வியாதி அங்கு வலிக்குது! இங்கு வலிக்குது என்று ஊழியர்களிடம் சொல்லுவீங்க. ஆனால் உங்கள் பாவமன்னிப்பை பெற்று மனந்திருந்த வசனத்திற்கு கீழ்ப்படிவீர்களா?

பாவத்திற்கு பரிகாரம் என்ன?

**உங்கள் ஆத்துமாக் களுக்காகப் பாவ நிவிர்த்தி பண்ணும்படி நீங்கள் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தும்போது, ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம். (யாத் 30:15)**

**அந்தப் பாவ நிவிர்த்தி பணத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்குக் கொடுப்பாயாக;அது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் ஆத்துமாக் களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக் குறியாயிருக்கும் என்றார். (யாத் 30:16)**

எவ்வளவு? ஒரு மாத சம்பளம் இல்லையேல் ஒரு மாத சுசுவிஷேசம் அறிவிக்கும் புத்தக செலவை ஏற்க வேண்டும். இதைச் செய்தால் புருஷனின் பலவீனம் மாற்றி உன் குடும்ப வாழ்க்கையை கெம்பீரமாய் ஆசீர்வதித்து மூன்றே மாதத்தில் நீ கற்பமாவாய் என்றும் கர்த்தர் ஒரு தகப்பனாக இருந்து பேசினார்!

பொருத்தனை செலுத்துவதற்கு தயார் ஆனாள்!

கர்த்தரின் கட்டளை பிறந்தது:

1. நீ உன் புருஷன் வீட்டை விட்டு இன்றே வெளியேற வேண்டும்.

2. உன் அம்மாவிடம் ஏழு நாள் தங்கியிரு! உடனே அவள் சொன்னாள் ப்ரதர் இது ஒரு மாதிரியான குடும்பம்! புருஷன் வீட்டிலிருந்து சொல்லாமல் புறப்பட்டால் திரும்ப வீட்டிலே அனுமதிக்க மாட்டார்கள். அதிலும் மாமியார் ராட்சசிமாதிரி!

என் புருஷனுடன் நான் சிரித்து பேசினாலோ என் மாமியார் கிழவி உறுமிக் கொண்டு வருவாள்! கல்யாணம் ஆகி இரண்டரை வருடத்தில் ஏழு நாள் வரைக்கும் சந்தோஷமாய் வாழ்ந்ததில்லை! வெளியே உலாவினது இல்லை. நான் இங்கே அடிமை மாதிரி!

தாவீது வனாந்தரத்திற்கு ஓடினது

போல் நீ இப்பவே ஓடிப்போ! தற்கொலை ஆவிகள் கொடூரமாய் எழும்பப் போகிறது! இதோ புருஷன் வந்து கொண்டிருக்கிறான்! உக்கிர கோபத்தில் வருகிறான் என்றார்.

பயந்தாள்! தாய் வீட்டிற்கே ஓடிப்போனாள்! மறு நாள் ஒரே ஒப்பாரி!

அடிபட்டாவது அந்த வீட்டிலேயே இருந்திருக்கலாம் புருஷனிடத்திலிருந்து என்னை பிரிச்சு விட்டீங்களே பாஸ்டர் அழுதாள்!

பிரிக்கவில்லை தற்போது காப்பாற்றியிருக்கிறேன்! வேத வசனங்களைச் சொன்னேன்!

எந்த பாவியின் மேலும் மனதுருகுகிற தேவன்! சங்கீதம் 50:14,15க்கு கீழ்ப்படிந்து பொருத்தனை செலுத்து பயப்படாதே என்றேன்!

பொருத்தனை செலுத்த மனம் மாறினாள்! நாட்கள் கடந்தது! இப்படி ஒரு ஊழியமா? ஊழியக்காரனாகிய என்னை தூஷித்தார்கள் திட்டினார்கள்....

2-வது வாரம் பொருத்தனை செலுத்த தயார் என்றாள்!

முதலில் பொருத்தனை அப்படித்தான் சொல்லுகிறது.

பொருத்தனை செலுத்துகிறேன் இப்ப நாங்க இரண்டு பேரும் சேர்ந்து வாழ ஜெபியுங்கள்.

நான் உனக்கல்ல! ஊழியக்காரன் கர்த்தருக்கு! கர்த்தருக்கு செலுத்து அதன்பின் தான் ஜெபம்! கோபத்தில் போண் வைத்தாள்!

3-வது வாரம் மறுபடியும் பேசினாள். நாளை இந்நேரம் 24 மணி நேரத்திற்குள் கர்த்தருக்கு பொருத்தனை செலுத்து கர்த்தரின் அதிசயத்தைபாரு. நாளைக்குள் பொருத்தனை செலுத்த மனம் இல்லையேல் வேறு ஊழியத்திற்கு போ!

டாக்டருக்கு கொட்டுவீங்க! கர்த்தருக்கு சில்லறையை தருவீங்க! இனிமே போன் செய்யாதே கண்டித்தேன்!

மறுநாள் 3.30 மணி!

பொருத்தனை செலுத்தி விட்டேன்! அக்கவுண்டைப் பாருங்க!

கர்த்தர் பேசினார்! நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு உன் சகோதரியை கூட்டிட்டு போ.... கர்த்தர் உன்னை மகாராணியாக வைப்பேன் கோணலானவைகளை கர்த்தர் செம்மையாக்குவார்! புறப்படு! ஜெபம் பண்ணுங்க!

கர்த்தரே பேசி விட்டார்! நோ ஜெபம்! புறப்பட ஆயத்தமாகு!

பயமா இருக்கு பாஸ்டர்! திட்டுவாங்க! அடிப்பாங்க

மறுநாள் 8.30 மணி!

சந்தோஷமாக சொன்னாள்

பாஸ்டர்! அவர் பேசினார்! வீட்டுக்கு கட்டாயம் வரச் சொன்னார்!

ஆண்டவருக்கு நன்றி சொல்லு! ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் என்று பேசினாள்!

2 மணி!

போண் செய்தேன்! சகோதரியின் அக்காள் எடுத்தாள்! இன்னும் போகலையா?

பாஸ்டர் தங்கச்சிகிட்ட பிசாசு ஒரே ஆட்டம்! எங்களை போட்டு அடிக்கிறா! நான் வீட்டை பூட்டிவிட்டு உள்ளே இருக்கிறேன்!

என்னையும் அம்மாவையும் துரத்தி துரத்தி அடிக்கிறா பாஸ்டர்!



சினிமா பிசாசு மாதிரி வாசலிலே உட்கார்ந்திருக்கிறா?

கண்ணை மூடிக்கோ! ஜெபிக்கிறேன்! ஜெபித்த போது கர்த்தர் 2 விதமான தற்கொலை ஆவிகளை கர்த்தர் கட்டவிழ்த்தார். பிசாசு எரிஞ்சு போச்சு! இப்போ அவளே குளித்து தயார் ஆகி புறப்பட ஆயத்தமாவாள் என்றேன்!

அடுத்த அரை மணி நேரத்தில் அடுத்த தகவல் வந்தது.

பாஸ்டர்! கிணற்றிலே தண்ணி எடுத்து குளிக்கிறா.... உடனே புறப்படுங்க...

4 மணிக்கு அவளே சகோதரியை அழைத்து கொண்டு போக புறப்பட தாய் சொன்னாள்! நானும் வருகிறேன்.....

நான் கூடாது என்றேன்! கெஞ்சினார்கள் கர்த்தர் கையளித்தார்!

புருஷன் வீட்டிற்கு வந்தார்கள்! அங்கு கிராமசபையே கூடியிருந்தது. இவர்களை வரவேற்க....

புது மணவாட்டியை வரவேற்றது போல் வரவேற்றார்கள்! கோணலானவைகள் கர்த்தர் சொன்னது போல் செய்து முடித்திருந்தார்.

ஒரு வாரத்திற்கு பின் தாய் மகன் சண்டை வந்து தாய் மகள் வீட்டிற்கு புறப்பட்டாள்.

குடும்ப வாழ்க்கை ஆரம்பித்தது. இனித்தது. கர்த்தர் சொன்னபடியே இரண்டே மாதத்தில் கற்பம்!

மருமகள் கற்பம் ஆனதை அறிந்து மருமகளை மாமியார் இப்போது உள்ளங்கையில் வைத்து வாங்கி வருகிறாள்! பிரியமானவர்களே! இது நடந்த சம்பவம் கர்த்தர் இன்றும் ஜீவிக்கிறார்.

# அழகிய கால் சொஸ்தமான அதிசயம்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

என் பெயர் பிரகாஷ். ஊர் நாகர்கோவிலை அடுத்த புத்தேரி. கடந்த 1 1/2 வருடங்களாக என்னுடைய கால்களின் அடிப் பகுதிகளிலும் பக்கத்திலுமாக கொப்புளமான புண்கள் வர ஆரம்பித்தது. அது கால்களின் அடிப்பகுதியில் வந்தால் செருப்பு அணிந்து தரையில் நடக்கும் போது அதிகமாய் வலிக்கும். சில சமயங்களில் பக்கவாட்டில் பெரிய கொப்பளமாகி நீர் வைத்து விடும்.

அப்போதெல்லாம் மருத்துவமனைகளை நாடி செல்வேன். ஒரு முறை வில்லியம் மருத்துவமனை சென்று கட்டு போட்டு வந்தேன். பின்பு பல முறை உடையார் விளையிலுள்ள தோல் மருத்துவமனை சென்று சிகிச்சை செய்தேன். அதன் பின்பு மறுபடியும் புண்கள் வரவே திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவ மனைக்கும் சென்று சிகிச்சை செய்தேன்.



எல்லா மருத்துவர்களும் இது சாதாரணபுண், அரிப்பு, அலர்ஜி என்று சொன்னார்கள்.

ஒரு சமயம் மார்த்தாண்டத்தில் நடைபெற்ற ஜெபக் கூடுகையில் கலந்து கொண்டு முடிந்த பின் வெளியே வரும் பொழுது நமது சகோதரரின் இயேசு பெரியவர் ஏப்ரல் மாத இதழ் ஒன்று எனக்கு கிடைத்தது.

அப்புத்தகத்தை வாசித்த பின்பு நமது சகோதரர் அவர்களை கர்த்தர் பயன்படுத்தும் விதத்தையும் தேவ செய்தியோடே சொல்லியிருந்தார்கள்.

நான் சகோதரர் அவர்களை தொடர்பு கொண்டு பேசி ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் சந்தித்தேன். அப்பொழுது என்னுடைய சரீரத்திலும் குடும்பத்திலும் உள்ள சில காரியங்களை மட்டும் சொன்னேன்.

நமது சகோதரர் அவர்கள் ஜெபத்தில் அனைத்து சம்பவங்களையும் சொன்னதோடு உங்களுக்கு காலில் ஏற்பட்டிருப்பது நோய் அல்ல. அது ஒரு மந்திரத்தின் விளைவு என்று விளக்கமாக கூறினார்கள்.

அன்றைய தினம் ஜெபித்து சில ஆலோசனைகளை சொல்லி அடுத்த மாதம் நடக்கிற உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி சொன்னார்கள். நானும் உபவாசக் கூட்டத்தில் வந்து ஜெபித்தேன். எனக்கு ஜெப எண்ணெய் ஜெபித்து இந்த ஜெப எண்ணெயை தினமும் காலில் பூசு. கர்த்தர் நிச்சயம் சுகம் தருவார். சில நாட்களிடிலேயே தோலின் நிறம் மாறும் என்று சொன்னார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெப எண்ணெயை பூசினேன்.

சில நாட்களிலேயே கால்களிலும் சரீரத்திலும் ஒரு மாற்றத்தை உணர்ந்தேன். பூரணமான விடுதலையை கர்த்தர் கொடுத்தார். தொடர்ந்தும் உபவாச கூடுகைகளில் கலந்து கொண்டு ஜெபித்தேன். நமது சகோதரர் மூலம் அனேக காரியங்களை கர்த்தர் வெளிப்படுத்தினார். இம்மட்டும் சுகம் தந்து நடத்தி வருகிற தேவாதி தேவனுக்கு நன்றி சொல்லி மிகவும் பாரத்தோடு ஜெபித்த நமது சகோதரர் அவர்களுக்கும் நன்றி. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**பிரகாஷ்,** நாகர்கோவில்.

## நிர்வாணமாய் இருந்த பைத்தியக்காரன் ஆடை உடுத்திய அதிசயம்.

எனது பெயர் டைசி. புதுக்கடையிலிருந்து வருகிறேன். எனது அக்காள் பெயர் கனகம். இவளுடைய மகன் முழு பைத்தியக்காரன். பார்ப்பதற்கே மகா தாடி மீசையுடன் மிக கொடூரமாக இருப்பான். நாங்கள் சில மாதமாக ஜீவஒளி ஜெபக் கோபுரத்திற்கு வந்து கொண்டு இருக்கிறோம்.

சமீப காலமாக அவன் ஆடை உடுத்திக் கொள்ளாமல் நிர்வாணமாக நிற்க ஆரம்பித்தான். வேதனையோடு ஊழியக்காரரிடம் முறையிட்டோம். அப்பொழுது ஊழியக்காரர் சொன்னார் நீ போ. அவன் ஆடை உடுத்து நிற்பான் என்றுச் சொன்னார். நாங்களும்



நம்புகங்கையுடன் கடந்து சென்றோம். நாங்கள் வீட்டடிற்கு சென்றபோது உண்மையிலேயே அவன் ஆடையோடு நின்றான். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.



## என் மகளை கடத்தி கல்யாணம் செய்ய தீர்மானித்தான். கர்த்தர் தடுத்து நிறுத்தி காப்பாற்றினார்.

எனது மகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவன் அவனுடைய சகோதரி மூலம் அழைத்துச் சென்று என் சகோதரனை திருமணம் செய்து கொள். அவன் உன்னை ரொம்ப விரும்புகிறான் என்று சொல்லி மகளை வற்புறுத்தினாள்.

இதை ஊழியக்காரரி டத்தில் வந்து சொன்னோம். அவர் ஜெபித்து விட்டுச் சொன்னார் அவனை கர்த்தர் அடிப்பார். இவளுக்கு தூர தேசத்திலிருந்து அழகான புருஷனை மேன்மையான இடத்திலிருந்து கொண்டு வருவேன் என்று சொன்னார். திருமணம் ஆகி பட்டணத்தில் பிரவேசிப்பார்கள் என்று தீர்க்கத்தரிசனம் உரைத்திருந்தார்கள். அதே வருடத்தில் கர்த்தர் சொன்னபடி எங்களுடைய தகுதிக்கு



அதிகமானபடி ஒரு மணமகனை கர்த்தர் தந்தார். அதன்படி திருமணமாகி பட்டணத்தில் பிரவேசித்தார்கள். இப்போழுது அவள் கர்ப்பமாக இருக்கிறாள். அவள் இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறாள். நாங்களும் சந்தோஷமாக இருக்கிறோம்.

**ரொமேன்ஸ்மேரி, தூத்தூர்.**

## இருதய வலியிலிருந்து விடுதலை

எனது ஊர் குளச்சலில் கோடிமுனையாகும். நான் மாதம் தோறும் ஜீவ ஒளி ஜெபக்கோபுரத்திற்கு வருவதுண்டு. கடந்த கூட்டத்திற்கு வரும் போது தீடீர் என நெஞ்சுவலி ஏற்பட்டு துடிதுடியாய் அழுதேன். மூச்சுவிட முடியவில்லை. திடீர் என வியர்வை மழையாய் கொட்டியது மூச்சுவிட முடியாது. அப்போது எனது அக்கா பிள்ளைகள் மருத்துவ மனைக்கு கொண்டு போக தீர்மானித்த போது பாஸ்டருக்கு கூப்பிட்டு கேட்டார்கள். என்ன செய்ய வேண்டும் என்றோம் . அவர் சொன்னார் வேகமாக ஜெபக் கோபுரத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.

ஆனால் நானோ மயக்கமாயிருக்கிறேன் நினைவு ஒன்றுமில்ல ஜெபக் கோபுரத்தில் வாசலில் நின்ற பாஸ்டர் ஜேப்பியார் அவர்கள் தலையில் கைவைத்து



ஜெபித்திருக்கிறார். உடனே நான் நினைவு பெற்று மூன்றாவது மாடியில் நடைபெறும் ஜெபத்தில் கலந்து கொண்டேன். என் நெஞ்சு வலி பறந்து போனது.கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

அந்தோனியம்மாள்,
கோடிமுனை.

# பைத்தியத்தை கர்த்தர் சொஸ்தமாக்கினார்

ஒரு நாள் அனேக வீடுகளுக்கு கர்த்தரின் நாமத்தை வெளிப்படுத்த உபவாசத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தோம். எல்லா வீடுகளிலும் ஜெபித்து முடித்து உபவாசத்தையும் முடித்துக் கொண்டு உணவருந்தி ஒய்ந்ததும்

ஜீவஒளியின் இல்லத்தின் முன்பு மூன்று உடன் பிறந்த சகோதரிகள் வந்து நின்றனர். கூட இரண்டு ஆண் பிள்ளைகள்.

சகோதரிகளைத் தெரியும். ஏன் என்றால் ஒரு சகோதரியை நம் இயேசுவால் பலத்த பிசாசுகளின் போராட்டத்திலிருந்து மீட்டு பிரிந்திருந்த கணவரோடு இணைத்து வைத்தார் நம் கர்த்தர்.

அந்த சகோதரி சொல்வாள், என் தம்பிக்கு தலைக்கு சுகமில்லாமல் இறங்கி ஓடினான். பிடித்துக் கட்டிப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் வந்து ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் சற்று தடுமாறினேன். ஏன் என்றால் இரவு சுமார் 9 மணி இருக்கும். அப்போது இந்த சகோதரியின் அக்கா புருஷன் ஆன சகோதரன் சொல்லுவான்

ஏன் என்றால் இந்த சகோதரன் வீட்டில் தான் நோய்வாய்ப் பட்ட சகோதரன் வளர்ந்து வருகிறான். நான் உடனே பழைய வாழ்க்கையையும் தீமையையும் பாவங்களையும் இயேசுவினிடத்தில் ஒப்படையுங்கள். அவர் விடுவிப்பார் என்று சொல்லி அந்த மகனுக்காக ஜெபிக்க முயற்சித்தேன்.

அப்போது அவர்கள் என்னை அழைத்துச் செல்ல காரோடு வந்திருந்தார்கள் என்பதை தெரிவித்து அவசரப் படுத்தினார்கள்.

சீக்கிரம் வாருங்க. இல்லையேல் மந்திரவாதியிடம் அழைத்துச் செல்ல வேண்டும். இதற்கு முன்பு அடிக்கடி இப்படியாகும். அப்போதெல்லாம் நாங்கள் மந்திரவாதியிடம் கொண்டு செல்வோம் என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார்.

மந்திரத்தை இனிமேல் தேடினால் கர்த்தரே உங்களை அடித்துப் போடுவார்என்று சொல்லி என் வீட்டிலே ஜெபிக்க ஆரம்பித்தோம்! பதறின சகோதரிகளின் சப்தத்தை கர்த்தர் கேட்டார். ஆதரவற்ற இந்த ஏழைகளின் அபய குரலை கர்த்தர் கேட்டார்.

எப்படி தீமை ஏற்பட்டது! எந்த நேரத்தில் தீமை ஏற்பட்டது! என்று கர்த்தர் கூறி அற்புத விடுதலை கொடுத்தார். சொஸ்தமானான் என்றார். அவர்கள் விசுவாசிக்கவில்லை ஏன் என்றால் கர்த்தர் ஒரே வாத்தையை சொல்லி விட்டாரே! ஏன் என்றால் பெரிய வியாதி அல்லவா?

சிம்பிளா முடிச்சிட்டாரே.... என்று கதி கலங்கினவர்களுக்கு கர்த்தரின் ஆவியானவர் இந்த எண்ணெயை அவன் தலையின் பூசுங்கள். பயப்படாமல் போங்கள் என்றார். இருந்தாலும் என்னை கொண்டு போவதிலேயே குறியாக இருந்தார்கள். உடனே கர்த்தரின் ஆவியானவர் வசனத்தை உணர்த்தி

நீங்கள் செல்லுங்கள் அவன் இப்போதே சொஸ்தமானான். நீங்கள் அவனிடம் செல்லும் போது சொஸ்தமானவனாகக் காண்பீர்கள். அவனுக்கும் இல்லத்துக்கும் ஆசீர்வாதம் வரும் என்றார். அவர்கள் கிளம்பிச் சென்றார்கள்.

மறுநாள் காலை 11 மணியிருக்கும் நான் டீ குடிக்க கடைக்கு சென்றபோது இரண்டு சகோதரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது கர்த்தர் உணர்த்தி இவன் தான் அந்த பைத்தியக்காரன் என்றார். நான் அவனை நெருங்கிப் பார்த்தேன். அவனுக்கும் என்னை தெரியாது. எனக்கும் அவனைத் தெரியாது. சில மணி நேரம் கழித்து சகோதரியின் வீட்டிலிருந்து அழைப்பு வந்தது, ஜெபிக்கச் சென்றேன். என்ன ஆச்சரியம் ரோட்டில் பார்த்த அதே சகோதரன்.

அந்த சகோதரி சொல்வாள் பிரதர் நீங்கள் சொன்னது போல் இவர்கள் காரில் ஏறி குலசேகரம் சென்றதும் அங்கு பூரண விடுதலையாயிருந்தான். என் தம்பி இன்று காலையிலே உங்களை பார்த்து ஜெபித்து செல்ல வந்திருக்கிறான் என்றாள். எவ்வளவு சந்தோஷம் அவர்களுக்கு கர்த்தரின் மகிமையைப் பார்த்தீர்களா?

குடும்பத்தில் என்ன சந்தோஷம்? தாயின் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி! கர்த்தரின் நாமத்திற்கே ஸ்தோத்திரம். எனக்கு அவர்கள் சொன்னதும் பயங்கரமான மகிழ்ச்சி! ஒரே வார்த்தையில் சுமார் பல வருடமாக போராடிய இந்த மகனுக்கு கர்த்தர் கொடுத்த விடுதலையைப் பாருங் கள். அடிக்கடி வெறிபிடித்து ஓடுகிற மகனுக்கு கர்த்தர் கொடுத்த பரி பூரண விடுதலையைப் பாருங்கள்.

கர்த்தர் அந்த மகளை ஆசீர்வதித்தார். இப்போது இந்த இல்லத்தில் கர்த்தர் செய்த பயங்கரமான அதிசயத்தை சாட்சி யாய் சொல்லி மகிழ்ந்தார்கள்.

# படுக்கையில் முடங்கிக் கிடந்தேன்! எழும்பி நடந்தேன்!

அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றார். (மத் 9:2)

கடற்கரை தேசத்தில் நடந்த சம்பவம்.

இன்று பிசாசானவன் பயங்கரமான வல்லமையோடு கிரியை செய்து கொண்டிடுருக்கிறான். இயேசுவையே சோதித்த பிசாசு பதிமடங்கு பயங்கரமாக கிரியை செய்கிறான் என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு.

மாலை வேளை மீனவப்பெண்மணி குளிக்க ஆற்றுக்குச் சென்றாள். அந்த வேளையில் ஒரு நாய் (ஆனால் நாயல்ல) பயங்கரமான உயரத்துடன் திடீர் என பனைமரமாய் வளர்ந்து இந்த சகோதரி மேல் பாய்ந்துள்ளது.

சகோதரி உயரே தூக்கி எறியப்பட்டுள்ளாள். பேச்சு மூச்சு இல்லை!

இந்த சம்பவத்தைப் பார்த்த இன்னொரு சகோதரி ஓடிச் சென்று அந்த சகோதரியை உருட்டி புரட்டிப் பார்த்து செத்துப் போயிருப்பாளோ என பயந்து கூக்குரலிட்டு பலரைக் கூப்பிட்டு நித்திரவிளை மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தார்கள். ஆனால் அந்த சகோதரிக்கு எந்த விடுதலையும் கிடைக்கவில்லை.

அனேக ஊழியக் காரர்களைத் தேடினார்கள். இரவும் பகலும் அழுதார்கள். ஆனால் சுகம் கடந்து வரவில்லை.

இந்த வேளையில் எங்களையும் அழைத்தார்கள். ஆனால் கர்த்தர் எங்களை ஜெபத்திற்கு போக அனுமதிக்கவில்லை. அதே மருத்துவமனையின் நேர் எதிரில் தான் நாங்கள் குடியிருந்தோம்.

ஒரு சகோதரி வந்து தினம் தினம் ஜெபிப்பதற்கு அழைப்பார்கள். கடைசியாக மருத்துவத்தால் கைவிடப் பட்டு வீட்டிலே அந்த சகோதரியை கொண்டு சேர்த்தார்கள்.

இரவு வேளை வந்தால் அந்த சகோதரிக்கு மரண பயம் வந்து தூக்கம் இல்லாமல் அழுதார்கள்.

நள்ளிரவு பிசாசுகள் படுக்கைக்கு கடந்து வந்து இந்த மகளை இழுத்துக் கொண்டு போக முயற்சிப்பதும் வா என்னோடு என்று சொல்வதும் இந்த சகோதரிக்கு தென்பட்டு மரண பயத்தால் அழுவார்கள். பிசாசுகள் கூடி நிற்பதைக் கண்டு



உறவினர்களிடத்தில் சொல்லுவாள்.

இதனால் பல வாரங்களாக உறவினர்களுக்கும் தூக்கம் இல்லை. இதை ஒவ்வொரு நாளும் என்னிடத்திலர் வந்து சொல்லி ஊழியத்திற்கு அழைப்பார்கள்.எந்த நிமிஷமும் மரித்து போகிற ஒரு சூழ்நிலையை உறவினர்கள் எதிர்பார்த்து இருந்தார்கள்.

ஆனாலும் கர்த்தர் என்னை அனுப்பவில்லை. அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணி இருக்கும். கர்த்தர் அந்த ஸ்திரீயினிடத்தில் போ என்று சொன்னார். கடந்து சென்றோம்.

கூடியிருந்தவர்களுக்கு மகிழ்ச்சி. கழுத்து, இடுப்பு, கை, கால் நெஞ்சுப் பகுதிகள் எல்லாம் பெல்டால் பூட்டப்பட்டு படுக்கையில் கிடத்தப் பட்டிருப்பதைக் கண்டோம்.

**கர்த்தர் பேசினார் இயேசுவால் விடுவிக்க கூடும் என்று நீ விசுவாசிக்கிறாயா? என்று கேட்டார்.**

நூற்றுக்கு நூறு விசுவாசிக்கிறேன் என்றாள். அப்ப ஏன் படுத்து கிடக்கிறாய்! எழும்பு! பெல்டை கழற்றி தூக்கிப்போடு! எழும்பி நட! என்று கட்டளைகள் பிறந்தது.

உடனே கூடியிருந்தவர்கள் சொன்னார்கள், அவளால் எழும்பியிருக்க முடியாது, அசைய முடியாது என்றார்கள்.

கர்த்தர் மறுபடியும் பேசினார். எழும்பி நட என்று சொன்னார். எழும்ப முடியாதவள் அசைய ஆரம்பித்தாள் எழும்ப முயற்சித்தாள். உடனே எல்லாரும் ஓடி வந்து பிடிக்க ஆரம்பித்தார்கள்.

கர்த்தர் சொன்னார் எல்லாரும் விலகிப் போங்கள். அவள் எழும்புவாள், கொஞ்சம் கொஞ்சமாக எழும்ப ஆரம்பித்தாள், எழும்பி உட்கார்ந்தாள். அதன்பின் எழும்பி நின்றாள். அதனை தொடர்ந்து நடந்தாள். காலில் வலி இருக்கிறதா என்று அறிய காலை தரையில் ஓங்கி இடித்தாள்.

உடம்பெல்லாம் ஒரே வலி என்று சொன்னவர்கள். தேவன் அவளுக்கு கொடுத்த விடுதலையை பார்த்து பிரமித்தார்கள். இவ்விதமாக பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுதலை கொடுத்து நடக்க வைத்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

**நீங்கள் எனக்கு செவிகொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத் தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள் மேல் வரப்பண்ணுவேன். (லேவி 26:21)**

**அவருக்குள் ஜீவன் இருந்தது; அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. [யோவான் 1:4]**

**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. [யோவா 1:5]**

# வெளியே வர முடியாத சிறையிலிருந்து அதிசய விடுதலை

இலங்கையைச் சேர்ந்தவர் தமிழக சிறைச்சாலையில். இனி புருஷனை பார்க்க முடியுமா? என்ற தவிப்பு சகோதரிக்கு

இயேசுவை நம்பினாள்! பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு இயேசுவை தேட ஆரம்பித்தாள்!

ஒரு நாள் இந்த ஊழியத்தின் புத்தகத்தைப் படித்ததும் நம்பிக்கையுடன் பேசினாள் இவள்.

போனிலே ஜெபித்தேன். கர்த்தர் பேசினார், மூன்றே மாதத்தில் அவன் சிறையிருப்பை மாற்றுவேன். உனக்கு கர்த்தர் மேல் நம்பிக்கை இருந்தால் சங்கீதம் 96:8-ன் படி கர்த்தருக்கு பொருத்தனை செலுத்து என் மகிமையைக் காண்பாய் என்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினார். நம்ப முடியலியே பிரதர் அவருக்கு விடுதலையா? அதுவும் மூன்றே மாதத்திலா...... நடக்குமா பிரதர்!

சகோதரிக்கே சந்தேகம். அப்படியானால் புருஷன் எப்படிப்பட்ட கோரப்பிடியில் சிக்கியிருப்பான்...

பவுலையும் சீலாவையும் விடுவித்த கர்த்தருக்கு வல்லமை உண்டு என்றால் என் கர்த்தரால் கூடும்.

மூன்று மாதத்திற்குப் பின் ஒரு போன்.....

பிரதர் அவர் வந்திட்டார்!

நம்ப முடியல! இயேசு அதிசயம் செய்தார்! மிக்க நன்றி!

என் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை! உங்களுக்குச் சிறையா? கர்த்தர் மனதுருகினால் எந்த சிறையும் சிறையிருப்பும் உடையும்.

இயேசுவை நம்பி பொருத்தனை செலுத்தி தேவனை நோக்கிக் கூப்பிட்டால் சங்கீதம் 50:14,15ன் படி

**நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, (சங் 50:14)**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய். (சங் 50:15)**

**அற்புதம் எரேமியா 33:3-ன் படி நடக்கும்.**

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.



# மார்பில் இருந்த கட்டி காணாமல் போனது

என்னுடைய பெயர் பாலின். நான் ஆறு மாதங்களாக நெஞ்சின் நடுப்பகுதியில் ஒரு கட்டி போல் வந்து மிகவும் அவதிப்பட்டேன். அது நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக ரெிதாகிக் கொண்டது. தினமும் நான் அதை தொட்டுப் பார்த்து கொண்டே இருப்பேன். என் மனதில் மிகவும் பயம் தெரிந்தது. எனக்கு ஏதோ பெரிய கட்டி வந்து பெரிய நோய் வந்து விட்டது என்று உணர்ந்தேன். என்னால் சுவாசிக்க முடியாது. சுவாசிக்கும் போது வலி ஏற்படும்.



ஒரு நாள் ஈரோட்டில் ஆசீர்வாதப் பெருவிழா நடந்தது. அப்பொழுது ஜீவஒளி ஜெபக்கோபுரம் என்ற புத்தகத்தை அங்கு எல்லோருக்கும் கொடுத்தார்கள். அதை என் பெற்றோர்கள் வாங்கிக் கொண்டுவந்து எங்கள் வீட்டின் டேபிள் மீது வைத்து விட்டார்கள். நான் அடுத்த நாள் அந்த புக்கை பார்க்கும்போது எனக்குள் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்தது. அந்த புத்தகத்தை படிக்கப் படிக்க எனக்குள் விசுவாசம் பெருகினது. உடனே போதகர் அவர்களுக்கு போனில் அழைத்து ஜெபிக்கச் சொன்னேன்.

என்னுடைய பிரச்சனைகளை அவரிடம் சொல்லி காலையில் ஜெபிக்க கேட்டேன். அவர் சரியாக காலை 11.15 மகின்னு ஜெபித்து விட்டு, உனக்குள் இருக்கிற சர்ப்பத்தின் கிரியையும் இரண்டு கட்டுகளையும் உடைக்கிறேன் என்று சொல்லி ஜெபித்தார். அப்பொழுது என் வலி குறைந்து விட்டது. ஆனால் கட்டி இருந்தது. மறுபடியும் அதே நாள் 2.30 மணிக்கு மதியம் தொடர்பு கொண்டு அவரிடம் சொன்னேன்.

பாஸ்டர் வலி குறைந்து விட்டது. ஆனால் கட்டி இருக்கிறது என்று சொன்னேன். மறுபடியும் அவர் ஜெபித்தார். ஜெபித்து முடித்த உடனே போனை கட் செய்து விட்டு அந்த கட்டியைப் பார்த்து மிகவும் ஆனந்தத்தால் கலங்கிப் போனேன்.

ஏன் என்றால் அந்த கட்டி 5 நிமிடத்தில் காணாமல் போய் விட்டது. பாஸ்டரை போனில் தொடர்பு கொண்டு பேசினேன். பாஸ்டர் என் கட்டி மறைந்து விட்டது; எப்படி மறைந்தது என்று எனக்கே தெரியவில்லை என்று அழுது கொண்டே சொன்னேன். அது தான் இயேசு கவலைப்படாதீங்க என்று சொன்னார். இன்றும் என்றும் சதாகாலமும் உயிரோடிருக்கிற இயேசு கிறிஸ்து இந்த அற்புதத்தை எனக்குச் செய்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

# பைத்தியத்தை கர்த்தர் குணமாக்கினார்



என் கணவர் பெயர் ஏசுதாஸ். பால் வெட்டும் தொழிலாளி. எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள். மூத்த மகளை திருமணம் செய்து கொடுத்து விட்டேன். இளைய மகள் எம்.ஏ படித்துக் கொண்டிருக்கிறாள்.

எனது கணவர் ஒருநாள் மாடி வீட்டிலிருந்து கீழே விழுந்து இடுப்பு எலும்பு முறிந்தது. மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை செய்தோம். தடீரென்று சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்தபோது திடீர் என்று சுயத்தை இழந்தார். ஒரு முழு பைத்தியக்காரனைப் போல் மாறினார்.

சாப்பாடு குழந்தைக்கு ஊட்டி கொடுப்பது போல் கொடுக்க வேண்டும் திடீர் திடீர் என வேட்டியையும் சட்டையையும் கழற்றி வீசுவார். மனைவி பிள்ளைகளை அவருக்கு தெரியாது. திடீர் என்று பிசாசைப் போல் பேசுவார், கத்துவார், இறங்கி ஓடுவார், இரவும் பகலும் ஒரு வினாடி கூட அவர் தூங்குவதில்லை. ஜெபம் ஏரெடுத்தோம், சபைகளுக்கு சென்றோம் விடுதலையில்லை.

எங்கள் ஊர் கடையல் பகுதிக்கு உட்பட்ட ஒரு சின்ன ஊராகிய காட்டாவிளை. ஜீவஒளி ஜெபக்கோபுரம் கடையலில் அமைந்திருக்கிறது. திடீர் என்று ஒரு நாள் ஒரு சகோதரி இந்த ஊழியத்தில் வந்து புருஷனுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். உடனே ஊழியக்காரரிடத்தில் நான் கடந்து சென்றேன்.

அவர் ஜெபித்து விட்டுச் சொன்னார் அவர் பைத்தியத்தை குணமாக்குவார். ஆனால் நீயோ ஒரு பொருத்தனையை செலுத்து என்றார். நாங்கள் வியாதிக்காக அனேக மருத்துவமனைகளுக்கு சென்று கடன் பட்டு மிகுந்த துக்கத்தில் இருந்தோம். ஒரு ரூபாய் கூட எங்களால் புரட்ட முடியவில்லை. உடனே அவர் மருத்துவ மனைகளுக்கு என்றால் நீங்கள் புரட்டி புரட்டி கொடுப்பீர்கள். மருத்துவமனைக்கு கொடுக்க நீங்கள் இல்லை என்று சொல்வதில்லை. மருத்துவரிடத்தில் வியாதி நீங்கினபின்பு பணம் கட்டுகிறேன் என்று நீங்கள் யாரும் சொல்வதில்லை. ஆனால் எப்படியாவது பணத்தை புரட்டி கொடுப்பீர்கள்.

ஆனால் கர்த்தர் கேட்டால் கர்த்தர் சுகமளிக்கட்டும் அப்புறம் பார்க்கலாம் என்று சொல்வீர்கள்.
ஆனால் வேதம் என்ன சொல்கிறது

**நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி; (சங் 50:14)**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். (சங் 50:15)**

பொருத்தனை பண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்; அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்கு காணிக்கைகளைக் கொண்டுவரக் கடவர்கள். (சங்76:11)

பிரபுக்களின் ஆவியை அடக்குவார்; பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர். (சங் 76:12)

**இதோ, சமாதானத்தை கூறுகிற சுவிசேஷகருடைய கால்கள் மலைகளின் மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய் கடந்து வருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான். (நாகூம் 1:15)**

இந்த வசனங்களை கேட்டு கீழ்ப்படிந்தோம். ஊழியக்காரர் அச்சிட்டு வெளியிடும் இயேசுபெரியவர், மற்றும் ஜீவஒளி ஜெபக்கோபுரம் பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிட ஒரு பொருத்தனையை நிறைவேற்றினோம். அப்பொழுது என் வீட்டுக்காரரை ஜெபக் கொபுரத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்தோம். ஆனால் அவர் கொண்டு வரவிடவில்லை. நான் எப்பொழுது கொண்டு வரச் சொல்கிறேனோ அப்பொழுது கொண்டு வந்தால் போதும் என்றால். அதுவரையிலும் டெலிபோனில் ஜெபித்தார். சுமார் ஒரு மாதத்திற்கு பிறகு மாதத்தின் முதல் சனிக்கிழமை கூட்டத்தில் கலந்து கொள்ளச் சொன்னார்.

கூட்டத்தின் நடுவில் அடிக்கடி உடுத்திருந்த வேட்டியையும் சட்டையையும் கழற்றி வீசி ஜட்டியோடு நின்றார்.

கூட்ட முடிவில் ஜெபித்தார் கர்த்தர் விடுதலையாக்கினார் என்று சொன்னார். கூட்டம் முடிந்ததும் சாப்பாடு வழங்கினார்கள் சாப்பிட்டோம். சாப்பிட்டு முடிந்ததும் சுமார் 2 மணி நேரம் ஜெபக் கூடாரத்தில் அமைதியாக தூங்கினார் எனக்கு சந்தோஷமாக இருந்தது.

பிறகு அவருடைய தூக்கத்தை கலைத்து வீட்டிற்கு அழைத்து செல்ல முற்பட்டபோது அவர் மறுபடியும் வேட்டி சட்டை அவிழத்து நின்றார். மறுபடியும் ஊழியக்காரர் ஜெபித்து கர்த்தர் விடுதலையாக்கினார் என்று சொன்னார். விடுதலையை உன் கண் காணும் என்றார்.

வலுக்கட்டாயமாக வீட்டுக்கு அழைத்து வரும் போது மூன்றாவது மாயிலிருந்து விழுந்து தரைத்தளம் வரைக்கும் படிக்கட்டில் விழுந்து உருண்டார். அதன் பிறகு தரைத்தளத்தில் கிடந்த தண்ணீர் தொட்டியில் தலையைக் கொண்டு முக்கினார்.

அதன் பின்பு ரோட்டில் வந்து மறுபடியும் வேட்டி சட்டையை கழற்றி வீசினார். ஆட்டோவில் ஏற அடம் பிடித்தார். பின்னர் ஊழியக்காரர் ஓடி வந்து தோள் பட்டையில் ஒரு அடி கொடுத்தார். அடியோடு தரையில் குப்புற விழுந்தார். அதன் பின் சிறிது சிறிதாக குணமானார். தூங்காத கணவர் துங்கினார். மனைவி பிள்ளைகளை உணர ஆரம்பித்தார்.

இரவு நன்றாக துங்கினார், பைபிள் வாசித்தார். நன்றாக பாடி ஜெபித்தார். ஒழுங்காக பாத்ரூம் சென்றார். ஒழுங்காக சாப்பிட்டார்.

மறுமாதம் நடந்த கூட்டத்தில் மறுபடியும் கலந்து கொண்டோம். பூரணசுகத்துடன் முன் வரிசையில் அமர்ந்து தேவனை பாடி துதித்தார். 30 நாட்களில் கர்த்தர் முழு பைத்தியமான என் கணவனுக்கு முழு சுகம் கொடுத்தார். இந்த சாட்சியை நான் பகிர்ந்து கொள்வதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

ஏசுதாஸ். காட்டாவிளை, கடையல்.

## கானாவூர் கல்யாணத்திலே அற்புதம் செய்த என் இயேசு என் அக்கா மகளுக்கு அற்புதம் செய்தார்.



ஜீன் மாதம் 20-ம் தியதி எனது அக்கா மகளுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. ஒரு ரூபாய் கூட இல்லாமல் இருந்தது. சுமார் 15 லட்சம் ரூபாய் வேண்டும். கடந்த மாதம் கூட்டத்தில் 3-06-2018 அன்று வந்து கண்ணீர் விட்டு அழுது விட்டு சென்றேன். என் அக்காள் சுயம் இல்லாமல் இருக்கிறார்கள். அக்கா தான் இந்த திருமணத்தை இருந்து நடத்த வேண்டும் உதவி செய்யுங்கப்பா என்று கண்ணீர் விட்டு அழுதேன். இருந்த பாரத்தோடு திரும்பிச் சென்றேன். உடனே வீட்டுக்குத் திரும்பிச் சென்றேன். ஒரு போண் வந்தது. 4 லட்சம் ரூபாய் இருக்கிறது வந்து வாங்கி விட்டு போங்கள். பல வானத்திலிருந்து ஒரு பெரிய மழை வந்த அந்ததோசம் தாங்கியிருக்கும். 3-06-2018 அன்று ஜெபத்தின் நடுவிலே ஊழியக் காரர் பேசியிருந்தார். பரத்திலிருந்து உனக்கு ஒத்தாசை அனுப்பினார். திருமணம் மிகவும் செழிப்பாகவும் கானாவூர் கல்யாணம் போல் கெம்பீரமாய் நடக்கும் என்று சொல்லி யிருந்தார்.கொஞ்ச நாள் 17 நாட்களுக்குள் எல்லா விதமான பணத்தேவை களையும் கர்த்தர் அற்புதமாக கர்த்தர் சொன்னபடி எல்லாமே மங்களமாக நடந்தது. கர்த்தருக்கு கோடாகோடி நன்றி. மணமகளின் தங்கை போணில் சொன்னார். பிரதர் நாங்கள் 200 திருமண அழைப்பிதழ்கள் தான் அச்சிட்டோம்.ஆனால் பணம் தேவையாக இருந்ததினால் எடுக்காகவும் கொடுக்கவும் இல்லை. ஆனாலும் மொத்த பணமே 4 லட்சம் ரூபாய் வந்திருந்தது. எப்படி என்றே எங்களுக்கே தெரியவில்லை இது அதிசயம் என்றார்கள். ஆனால் முன்பே சொல்லியிருந்தார் ஊழியக் காரர் மூலம் 1000 கார்டுகள் பிரிண்ட் போட்டு உற்சாகமாக கொடுங்கள். மொத்த திருமணமே கர்த்தர் நடத்துவார் என்று தீர்க்க தரிசனம் உணர்த்தியிருந்தார்.இதன்படி நாங்கள் செய்திருந்தோம். மற்றுமொரு பொருளதார பெரு மழை கண்டு பிரமித்திருப்போம்.

இவண்

அந்தோனியம்மாள் மணமகளின் பெரியம்மா

மணமகளின் தங்கை சவுமியா.

### உபாகமம் 23:21,22, 23

**நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ்செய்யாதே;உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும்.**

**நீ பொருத்தனை பண்ணாதிருந்தால், உன் மேல் பாவம் இல்லை.**

**உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணிச் சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக.**



## இரண்டு கிட்னிகளும் பழுதடைந்ததால் 8 நாளில் நீ மரித்துப் போவாய் என்று 8 மருத்துவமனைகள் சொன்னது. 8 மணிக்கு பிரதருக்கு போன் செய்தேன். அவன் உயிரோடு இருப்பான் என்று கர்த்தர் சொன்னார். வாக்குத்தத்தம் தந்த தேவன் உண்மையுள்ளவர்.

எனது பெயர் சுரேஷ். தேனி மாவட்டம். எனக்கு திடீர் என இரண்டு கிட்னிகளும் பழுதடைந்து விட்டது. மரண பயம் என்னை விழுங்கி விட்டது. மருத்துவமனையும் ஜெபமுமாக தேவ சமுகத்தில் போராடினோம். வியாதி நீங்கவில்லை. ஈரோட்டிலிருந்து ஜீவஒளி ஜெபக்கோபுரம் புத்தகத்தில் தேவன் செய்திருக்கிற அற்புதங்களை படித்து மகிழ்ந்த சகோதரி எனக்கு டெலிபோன் நம்பரைத் தந்தார்கள். நானும் ஜெபித்தேன். அதன் பின் பாஸ்டர் ஜேப்பியாரிடம் தொடர்பு கொண்டு ஜெபிக்கச் சொன்னேன்.

அவர் டெலிபோனிலே ஜெபித்து ஜீவனைத் தருகிறார் நீ சொஸ்தம் என்று சொன்னார். அந்த வேளையில் நான் சுகமானதை உணர்ந்தேன். மறு பரிசோதனையில் எனது இரண்டு கிட்னிகளும் சரியாக இயங்க ஆரம்பித்தது. இப்பொழுது பரிபூரணமாக இருக்கிறேன். ஆகவே இந்த ஊழியக்காரன் ஜெபிப்பதற்கு முன்பு 8 மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்றோம். 8 மருத்துவ மனைகளும் இவன் 8 நாட்களுக்கு மேல் உயிரோடு இருக்கமாட்டான் என்று சொன்னார்கள். ஊழியக்காரர் ஜெபித்தபின் அவன் உயிரோடு இருக்கிறபடியினால் அவன் சொன்ஸ்தமானபடியினால் நாங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து ஜெபக் கூடாரத்தில் வந்து தேவனுக்கு முன்பாக இந்த சாட்சியைச் சொல்லுகிறேன். என் ஜீவனுள்ள கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**கர்த்தர் உங்களுக்கு செய்த அற்புதங்களை இந்த பத்திரிகையில் சாட்சியாய் வெளியிட உங்கள் போட்டோவுடன் உங்கள் சாட்சி கடிதத்தை எமக்கு அனுப்புங்கள். கர்த்தர் உங்களை மிகவும் பலுகி பெருக ஆசீர்வதிப்பாராக.**

**ஜீவஒளி ஜெபக்கோபுரம்,**
**சீயோன் மண்டபம்,**
**கடையல், களியல் அஞ்சல்**
**629101. மார்த்தண்டம் வழி,**
**குமரி மாவட்டம். 9442131629.**

## கற்பத்தை கலைக்க கற்பம் ஊனமயிருக்கிறது ஆனாலும் கற்பத்திலே அதிசயம் செய்த மகா பெரிய தேவன்



எனது பெயர் ஜாய்ஸ். நான் குளச்சல் கோடிமுனையிலிருந்து வருகிறேன்.எனது மகள் சீனிகா. அவள் ஒரு முறை கற்பமானள். கன்னிக்குடம் உடைந்து குறை மாதத்திலே குழந்தை செத்தது. என் மகள் உயிருக்கே போராடினாள். ஆனாலும் மகளுக்கு உயிர் கொடுத்தார் கர்த்தர். மருத்துவர்கள் சொன்னார்கள் இனி இவள் கற்பமாகக் கூடாது கர்ப்பமானால் உயிருக்கே ஆபத்து என்றார்கள். அதன் பின்பும் எனது மகள் கர்ப்பமானாள். குழந்தையை சோதித்து பார்த்த போது உணர்ச்சியில்லாமலும் இல்லாமலும் இருந்தது.இதனால் குழந்தையை அழிக்க மருத்துவர்கள் சொன்னார்கள்.பல மருத்துவ மனைகளில் சென்றோம் . அங்கேயும் அழிக்கச் சொன்னார்கள் . தீடீர் என பாஸ்டர் ஜேப்பியார் அவர்களின் டெலிபோண் நம்பரை பெற்று விசயத்தைச் சொன்னோம்.அப்பொழுது சொன்னார் மருத்துவர் அல்ல மகத்துவர் உங்களுக்கு டாக்டராக இருந்து அற்புதம் செய்வார். நீங்கள் இயேசு பெரியவர் வார இதழை 1000 பேருக்கு அச்சிட்டு இலவசமாக கொடுக்க பொருத்தனையோடு நிறைவேற்றுங்கள். சங்:50:14,15 நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு , உன்னதமானவருக்கு உன் பொருத்தனை களைச் செலுத்தி;
ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

அப்பொழுது இயேசுவின் வல்லமையைக் காண்பீர்கள் என்றார்.நாங்கள் பலலட்சம் செலவு செய்து ஒன்றுமில்லாமல் இருந்தோம். ஆனாலும் என் கர்த்தருக்காக செய்தோம். வீட்டிலே வந்தார். நேராக அவள் படுக்கையறைக்குச் சென்றார். ஏன் இந்த படுக்கையில் இரண்டு படுக்கை எதற்கு என்றார். இந்த படுக்கையில் தான் ஒன்றுக்கும் இரண்டுக்கும் படுத்தபடுக்கையிலே போவாள். கன்னிக்குடம் மீண்டும் உடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னதினால் குளிப்பதும் படுக்கையில் தான் என்று சொன்னோம்.மேலும் கன்னிக்குடம் உடையாமல் இருப்பதற்கு தையல் போட்டிருக்கிறோம் என்றும் சொன்னேன். உடனே ஜெபித்தார். ஆவியில் கலங்கி ஜெபித்தார். உடனே சொன்னார் இனி குளிப்பதும், ஒன்றுக்கும் இரண்டுக்கும் பாத்றூமில்தான் என்று கட்டாயமாகச் சொன்னார். மேலும் இன்றே படுத்திருக்கக் கூடாது. இந்த வீட்டிலே நடந்துகொண்டு இருக்கலாம் என்றுச் சொன்னார். அதன்படியே எங்களுக்கு இயேசு அற்புதம் செய்தார். மேலும் சொன்னார் இந்தற்க்கு கார்பீட் உண்டாகும்பகுதியில் இருக்கும் குறைபாடு மாற்றுகிறார் என்று சொன்னார் நாங்கள் விசுவாசித்தோம். பிரகும் சொன்னார். நீங்கள்திருவனந்த புரத்திற்கு கிம்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்று தேவையான பரிசோதனயை செய்யுங்கள் என்றார். அங்கும் இயேசு பிரமிக்கும்படி அற்புதம் செய்வார் என்றார். கூட்டிச் சென்றோம் எல்லாவிதமான டெஸ்ட் கன்னிக்குடம்,இரத்தம் மற்றும் அனோக



டெஸ்ட்டுகள் எடுத்தார்கள். எல்லாமே நார்மல் எங்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிடுச்சு. இப்போது எனது மகளுக்கு 8-வதுமாதம். கற்பம் ஆனதிலிருந்து காஷ்டம் சொன்ன மருத்துவர்கள் அனேகம் எல்லா மருத்துவர்களும் அழிக்கச் சொன்ன போதும் ஊனமானாலும் நான் பெற்றேடுப்பேன் என உறுதியாயிருந்த மகளுக்கு என் இயேசு ஊழியக்காரர் மூலம் வார்த்தையை அனுப்பி தைரியமூட்டி உற்சாகப்படுத்தி நம்பிக்கையூட்டி கர்ப்பத்திலே கர்த்தர் அற்புதம் செய்து கொண்டுருக்கிற மகா பெரிய இயேசுவை நீங்களும் நம்புங்கள். கர்த்தரை நீங்களும் காண்பீர்கள். நன்றி.

ஜாய்ஸ், கோடிமுனை.

## CERTIFICATE OF REGISTRATION


This is to certify that this newspaper has been registered under the Press and Registration of Books Act, 1867:

1. Title of the Newspaper : JEEVA OLI JEBAKKOPURAM
2. Registration Number of the Newspaper : TNTAM/2010/36420
3. Language / Languages in which it is published : TAMIL
4. Periodicity of its publication and the day/ days/ dates on which it is published : MONTHLY
5. Retail selling price of the newspaper : Rs.20/-
6. Publisher's Name : J.JAEPPIYAR, Nationality : INDIAN
   Address : New Door No: 21/96/B Jeeva Oli Bhavan, Kadayal, Kaliyal P.O. 629101. K.K. District, Tamilnadu.
7. Printer's Name : J.JAEPPIYAR, Nationality : INDIAN
   Address : New Door No: 21/96/B1 J.P. Press, Zion Mandapam, Kadayal, Kaliyal P.O. 629101. K.K. District, Tamilnadu.
8. Editor's Name : J.JAEPPIYAR, Nationality : INDIAN
   Address : New Door No: 21/96/B, Zion Mandapam, Jeeva Oli Bhavan, Kadayal, Kaliyal P.O. 629101. K.K. District, Tamilnadu.
9. True and precise account at the premises where printing conducted : J.P. PRESS, Door No: 21/96/B1 J.P. Press, Zion Mandapam, Kadayal, Kaliyal P.O. 629101. K.K. District, Tamilnadu.
10. Place of Publication : J.JAEPPIYAR, Door No: 21/96/B1, Vizhikal Publication, P.B. No:3, Zion Mandapam, Kadayal, Kaliyal P.O. 629101. K.K. District, Tamilnadu.

Date : 1-3-2020 Sd

# இழுப்பு வியாதியை மாற்றினார் கர்த்தர்

எனது பெயர் வினிதா. நான் அருமனை பக்கத்தில் உள்ள முழுக்கோடு பகுதியைச் சேர்ந்தவள். நான் அடிக்கடி இழுப்பு வியாதியால் அவதிப்பட்டு வந்தேன். மருந்து மாத்திரைகள் ஒன்றும் பலனளிக்கவில்லை. ஒரு நாள் பயங்கரமாய் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணத்தோடு போராடினேன். ஊழியக்காரருக்கு போண் செய்தேன். அவர் டெலிபோணிலே ஜெபித்தார். அப்பொழுதே என் வியாதி நீங்கியது. நான் இப்போது சுகமாக இருக்கிறேன். இதற்கு முன்பும் கர்த்தர் எனக்கு ஒரு அற்புதம் செய்திருந்தார். என் மகன்



பேசாமல் இருந்தான். ஒரே கூட்டத்தில் கர்த்தர் அற்புதம் செய்து அவனை பேச வைத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

வினிதா, முழுக்கோடு.

## தற்கொலை எண்ணம் மாறி சந்தோஷமாக இருக்கிறேன்

கணவர் ஒரு பயங்கர குடிகாரர், எனக்கு 3 பிள்ளைகள். எனது கணவர் என்னையும் பிள்ளைகளையும் அடித்து துன்புறுத்துவார்கள். என் பிள்ளைகளை கண்டகண்ட இடத்தில் அடிப்பதால் என் பிள்ளைகள் தற்கொலை செய்ய ஒடுவார்கள். நான் அவர்களையும் பிள்ளைகளையும் காப்பாற்ற ஓடமுடியாமல் தவிப்பேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தாங்க முடியாத நான் என் பிள்ளைகளையும் என்னையும் கைவிட்டார் என்று கருதி நான் என் பிள்ளைகளையும் கணவரையும் கைவிட்டு விட்டு அம்மா வீட்டிற்கு தனிமையில் 1 மாதம் இருந்தேன். இந்த வேளையில் என் அம்மா ஜீவ ஒளிஜெபகோபுரத்தில் அழைத்து வந்தார். அவர் ஜெபித்துச்சொன்னார். உன் புருஷன் தேடிவருவான். அவன் குடிமாறும், பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் உண்டு என்று ஆறுதலாகச் சொன்னார். கர்த்தர் பேசினபடியே அவர் என்னை தேடிவந்து கூட்டிச் சென்றார். இப்போது குடி அவ்வளவாய் இல்லை. அடித்தலும் இல்லை, துன்புறுத்துவதும் இல்லை. சந்தோஷமாக இருக்கிறேன். ஆனால் என் மகனுக்கு தீடீர் என காய்ச்சல் வந்ததால் அவனுக்கு பப்ளிக் எக்சாம். ஒரு வார்த்தை கூட படிக்க முடியாமல் படுக்கையில் இருந்தான். பாஸ்டருக்கு அழைத்தேன். அவர் ஜெபித்தபின் அவர் சொன்னார், அவன் துள்ளி குதித்து எழுந்து எக்சாம் எழுத செல்வான். அதன்படியே கர்த்தர் செய்தார். எனது இன்னொரு மகன் விதைவீக்கம் முதுகு எலும்பு ஒன்று குறைவு இதனால் அடிக்கடி பாதிக்கப் படுவான். மருத்துவர்கள் சொன்னார்கள் ஆப்ரேஷன் என்பதுதான் ஒரே வழி என்றார்கள். ஆனால் ஜீவ ஒளிஜெபகோபுரத்தின் வழியாக இயேசு சொன்னார். நோ ஆப்ரேஷன் என்றார். இன்றும் மகன் நன்றாக இருக்கிறான் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



ஞாறாம்விளை.



## கர்த்தர் செய்த மகா அற்புதம் பைத்தியத்தின் கிரியைகள் கர்த்தர் முறியடித்தார்

எனது கணவர் மோகன்தாஸ் . நன்றாக குடும்பம் நடத்தி வந்தார். சிறிது சிறிதாக குடித்து வந்தவர் பெருங் குடிகாரனாக மாறினார். தீடீர் என மதில் மேலே ஏறி ஒற்றைக் காலில் நிற்பார்.

மொட்டை மாடியில் ஏறி நான் தெய்வம் என்பார். அண்டசாராசங்கள் எல்லாம் என் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பார். இரவு தூக்கமே இல்லை. நடுராத்திரி எழும்பி கல்லறை தோட்டத்தில் சென்று அங்கே படுத்துக் கிடப்பார். விடியற்காலையிலே எழும்பி ஓடி குளிப்பார். குடிக்கிறதுக்கு காசு கொடுக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என்பார் . வீடுகளிலிருக்கிற பொருட்களை எல்லாம் அடித்து நொறுக்குவார் . என்னிடமோ என் பிள்ளைகளிடமோ பேசமாட்டார். என் குடும்பமே இவர் நிமித்தம் சமதானம் இழந்து தவித்தது. நான் என் பிள்ளைகளோடு ஜீவ ஒளி ஜெபக்கோபுரத்திற்கு சென்றேன். ப்றதர் ஜேப்பியார் அவர்கள் ஜெபித்து அவருக்கு தேவர்களின் ஆவிகள் குடி கொண்டிருக்கிறது. இந்த பிசாசுகள் குடிக்கத் தூண்டி தற்கொலை செய்து கொள்ள வைக்கும். மிகவும் எச்சரிக்கை யாக இருக்கச் சொல்லி நாகூம் 1:15 இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து ; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான். சங்76:11,12 பொருத்தனை பண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள் ; அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளை கொண்டு வரக்கடவர்கள்.

பிரவுக்களின் ஆவியை அடக்குவார்; பூமியின் ராஜாக்க ளுக்கு அவர் பயங்கரமானவர். இந்த வசனங்களின் படி கர்த்தருக்கு பொருத்தனை செலுத்தச் சொன்னார்.

உபாகமம் 23:21,22,23,24,25. நாங்கள் கீழ்ப்படிந்தோம். ஜீவ ஒளி ஜெபக் கோபுரம் புக் அச்சிட நாங்கள்

பொருத்தனை செலுத்தினோம். கர்த்தர் எங்களுக்கு விடுதலைகள் தர ஆரம்பித்தார். இந்த நேரத்தில் வீடுகட்டி பிரதிஸ்டை பண்ண வேண்டிய வேலையில் நாங்கள் இருந்தோம் . ஏற்கனவே வீடு குடிபுக விட மாட்டேன் என்றும் அன்று தற்கொலை புது வீட்டிலே செய்வேன் என்றும் மிரட்டிக் கொண்டு வந்தார் . ஒரு நாள் கூட நிம்மதியில்லை. தூக்கமில்லை. ஊழியக்காரர் சொன்னார் வீடு குடியேறாத படிக்கு மந்திரம் ஒரு சத்திருவைத்திருக்கிறான். ஆகவே குறித்த நாளில் வீடு பிரதிஸ்டை செய்ய வேண்டும். கர்த்தர் உங்களுக்காய் யுத்தம் செய்வேன் என்றார். அந்த நாளும் வந்தது . வீடு பிரதிஸ்டைக்கு வந்து கொண்டிருந்தவர்களை இவர் மிகவும் மோசமான வார்த்தைகள் பேசி அடிக்கவும் கல்எறியவும் செய்தார். புது காம்பவுண்ட் மதிலில் ஏறி ஒற்றைக்காலில் நடனமாடும் போல் போஸ் கொடுத்தார். நடனமும் ஆட ஆரம்பித்தார். பரத நாட்டியம் ஆடுவது போல் ஆடுவார். ஊழியக்காரரிடம் சொன்னோம் . அவர் கர்த்தர் உங்களுக்கு சமாதானத்தை கட்டளையிட்டார் என்றார் .

அதன் பின் அவர் படிப்படியாக மாற ஆரம்பித்தார். குடியை கர்த்தர் விட வைத்தார். இப்பொழுது எங்களோடிருந்து பேசுகிறார். எங்களை அன்பாய் கவனிக்கிறார், விசாரிக்கிறார். வீட்டிலே 8 மணிக்கு தூங்க ஆரம்பித்தால் கால 7 மணி வரைக்கும் தூங்குகிறார். இப்பொழுதெல்லாம் கல்லறை தோட்டத்திற்கு போவதில்லை. கல்லறயில் படுப்பதுமில்லை, நடனமாடுவதும் இல்லை. நன்றாக உடுத்திக் கொள்கிறார், சந்தோசமாக இருக்கிறார். நாங்களும் சந்தோசமாக இருக்கிறோம் நிம்மதியாக இருக்கி றோம். மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறோம் . மகா பெரிய இயேசு மகா பெரிய அற்புதம் செய்தார்.

## வயிற்று வலியிலிருந்து விடுதலை

எனது பெயர் ஓமனா. கோட்டூர் கோணத்திலிருந்து வருகிறேன். எனக்கு கொஞ்ச காலமாய் இருதய வலி இருந்தது வந்தது. பாஸ்டரிடம் ஜெபித்தபோது குணமடைந்தேன். அதற்கு பிறகு வயிற்று வலி இருந்தது. ஆஸ்பத்திரிக்கு போனேன். அது குடல்வால் வியாதி என்றும் உடனடி ஆப்ரேஷன் செய்யவேண்டும் என்றார்கள். நான் பயந்து போய் ஒரு மாதம் டைம் கேட்டேன். அதுவரைக் கும் உயிரோடு இருக்க வேண்டாமா என்று கேட்டனர். நான் மருந்து கேட்டேன். ஒரு மாதம் கழிந்து வருகிறேன் என்று டாக்டர்களுக்கு புக்கிங் கொடுத்து இந்த ஊழியத்தில் வந்து
ஜெபித்தேன். நோ ஆப்ரேஷன் என்றார். அதன்படியாக நான் சொஸ்தமாகி நான் உங்கள்




முன்பு வந்து சாட்சி சொல்கிறேன்.
ஓமனா, கோட்டூர் கோணம்



# நீ பொருத்தனை செலுத்தினால் உன் கர்ப்பத்தில் குழந்தை 52 வயதில் குழந்தைககளை பெற்ற சகோதரி! ஆச்சரியம் ஆனால் உண்மை.



இன்று சர்வவல்லவரை தேடுகிற அநேகர் இன்றும் பிள்ளைகள் இல்லாமலும், வீடு கட்ட முடியாமலும், கடன்களில் மீள முடியாமலும், கணவரிடத்தில் சந்தோஷமில்லாமலும், வேலைகள் கிடைக்காமலும், அல்லல் படுகிறார்கள்.

சபைகளிலும், ஆலயங்களிலும் போதகர்கள் ஒரு பொருத்தனை பண்ணிக்கொள் என்பார்கள்! நீங்களும் பெருத்தனை செலுத்தாமல் கர்த்தருக்கு ஒரு பொருத்தனையை உள்ளத்தில் நேர்ந்து கெள்வீர்கள். ஆனால் ஒருநாளும் நிறைவேற்ற மாட்டீர்கள். ! உங்களுக்கு ஆசீர்வாதங்கள் கடந்து வராமல் புலம்பி கொண்டிருப்பீர்கள். ஆனால் மருத்துவருக்கும், மந்திரவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் வட்டிக்கு எடுத்து கொட்டோ கொட்டு என்று கொட்டுவீர்கள். இதில் உங்கள் உள்ளம் மகிழ்ந்து போகும். ..ஆனால் வானத்தையும்

பூமியையும் உண்டாக்கின கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதற்கும் பொருத்தனைகளை நிறைவேற்றுவதற்கும் உங்கள் இருதயம் கீழ்படியாமல் கசங்கி அழும்.

கர்த்தருக்கு தெரியாதா? என் நிலைமை! எவ்வளவு வட்டிக்கடன் இருக்கு தெரியுமா? என்று புலம்பி கர்த்தர் எனக்கு குழந்தையை முதலில் தரட்டும். கர்த்தர் முதலில் வேலையை தரட்டும்,கர்த்தர் முதலில் எனக்கு அற்புதம் செய்யட்டும், நான் உடனே சபையில் சாட்சி சொல்லுவேன். பொருத்தனையை செலுத்துவேன் என்று அடம் பிடிப்பீர்கள்! இது உங்கள் அவி விசுவாசத்தை காட்டுகிறது கர்த்தரின் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதற்கு அடையாளமே நீங்கள் செலுத்தும் காணிக்கை பொறுத்ததுதான்.

## 52 வயது சகோதரிக்கு குழந்தை தந்த கர்த்தர்

ஒருநாள் ஆசிரியராக பணியாற்றும் மார்க்ரெட் என்ற சகோதரி வயிற்று வலிக்காக போண் செய்தார்கள். ஏன் எனில் இவரது கர்ப்ப பாத்திரத்தில் தண்ணி நிரம்பியிருந்தது. கர்ப்பபாத்திரம் மிகவும் சுருங்கி பலவீனப் பட்டிருந்தது. இதனால்தான் வயிற்றுவலி ஏற்பட்டது. வயிற்று வலிநீங்க நான் ஜெபித்த போது கர்த்தர் சொன்னார் பொருத்தனை செலுத்து உன் கர்ப்பத்தில் குழந்தை உண்டாகும் என்றார்.

உடனே சகோதரி நகைத்தாள். பிரதர் எனக்கு வயது 52 என்றாள். இருக்கட்டும் சாராளுக்கு செய்த அதே அற்புதம் செய்கிறார் உங்களுக்கு! பிரதர் நான் கணவனுடன் வாழ்ந்து சுமார் எட்டு வருடங்கள் ஆகிவிட்டது. அவரது இயலாமையை எடுத்து சொன்னாள். என் கர்த்தரால் கூடாதது ஒன்றுமில்லை என்று சொல்கிறார். உடனே அவள்.. உலககாரியம் முடிந்தே பல வருடங்கள் ஆகிவிட்டது. நான் இப்போ கிழவி என்றாள்.

கர்த்தர் செங்கடல் பிளந்தவர். இயேசுவால் கூடும். ஒரு காலகட்டத்தில் ஒரு குழந்தையை கூட தரமாட்டீரோ என்று கதறினாயே... இதோ இப்ப பொருத்தனை செலுத்து. இப்பவே குழந்தை என்றார்.

உடனே சகோதரி சொன்னார்கள், நான் போகாத மருத்துவமனையில்லை. செய்யாத மருத்துவம் இல்லை, செலவு செய்யாத பணமும் இல்லை. ஆனால் குழந்தை கிடைத்தாலும் என்னால் பெற்றெடுக்க முடியாது. கர்த்தர் கோபமடைந்தார். பொருத்தனை செலுத்தி ஒரே பிரசவத்தில் இரண்டு குழந்தைகளை நீ பெற்றெடுப்பாய் என்றார்.

நகைத்தாள்! எனக்கு ஜெபம் பண்ணுங்க வயிற்றுவலி நீங்க ஜெபம் பண்ணுங்க.. கர்த்தர் கோபத்தில் பதிலளித்தார். நீ கர்த்தரை விசுவாசியாமற்போனபடியினால் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளை கட்டளையிடுகிறேன்.



இதில் இரண்டு தீமை விளையும் என்றுசொல்லி வயிற்றுவலிக்காக ஜெபித்து போணை ரத்து செய்து விட்டேன். மறுவாரம் கூப்பிட்டால் வலி பரவாயில்லை , இருக்கிறவலியும் நீங்க ஜெபியுங்க என்று கட்டளையிட்டாள். நான் உடனே ஆத்திரத்தில் எனக்கு கட்டளையிட நீ யார்? நான் கர்த்தருக்குத்தான் வேலைக்காரன். கர்த்தரின் தீர்க்கத்தரிசனங்களை நீ அவமதித்து விட்டாய். நீ முதலில் கர்த்தரை நம்பு நம்பின பின்பு வா! ஜெபிக்கிறேன். என்றேன். போணை கட் செய்து விட்டேன். சுமார் ஒருமாதம் கடந்தது. கர்ப்பத்தில் மூன்று குழந்தைகள் உதயமாயிற்று. கர்ப்ப பாத்திரம் ரொம்ப ரொம்ப வீக்! எல்லா குழந்தைகளையும் அபார்சன் செய்தால்தான் இவளை காப்பாற்ற முடியும் என்று எஸ் எஸ். மருத்துவமனை மருத்துவர்கள் சொன்னார்கள். உடனே பயந்து போய் என்னை ஜெபிக்க தந்திரமாக ஈரோடு அழைத்தார்கள். முதன் முதலாவதாக அந்த சகோதரியைப்பார்த்தேன். மருத்துவ படுக்கையில் இருந்தார்கள்

எத்தனை குழந்தை சிஸ்டர்?

மூன்று!

கர்த்தர் சொன்னாரே நான்கு என்று!

இல்லை பிரதர்...மூன்றுதான்!

கர்த்தர் பொய் சொல்பவரல்ல! நான்கு குழந்தைகள் உண்டாகும் என்றாரே! மூன்றையும் தந்தவருக்கு நான்கையும் அவரால் தர முடியும் என்று சொன்னேன். நான்கு குழந்தைகளையும் காக்க கர்ப்ப பாத்திரத்தை கர்த்தரே பெலப்படுத்துவார் என்று சொல்லி ஜெபித்துவிட்டு வீடு திரும்பினேன். மூன்றாம் நாள் மறுபடியும் ஸ்கேன் செய்த போது ஒரே வளர்த்தியில் நான்கு குழந்தைகளை கண்டு மருத்துவ உலகமே ஸ்தம்பித்தது. இது எப்படி சாத்தியமாகும்.? அதாவது மூன்று குழந்தைகள் இருந்த இடத்தில் கர்த்தர் நான்காவது குழந்தையும் கொண்டு வைத்தார். அதுதான் ஜீவனுள்ள தேவன்.

உடனே மருத்துவர் பயந்து போய் இரண்டு குழந்தைகளை கருவிலே வளரவிடாமல் பேசியன்றுக்கு தெரியாமல் சென்னைக்கு மயக்கம் செய்து மார்க்ரெட்டிற்கு தெரியாமல் இரண்டு குழந்தையை கொன்று விட்டார் மருத்துவர். என்ன நடந்தது தெரியுமா? சுருங்கிய கர்ப்பபாத்திரம் நான்கு குழந்தைகளுக்கு ஏற்றபடி கர்ப்பபாத்திரம் பெரிதாக இருந்தது.

மருத்துவர் இன்றும் பிரம்மித்தார். உடனே கற்ப பாத்திரத்தை சுருங்க செய்ய இன்னொரு ஆப்பிரேஷன் செய்தார்கள்.

பிறகென்ன ! கர்ப்பம் வளர்ந்தது இரண்டு குழந்தைகளை அழகாக பெற்றெடுத்தார்கள். கூடாதது ஒன்றுமில்லை. இவ்விதமாய் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளை கட்டளையிட்டார். இதில் இரண்டுக்கு தீமை விளையும் என்றார் கர்த்தரின் வார்த்தையின் படியே எல்லாம் நிறைவேறிற்று.

பிரியமானவர்களே முதலில் கர்த்தருக்கு கொடுங்கள் முழுமையாக கொடுங்கள் பொருத்தனைதான் உங்கள் ஆசீர்வாதங்களுக்கு திறவுகோல். இந்த பொருத்தனை ஊழயத்தில் நீங்களும் பொருத்தனை செலுத்தி கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள்.

எரேமியா 33: 3

**என்னை நோக்கி கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாத துமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.** என்றபடி ஆசீர்வாதமாக அமையும்.

## 7 வருட திக்குவாய் மாறியது



எனது குழந்தைப் பெயர் ரியானா. வயது 7. என் பிள்ளை பேச ஆரம்பித்த நாளிலே திக்குவாயாக இருந்தது. நான் ஒருநாள் ஊழியக்காரரின் டெலிபோன் நம்பரில் ஜெபித்து பிள்ளையின் நிலைமையை எடுத்துச் சொன்னேன். அவர் வரும் உபவாச கூட்டங்களில் கலந்து கொள்ளச் சொல்லி இன்னொன்றையும் சொன்னார். கர்த்தர் சொஸ்தமாக்குவார் என்றார். அதன்படி மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். என் பிள்ளை சொஸ்தமாகி இப்போது நன்றாகப் பேசுகிறாள்.

வினிதா, முழுக்கோடு.

## கர்த்தர் சொன்னபடியே இரண்டே வாரத்தில் அதிசய திருமண நிச்சயம்



எனது சகோதரன் பெயர் ஜோஸ்பின்ராஜா. இவனுக்கு ஒருநாளும் திருமணம் நிச்சயம் ஆகாது. நிறைய வரும். ஆனால் நடக்காது. பேசி முடிக்கிற வேளையில் சம்மந்தம் நின்றுபோகும். இத்தனைக்கும் என் சகோதரன் அழகாக இருப்பான். எந்த குடிப்பழக்கமும் இல்லை. நன்றாக சம்பாதிப்பான். ஒரு குறையும் இல்லை. ஒவ்வொரு சம்மந்தமும் வந்து வந்து போகும்போது மிகவும் மனமுடைந்து அழுவான்.

இந்த வேளையில் ஜீவஒளி ஜெபக்கோபுர ஊழியத்தை கேள்விப்பட்டு நாங்கள் கடையாலுமூட்டிற்கு சென்றோம். பிரதர் ஜெபித்து விட்டுச் சொன்னார் ஜனவரி 5-ம் தேதி அதாவது முதல் சனிக்கிழமைக்குள் திருமணம் நிச்சயம் ஆகும். கர்த்தர் தடைகளை உடைக்கிறார் என்றுச் சொன்னார். நாங்கள் அதிர்ந்து போனோம். ஏன் என்றால் 5-ம் தேதிக்கு இனியும் 2 வாரம் தானே இருக்கிறது. ஆமாம் கர்த்தர் செங்கடலையே ஒரு நொடிப் பொழுதில் பிளந்தவர். நீங்கள் கர்த்தருக்கு 1000 புத்தகங்கள் அச்சிட்டு இலவசமாக கொடுங்கள். 5-ம் தேதி சாட்சி சொல்லுவீர்கள் என்றார். நாங்கள் மிகவும் சந்தோஷப் பட்டுப் போனோம். சம்மந்தம் வந்தது. முடியும் தருவாயில் அந்த சம்மந்தமும் பின்வாங்கிய அதிர்ச்சி செய்தி கேட்டு நிம்மதியிழந்து பிரதர்கிட்ட போன் செய்தோம். பிரதர் என் கர்த்தர் கோணலானவைகளை செம்மையாக்குவார் திருமணம் நிச்சயம் நடக்கும் அவர்கள் திரும்ப வருவார்கள் என்று 2-ம் தேதி சொன்னார். 3-ம் தேதி அப்படியே வந்தார்கள். பேசி 4-ம் தேதி நிச்சயம் பண்ண-னோம். 5-ம் தேதி இதோ இந்த நாளில் உங்கள் முன் சாட்சி சொல்கிறேன்.

ஜரின், குளச்சல்.



## உயிர்த்த இயேசு வேலூர் மருத்துவமனைக்கு வந்தார்! மரித்த எனக்கு உயிரைத் தந்தார்!



எனது பெயர் சாராள். வெல்லூர் சி.எம்.சி. மருத்துவமனையில் நர்சாக பணியாற்றி வருகிறேன். எனக்கு இருதய வியாதி உண்டு. ஆனாலும் நான் கற்பமானேன். 7-வது மாதத்தில் என் இரத்தத்தின் அளவு 7 ஆக இருந்தது. அப்போது நான் ஊழியக்காரரிடத்தில் போன் செய்து ஜெபித்தேன். அப்போது அவர் நீ மரித்தாலும் பிழைப்பாய் என்று சொன்னார். சத்துவாச்சேரியில் என் வீடு. அன்று இரவு 8 மணி வேளையில் பிரசவ வலி எடுத்தது. அந்த வேளையில் நான் மயங்கி விழுந்தேன். என் அம்மா ஒரு நர்ஸ். என்னை ஒரு ஆட்டோவில் ஏற்றி சி.எம்.சி. மருத்துவ மனைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். நான் ஆட்டோவில் மயங்கி கிடந்திருக்கிறேன். எனக்கு பல்ஸ் இல்லை. நான் செத்திருக்கிறேன்.

ஆனாலும் என் அம்மா ஜேப்பியார் ஊழியக்காரரிடத்தில் போன் செய்து அவர் ஆலோசனையின் படி மருத்துவமனையில் கொண்டு சென்ற போது மருத்துவர்கள் என்னை வாசலில் வைத்து பரிசோதித்து எல்லாம் முடிந்து விட்டது கொண்டு போங்கள் என்று சொன்னார். இந்த விபரத்தை ஊழியக்காரரிடத்தில் சொன்னபோது சாராளுக்கு கை, கால்கள் நீண்ட ஆண்குழந்தை பிறக்கும். சாராள் பிழைப்பாள். ஆப்பரேசன் செய்து குழந்தையை எடுங்கள் என்று கட்டளையிட்டார். இந்த விபரத்தை நாங்கள் மருத்துவரிடம் சொன்னபோது குழந்தைக்கு உயிர் இருந்தால் நாங்கள் ஆப்பரேசன் செய்து எடுக்க மாட்டோமா? குழந்தைக்கும் உயிர் இல்லை, தாய்க்கும் உயிர் இல்லை கொண்டு போங்கள் என்றார்.

இந்த விபரத்தையும் ஊழியக்காரரிடத்தில் என் அம்மா அறிவித்தார். உடனே அவர் இயேசு வந்து ஆப்பரேசன் செய்து குழந்தையை எடுப்பார் என்று அறிவித்தார். சில நிமிடத்திலேயே 7,8 டாக்கர்கள் குழுவினர் இருந்த இடத்தில் நான் இவளுக்கு ஆப்பரேசன் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டே ஒருவர் வந்து தனது இரு கரத்தால் தூக்கி எடுத்து ஆப்பரேசன் தியேட்டருக்கு கொண்டு சென்று ஆப்பரேசன் செய்து ஆண் குழந்தையை எடுத்தார். அப்போது எனக்கும் என் குமாரனுக்கும் உயிர் இருந்தது. அதன் பின் மற்ற மருத்துவர்கள் எனக்கு தொடர் சிகிச்சை செய்தார்கள். ஆனால் நன்றி சொல்வதற்கு அந்த மருத்துவரைத் தேடினால் இப்படி ஒரு மருத்துவர் வெல்லூர் சி.எம்.சி. மருத்துவமனையில் இல்லை என்று பதிலளித்தார்கள். இயேசு இன்றும் உயிரோடு இருக்கிறார். எனக்காக வந்த இயேசு உங்களுக்காகவும் வருவார்.

சாராள், வெல்லூர்.

## தீராத இழுப்பு வியாதி சொஸ்தமான அதிசயம்

என் பெயர் புனிதா. திங்கள் சந்தையிலிருந்து வருகிறேன். எனக்கு இழுப்பு வியாதியுண்டு. மாத்திரையில் தான் எனக்கு வாழ்வு. ஆனாலும் ரொம்ப ரொம்ப கஷ்டப்படுவேன். நடக்க கூட முடியாத அளவுக்கு அவஸ்தைப் படுவேன். மாடியேற முடியாதபடிக்கு மூச்சு வாங்கும். நடக்க முடியாது. சில மாதங்களாக ஜீவஒளி ஜெபக்கோபுரம் உபவாசக் கூட்டங்களுக்கு கலந்து கொண்டேன். கர்த்தர் எனக்கு சுகம் தந்தார். இப்பொழுது மாத்திரை இல்லை. இன்று ஒரு குடம் தண்ணீர் எடுத்து மாடியேறி இருக்கிறேன். கூடாதது ஒன்றுமில்லை.

புனிதா, திங்கள்சந்தை.

## 5 நிமிடத்திற்கொருமுறை யூரின் போகும் வியாதியிலிருந்து விடுதலை

எனது பெயர் ஜேன் சோபியா. எனது ஊர் புத்தளம். எனது மகள் ஜாஸ்மின் வயது 5. என் மகள் 15 நிமிடத்திற்கு ஒரு முறை சிறுநீர் கழித்துக் கொண்டே இருந்தாள். மருத்துவ மனைக்கு சென்ற போது டாக்டர் சிறுநீர் பையில் பழுப்பு உள்ளது என்று அட்மிட் பண்ணச் சொன்னார்கள். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. அப்பொழுது எனது அக்கா மூலம் இப்புத்தகம் எனக்குக் கிடைத்தது. இதை வாசிக்க வாசிக்க எனக்குள் ஒரு நம்பிக்கை வந்தது. உடனே ஜேப்பியார் பிரதரிடம் ஜெபிக்குமாறு கேட்டுக் கொண்டேன். பிரதர் அவர்கள் எனது மகள் காதில் போனை வைத்து ஜெபித்தார்கள். பின்பு சனிக்கிழமை உபவாசக் கூட்டத்திலும் கலந்து கொள்ளும்படி சொன்னார்கள். அதேப்போல் எனது மகளை அக்கா, அண்ணன், கணவர் மற்றும் எனது அத்தை என அனைவரும் கூட்டிக் கொண்டு சென்றார்கள். பிரதரிடம் ஜெபித்துவிட்டு வந்த பிறகு நல்ல மாற்றத்தைக் காண்கிறேன். பிரதர் அவர்கள் ஜெபித்து தந்த எண்ணெயை உடல் முழுதும் பூசி உறங்க வைப்பேன். கர்த்தர் எனது மகளுக்கு மிகப்பெரிய அற்புத விடுதலையைக் கொடுத்தார். என் தேவாதி தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்.

ஜேன் சோபியா, புத்தளம்.





## கழுத்திற்குள் இருந்த முள் மாறிய அதிசயம்



எனது பெயர் ஜே. சந்தோஷ் பிரைட் எனது ஊர் நாகர்கோவில். நான் டீ குடித்தபோது ஏதோ முள் குத்தியது போன்று குத்தியது. கப்பில் ஏதாவதுரு இருந்ததா என்று தெரியவில்லை. இது 22-2-2019 அன்று நடந்தது. என்னால் ஒன்றும் விழுங்க முடியாமல் குத்திக் கொண்டேயிருந்தது. 22.2.2019 அன்று எங்கள் வீட்டிற்கு வருகின்ற ஜீவஒளி ஜெபக்கோபுரம் என்ற மாதஇதழ் என் கையில் கிடைத்தது. அதை வாசித்துக் கொண்டிருக்கும் போது அதில் பொருத்தனைகளைப் பற்றியும் அற்புதம் நடப்பதைப் பற்றியும் வாசித்தேன். அதன்படி நானும் சுகம் கிடைத்தால் ரூ1000 காணிக்கையையும் ஜீவஒளி ஜெபக்கோபுரம் புத்தகத்தில் சாட்சியும் எழுதுவேன் என்று பொருத்தனையும் செய்து கொண்டேன். உடனே முள் தொண்டைப் பகுதியிலிருந்து இறங்கி விட்டது. அடுத்தநாள் 23-2-2019 அன்று சனிக்கிழமை உபவாசநாள் அன்று ஊழியக்காரரை சந்தித்து நடந்ததைக் கூறி ஜெபித்துவிட்டுச் சென்றேன். ஊழியர் அவர்களும் ஜெபித்து விட்டு ஒன்று இல்லை என்றுச் சொன்னார்கள். சுகம் கொடுத்த கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஊழியருக்கும் நன்றி.

## 41,000 சம்பளத்தில் அதிசய வேலை கிடைத்தது



என் பெயர் ஆலன். நான் சென்னையில் வேல்டெக் என்ஜினியரிங் கல்லூரியில் லைபிரேரியன் வேலை பார்த்து வந்தேன். ஒரு சூழ்ச்சியில் இந்த வேலையை விட்டு நான் கோவை மாவட்டத்தில் ஒரு கல்லூரியில் வேலையில் சேர்ந்தேன். வேலையில் சேர்ந்த 4 மாதமும் சம்பளம் போடாமல் மிகவும் நோகடித்தனர். மனம் நொந்த நிலையில் கொல்லம் கோட்டில் வைத்து நடைபெற்ற ஒரு நற்செய்திக் கூட்டத்தில் ஜீவஒளி ஜெபக்கோபுரம் புக் இலவசமாக வழங்கப்பட்டது. அதிலிருந்த அற்புத சாட்சிகளைப் படித்து ஆச்சரியப்பட்டுப் போன என் மனைவி எனது வேலைக்காக ஊழியக்காரரிடம் ஜெபித்தபோது அதிசய வேலை கிடைக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். கோவையிலிருந்த நானும் ஊழியக்காரரிடம் ஜெபித்தேன். அவர் வரும் உபவாசக் கூட்டத்தில் 2-2-2019 அன்று கலந்து கொள்ளச் சொன்னார். நானும் என் குடும்பமாக வந்து கலந்து கொண்டோம். ஜெப வேளையில் அவர் சொன்னார் 41 நாளில் கர்த்தர் உனக்கு வேலை கொடுப்பார். அது அதிசயம் என்றார். என்ன ஆச்சரியம் 23-ம் தேதி நான் இடுக்கியில் உள்ள கல்லூரியில் இன்டர்வியூற்கு கலந்து கொண்டேன். 3 நாட்கள் கழித்து பதில் சொல்கிறேன் என்றுச் சொன்னார்கள். எனக்கு என் மெயிலில் நியமன உத்தரவும் வந்தது. 8-ம் தேதி கல்லூரியில் கலந்து கொள்ளும்படி உத்தரவைப் பார்த்து பெரு மகிழ்ச்சியுடன் பிரமிப்பாக இருந்தது. கர்த்தர் சொன்னபடி 41- நாட்களுக்குள் கர்த்தரின் ஆசீர்வாதத்தை 41,000 சம்பளத்தில் வேலை தந்து அசத்தின என தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆமென்.

ஆலன், மேக்காமண்டபம்.

# தடைபட்ட யூரின் வெளியேறிய அதிசயம் திருமண ஆசீர்வாதம் பிள்ளை தந்து வாழ்வு தந்த இயேசு! ஜீவிக்கிறார்.

எனது பெயர் ஜாக்குலின், ஐரேனிபுரம். எனக்கும் காப்பிக்காட்டைச் சேர்ந்தவருக்கும் 2016-ல் திருமணம் நடைபெற்றது. நான் பி.ஏட் பட்டதாரி. என் வாழ்க்கை பட்டுப் போனது திருமண நாளில் தான் தெரியும். அவரால் ஒன்றும் முடியாது. இந்த தகவலை என் அப்பா வீட்டிற்கு அறிவித்தேன். திருமணமான மறுநாளிலே நியாயம் கேட்டு வந்த என்அப்பாவையும் சொந்தக்காரார்களையும் மாப்பிளை வீட்டார் துவசம் எடுத்தார்கள். பலரின் மண்டை தான் உடைந்தது. கருங்கல் காவல் நிலையத்தில் புகார் பதிவானது. அங்கு திருமண முறிவு ஏற்பட்டது.


என் வாழ்க்கை ஒரே நாளில் முடிந்து விட்டது. இனியொரு வாழ்க்கை நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது. உலகமே சூன்யமாகி விட்டது. அப்போது ஜீவஒளி ஜெபக்கோபுரம் புக் ஒன்று எங்கள் கையில் கிடைத்தது. ஊழியக்காரரை தேடிச் சென்றோம். அவர் ஜெபித்தார். இந்த ஆண்டிலேயே கர்த்தர் திருமணம் செய்து வைத்து அழகான ஆண் பிள்ளையைத் தரப் போகிறார் என்றார். ஆனால் திருமண வாழ்க்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே அவர் சொன்னார். இந்த ஆண்டிலே இது நடக்கும். என்னா ஆச்சரியம். திடீரென திருமணம் நடைபெற்று அழகான ஆண் குழந்தையையும் 23-2-2019 அன்று பெற்றெடுத்தேன். குழந்தை பிறந்து 3 நாள் ஆகியும் யூரின் போகாமல் இருந்ததால் ரூமிற்கு அனுப்பாமல் இருந்தார்கள். உடனே நான் இயேசுவை நம்பி யூரின் போய் விட்டது என்று பொய் சொல்லி ஐ.சி-லிருந்து ரூமிற்கு வந்தேன். நான் மறுபடியும் அவரிடம் யூரின் போவதற்கு ஜெபித்தேன். அப்பொழுதும் கட்டவிழ்த்து ஜெபித்தார். உடனே யூரின் போய் விட்டது. என் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஜாக்குலின், ஐரேனிபுரம்.

# முட்டாள் என்று தள்ளப்பட்ட மகனை வெற்றி பெறச் செய்த தேவன்

எனது மகன் அர்ஷித் படிக்கமாட்டான் என்றுச் சொல்லி வேறு பள்ளிக்கூடத்திற்க துரத்தி விட்டார்கள். அங்கேயும் படிக்காத காரணம் காட்டி மாடு மேய்க்கப் போ என்றுச் சொன்னார்கள்.

என்னுடைய அக்கா பிரேமா மூலம் இந்த ஊழியத்தைக் கேள்விப்பட்டு ஜீவஒளி ஜெபக்கோபுரத்திற்கு வந்தோம். இங்கு வநங்து கதறி ஊழியக்காரரிடம் விபரத்தைச் சொன்னோம். ஊழியக்காரர் ஜெபித்துவிட்டுச் சொன்னார் இந்த வருடத்திலேயே கர்த்தர் அவனை வெற்றி பெறச் செய்வார். அதற்காக ஜெபித்தார். முதலில் பரிட்சை எழுத விட மாட்டோம் என்றுச் சொன்னார்கள். ஆனாலும் பரீட்சை எழுதினான்.



பரிட்சை எழுத செல்லும் ஒவ்வொரு நாளும் ஊழியக்காரரிடம் ஜெபித்து விட்டுச் சென்றான். கர்த்தர் சொன்னபடியே அனைத்து தேர்விலும் வெற்றி பெற்றான். என் மகன் வெற்றி பெற்றது உலக அதிசயம்.

பாமா, அர்ஷித், பள்ளியாடி.



# முரட்டு பைத்தியம் குணமாகியது

என் மகன் பெயர் ராஜாராம். நாங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் ஊர் ஆளூர் பக்கத்தில் ஊராகும்.

எனது கணவர் ஒரு பூஜாரி. எனது மகன் என்ஜினியாரிங் பட்டப் படிப்பு முடித்து வேலை பார்த்து வந்தான். திடீரென அவனுக்கு பைத்தியம் பிடித்து அவனுடைய சுபாவம் மாறியது. வேட்டியை சுருட்டி கட்டி விட்டு ஒரு ரவுடியைப் போல் உலாவி வந்தான். வீட்டிற்குள்ளே யாரையும் விடமாட்டான். உள்ளே சென்றால் அடிப்பான். மேலும் ஒரு கடப்பாரையை எடுத்து வீட்டை தினமும் இடித்து வருவான். இச்செயல் மாதக்கணக்கில் நடைபெற்று வந்தது. இதனால் வீடே இல்லாத கதியில் நாங்கள் தள்ளப்பட்டோம். இவனைப் பிடித்து மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல பலகட்டம் முயற்சி செய்தோம். அவனை பிடிக்கவே முடியாது எல்லாரையும் அடித்து துறத்தி விடுவான் இவனது மனநிலை முற்றி வீட்டிற்குள்ளே நிற்வாணமாக அலைய ஆரம்பித்தான் மிகவும் வேதனையாக இருந்தது. நாங்கள் நம்பின தெய்வங்கள் கைவிட்டன சொந்த பந்தத்திற்குள்ளே அவமானங்கள். நிலை குலைந்து பேரனாம் என் வீட்டாருக்கு மாடுகள் விற்கும் தொளில் கூட உண்டு மகனின் இந்த மோசமான நிலையை கண்ட அவரும் கண்ணீர் விட்டு கதறினார் பூஜை செய்யும் பழக்கத்தை விட்டுவிட்டார்

அப்போது ஜீவ ஒளி ஜெபக்கோபுரம் புக்கை படித்து விட்டு ஒரு சகோதரி என்னிடத்தில் தந்து இந்த பிரதருக்க போன் செய்யுங்கள் என்றாள் நாங்களும் வேறு வழியில்லாமல் ஜெபிக்க சொன்னோம். பிரதர் ஜேப்பியார் ஜெபித்தரர்

ஜெபிக்க ஜெபிக்க அவன் கட்டுகளையும் மந்திரத்தால் வந்த இந்த கொடிய நிலைகளையும் றார் மந்திரம் வைத்திரம் வைத்திருக்கிறார்கள் என்ற பெயர்களையும் வெளிப்படுத்தி பிசாசுகளை அளித்தார் என் மகன் சொச்த்தமானான் இப்போது அவனட அப்பாவோடு மாடு விற்பனைக்கு போய் வருகிறான் சென்னைக்க தான் படித்த படிப்புக்றே்ற வேலையை தேடி சென்றிருக்கிறான் என் மகன் பைத்தியமாக இருந்த வேளையில் நாங்கள் பக்கத்து வீட்டில் தான் மறைந்து வாழ்ந்தோம். எங்களை எங்கு வைத்து கண்டாலும் அடித்து வந்தான். இப்பொழுது நாங்கள் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். இயேசு தேவன் எங்கள் மகளை எங்களுக்கு திரும்பத் தந்தார். இயேசுவுக்கு நன்றி. இனி என் மகனுக்கு ஒரு நல்ல வேலையும் திருமணமும் நடக்க ஊழியர் ஐயா ஜெபிக்க வேண்டும். நன்றி

கொல்லஞ்சி.

## கழுத்திலிருந்த கட்டி காணாமல் போனது.

நான் ஒரு அரசு போக்குவரத்துக் கழக டிரைவராக உள்ளேன். எனது சொந்த ஊார் கருங்கல். எனது வீட்டருகில் வியாதியால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரி குடும்பத்தை கடையாலுமுட்டிலுள்ள ஜெப கோபுரத்தில் கூட்டிக்கொண்டு போக விண்ணப்பித்தார்கள். நானும் சும்மா தானே இருக்கிறேன் என்று சொல்லி காரில் ஏற்றிகொண்டு வந்தேன். அங்கு ஜெபம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனக்கு இதில் ஆர்வம் ஒன்றும் இல்லாததால் நான் வெளியே வந்து விட்டேன். ஜெப முடிவில் இவர்களை அழைத்து வர அவசர படுத்தினேன். ஆனால் முடிவு ஜெபத்தில் தீவிரமாக இருந்தார்கள். ஊழியக்காரர் அவரகள் ஜெபிக்கும் போது ஒரு சகோதரனுக்கு கழத்திலிருந்த கட்டி காணாமல் போகிறது என்று சொன்னார். ஆக்சுவலி எனக்கு ஆப்பிள் சைசில் ஒரு கட்டி இருந்தது. நான் பிரம்மித்து போனேன். உடனே என் கட்டியை காணோம். என் கழுத்து அழகாக மாறியது. இந்த விவரத்தை பிரதரிடம் சொல்லப்போனால் கூட்டம் அலை மோதியதால் சொல்ல முடியவில்லை. மறு சனிக்கிழமை வந்து கர்த்தர் செய்த அதிசயத்தை சகோதரரிடம் சொல்லி சந்தோசப்பட்டேன்.

வின்செண்ட், கருங்கல்.

## பேய் முகத்தை அழுகு முகமாக மாற்றிய கர்த்தர்

ஒரு சகோதரனுக்கு திருமண ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தேன். அப்பொழுது கர்த்தர் அவனுக்குச் சொன்னார் அரசு சம்பளத்தில் நிறைய பொன்னாபரணங்களுடன் கறுப்பு நிறத்தில் உன்னை விட உயரமான என் மகளை மூன்றே மாதத்தில் கண்டடைவாய் என்று உரைத்தார்.

திருமணமே நடக்காத பட்சத்தில் ஒரு வரனும் வராத பட்சத்தில் அப்போது அவனுக்கு தீர்க்கத்தரிசனம் இனித்தது.

பெண் உயரமா இருந்தா என்ன? கறுப்பா இருந்தா என்ன? ஒன்றுமே கிடைக்காத பட்சத்தில் கிடைக்கிறது போதும் என்று நினைத்தான். வேலையே இல்லாத இவனுக்கு அரசு வேலை அரசு சம்பளம் வாங்கி சாப்பிட்டு விட்டு சும்மா இருக்கலாம்னு மிகவும் சந்தோஷப்பட்டான்.

5 பவுன் நகையை தராத பட்சத்தில் 100 பவுனுடன் ஒரு பெண் மணவாட்டியா வருகிறது என்றால் இவன் எவ்வளவு மகிழ்ந்திருப்பான் கொஞ்சம் யோசித்திருப்பான். அப்படியே ஆண்டவர் வாய்க்கச் செய்தார். திருமணமும் செய்த கொண்டான். உறவினர்கள் எல்லாம் பணத்திற்காக எருமை மாட்டை திருமணம் செய்தாய் என்று குற்றம் சுமத்தினார்கள்

திருமணம் ஆன 7-வத நாள் டைவர்ஸ் செய்ய வக்கீலை ஏற்பாடு செய்தான். கர்த்தர் அந்த வீட்டிற்கு இரவு 12 மணிக்கு அனுப்பி இருவருக்குள்ளும் இருந்த பிசாசுகளைத் துரத்தி இரகசியமாக டைவர்ஸ் செய்ய நினைத்ததை தேவன் வெளிப்படுத்தி கண்டித்தார்.

இவள் முகத்தை பிரகாசிக்கச் செய்வேன். கொப்பளம் போல் முகத்தில் இருக்கும் பருக்களை மாறச் செய்வேன் என்று சொன்னார். 7 நாட்களில் அவளை அழகுள்ள ஸ்திரீயாக மாற்றினார். இன்ற அவள் கறுப்பு நிறத்திலும் மிகவும் அழகாக இருக்கிறாள். கூடாதது ஒன்றுமில்லை.



## தோலிலிருந்த சிகப்பு நாக்கு சொஸ்தமான அதிசயம்



எனது பெயர் தனசிங். நான் மேல் மிடாலம் பகுதியல் மாங்கன்று விளையில் வசித்து வருகிறேன். நான் முறுக்கு செய்யும் தொழிற்சாலை ஒன்று நடத்தி வருகிறேன். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள். இளைய மகள் இவளுக்கு திடீ என நாக்கின் மேல் உள்ள தோல் தானாக உரிந்து நாக்கு சிவப்பு நிறத்தில் தெரிந்தது. வலியும் எரிச்சலோ: ரொம்ப கஸ்டபப்பட்டாள். டீ குடிக்கவோ தண்ணீர் சாப்பிடவோ முடியாது. பயங்கரமாய் கஸ்டப் பட்டாள். அரணை நாக்கு போல் இருந்தது. பிரதருக்கு போன் செய்தோம். அந்த மாத்திரத்திலேயே வியாதி நீங்கியது.

தனசிங், மாங்கன்று விளை.

## 15- வருடத்திற்கு பின் பரீட்சையை எழுத வைத்த கர்த்தர்



சுபிதா, க.பெ. சுரேஷ் எனக்கு வயது 30. பி.ஏ. இங்கிலீஸ் லிட்ரேச்சர் படித்துக் கொண்டிருக்கிறேன்.

நான் திருமணம் ஆன பின்பு புருஷனின் விருப்பத்தினபடி +2 படித்து அதன் பின் பி.ஏ. இங்கிலீஷ் எடுத்து படித்தேன். ஆனால் எனக்கு எதுவும் புரியாது. தெரியாது. கண்ணை கட்டி காட்டில் விட்டது போல் இருக்கும். பரீட்சை வந்தது. நான் பரீட்சை எழுத போக பயமாக இருந்த படியால் ஒரு நாள் ஊழியக்காரரிடம் பொருத்தனை பண்ணி ஜெபித்தபோது சொன்னார் நீ தேர்வு எழுத போகிறாய். கர்த்தர் உனக்கு தயவாய் இறங்குவார் என்றார். நாளை தேர்வு என்றால் ஒரு நாள் முன்பு எனது சகோதரியும் மாமாவும் என் வீட்டிற்கு வந்தார்கள். கொஞ்சம் ஐடியா கொடுத்தார்கள் நம்பிக்கையுடன் சென்றேன். கர்த்தர் நான்கு பரீட்சையில் பயங்கரமான ஜெயம் தந்தார்.

சுபிதா, ஈரோடு.

## 20 லட்ச ரூபாய் டாக்குமென்ட் அதிசயமாய் நடத்தின கர்த்தர்

நான் திருநெல்வேலி மாவட்டத்தில் கே.டி.சி நகரில் மீனாட்சி சுந்தர் நகரில் க.எண். 298-ல் குடியிருந்து வருகிறேன். நான் நிலம் விற்கிற ஒரு தரகர். நான் 20 லட்சம் ரூபாய்க்குஒரு நிலம் பேசி முடித்து மூன்று நாளிலே டாக்குமென்ட் என்று ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால் வாங்குகிற பார்ட்டி திடீ என பல்டி அடித்து வேண்டாம் என்று சொன்னார்கள்.

இந்த நிலம் விற்றால் எனக்கு கிடைக்கிற கமிஷனில் சிறிது காலம் நன்றாக கழிக்கலாம் என்று கனவு கண்டேன். எத்தனை மாத போராட்டம் அத்தனையும் அழிந்து விட்ட நிலையில் நான் ஊழியக்காரரிடம் 22-ம் தேதி போனில் சொல்லி ஜெபித்தேன். அவரும் ஜெபித்து விட்டு மூன்று நாளிலே டாக்குமென்ட் நடக்கும் கர்த்தர் அழைத்து வருகிறார் என்று சொன்னார். அது போல மூன்றாம் நாளாகிய 25-03-2019 அன்று வெற்றிகரமாக பத்திரம் நடந்தது. கர்த்தர் சொன்னபடியே அந்த மனுஷனை பத்திர பதிவுக்காக பணத்தோடு அழைத்து வந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஐயாகுட்டி, நெல்லை.

## என்னுடைய மோதிரங்கள் தொலைந்தன என கதறினேன். கர்த்தர் கொண்டு வந்த அதிசயம்



எனது பெயர் கிங்ஸிமோள். நான் குலசேகரத்தில் கொட்டூர் என்ற ஊரில் வாழ்க்கைப் பட்டேன். எனக்கு இரண்டு பிள்ளைகள். எனது கணவர் விபத்தில் இறந்து விட்டார். நான் கல்லடிமாமூடு என்ற ஊரில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எனது அம்மா வீட்டருகில் எனது உறவினர் இரண்டு மோதிரங்களையும் கொஞ்சம் பணத்தையும் ஒரு அவசர தேவைக்காக வாங்கினார். ஆனால் பல மாதங்களாக அவர் அவைகளைத் தராமல் ஏமாற்றி வந்தார். எனக்கு மாமியார் போட்ட மோதிரங்கள். எனக்கு இது குறித்து பயங்கர பயம் வந்து விட்டது. ஆறுமாதமாக போனை சுப் ஆப் செய்து எனக்கு தண்ணி காட்டி வந்தார். பிரதரிடம் நான் அடிக்கடி போன் செய்து மோதிரங்கள் கிடைக்க போராடி வந்தேன். ஒரு நாள் ஜெபத்திற்கு வா என்றார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெபத்திற்கு சென்றேன். உடனே அவர் சொன்னார் கர்த்தர் அவனுக்கு பயத்தை வைக்கிறார் இரண்டு நாளில் திரும்ப கொண்டு வருவான் என்றார். நான் நம்பவே இல்லை!

திங்கள் கிழமை அன்றும் நான் போனில் ஜெபிக்கச் சொன்னேன். ஊழியக்காரர் சர்வ சாதாரமாகவே மறுபடியும் சொன்னார் இரண்டு நாளில் உன் நகை உன் கரத்தில் இருக்கும் என்றார். பயங்கர ஆச்சரியம்! செவ்வாய்க் கிழமையன்று திடீர் என்று பேசினார். நாளைக்கு வருவேன்என்று. புதன் கிழமையன்று மோதிரங்களைக் கொண்டு வந்தார். கர்த்தரின் இந்த செய்கையைக் கண்டு மெய் சிலிர்த்துப் போனேன். இயேசுவிற்கு நன்றி!.

கிங்ஸிமோள், குலசேகரம்.

## மூலவியாதி சொஸ்தமானது

எனது பெயர் ஜீவா, ஆசாரிபள்ளம், நாகர்கோவிலில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இருதய வியாதியாலும் மூலவியாதியாலும் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தேன். வாழ்க்கையை வெறுத்து விட்டேன். சில மாதங்களாக மாதந்தோறும் நடைபெறும் உபவாசத்தில் கலந்து கொள்வேன். பிரசங்க வேளையில் மூலவியாதி சொஸ்தமாகிறது என்று சொன்னார். மிகவும் இரத்தம் வெளியேறி தினம் தினம் கதறுவேன். கர்த்தர் என்னை பரிபூரணமாக சொஸ்தமாக்கினார் என்று உங்கள் மத்தியில் சாட்சி சொல்கிறேன்.

ஜீவா, ஆசாரிபள்ளம்,
நாகர்கோவில்.





## சந்தோஷத்தையும் பொருளாதாரத்தையும் தந்த தேவன்



நான் திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை பகுதியைச் சேர்ந்தவள். சமீப காலமாக எங்கள் குடும்பத்தில் பலவிதமான போராட்டங்கள் இருந்தது. என்னுடைய மகன் விபத்துக்குள்ளாகி தேவனால் காப்பாற்றப் பட்டான் புருஷன் ரீயல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். அது முற்றிலுமாய் படுத்து விட்டது. இதனால் பயங்கர பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. மகள் அடிக்கடி சோதிக்கப் படுவாள்


இந்த நேரத்தில் நான் ஊழியக்காரர் அவர்களை தொடர்பு கொண்டு ஜெபித்தேன். ஜெபிக்கும்போது அவர் அனேக காரியங்களை தேவனால் வெளிப்படுத்தி அனேக கட்டுகளையும் பிசாசின் போராட்டங்களின் கட்டுகளிலிருந்து விடுதலைக்காக ஜெபித்தார். தேவன் எல்லா கட்டுகளையும் உடைத்தார், எங்களுக்குள் சமாதானமும் சந்தோஷமும் பெருகியது. பொருளாதார ஆசீர்வாதத்தையும் தேவன் கட்டளையிட்டார். அதிசயமாய் எங்களுக்கு ஒரு பெரிய தொழில் ஒரு ரீயல் எஸ்டேட் மூலம் பொருளாதார ஆசீர்வாதம் கிடைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக எங்களுக்கு பரிசுத்த ஆவியினால் ஒரு தெளிவும் ஜெப வாழ்க்கையில் ஒரு முன்னேற்றமும் ஏற்பட்டது. இப்பொழுது நாங்கள் சமாதானத்தோடு வாழ கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஜெயா பொன்னரசு, பெருமாள்புரம்.

## பழுதடைந்த கிட்னிகளை ஒரே நாளில் சொஸ்தமாக்கினார்

எனது பெயர் ஜாண்சன். நாகர்கோவிலைச் சேர்ந்த ஆசாரிபள்ளத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சமீபகாலமாக உடம்பில் அனேக மாற்றங்களும் கால் பகுதி நீருமாக இருந்தது. மருத்துவமனை பரிசோதனை செய்த போது கிட்னிகள் பழுதடைந்து இருக்கிறது என்றார் டாக்டர், உடனடியாக கிட்னிகளை பரிசோதிப்பதற்கு எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுத்தோம். எம்.ஆர்.ஐ ஸ்கேன் கிட்னிகள் பழுதடைந்திருப்பதை உறுதிப்படுத்தியது.

நான் சமீப காலமாக ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் மாதந்தோறும் நடைபெறும் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு வருகிறேன். இந்த அதிர்ச்சியூட்டும் துக்கத்தை நான் ஊழியக்காரரோடு பகிர்ந்து கொண்டேன். அவர் எனக்காய் ஜெபித்தார். ஜெபித்துவிட்டுச் சொன்னார் கர்த்தர் உங்கள் இரண்டு கிட்னிகளையும் சொஸ்தமாக்கினார் என்று. மறுநாள் காலையில் இதை உறுதிப்படுத்த மருத்துவ பரிசோதனை செய்யச் சொன்னார். நானும் அதற்கு கீழ்ப்படிந்து மருத்துவப் பரிசோதனைச் செய்தேன். இரண்டு கிட்னிகளும் சொஸ்தமாய் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். கர்த்தர் செய்த மகா பெரிய அதிசயத்தைக் கண்டு பிரமித்துப் போனேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



# சர்ப்பத்தின் கோரப் பிடியிலிருந்து அதிசய விடுதலை



எனது சொந்த ஊர் வில்லுக்குறி. எனது பெயர் ஜெய்சிங். எனது மனைவி பெயர் உஷா. நாகர்கோவிலில் வாடகை வீட்டில் இருக்கிறேன். கார் டிரைவராகவும் மற்றும் எலட்ரிக்கல் வேலையும் செய்து வருகிறேன். எனக்கு அடிக்கடி தலைக்குள் பைத்தியம் பிடித்தது போல் இருக்கும். சரீரம் முழுவதும் மொத்தம் வலியாக இருக்கும். இந்த நேரங்களில் வேலை செய்ய மனதில்லாமல் வீட்டிலேயே கிடப்பேன். எனக்கு எங்கு சென்றாலும் விடுதலை கிடைக்கவில்லை. இப்படி அடிக்கடி வேலை செய்யாமல் வீட்டிலே வறுமை தாண்டவமாடியது. அடிக்கடி தற்கொலை செய்து கொள்ள உள்ளம் தூண்டும். அப்போதெல்லாம் பிரதருக்கு போண் செய்து ஜெபித்து விடுதலை பெறுவேன்.

ஆனாலும் இந்த நிலை பல வருடங்களாக தொடர்ந்து நீடித்துக் கொண்டேயிருந்தது. உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கூட்டத்தின் நடுவில் ஊழியக்காரர் திடீரென்று வந்து என் தலையில் கை வைத்து ஜெபித்தார். அப்பொழுது என் சரீரத்திலிருந்து ஒரு சர்ப்பம் இறங்கி ஓடுவதைக் கண்டேன். மேலும் கர்த்தர் எனக்கு இன்னொரு அற்புதத்தையும் செய்தார். திடீரென்று நானும் மனைவியும் பைக்கில் செல்லும் போது பைக்கில் இருந்து விழுந்தோம். என் மனைவியின் தோள் பட்டை எலும்பு உடைந்தது. நான் உடனே பிரதருக்கு போண் செய்தேன். அவர் ஜெபித்தார் கர்த்தர் வலியை மாற்றினார். காயத்தை கட்டினார் என்று சொன்னார். அப்போதே வலி மறைந்து போனது. மருத்துவமனையில் சென்று பார்மாலிட்டி சிகிச்சை செய்தோம். இப்படி என் மனைவிக்கு கர்த்தர் பயங்கரமான அற்புதத்தைச் செய்தார். கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம்.

வில்லுக்குறி, ஜெய்சிங்.

# மூலவியாதியை குணமாக்கினார் கர்த்தர்



எனக்கு மூலவியாதி பல வருடங்களாக இருந்து வந்தது. பாத்ரூம் போகும் போது இரத்தம் பயங்கரமாக வரும். என் குடும்பத்தாருக்கு யாரிடமும் நான் சொல்லவில்லை. மருத்துவமனைக்கு போய் எந்த விதமான சிகிச்சையும் எடுக்கவில்லை. உபவாசக் கூட்டத்திற்கு கடந்து சென்று மனதிற்குள் வைத்து கதறி அழுது ஜெபித்தேன். ஜெப வேளையில் கர்த்தர் என்னுடைய வியாதியின் நிலமையைச் சொல்லி நீ இதோ சொ;தமாகிறாய் என்றார். எப்படியெனில் கூட்டம் முடிந்து ஜெபக்கோபுர வாசலை நீ தாண்டும் போது நீ சொஸ்தமாய் இருப்பதை காண்பாய் என்றார். நான் வீட்டிற்கு சென்றேன். நான் சொஸ்தமாகி இருப்பதை அறிந்து கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

டெல்லி, தீபா.



# அழுகிய கால்கள் சொஸ்தமான அதிசயம்

எனது ஊர் மார்த்தாண்டம். எனது பெயர் பால் தங்கம். எனது கணவர் பெயர் சுந்நரேசன். எனது கால்கள் திடீரென்று சிவப்பு நிறத்தில் மாறி கொப்பளம் கொப்பளமாக வந்து அழுகியது. மருத்துவமனைக்குச் சென்று ஸ்கேன் எடுத்து சிகிச்சைகள் செய்தோம். பல மருத்துவமனைகளை நாடினோம். எந்த மருத்துவமனையிலும் பலன் அளிக்கவில்லை. பின்னர் ஜீவஒளி ஜெபக்கோபுர ஊழியக்காரரிடம் சென்று என்னுடைய கால்களைக் காட்டி ஜெபித்தோம். அப்போது அவர் வியாதி அல்ல உன் வீட்டு அருகாமையில் உள்ள ஒரு பெண்ணினால் வந்த மந்திரம் என்றார். எந்த மருந்துகளும் எடுக்க வேண்டாம். ஊழியக்காரர் ஜெபித்து தருகிற எண்ணெய் மாத்திரம் பூசச் சொன்னார். உன் கால்கள் சொஸ்தம் என்று கர்த்தர் சொன்னதாகச் சொன்னார்.

என் மகள் சொன்னாள் இது ஒரு புதிய வியாதி. கால் உள் நரம்பிலிருந்து பழுத்து வருகிற ஒரு வியாதி என்று சொன்னாள். என் மகள் சொன்னது எனக்கு பயத்தைக் கொடுத்தது. கர்த்தர் சொன்னது எனக்கு பெலத்தைக் கொடுத்தது. கர்த்தர் செய்த அற்புதத்தை நினைத்து ஆச்சரியப் பட்டேன். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

# அதிசயமாய் கற்பமானேன்



எனது பெயர் தீபா. எனது சொந்த ஊர் மார்த்தாண்டம் பக்கம் உள்ள கழுவன்திட்டை. நான் திருமணமாகியும் பிள்ளையில்லாமல் பல ஆண்டுகள் அவதிப்பட்டேன். ஜீவஒளி ஜெபக் கோபுரத்திற்கு சென்றேன். அவர் ஜெபித்து விட்டு சொன்னார் மூன்றே மாதத்தில் நீ கற்பமாவாய் என்றுச் சொன்னார்.

நான் அப்பொழுது டெல்லியில் இருந்தேன். அதே மாதத்தில் கற்பமானேன். ஆனால் நிற்கவில்லை. அரண்டாம் முறையாகவும் கற்பமானேன். அதுவும் நிற்கவில்லை. அழுகையோடு ஊழியக்காரரிடம் கூறினேன். அவர் சொன்னார் உனக்கு மூலவியாதியை கர்த்தர் குணமாக்கினார். நீஅதை சாட்சி சொல்லு. அப்பொழுதே நீ கற்பமாவாய் என்று சொன்னார். நானும் டெல்லியிலிருந்து வந்து சாட்சி சொன்னேன். அந்த மாதத்திலேயே கற்பமானேன். கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

# மாமியாரை என் கால்களால் மிதித்தேன். என் கால்களே அழுகியது! கர்த்தர் வெளிப்படுத்தி சொஸ்தமாக்கினார்.



எனது கால்களில் புண்கள் ஏற்பட்டு பயங்கரமான வலிகள் ஏற்பட்டு வீக்கம் ஏற்பட்டு நடக்க முடியாத படிக்கும், தூக்கமில்லாமலும் மிகவும் அழுது பாரப்பட்டு ஜெபித்து வந்தேன். ஊழியக்காரரிடத்திலும் நான் போன் மூலமும் நேரிலும் ஜெபித்து வந்தேன். ஓரளவுக்கு குணம் அடைந்து வந்தேன்.

ஒரு நாள் ஆராதனை வேளையில் பாவத்தைக் குறித்தும் ஒரு சகோதரி மாமியாரை அடித்த சாட்சி பற்றி ஒரு செய்தியை ஊழியக்காரர் கொடுத்தார். இந்த சாட்சி என் பாவத்தை சுட்டிக்காட்டி இருதயத்தை கிழிக்கும் வண்ணமாக இருந்தது. மூன்று மாதமாக இந்த சாட்சி என்னை கொல்லாமல் கொன்று கொண்டிருந்தது.

எனது வாலிப நாட்களில் என் மாமியாரை தூஷணம் பேசி என் கால்களால் பலமுறை சவுட்டியும் மிதித்தும் இருக்கிறேன்.

இந்த பாவம் என்னை உருக்கியது. ஆகவே நான் இந்த சபையார் முன்பு என் பாவத்தை அறிக்கையிட்டு அழுகிறேன். என் இயேசு மன்னிப்பை தந்து என்னை பரிசுத்தம் பண்ண நான் கெஞ்சிக் கேட்கிறேன்என்று சொல்லி சபை நடுவில் பாவமன்னிப்பைக் கேட்டேன். அதற்குபிறகு என் நோய்கள் நீங்கி எனக்குள் ஒரு மகாபெரும் சமாதானத்தைக் கட்டளையிட்டார் கர்த்தர். என் தேவனுடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

ஆசாரிபள்ளம்.

# வளைந்து போன கரத்தை நிமிர்த்தின கர்த்தர்



எனது பெயர் கிறிஸ்டல்பாய். நாங்கள் ஒவ்வொரு மாதமும் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள்வோம். திடீரென்று எனது கை இசட் போல் வளைந்து குறுகியது. வலியினால் 3 நாள் பழுபோல் துடித்தேன். மருத்துவ மனைக்குச் சென்றேன் எந்த பிரயோஜனமும் இல்லை. ஊழியக்காரருக்கு அழைத்து ஜெபித்தேன். 3நாள் தூக்கமே இல்லாத நான் நிம்மதியாய் தூங்கினேன். 4 நாள் மறுபடியும் ஊழியக்காரர் ஜெபித்தபோது வளைந்து குறகிய என் கரம் நிமிர்ந்தது. வலி மறைந்தது. எனது கர்த்தர் எனக்கு விடுதலை தந்தார்.

கிறிஸ்டல்பாய், நெய்யாற்றின்கரை,



# கர்த்தரை நம்புகிற உனக்கு எந்த குறையும் இராது. திருமணத்தை தடை செய்தவர்கள் மத்தியில் கர்த்தர் கெம்பீரித்து நின்ற அதிசயம்.



ஒருநாள் ஒருதாய் அழுகையோடு கர்த்தரின் ஜீவஒளி ஜெபக்கூட்டத்தில் வந்து தன் குடும்பத்தின் நிலமைகளையும் பிள்ளைகளின் நிலமைகளையும் எடுத்துச்சொன்னார்கள்.

1. குடும்பத்தில் மந்திரக்கட்டு
2. மூத்தமகன் கர்த்தருக்கு பிரியமில்லாத ஸ்தீரியே திருமணம் செய்து டைவர்ஸ் செய்து மறுபடியும் நான்காண்டுகளுக்கு பிறகு அதே ஸ்திரியே திருமணம் செய்ய துடித்துக்கொண்டிருப்பது
3. சமாதானமில்லாத சுழ்நிலையில் குடும்பம் கலங்கிப்போய் நிற்கிறது

என்றுச்சொல்லி அன்னாளின் ஜெபத்தை விட இன்றும் 1000 மடங்கு அழுது இருதயத்தை பச்சத்தண்ணீர் போல் ஊற்றினார்.

கர்த்தர் மனதுருகினார்! கர்த்தர் பேசினார்!

உனக்கு சமாதானத்தைக் கட்டளையிடுவேன்.

உன் மகன் அந்த மகளை திருமணம் செய்யமாட்டான்.

இன்னும் அழகான என் மகளை அவனுக்குக் கொடுப்பேன்.

சில மாதங்களிலேயே நீ அவளைக் காண்பாய்.

திர்க்கத்தரிசனம் பெற்ற சகோதரி அதிகமாக சந்தோஷப்பட்டாலும் உள்ளுக்குள்ளே இதிலிருந்து எப்படி விடுதலை கிடைக்கும்? என்று மகாபெரிய கலக்கத்தோடு திரும்பிச் சென்றார்கள்.

ஆனால் இவர் குமாரனோ இன்னும் 1000 மடங்கு அதிகமாக வெறி கொண்டு அவளையே திருமணம் செய்ய துடித்தார். சகோதரிக்கு இன்னும் அதிகமாக கலக்கம் பிடித்தது. சகோதரி அதிகாலையில் எழும்பி ஒவ்வொரு நாளும் கண்ணீரை ஊற்றுவார்கள்.

கர்த்தர் சொன்னார் 6 மாதத்திற்குள் கர்த்தர் சொன்னது நிறைவேறும். மூன்றே மாதத்தில் என் மகளை நீங்கள் காண்பீர்கள் என்றார்.

வெளிநாட்டிலிருந்த சகோதரி அந்த சகோதரனுடன் மறுபடியும் வாழ்க்கை நடத்திட சொந்த தேசத்திற்கு வருவதாகச் சொன்னார்கள். குடும்பத்தில் பயமும் திகிலும் 1000 மடங்கு குடியேறியது. கதறி அழுதார்கள் தாயும் தகப்பனும். அப்பொழுது கர்த்தர் சொன்ன தீர்க்கத்தரிசனத்திலிருந்து கொஞ்சமும் மாறவே இல்லை.

அப்பொழுது ஒரு சூழ்நிலையில் அந்த சகோதரனுக்கு கர்த்தர் நீ வேறு அழகான சிவப்பு நிறத்தில் ஒரு பெண்ணைக் காண்பாய். மூன்றே மாதத்தில் கண்டு கொண்டு நிச்சயம் பண்ணி ஆறே மாதத்தில் திருமணம் செய்து கொள்வாய்!

நீ என்னுடையவன் என்பதால் பழயவைகள் ஒழிந்து போகும். புது வாழ்க்கை கடந்து வரும் என்றார்! உடனே என் மேல் எரிச்சலடைந்து என்னை விட்டு ஓடிப் போனான்.

வெளிநாட்டிலிருந்த சகோதரி ஒரு 4-ம் தேதி திருமணத்திற்காக ஊருக்கு வந்தாள். இன்னும் சில நாட்களே உண்டு. தாய்

கதறினார்கள் மறுபடியும் இந்த கல்யாணம் நடக்க கூடாது பாஸ்டர்.

என் மகன் திருமணம் செய்வதில் உறுதியாக இருக்கிறான் என்றார்கள். உடனே கர்த்தர் நான் சர்வ வல்லமையுள்ள கர்த்தர். சகலத்தையும் நேர்த்தியாய்ச் செய்வார். நீ பயப்படாதே! அவளிடத்தில் வெறுப்பின் ஆவியை ஊற்றுவேன் என்றார்.

கர்த்தரின் உக்கிரமான புயல் அவள் உச்சந்தலையின் மேல் மோதியது. அவள் இனனும் மூன்று நாட்கள் தான் திருமணம் நடக்க இருக்கிற வேளையிலே உன்னை திருமணம் செய்யமாட்டேன் என்று மறுதலித்து மறுபடியும் எப்படி வந்தாளோ அப்படியே ஓடிப்போனாள்.

பைத்தியம் பிடித்தது போல் மகனட ஆனான். தற்கொலை மிரட்டல் விட்டான். எனக்கு அவள் தான் வேணும். தினம் கணக்கிலடங்காத சிகரெட்டை பயன்படுத்தினான். அவனுக்கு எப்பொழுதும் சாகவேண்டும். இல்லையேல் அவளோடு வாழ வேண்டும் என்ற வெறியில் மறுபடியும் என்னை சந்தித்தார்

கர்த்தர் இதோ இப்பொழுது என் மகளை நான் உனக்கு தருவேன்! நீ தேடும் சமாதானம் அவளிடத்தில் இல்லை! என்னிடத்தில் உண்டு. உனக்கு திருமணம் என் மகளோடு தான் என்று கர்த்தர் பேசி, உன்னை உன் தாயின் வயிற்றிலிருந்தே தெரிந்து கொண்டேன். எரேமியா 1: 5முதல் 10 ஆகிய தேவ மன்னாவை கொடுத்தார்.

உன்னை என் ஜனத்திற்கு முன்பாக ஒரு துணாக நிறுத்துவேன் என்றார்.

அதே வாரத்தில் கர்த்தர் சொன்னபடியே ஒரு சகோதரிக்கு கர்த்தர் தரிசனம் காண்பித்து இதோ உன் புருஷன் என்று இந்த மகனை கர்த்தர் அந்த அழகான ஸ்திரீக்கு காண்பித்திருக்கிறார்!

புரோக்கர் மூலம் இந்த மகளை காண் வேண்டா வெறுப்போடு இவன் கடந்து செல்ல இவனுக்கு இவ்வளவு அழகான பெண் எனக்கா என்று வியப்பில் விழுந்தான். அவளோ கர்த்தர் எனக்கு காண்பித்த படியே இவன் இருக்கிறான் என்றுச் சொல்லி இவனைளே பேசி முடியுங்கள் என்றாளாம். ஆச்சரியமாக இருக்கிறதா? இதுதான் ஆச்சரியமானவைகளை உனக்குச் செய்வேன் என்றார் கர்த்தர்.

திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. மே மாதம் 22-ம் தேதி திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. மறுபடியும் கோர புயல் இவர்கள் குடும்பத்தில் வீசியது. வெளிநாட்டிலிருந்த இவர் பழைய காதலி உடனே இவரை திருமணம் செய்யவும் நிச்சயித்த பெண்ணை திருமணம் செய்ய விடாமல் தடுத்தும் அநேக காரியங்களைச் செய்தாள்.

பேஸ்புக் மூலமாகவும் வாட்ஸ்அப் மூலமாவும் படங்களை வெளியிட்டு திருமணத்தை தடுக்க முயற்சித்தாள்.

பயந்தார்கள்! நடுங்கினார்கள். கர்த்தர் மணப்பெண்ணையும் குடும்பத்தாரையும் ஆவியிலே நிரப்பி பெலனைக் கொடுத்தார்.

சத்ரு ஓடிப்போவாள்! நீங்கள் அழைப்பிதழ் அச்சிட்டு அழைப்பிதழைக் கொடுங்கள் என்று கர்த்தர் சொன்னார்! அதன்படியே கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் குறித்த நாளிலே அதே நாளிலே திருமணத்தை மிகவும் கெம்பீரமாய் நடத்தி முடித்தார்.



# நாடி விறையலைக் கொடுத்து பிடித்து தள்ளுகிற சாத்தானை அழித்த கர்த்தர்

எனது பெயர் சாந்திகிரேஸ், எனது கணவர் பெயர் றசல்ஜாண். எனது மகள் பெயர் ஜெனி. எனது மகள் மூன்றாம் வகுப்பிலிருந்தே ஒரு பிசாசு தொல்லையினால் அனேக பாடுகளை அனுபவித்து வந்தாள்! ஸ்கூலுக்கு பிசாசு போகவிடாது.



எப்படியெனில் ஒரு ஆவி முதுகுக்கு பின்னால் நின்று பிடித்து தள்ளும்! ஸ்கூலுக்குச் சென்றால் மாடியேறும் போதும் பிடித்துத் தள்ளும். மற்றும் சாப்பிட முடியாது. நாடி விறைத்துக் கொண்டு பற்கள் அடித்துக் கொண்டிருக்கும்.

எனது கணவர் ஒரு சி.எஸ்.ஐ. பாஸ்டர். நாங்கள் எப்படியோ ஜெபித்தோம். ஒரு முறை நெய்யூர் சி.எஸ்ஜ. மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்ட போது ஜீவஒளி ஜெபக்கோபுரம் புக் கிடைத்தது. அதில் வெளியிட்டிருந்த செய்திகளைப் படித்து நான் போண் செய்து ஜெபிக்கச் சொன்னேன். ஊழியக்காரர் அவர்கள் ஜெபித்து இது பிசாசு. வீட்டருகாமையில் இறந்து போன இச்சை மனிதனின் ஆவி என்று வெளிப்படுத்தினார்.

நாங்கள் அதிர்ந்து போனோம். அவர் சொன்னபடி அதே பெயரில் அப்படியே ஒரு மனிதன் செத்துப் போயிருந்தான்! உடனே நாங்கள் நேரில் ஜெபக்கோபுரத்திற்குச் சென்றோம்.

அவர் ஜெபித்து கட்டவிழ்த்தார். இன்று முதல் 7 வருடமாக அலைக்கழித்த இந்த பிசாசு ஒழிந்து விட்டது. கர்த்தர் தந்த அற்புத விடுதலைக்காக ஸ்தோத்திரம்!

மேலும் ஒரு கட்டத்தில் மூச்சுத்திணறலை பிசாசு கொடுத்து வந்தது. நரம்பு டாக்டர்கள் ஆப்பரேசன் செய்ய வேண்டும் என்றுச் சொன்னார்கள். நாடி விறையலுக்கும் கடுமையான வயிற்று வலிக்கும் ஆப்பரேசன் செய்ய வேண்டும் என்றார்கள். ஆனால் கர்த்தர் எல்லாவற்றிலிருந்தும் விடுதலை தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

# செல்லாத மருத்துவமனை இல்லை!
# செய்யாத சிகிச்சை இல்லை!
# மலசிக்கல் வியாதியிலிருந்து விடுதலை

எனது பெயர் வின்சி. நான் மார்த்தாண்டம் பகுதியில் ஈச்சவிளையிலிருந்து வருகிறேன். என் மகன் பெயர் சாம்மோகன். இவனுக்கு 6 மாதம் ஆனபோது மலச்சிக்கல் ஏற்பட்டது. அவனுக்கு மருத்துவ



சிகிச்சைக்காக பெரிய பெரிய மருத்துவமனைகளுக்குச் சென்றோம். பேதி போகவே போகாது.

நாங்கள் வாரத்திறகோரு முறை இனிமா வைத்து தான் பேதி எடுப்போம். அப்பொழுதெல்லாம் பயங்கரமாய் அழுவான். நான்கு பேரை வைத்து பிடித்து வைத்து தான் இனிமா வைப்போம். பேதி எடுக்கும் போது ரத்தம் கூட வரும்.

1 1/2 வருடத்தில் நாங்கள் பேங்களூர் சென்றோம். அங்கும் பெரிய மருத்துவமனைகளில் சென்று சிகிச்சை பெற்றோம். ஒரு பிரயோஜனமும் இல்லை. அங்கு ஒரு பெரிய மருத்துவமனையில் ஸ்கேன் எடுத்தார்கள். இந்த ஸ்கேன் எடுப்பதற்கு 4 மணி நேரம் ஆகி விட்டது. என் மகன் படாத பாடு பட்டான். 4 பேர் பிடித்து வைத்து தான் ஸ்கேன் எடுத்தார்கள். அதில் குடலில் அடைப்பு இருக்கிறது என்றுச் சொன்னார்கள். ஆனாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை. சர்ஜரிக்கு ப்ளான் செய்தார்கள் அந்த நேரம் என் தேவன் ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகத்தை காணும்படி கிருபை செய்தார். இந்த புத்தகத்தை பார்ப்பதற்கு முன்பு 5 வருடமாக மலச்சிக்கலில் அவதிப்பட்டான்.

5 வருடமும் இனிமா வைத்து தான் மலம் எடுப்பார்கள். எங்கள் இதயம் நொறுங்கிப் போகும். பாத்ரூம் என்றாலே பயப்படுவான். அழுவான். நாங்கள் ஆயுர்வேதம், சித்தா, ஹோமியோ இன்னும் பெரிய பெரிய மருத்துவமனைகளிலும் சென்று சிகிச்சை பெற்றோம் பலனில்லை. உறவினர்கள் சொன்ன எல்லா மருத்துவமனைகளுக்கும் சென்றோம். ஒரு பிரயோஜனமும் இல்லை. ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகத்தைப் படித்த நாங்கள் பேங்ளூரிலிருந்து கடந்த 2019 ஜுன் மாதம் உபவாசக் கூட்டத்தில் பங்கெடுத்தோம்.

ஊழியக்காரர் சொன்னார் மருந்து வேண்டாம் தேவன் சொஸ்தமாக்கினார் என்றார். அவர் சொன்ன 3 நாளிலே யாருடைய துணையும் இல்லாமல் மருந்தும் இல்லாமல் கர்த்தர் அவனுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அதன் பின் வீட்டில் வந்து என் பிள்ளையின் மேல் கரம் வைத்து ஜெபித்தார். அவன் பரிபூரண சுகம் அடைந்தான். மருந்தே எடுக்கக் கூடாது என்றார்.

இந்த 6 மாதமும் ஒரு சிகிச்சையும் இல்லாமல் தன்னந்தனியாக அமைதியாக பயமில்லாமல் தினம் தினம் கக்கூஸ் போய் வருகிறான். இப்படி ஒரு உலக அதிசயத்தை என் தேவன் என் பிள்ளைக்குச் செய்தார். 5 வருட பிரச்சனைக்கு என் இயேசு விடுதலை தந்தார். நானும் சிறு வயதிலேயே ஞானஸ்நானம் எடுத்தேன். 30 வருடமாக ஆவிக்குரிய ஜீவியத்தில் இருக்கிறேன்.

எத்தனையோ அற்புதங்களை கர்த்தர் செய்தார். எங்கும் சாட்சி சொல்லவில்லை. ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் முதன் முதலாக சாட்சி சொல்ல தேவன் கிருபை செய்தார்.

ஈச்சவிளை, எருதூர்கடை.



# கைவிடப்பட்ட எனக்கு 90 நாளில் அதிசய மறுமணமும் அதிசய வேலையும்



எனது பெயர் அனுஷா. எனது ஊர் கருங்கல் பக்கம் உள்ள பாலப்பள்ளம். எனக்கு அருமனையைச் சேர்ந்த ராணுவ வீரருக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. 3 மாதம் வரைக்கும் திருமண வாழ்க்கை நன்றாக இருந்தது.

திடீர் என்று ஒரு நாள் எனது கணவர் எனது பேஸ்புக்கில் கிடந்த போட்டோவைப் பார்த்து என்னிடம் தகராறு செய்ய ஆரம்பித்தார். என்னுடைய ஜீவிதம் தகர்ந்தது. நான் எனது ஊரிலுள்ள குடும்ப ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை முடித்து வெளியே வரும்போது திடீர் என என் கணவர் விதவிதமான போட்டோக்களை சபை மக்களிடத்தில் வீசியெறிந்து என்னை அவமானக்குழியில் போட்டு விட்டார்.

இந்த போட்டோக்களுக்கும் எனக்கு சம்மந்தம் இல்லை என்று வாதிட்டுப் பார்த்தேன். ஆனால் என் கணவர் செவி கொடுக்கவில்லை. சத்தியத்தை அவர் கேட்க தயாரில்லை. நானே நீதியும் பக்தியும் தேவனுக்கு பிரியமான மகள். சாத்தான் அவருக்குள் ஏறி என் வாழ்க்கையை பறித்து விட்டது. விவாக ரத்தையும் பெற்றுக் கொண்டேன். ஆனாலும் என் சபை மக்கள் மத்தில் நான் வெட்கப் படுத்தப் பட்டேன் . என் ஆண்டவரிடத்தில் கண்ணீர் விட்டு கதறினேன்

தற்கொலை முயற்சி

வீட்டிற்கு வந்த நான் தீக்கொழுத்தி என்னை எரித்துக் கொள்வதற்கு மண்ணெண்ணெய் எடுத்தேன். அப்பொழுது கர்த்தரின் சத்தத்தை நான் கேட்டேன். அப்பொழுது கர்த்தரின் சத்தத்தை நான் கேட்டேன். எந்த இடத்தில் நீ வெட்கப்படுத்தப் பட்டாயோ அதே இடத்தில் உன்னை உயர்த்துவேன் என்றார். இந்த சத்தத்தைக் கேட்டதும் தற்கொலை எண்ணம் என்னை விட்டு ஓடிப்போயிற்று.

நான் உடனே சந்தோஷத்தோடு என்னை கர்த்தருக்கு அற்பணித்தேன். இந்த உலக வாழ்க்கையை விட என் ஆண்டவருக்காக ஓட நான் தீர்மானித்தேன். ஜார்க்கண்ட்க்கு சென்று .என்னை ஊழியத்துக்கு அற்பணித்தேன் . இந்தி மொழி மூன்றே மாதத்தில் பேசவும் எழுதவும் பழகினேன். இந்தி பைபிளை வாசிக்க ஆரம்பித்தேன்.

ஒரு நாள் என் அம்மா ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகத்தை வாசித்து விட்டு ஊழியக்காரரின் நம்பரை எனக்கு தந்து பேசச் சொன்னார்கள். நான் ஒரு நாள் பேசினேன். என்னுடைய வாழ்க்கையின் இரகசியங்களை ஊழியக்காரரிடம் நான் எதுவும் சொல்லவில்லை. ஊழியக்காரர் ஜேப்பியார் அவர்களோ என் பள்ளி பருவம் முதல் இந்நாள் வரையுள்ள எல்லா காரியங்களையும் கர்த்தர் வெளிப்படுத்தி சொன்னதாகச் சொன்னார். எல்லாம்

உண்மையாக இருந்தது.

மேலும் சொன்னார் நீ ஒரு பொருத்தனை செலுத்து. ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகத்தை 1000 புக் அச்சிட்டு மக்களுக்கு இலவசமாக கொடு. கர்த்தர் உன்னை 90 நாட்களில் திருமணத்தை நடத்தி ஆசீர்வதிப்பார். நீ உன் சொந்த ஊருக்கு திரும்பு. வெட்கப்பட்ட இடத்திலே உன்னை உயர்த்தப் போகிறார்.

நான் கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நான் ஜார்கண்டை விட்டு சொந்த ஊருக்கு திரும்பினேன். நானும் என் அம்மாவுமாக சேர்ந்து 28 ஆயிரம் ரூபாய் புக் அடிக்க ஊழியக்காரரிடம் கொடுத்தோம். 2 1/2 மாதம் எதுவும் நடக்கவில்லை. காணிக்கை செலுத்தினதுக்காக நானும் என் அம்மாவும் புலம்பினோம். எங்களுடைய எரிச்சலை ஊழியக்காரரிடம் கொட்டினோம். அப்பொழுது அவர் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிரு காரியத்தை வாய்க்கச் செய்வார் என்றார்.

மூன்றாவது நாள் ஒரு வரண் வந்தது. பார்த்த மாத்திரத்தில் முடிந்தது. மூன்றாவது நாளிலே நிச்சயதார்த்தம் நடந்தது. கர்த்தர் சொன்ன 90-வது நாளிலே ஒரு அழகான மணமகள் என் கழுத்திலே தாலி கட்டினார். ஊரே ஸ்தம்பித்தது. என் சபை மக்கள் எல்லாம் சந்தோஷத்தில் புலம்பினார்கள். கர்த்தர் என்னை வெட்கப் பட்ட இடத்தில் உயர்த்தினார். நான் இப்போது கர்ப்பமாகவும் இருக்கிறேன். கர்த்தர் என்னை கம்பீர சத்தமாக உயர்த்தினார்.

## மகனை மடியில் போட்ட கர்த்தர்

எனது பெயர் விக்டோறியா. எனது ஊர் ஆசாரிபள்ளம். எனக்கு ஏதேச்சையாக ஜீவஒளிஜெபக்கோபுரம் புத்தகத்தை படித்து மனதிலே ஒரு பொருத்தனையை ஆயத்தம் பண்ணி என் மகனுடைய பிரச்சனைகளுக்காக தேவ சமுகத்தில் அழுதேன். என் மகனும் மனைவியும் பிள்ளைகளும் வெளிநாட்டில் குடியிருக்கிறார்கள். மருமகள் கடுமையான வியாதியினால் பாதிக்கப்பட்டு மகன் சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் அவள் வியாதிக்காக செலவழித்துக் கொண்டிருக்கிறான். சுமார் 2 வருட காலமாக மகன் எந்த விதமான தொடர்பும் எங்களிடத்தில் வைத்துக் கொள்ளவில்லை. அவன் குரலைக் கேட்க புழுவாய் துடித்தேன்.



இந்த நிலையில் என் மருமகள் குடும்பம் உன் மகன் என் மகளை கொன்று புதைத்து விட்டானோ அவன் எங்கிருக்கிறான் என்று என்னை கேட்டு கொடுமைப்படுத்தினார்கள். மிகவும் மன உளைச்சல் அடைந்தேன்.

உண்மையிலேயே மகன் எங்கிருக்கிறான் என்று எனக்கு தெரியாது. பிள்ளைகள் பற்றியும் மருமகள் பற்றியும் எனக்கு தெரியாது. இந்த நிலையில் தான் நான் மனதில் நினைத்த பொருத்தனையை எடுத்துக் கொண்டு ஊழியக்காரரை சந்தித்தேன். என் விண்ணப்பத்தையெல்லாம் அவரிடத்தில் சொன்னேன். கர்த்தர் மகனை நீ காணும்படி வரவழைப்பேன் என்று கர்த்தர் சொன்னதாகச் சொன்னார். ஆறுதலாக வீடு திரும்பினேன்.

வீடு திரும்பின எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. என் மகனின் மாமியார் வீட்டில் வந்து தகராறு செய்து காவல்துறையில் புகார் கொடுப்பதாகக் கூறினாள். நான் பயந்து நடுங்கினேன். உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு இதை ஊழியக்காரரிடத்தில் அறிவித்தேன்.

உடனே கர்த்தர் உன் மகனை கர்த்தர் உன் மடியில் போடுகிறார். உனக்கு சந்தோஷம் மிகுதியாய் உண்டாகும். நீ மகனைக் காண்பாய் என்றார். அதே வாரத்தில் ஒரு நாள் திடீரென்று காலிங் பெல் அடித்தது. என்ன ஆச்சரியம்! கதவைத் திறந்தேன். என் மகனும் மனைவியுமாக அங்கு நின்று கொண்டிருந்தார்கள். என் கண்களில் ஆனந்தக் கண்ணீர். என் தேவன் எனக்குச் செய்த மகா பெரிய அற்புதத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். கர்த்தர் என் பொருத்தனையை அங்கீகரித்து என் ஜெபத்தைக் கேட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

விக்டோரியா, ஆசாரிபள்ளம்,
நாகர்கோவில்.

## மரித்த என் சரீரத்தில் கர்த்தர் எனக்கு ஜீவனைத் தந்தார்

எனது பெயர் தங்கராஜ். நான் பேங்களூரில் கர்த்தருக்காக ஊழியம் செய்து வருகிறேன். என் மனைவியும் என் பிள்ளைகளும் என்னை விட்டு பிரிந்து சென்றார்கள். கைவிடப் பட்ட நான் ஒரு நண்பன் வீட்டில் அடைக்கலமாயிருந்தேன். திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டது. என் நண்பன் மருத்துவமனைக்கு அழைத்;துச் சென்றான். போகும் வழியில் நான் முழுவதும் மரித்து போனதை உணர்ந்தேன். அப்போது காரில் மகாபெரிய ஒரு வெளிச்சம் உண்டானதைக் கண்டேன். அந்த வெளிச்சத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அவ்வளவு வெளிச்சம். என் சடலமே மருத்துவ மனைக்குள் போய்விட்டது. மருத்துவர்கள் ஆர்டிபிசியல் சிகிச்சை செய்திருக்கிறார்கள். மரித்த எனக்கு உயிர் வந்தது. என்



இருதயத்தின் பயங்கரமான அடைப்புகள் எல்லாம் திறக்கப்பட்டது. ஓப்பன் சர்ஜரி செய்யவேண்டிய சூழ்நிலையில் கர்த்தர் எனக்கு ஜீவனைத் தந்தார். மருத்துவர்கள் சொன்னார்கள் நீ 10 நிமிடத்துக்கு முன்னதாக மரித்து போயிருக்கிறாய். ஆனால் தேவன் உனக்கு உயிரைத் தந்திருக்கிறார் என்று சொன்னார்கள். என் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தற்போது எனக்காய் ஜெபித்து வருகிற ஜேப்பியார் அவர்களுக்கு நன்றி.

# நான் மரித்தேன் ஆனாலும் பிழைத்தேன்



எனது பெயர் றோஸ். எனது அக்கா கில்டா ராணி. எனக்கு அக்காள் இந்த ஊழியத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். எனக்கும் என் கணவருக்கும் அடிக்கடி சண்டை பிரச்சனை. நான் என் சொன்னாலே அவருக்கு பிடிக்கவே பிடிக்காது. என்னைக் கண்டாலே எரிச்சல் அடைவார். என் மேல் எப்பொழுதும் கோபம் அடைவார். எங்கள் குடும்ப வாழ்க்கை பட்ட மரம் ஆகிவிட்டது. இந்த நிலையில் என் அக்கா என்னை ஊழியக்காரரிடம் அழைத்து வந்தாள்.

ஊழியக்காரர் என்னுடைய கடந்த காலம், நிகழ்காலத்தில் உள்ள எல்லா கரியங்களையும் கர்த்தர் வெளிப்படுத்தி சொன்னார். இப்போது இருக்கிற ஆபத்துகளை எடுத்துரைத்தார். வீட்டிலே வாதைகளும்சர்ப்பத்தின் ஆவிகளும் வீட்டிற்குள்ளே கிரியை செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னார். வீட்டிற்குள் நடமாடும் பிசாசுகளின் சத்தம் உன் காதுகளில் கேட்கும் என்றுச் சொன்னார்.

அவர் சொன்னதெல்லாம் உண்மை. நான் நாகூம் 1:15 என்ற வசனத்தை படித்து கணவனுக்கும் மனைவிக்கும் ஆளுக்கொரு பொருத்தனையை நிறைவேற்றச் சொன்னார். உன் சாபம் நீங்கி பிழைப்பாய் என்றார் நானும் பொருத்தனைகளை ஆயத்தம் பண்ணி புத்தகங்களை அச்சிடக் கொடுத்தேன். கர்த்தரின் யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஒரு ராத்திரி முழுவதும் மரணப் படுக்கையில் கிடந்தேன். எழும்பி நிற்க முடியாது. பூமியே சுற்றும். நான் தரையில் உருண்டு உருண்டு பாத்ரூமுக்கு சென்றேன். வெளியில் பிசாசுகளின் ஆரவாரம் கேட்டது. நான் ஊழியக்காரருக்கு தொடர்பு கொண்டு ஜெபிக்கச் சொன்னேன். அவரும் ஜெபிக்க ஆரம்பித்தார்.

ஒட்டு மொத்த பேய்களும் என் வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் நடமாடின. அதை நான் நன்கு உணர்ந்தேன். நான் முற்றிலும் மயக்க நிலைக்கு தள்ளப் பட்டேன். மரணத்தின் வாசலுக்குள் நான் பிரவேசித்துக் கொண்டிருந்தேன். என் வீடே கறங்கிக் கொண்டிருந்தது. விடியற்காலம் 4 மணி வரைக்கும் இந்த போராட்டம் நீடித்தது. என்னை நான் அறியாமல் உணராமல் கிடந்தேன். வந்தியும் பேதியும் என்னை அறியாமலே போய் விட்டது. அப்போது ஊழியக்காரர் அவர்கள் போன் செய்து கர்த்தர் உனக்கு நீவனைத் தந்தார். நீ சொஸ்தமானாய் என்றார். அந்நேரமே நான் சொஸ்தமானேன். விடியற்காலம் 5 மணிக்கு நான் முழுபெலத்தோடு வியாதியற்றவளாக எழுந்து நின்றேன்.

இருளான என் முகம் பிரகாசமாக மாறியது. புருஷன் இப்போது என்னை நேசிக்கிறார். நான் இப்போது சந்தோஷமாக இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



# ஜீவ ஒளி ஜெபக்கோபுரத்தில் செத்த குழந்தைக்கு உயிர் கொடுத்த அதிசயம்

2002 தேவனால் புடமிடப்பட்டு சென்னையி லிருந்து அனுப்பினார்.ஆனால் ஊழியம் செய்வதற்கு நான் தயங்கி கொண்டிருந்தேன். சினிமா தயாரிப்பாளரும் ஒரு அரசியல் பத்திரிக்கையின் ஆசிரியராகவும் இருந்த நான் சொந்த தேசத்தில் வந்து நான் இரட்சிக்கப்பட்டேடன் என்று சொல்வதற்கே தயக்கமாக இருந்தது. ஆனாலும் எல்லா சூழ்நிலைகளையும் மறந்து தேவனை துதிப்பதிலும் ஆராதிப்பதிலும் படு உற்சாகமாக இருந்தேன். யாரும் எங்களை ஊழியத்திற்கு அழைக்காத காலம். ஏற்றுக்கொள்ளாத காலம்.அழைத்தவர் உண்மையுள்ளவர் அதிசயத்தை செய்திடுவார் என்பதற்கு இது ஒருபலத்த சாட்சி. ஒரு நாள் நள்ளிரவு 12 மணி வேளை நாங்கள் ஜெபித்து தூங்கினோம். திடீரென்று ஒரு தகப்பனின் அழுகையோடு கலந்த அலறல் சப்தம் கேட்டது.ஒரு தாய் தன் குழந்தையோடு வந்து நின்றாள்.தகப்பன் தன்னுடைய வலது கையை முறுக்கி நெஞ்சிப் பகுதியில் தும்தும் என இடித்து அழுது கொண்டிருந்தான்.ஆனால் இவனுடைய மனைவி கூட இல்லை சகோதரனின் தாயுடைய கரத்தில் தான் அந்த குழந்தை இருந்தது.

குழந்தை மரித்து வெகு நேரம் ஆகிவிட்டது.ஆகிவிட்டது ஆனால் அந்த சகோதரனின்
தாயார் எந்த சலனமும் இல்லாமல் அமைதியாக இருந்தார்.ஏனெனில் குழந்தை செத்துப்போனது இந்த சகோதரி நன்கு அறிந்திருந்தாள்.

இனி ஜெபித்து என்ன பலம் என்று சொல்லி நின்று கொண்டிருந்தாள்.ஆனால் தகப்பன் தன் குழந்தையை காப்பாற்றும் நோக்கத்தோடு அடக்க காரியத்தில் ஈடுபடாமல் குழந்தையை ஜெபத்திற்கு கொண்டு வந்திருந்தான்.இவன் அடிக்கடி குழந்தையை பிடித்து உலுக்கி மகனே என்று கதறி மறுபடியும் பூமியில் உருண்டு நெஞ்சில் இடித்து அழுவான்.

நான் குழந்தையை தரையில் படுக்க வைக்கச்சொன்னேன்.நானும் என் மனைவியும் ஜெபிக்க ஆரம்பித்தோம்.

சுமார் 20 நிமிடங்கள் சுமார் 7 8 முறை தகப்பன் குழந்தையை உலுக்கி குலுக்கிப் பார்ப்பார்ன் .குழந்தையிடத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று நெஞ்சில் இடித்து அழுவான்.

கர்த்தர் இவன் விசுவதசத்தை அறிந்திருத்தார்.நாங்கள் வெளியரங்கமாக பிறருக்கு ஜெபிக்கிற முதல் ஜெபமாக இது இருந்தது.

இரட்சிக்கப்பட்டு இப்பொழுது தான் பைபிளை வாசித்துக்கொண்டிருக்கிற நேரம் எனக்கு பைபிள் நன்றாக தெரியாது.அப்பொழுது ஜெப வேளையிலே ஒரு வசனத்தை எனக்கு காண்பித்தார்.அந்த வசனம் இதோ

தலைவன் ஒருவன் வந்து அவரைப்பணிந்து:என் மகள் இப்பொழுது தான் மரித்து போனாள்.ஆயினும் நீர் வந்து அவள் மேல் உமது கையை வையும்.அப்பொழுது பிழைப்பாள் என்றான்.(மத்:9:19).

இந்த வசனம் பைபிளில் எங்கிருக்கிறது என்று எனக்கு தெரியாது.இந்த வசன சம்பவமும் எனக்கு தெரியாது .அதன் பிறகு காண்பித்த

வசனத்தின்படி ஜெபிக்க ஆரம்பித்தேன்.

கர்த்தர் பேசினார் இந்த குழந்தையின் தாய் செய்த பாவம் .இந்த குழந்தையை கொன்று போட்டது.ஆனாலும் கர்த்தராகிய தேவன் தகப்பனின் விசுவாசத்தின் பலி இந்த குழந்தைக்கு ஜீவனைக்கொடுக்கிறேன் என்று சொன்னதும் கர்த்தர் எனக்கு இட்ட கட்டளையின் படி அவர் பேசின அதே வேளையில் ஆவியினால் ஏவப்பட்டு எனது வலது கையை குழந்தையின் சரசின் மேல் வைக்கச்சொன்னார்.

நான் எப்பொழுதும் ஜெபித்து வைத்திருந்த ஒரு எண்ணெய் குப்பியை குழந்தையின் தொப்பிள் குழியில் கவிழ்த்து பிடிக்கச்சொன்னார்.நான் இதை செய்தமும் கர்த்தர் மூன்று முறை இதோ ஜீவனை கொடுக்கிறேன் இதோ ஜீவனை கொடுக்கிறேன் இதோ ஜீவனை கொடுக்கிறேன் என்று சொன்னதும் குழந்தை கால்களை அசைத்து கண் விழித்துக்கொண்டது.தகப்பன் குழந்தையை வாரி மார்பில் அணைத்துக் கொண்டான்.

கர்த்தர் அந்த ஒது வயது குழந்தைக்கு ஜீவனைக் கொடுத்தார்.குழந்தைக்கு ஜீவனைக்கொடுத்தார்.குழந்தை பிழைத்துக்கொண்ட செய்தியைக்கேட்டு த்தாய் வரவழைக்கப்பட்டாள்.பாவ சாத்தான் அவள் சரீரத்திலிருந்து ஆடத்தொடங்கியது.கர்த்தர் கட்டவிழ்த்து விடுதலையாக்கினார்.

எனக்கன்பானவர்களே நீங்கள் ஊழியக்காரர்களாக இருக்கலாம் விசுவாசிகளாக இருக்கலாம் கர்த்தர் மேல் அதிக அதிக நம்பிக்கை எந்த சூழ்நிலையிலும் வைப்பவர்களுக்கு எப்பேர்பட்ட அதிசயத்தையும் செய்வார் என்பதற்கு இது ஒரு சாட்சி.

## தீரா நீர்க்கடுப்பை மாற்றின கர்த்தர்



எனது பெயர் பியூலா ஷெறின். எனக்கு ஆறு மாத காலமாக தீராத வயிற்று வலி நீர்க்கடுப்பு, முதுகு வலி இருந்து வந்தது. ஏறக்குறைய 10 மருத்துவமனைக்கு சென்று மருத்து வரை பார்த்து சிகிட்சை எடுத்துக் கொண்டேன். ஆனால் எந்த வித சிகிட்சையும் பலன் அளிக்கப்படவில்லை. எனவே நான் மனம் நொந்து உலகத்தில் இருக்கவா இல்லை மரிக்கவா என மிகுந்த வேதனையுடன் என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தேன். அப்பொழுது ஒரு நாள் ஒரு மருத்துவமனயில் நின்று கொண்டிருக்கும் போது ஜீவஒளி ஜெபகோபுரம் என்ற புத்தகத்தை ஒரு வயதானவர் கையில் கொடுத்தார். அதை நான் படித்து ஜே.ஜேப்பியார் சகோதரரை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டேன். அப்பொழுது அவன் எனக்காக ஜெபித்தார். நான் கர்த்தருக்கு ஒரு பொருத்தனை செலுத்தினேன். அப்போது 6 மாத காலமாக இருந்த வியாதி 4 நாட்களில் குணமானது மரணகட்டிலிருந்தும் விடுவித்தார். எனக்கு விடுதலை தந்த கர்த்தரை வாழ்நாள் எல்லாம் நன்றியோடு துதிக்கிறேன். எனக்காக உபவாசத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்த பிரதர் அவர்களுக்கும் கர்த்தருக்குள் அன்பாய் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பியூலா ஷெரின்,
கோழிப்போர்விளை, தக்கலை.



# 10 லட்சம் கடன் அடைத்த கர்த்தர்



எனது பெயர் ஜெனீபா. குளச்சலிலிருந்து வருகிறேன். எனக்கு 60 லட்சம் ரூபாய் கடன் உண்டு. கடன் பிரச்சனையினால் மிகவும் மனதுருகினேன். இந்த ஊழியத்திற்க வந்தபோது கர்த்தர் எனக்கு மூன்று அற்புதத்தைச் செய்தார்.

நான் ஒரு சகோதரிக்கு 5 லட்சம் ரூபாய் உடனடியாக கொடுக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. நான் பிரதரிடம் ஜெபித்தபோது 30 நாட்களில் ஒரு அதிசயத்தை செய்வேன் என்றுச் சொன்னார். 28 நாட்கள் ஆனது. அந்த நாளில் நான் மிகவும் கலங்கி நின்றேன். அப்போது அந்த கடன்காரி என்னிடம் வந்தாள். அவள் சொன்னாள் நீ இப்போது எனக்கு பணம் தரவேண்டாம். 3மாதம் கழித்து தந்தால் போதும் என்று சொன்னாள்.

10 லட்சம் கடன் அடைத்த கர்த்தர்.

மேலும் 30ம் தேதி நான் இன்னொரு நபருக்கு 10 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். நான் 1. 11. 2019 அன்று நான் இந்த கடனை அடைக்கும் படி கர்த்தர் எனக்கு கிருபை செய்தார்.

மேலும் என்னுடைய மகன் படித்து முடித்து தேவையில்லாத நட்பை வளர்த்து சுற்றித்திரிந்தான். அவனிடத்தில் ஒரு முரட்டாட்டத்தின் ஆவி இருந்தது. இதனால் குடும்பத்தில் எங்களுக்கு சமாதானம் இல்லை.

கர்த்தர் அவனிடத்தில் இருந்த அசுத்த ஆவியை அழித்து ஊழியக்காரர் மூலம் எங்களுக்கு விடுதலைத் தந்தார். என் தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

## படிக்காத மகனுக்கு கர்த்தர் செய்த அதிசயம்



எனது பெயர் ஷீலா. நாங்கள் கோத்தகிரியில் குடியிருந்து வருகிறோம். எனக்கு ஒரே மகன் பெனீஸ்.பத்தாம் வகுப்பு படித்து வந்தான்.ஆனால் நன்றாக படிக்க மாட்டான். பள்ளிக்கூடத்திற்கு செல்ல மாட்டான். எவ்வளவு சொன்னாலும் அவனுக்கு நன்றாக புரியாது. ஆளு வளர்ந்த அளவுக்கு இவனுக்கு அறிவு வளராமல் இருந்து வந்தது. ஒரு நாள் பாஸ்டரிடம் பேசிவிட்டு மகனை அழைத்து வந்து காண்பித்தேன். அவர் ஜெபித்து அறிவையும் ஆற்றலையும் கட்டளையிடுகிறார் என்று கர்த்தர் சொன்னார். மட்டுமல்லாமல் இந்த ஆண்டிலே சகல பரீட்சையிலும் ஜெயிக்கக் கட்டளையிடுவார் என்று சொன்னார். நாங்கள் மிகுதியான சந்தோசத்துடன் திரும்பினோம். கர்த்தரும் நடைப்பெற்ற எல்லா எச்சாமிலும் மாபெரும் மதிப்பெண்களையும் எடுத்து வெற்றிப் பெறச் செய்தார். என் இயேசுவுக்கே நன்றி

ஷீலா, கோத்தகிரி

# நுரையீரல் கட்டி மறைந்தது.
# அதிசய வேலை ஆச்சரியமாக கிடைத்தது.
# 41–நாளில் குவைத்தில் உயர்த்ப்பட்டேன்.



எனது பெயர் லோயிடு. எனது சொந்த ஊர் எர்ணாகுளம். நாங்கள் குடும்பமாக பாஸ்டரின் ஊழியத்தில் மாதந்தோறும் நடைபெறும் உபவாச கூட்டத்தில் கலந்து கொள்வோம். அப்பொழுது நான் வேலையில்லாமல் இருந்தேன். அப்பொழுது எங்கள் ஊரிலிருந்து டிராவல்ஸ் மூலம் போக 20 லட்சம் ரூபாய் கட்டியிருந்தேன். இரண்டு வருடமாக வேலை கிடைக்கவில்லை. மனம் நொந்து போனோம். நானும் என் வீட்டாரும் பாஸ்டருக்கு போண் செய்தோம். அப்பொழுது தீர்க்கதரிசனம் சொன்னார் நீ குவைத்தில் போவாய் என்றும், ஆனால் நீ ஏற்பாடு செய்து வைத்திருக்கிறவர் மூலம் நீ போகவும் முடியாது. ஆனால் கர்த்தர் உன்னை அழைத்து செல்வார் அது அதிசயம் எனறார். ஒருமுறை டிராவல்ஸ் அங்கிள் குவைத்தில் டூரிஸ்ட் விசாவில் அழைத்துச்சென்றார். ஆனாலும் வேலை கிடைக்கவில்லை. சோர்ந்து போனது எனது குடும்பம்.

நான் பாஸடர் சொன்னப்படி ஊருக்கே வெறுமையாய் ஜெபத்தோடு திரும்பி வந்தேன். இந்த வேளையில் சாராளைப் போல் ஒரு அழகானவள் மனைவியாக வருவாள் நிச்சயம் பண்ணிக்கொள் என்றார். வேலையில்லாத எனக்கு அநேக பெண்கள் வந்தார்கள். வேலையில்லாததை கண்டு எனக்கு அமையாமல் போனது. கடைசியில் பாஸ்டர் சொன்ன அடையாளத்தோடு நான் ஒரு மகளை கண்டுக் கொண்டேன். அவள் ஊட்டியிலிருக்கிறாள் நிச்சயம் ஆகி விட்டது. ஆனாலும் எனக்கு வெளிநாடு செல்ல முடியாமல் தடையாக இருந்தது. பாஸ்டரும் சோர்ந்து போகாமல் ஜெபித்து வந்தோம். பிறகு டிராவல்ஸ் ஆபீசில் ஒரு லேபர் விசாவில் கொண்டு செல்கிறேன் என்று சொல்லி ஒரு சாதாரண லேபர் விசா அடித்தார். அங்கு சென்றப்பின் வேறு வேலைக்கு மாறலாம் என்று நம்ப வைத்தார். மெடிக்கல் எடுத்தேன். எல்லாம் படு தோல்வி நுரையீரலில் ஏதோ ஒரு கட்டி இருந்து கண்டு பிடிக்கப் பட்டது.



மூன்று முறை நான் மெடிக்கல் எடுத்தேன். தனியாரிடமும் எடுத்தேன். எல்லாமே பெயில். அப்பொழுது என் குடும்பத்தின் மகிழ்ச்சி எல்லாமே போய் விட்டது. ஆனாலும் பாஸ்டர் ஏசாயா 43:19, 54:3 தந்து சொன்னார் நீ கடந்து போவாய். கர்த்தர் உனக்கு அற்புதம் செய்வார். நீ குடும்பத்தில் உயர்த்தப்படுவாய் என்று உற்ச்சாகப்படுத்தினார்.

மூன்று மாதத்திற்குப்பின் மறுபடியும் மெடிக்கல் எடுத்தேன். கட்டி காணாமல் போயிருந்தது. நான் பிட் ஆனேன்! அப்பொழுது பாஸ்டர் வீட்டிற்கு வந்து ஜெபித்தார். 41 நாளிலே நீ குவைத்தில் உயர்த்தப்படுவாய் என்றார். நீ தேசத்தை விட்டு கடந்து போவாய் என்றார்!

நன்றாக படித்திருக்கிறேன் ஆனால் லேபர் விசா என்பதால் மிகுந்த கவலையில்தான் இருந்தேன். தேவன் சொன்னது எனக்கு முன்பாக நடந்தது .

குவைத்தில் என்னை கூட்டி சென்ற அங்கிள் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு அது சிறையிருப்புதான். இவர் வேலை வாங்கி தருவதாக இல்லை என்றும் நான் ஏமாற்றப்பட்டிருக்கிறேன் என்று உணர்ந்து இதை வாட்சப்பில் சொன்னேன். அப்பொழுதும் மிகுந்த கிருபையோடு எனக்கு ஆண்டவர் பேசினதைச்சொன்னார்! நீ அங்கும் உயர்த்தப்படுவாய். அதிலும் 41நாளில் அது அதிசயம் என்றார்!

பாஸ்டர் ஜெபித்த ஒரு சகோதரர் குவைத்தில் இருந்தார். பாஸ்டர் எனக்கு வேலை வாங்கி தரும்படி கட்டளையிட்டார். அவர் என்னை சந்நித்தார். 18-4-2019 அவர் துணையோடு பெரிய கம்பனியில் விண்ணப்பிக்க வைத்தார்.

மூன்று இன்டர்வியூ! எல்லாவற்றிலும் வெற்றி! 18/06/2019 அன்று வேலையில் சேர எனக்கு கம்பெனி உத்தரவிட்டது. சகல பாதுகாப்பு. நல்ல சம்பளம். நல்ல போஸ்டிங். நல்ல ஃரொட்டெக்ஷன் எல்லாம் ஆச்சரியமானவர் ஆச்சரியமாய் பிரமிக்கும்படி எனக்கு அதிசயமான வேலையை தந்தார்.

நீ நம்பும் மனிதர் கைவிடலாம் ஆனாலும் என் கர்த்தர் ஒரு நாளும் கூட கைவிடவே இல்லை.

பரத்திலிருந்து ஒத்தாசை வரும் என்பார். அது போல் என்னை உருவாக்கினவர் எனக்கு இந்த வேலையை ஆயத்தப்படுத்தினார். என் இயேசுவிற்கு காலமெல்லாம் நன்றியுள்ள மகனாக வாழ்வேன்.

**லோயிடு, எர்ணாகுளம்.**

# அதிசய வேலை

# மூலச்சலில் கர்த்தர் செய்த அதிசயம்

ஒரு விசுவாச குடும்பம் இன்னொரு விசுவாசக் குடும்பத்திற்கு பயங்கரமான மந்திரவாதங்களை வைத்து நொறுக்கி மகிழ்ந்து வந்தது. தினம் தினம் சண்டை தினம் தினம் கெட்ட வார்த்தைகளை பேசி நிந்தைக்குள் வைத்திருந்தது.

சோதிக்கப் படுகிற குடும்பத்தின் கேட்டின் முன் அழுகிய முட்டைகளும் குப்பைகளும், அழுக்கு தண்ணி ஊத்தி இவர்கள் சந்தோஷப் பட்டார்கள்.

சோதிக்கப் படுகிற குடும்பத்தில் ஒரே ஒரு மகன். நன்றாக படித்திருக்கிறான். வேலையில் ஏறாத படிக்கு இவனுக்கும் மந்திரங்களைத் தொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இதனால் சகோதரனும் நொறுங்கிப் போய் எந்த வேலையும் கிடைக்காமல் விரக்தியிலிருந்தான். அடிக்கடி தற்கொலை எண்ணத்தால் அலைக்கழிக்கப் பட்டான். யாரிடமும் சிரித்துப் பேசுவதில்லை. தகப்பனார் தொலை தூரத்தில் வேலையில் அமர்ந்து இருந்த படியினால் இந்த தாய் தன் தேவனை மாத்திரம் தொழுது கொண்டிருந்தாள். இந்த வேளையில் ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் ஜெப விண்ணப்பமும் 1000 பிரதிகள் அச்சிட்டு சுவிசேஷம் அறிவிக்கும் பணிக்காக கர்த்தரை நம்பி காணிக்கையும் செலுத்தினார்கள். சங்கீதம் 50:14,15 நாகூம் 1:15-ன் படி கர்த்தர் யுத்தம் செய்ய ஆரம்பித்தார். இரவு 9 மணிக்கு கர்த்தர் என்னை அழைத்துச் சென்று இல்லத்தின் சாபம், பாவம், மந்திரங்களையும் பெயர் சொல்லி சத்துருக்களின் கிரியைகளையும் அழித்தார்.

மகனுக்கு அரசு வேலை அதிசயமாய் வரும். நீ பயப்படாதே! என் மகிமையைக் காண்பாய் என்றார். ஒரே ஒரு உபவாசக் கூட்டத்தில் மகன் கலந்து கொண்டார். ஒரு நாள் விளையாடிக் கொண்டிருக்கும் போது கால் வழுக்கி விழுந்து காலும் புரண்டது. இந்த வேளையில் காவல் துறையில் வேலை வாய்ப்பு வந்தது.

கர்த்தர் கிரியைகளில் வெளிப்பட ஆரம்பித்தார். சகல விளையாட்டுகளிலும் உடைந்த கால்களை வைத்து தேவன் தன் பெலனைக் கொடுத்து ஜெயிக்கும் படி பிருபை செய்தார். பரீட்சைகளிலும் கிரியைச் செய்தார். வெற்றியைத் தந்தார்!

தேர்விலும்- நேர்முகத் தேர்விலும் மகன் வெற்றியைக் குவித்தான். மெடிக்கல் டெஸ்ட் வந்தது! இவனுக்கு கண் பார்வையில் குறை உண்டு. நிச்;சயமாக மெடிக்கலில் அனபிட் ஆகும் என்பது தான் புதுக் கவலை! கர்த்தரோ தன்னை நம்புகிறவர்களை ஒரு நாளும் கைவிட மாட்டாரே! கண்பார்வையில் மகா அதிசயத்தைச் செய்தார். மெடிக்கலிலும் ஓ.கே.



பயிற்சிக்கு 6 மாதம் அழைக்கப் பட்டான்; காவல்துறையில் மிக உயர்ந்த பதவியை கர்த்தர் ஆயத்தப் படுத்தியிருக்கிறார். பயிற்சியை முடிக்கும் தருவாயில் மகன் இருந்து கொண்டிருக்கிறான். இயேசு சொன்னவர் செய்து முடிப்பார்! எத்தனை தடைகள் அத்தனையும் கர்த்தருக்கு முன்பாக ஒன்றுமில்லாமல் போய் விட்டது. சத்துருக்கள் மத்தியில் கர்த்தர் ஒரு பந்தியை ஆயத்தம் பண்ணினார்.

ஏழைக் குடும்பத்தை தேசத்தில் கர்த்தர் உயர்த்தியிருக்கிறார். எளியவனை புழுதியிலிருந்து தெரிந்து கொண்டு பிரபுக்கள் மத்தியில் அமரச் செய்கிறவர். அப்படியே செய்தர என் தேவனுக்கு ஸ்தோத்திரம் . கூடாதது ஒன்றுமில்லையே!

# பத்து வருட பஞ்சத்தின் குடும்ப வாழ்க்கையை கர்த்தர் அப்படியே புரட்டிப்போட்டார்

எனது பெயர் ரேகா. எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. எனது கணவர் கல்லூரியில் பணியாற்றுகிறார். நான் அவருக்கொப்பம் படிக்காதவள். +2 தான், எனது அழகில் மயங்கி திருமணம் செய்தார். ஆனால் அவருக்கு என்னோடுள்ள குடும்ப வாழ்க்கை கசந்தது. உறவு என்பதே இல்லை. பத்து வருடமாக பஞ்சத்தோடு வாழ்ந்தேன். டைவர்ஸ் வாங்கலாம் என்று நினைத்தேன். அந்த அளவுக்கு மனசுல துக்கம். என்மேல் எரிச்சலடைவார், கோபப்படவார், திட்டுவார், எப்பொழுதும் செல்போணிலிருப்பார். குழந்தைகளை கொஞ்சம் கூட கவனிக்கமாட்டார். எனக்கு வாழ்க்கை கசந்தது. இரவு எல்லாம் எனக்கு கண்ணீர். என் தாகமெல்லாம் பட்டுப்போச்சு. வறண்ட பாலை வனமானது எனது வாழ்க்கை! இந்த வேளையில் ஜீவஒளிஜெபக்கோபுரம் புக் எனக்கு கிடைத்தது. படித்தேன், கர்த்தர் செய்த அற்புதத்தை எண்ணி மகிழ்ந்தேன். ஊழியக்காரருக்கு போண் செய்தேன். அவர் ஜெபித்தார். ஆண்மையை கட்டி வைத்திருக்கும் வாதையை வெட்டிப்போடுகிறேன், நீ ஒரு பொருத்தனை செலுத்து என்று கட்டளையிட்டு நாகூம் 1:45 வாசித்து கீழ்ப்படி என்றார். நான் 1000 பிரதிகள் அச்சடிக்கக்கூடிய செலவை பொருத்தனையாக நிறைவேற்றினேன். என்னா ஆச்சரியம் என்னா ஆனந்தம் என்ன அதிசயம் ஒரே வினாடியில் பழைய வாழ்க்கை ஒழிந்தது. பஞ்சம் மாறியது. எனது கணவர் என்னோடு சிறு வாலிபரைப் போல் வருகிறார்! என்மேல் பிரியமாக இருக்கிறார், சந்தோஷப்படுத்துகிறார். என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஊழியக்காரர் சொன்னது போல் ஒரு ஆட்டுக்குட்டியைப் போல் கர்த்தர் அவனை மாற்றுவார் என்று சொல்லி ஜெபித்தார். அதன் படியே அது நடந்தது, நடந்து கொண்டிருக்கிறது. அழிந்து போன என் குடும்ப வாழ்க்கையில் மகா பெரிய அற்புதம் கர்த்தர் செய்தார்!

இப்படிக்கு, ரேகா, ஈரோடு.

# பழுதடைந்த கிட்னிகள் சொஸ்தமான அதிசயம்



எனது பெயர் சீகன். நான் மும்பையில் வசிக்கிறேன். நவம்பர் 2017-ல் எனக்கு கை, கால் வீக்கம் ஏற்பட்டது. டாக்டரிடம் சென்றபோது டாக்டர் மருந்து கொடுத்தார். ஆனால் ஒன்றும் மாற்றம் இல்லை. அந்த சூழ்நிலையில் சாக்ஸ் கூட போட முடியாமல் இருந்தேன்.

இன்கொரு டாக்டரிடம் சென்றேன். அந்த டாக்டர் புள் செக்கப் பண்ணச் சொன்னார். அப்பொமுது தான் எங்களுக்கு தெரிய வந்தது சிறுநீரக நோய். அந்த சமயத்தில் என் மனைவிக்கு துழந்தை பிறந்திருந்த காரணத்தினால் நான் ஊருக்கு வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் சிகிச்சை ஏதும் எடுக்கவில்லை.

ஊரில் இருக்கும்போது எனக்கு கை, கால் பிடிப்பு ஏற்பட்டது. அந்த வலி எனக்கு தாங்க முடியாமல் இருந்தது. 2018 ஜனவரி 14ம் தேதி மும்பை வந்து விட்டேன். முமங்பைக்கு வந்த பிறகு சிறுநீரக சம்மந்தப்பட்ட டாக்டரிடம் ஆலோசனை பெற்றேன். டாக்டர் அதற்கேற்றவாறு மருந்துகள் தந்தார். மாற்றம் ஏற்பட்டது. கைபிடிப்பு, கால் பிடிப்பு இல்லாமல் இருந்தது.

2018 பிப்ரவரி 14-ல் பயாப்ஸி டாக்கர் பண்ணினார்கள். பயாப்ஸி ரிப்போர்ட்டில் Minimal change disease என்று வந்தது.

சிறுநீரக நோயின் அறி குறி என்னவெனில் யூரினில் நுரை நுரையாக இருக்கும். அதன் மூலம் புரோட்டீன் வெளியேறி சென்று கொண்டிருந்தது. இதனால் பலவினம் ஆனேன். இதனால் அதிக தூரம் கார், பைக் ஓட்ட முடியவில்லை. இந்த நோயின் காரணத்தினால் அதிக நேரம் நிற்க முடியாமல், அதிக தூரம் நடக்க முடியாமல் இருந்தேன். தொடர்ந்து மாத்திரை சாப்பிட்டு வந்ததினால் புரோட்டீன் வெளியேறுவது குறைந்தது. அனாலும் பெலவினமாக இருந்தது.

இந்த நோய்க்கு நிரந்தர தீர்வு உண்டா என்று டாக்டர் என்னிடம் சொல்லவில்லை. மே 2018-ல் எனக்கு புரோட்டீன் வெளியேறுவது பூஜ்ஜியம் என்று வந்த காரணத்தினால் நான் மாத்திரை சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன்.

இரண்டு மாதத்தில் மீண்டும் சிறுநீரகத்தில் புரோட்டீன் வெளியேறியது. அதற்கு பிறகு மருத்துவரிடம் சென்றேன். மருத்துவர் அதே மாத்திரையை தொடர்ந்து சாப்பிடச் சொன்னார். தொடர்ந்து மாத்திரை சாப்பிட்டும் புரோட்டீன் வெளியேறுவது குறையவில்லை. குடும்பத்தில் ஒரே கவலை, கண்ணீர்.

என் வாழ்வில் எல்லாமே நன்றாக சென்றபோது திடீர் என்று இந்த நோய் வந்தது. என் வாழ்க்கையை சீர் குலைத்தது. ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு விதமான பாடுகளை அனுபவித்தேன். தேவனிடம் உயிர் பிச்சை கேட்டேன். சில பாடுகள் இதில்

1. பைக் அதிக நேரம் ஓட்டினால் கை, கால் பிடித்து விடும்.
2. சாயங்காலம் ஆனால் பேச முடியாமல் ஆகி விடும்.
3. உடம்பு முழுவதும் வீக்கம் அடைந்து இருந்தது.

ஜனவரி 2019-ல் 3 நாட்கள் நடக்க முடியாமல் இருந்தேன். இன்னொரு டாக்டரிடம் சென்றேன். அந்த டாக்டர் பரிசோதனை செய்து அதே மாத்திரையை தொடர்ந்து சாப்பிடச் சொன்னார். மாத்திரை சாப்பிட்டாலும் எந்த பயனும் இல்லை. டாக்டர் சொன்னார் Minimal change disease 6 மாதம் அல்லது 1 வருடம் மாத்திரை தொடர்ந்து சாப்பிட்டால் சரியாகி விடும் என்றுச் சொன்னார். ஆனால் உனக்கு Urin Filteration sleeping mode- ல் இருக்கிறது என்று சொன்னார்.

வீட்டில் ஒரே கண்ணீர். என் சம்பாத்தியம் முழுவதும் கடந்த ஒன்றரை வருடம் வீணாக மருத்துவத்திற்கு போய் கொண்டிருந்தது. மே 2019-ல் மும்பையில் இருந்து ஊருக்கு வந்தேன்.

ஹோமியோபதி சிகிச்சை எடுக்க நினைத்து வந்தது. என் மாமியார் மூலமாக ஊழியக்காரரிடம் 2019 மே 20-ல் நேரடியாக கடையல் ஜீவஒளி ஜெபக்கோபுரத்திற்கு வந்தேன். ஊழியக்காரர் ஜெபம் பண்ணி ஆறுதலான வார்த்தை சொன்னார்கள். ஜெப எண்ணெய் தந்தார்கள். உங்களுக்கு இந்த நோய் சரியாகி விடும் என்றுச் சொல்லி ஜுன் மாத உபவாசக் கூடுகைக்கு வரச் சொன்னார்கள்.

அதன் படி குடும்பமாக ஜுன் மாத உபவாசக் கூடுகைக்கு கலந்து கொண்டேன். அந்த நாளில் ஐயா எனக்கு தீர்க்கத்தரிசன வார்த்தை சொல்லி ஜெபித்தார்கள். விடுதலை பெற்றேன். ஊழியக்காரர் எனக்காக ஜெபம் பண்ணி மும்பையில் சேர்ந்த உடன் செக்கப் பண்ணச் சொன்னார்கள். அதன்படி செக்கப் பண்ணிப் பார்த்ததில் ரிப்போர்ட் நார்மல் ஆக வந்தது. எல்லா துதியும் கனமும் மகிமையும் அவருக்கே ஆமேன்.

ரீகன், மும்பை.

# குழந்தைக்கு அதிசய விடுதலை



எனது பேரனுக்கு பிறந்த நாள் முதற்கொண்டு பிட்ஸ் வியாதி. ஒரு மாதத்திற்கு இரண்டு முறை ஐ.சியூவில் இருப்பான். இதனால் என் குடும்பமே துக்கப்பட்டு நின்றது. இந்த வேதனையை பிரதரிடம் சொல்லி ஜெபித்தேன். அவரும் ஜெபித்தார். கர்த்தர் மகா பெரிய அதிசய விடுதலை தந்து இந்நாள் வரைக்கும் மகா பெரிய அதிசயத்தை செய்தார். கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் செய்த இந்த அதிசயத்தை வேலூர் மாவட்டதிலிருந்து உங்கள் முன் வந்து சாட்சியைப் பகர்கிறேன்.

சந்திரா ஜீவராஜ், வேலூர்.

# வெளிநாட்டு சகோதரிக்கு கர்த்தர் வாக்குப் பண்ணி கொடுத்த அதிசய கற்பம்



எனது மகள் திருமணமாகி இரண்டு வருடமாகியும் பிள்ளையில்லை. வாழ்க்கைப் பட்டுப்போன குடும்பத்தில் ஏற்கெனவே வாரிசு இல்லாமல் ஒரு மகன் இருந்து கொண்டு இருக்கிறான்.

இந்த வேளையில் ஜீவஒளி புத்தகத்தைப் பார்த்த நான் பிள்ளைச் செல்வத்திற்காக ஊழியக்காரருக்கு போண் செய்து ஜெபித்தேன். மாதத்தின் முதல் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சொன்னார். கூட்டத்தின் துவக்கத்திலேயே வெளிநாட்டில் வேலை செய்கிற ஒரு சகோதரிக்கு கறுப்பு நிறத்தில் ஒரு பிள்ளையும் சகப்பு நிறத்தில் ஒரு பிள்ளையும் கட்டளையிடுகிறேன் என்று சொன்னார்கள். உண்மையிலேயே என் மகளும் மருமகனும் இவ்விதமாகத் தான் இருந்தார்கள்.

இரண்டு பேரும் இரண்டு இடத்தில் இருந்தார்கள். என் மகளைப் பார்ப்பதற்கு 4 மணி நேரம் விமானப் பயணம் செய்து என் மருமகன் வாரம்தோறும் வருவார்.

இந்த வாக்குத் தத்தத்தைக் கேட்டு என் மகள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஊழியக்காரரிடம் ஜெபித்தாள். இந்த மாதமே கர்த்தர் அற்புதம் செய்யப் போகிறார் என்று மகளிடத்திலும் வாக்குப் பண்ணினார்.

ஆனால் அந்த மாதம் அற்புதம் நடக்கவில்லை. மகள் மனமுடைந்து மறுபடியும் ஊழியக்காரரை தொடர்பு கொண்டாள். அப்பொழுது ஊழியக்காரர் கேட்டார் உனக்கு மருந்தால் குழந்தை வேண்டுமா? மகத்துவரால் குழந்தை வேண்டுமா? எனக் கேட்டார். என் மகள் அதிர்ந்து போனாள்.

ஏனெனில் 6 மாதமாக குழந்தைக்காக மருந்து எடுத்துக் கொண்டிரந்தாள். மருந்து முடிய இனியும் 2 மாதம் இருக்கிறது. மருந்தை தூக்கியெறி கர்த்தரின் மகிமையைக் காண்பாய் என்று ஊழியக்காரர் கோபத்தில் சொன்னார். அப்படியே மகள் கீழ்ப்படிந்தாள். மரந்தகளை தூக்கியெறிந்தாள்.

தேவன் வெளிப் படுத்தியிருந்த குறிப்பிட்ட நாளில் கணவன் மனைவியாக வாழ கர்த்தர் கட்டளையிட்டார். அதே மாதத்தில் என் மகள் கற்பமானாள். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. சொல்லிச் செய்த எங்கள் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. என் மகள் குழந்தையோடு வந்து சாட்சி சொல்வார்கள்.

பெயர் வெளியிட விரும்பாத சகோதரி.

இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?



# நீ பாவச்சிறையில்! கர்த்தரே உன்னை கொன்று போடுவார்

**அவள் மனந்திருந்தும் படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்; தன் வேசி மார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை. (வெளி 2:21)**

**இஅதா, நான் அவளை கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபச்சாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும் பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி, (வெளி 2:22)**

**அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்; அப்பொழுது நானே உள்ளந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படி பலனளிப்பேன். (வெளி 2:23)**

பிரியமானவர்களே!

இன்றைய கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் எடுத்தே அதிக பாவம் செய்கிறார்கள் என்று கர்த்தர் வெளிப்படுத்துகிறார். நீங்கள் மெய்யாகவே ஞானஸ்நானம் எடுக்கவில்லை. உன்னுடைய ஞானஸ்நானம் பொய்! பிசாசுகளின் தூண்டுதலின் பேரில் அந்நிய பாஷை பேச வேண்டும் என்ற ஆர்வத்தாலும் நீ ஞானஸ்நானம் எடுக்கிறாய். நீதான் பாவியிலும் பெரும் பாவி! நீ பாவத்தை விட்டபிறகு தான் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

எடுக்கிறாயே நீ! எப்படி எடுத்தாய்? உத்தமத்தோடேயா? பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொண்ட பிறகா ஞானஸ்நானம் எடுக்கிறாய்? பொய் பித்தலாட்டம் தேவர்களின் கோரப்பிடியில் நீ சிக்கி ஞானஸ்நானம் எடுக்கிறாய்? ஞானஸ்நானம் எடுத்தா பரலோகம் போகலாம் என்று ஞானஸ்நானம் எடுக்கிறாய்?

நீ பாவத்தை விட்டாலொழிய உனக்கு பரலோகம் கிடைக்கவே கிடைக்காது! உனக்கெல்லாம் இரட்டிப்பான நரகமே தவிர வேறொன்றுமில்லை. ஊழியக்காரனே பொய் அபிஷேகத்தில் நிற்பான். அவன் சொல்லி கை தூக்கினதும் ஞதனஸ்நானம் தருகிறான் என்றால் அவன் உன்னை அகால பாதாளத்தில் தள்ளி விடுகிறான்! இப்படிப் பட்டவர்களை எல்லாம் நம்பி ஞானஸ்நானம் எடுத்தாயானால் உனக்கு நரகமே வைக்கப் படுகிறது.

நி மனந்திருந்தி பாவத்தை விட்டுத் தொலைத்து உன் தேவனுக்கு பயந்து பாவம் செய்யாமல் நியாயப் பிரமாணத்தைக் கண்டு பயந்து நீ அதை பின்பற்றி தசமபாகத்திலும், பொருத்தனைகளிலும் உண்மையாயிருந்து உன் பெற்றோருக்கும் உன் புருஷனுக்கும் உன் மனைவிக்கும் உத்தமத்தோடு நடப்பாயானால், உனக்கு முன் வரும் பாவங்களையும், இச்சைகளையும் மேற்கொண்டு, ஒருக்காலும் தேவர்களை பின்பற்றாமலும்–

பின்பற்றியிருந்தால்

யாத் 30: 15, 16 ன் பலி பாவபரிகாரம் செலுத்திய பின்பு சாத்தானை ஜெயித்து பின்பு ஞானஸ்நானம் எடு! இதற்கு பெயர்தான் ஞானஸ்நானம்.

**உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி பண்ணும்படி நீங்கள் கர்த்தருக்கு காணிக்கை செலு;த்தும்போது, ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம்.**

**அந்தப் பாவிர்த்திப் பணத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்கு கொடுப்பாயாக. அது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாயிருக்கும் என்றார்.**

ஜாக்கிரதை! ஆண்டவர் சொல்கிறார் அனேக ஊழியக்காரர்கள் பெற்றிருக்கிற ஞானஸ்நானமே செல்லாது! அப்படியானால் நீ பெற்ற ஞானஸ்நானம் செல்லுமா?

நீ ஞானஸ்நானம் எடுத்தபிறகு ஒரு பாவமும் செய்யவில்லை என்றால் நீ எடுத்த ஞானஸ்நானம் செல்லும்! நீ பாவம் செய்யவில்லையா? உன் முகத்தை கண்ணாடியில் போய் பாரு!

உன்னை பிராண்டினவன் எத்தனை பேர் ? உன்னைத் தொட்டவன் எத்தனை பேர்? புருஷன் இருந்த பின் அவிழ்த்து போட்டது எத்தனை பேரிடத்தில்?

அழகான மனைவி இருந்தும் இச்சையோடே இருக்கிறவர்கள் ஊழியக்காரர்கள் உட்பட எத்தனைபேர்?

யார் பெற்ற ஞானஸ்நானம் உண்மையாயிருக்கிறது நீயே யோசித்துப் பார்! ஞானஸ்நானம் எடுத்த பின்பு தான் அனேகர் பாவத்தை அதிகமாக செய்து வருகிறார்கள் என்பது தான் உண்மை?

ஞானஸ்நானம் அவ்வளவு சீப்பாக போய் விட்டதா? உனக்கு? உனக்கு ஆண்டவரைக் குறித்து என்ன பயம் இருக்கு? ஒன்றுமே இல்லை!

என் இயேசு நீ உடுத்துவிட்டு அவிழ்த்துப் போடக் கூடிய ஆடையா? உன்னை கொன்று போடுவார் எப்படி?

**வெள்ளியையும் பித்தளையையும் இரும்பையும் ஈயத்தையும் தகரத்தையும் அக்கினியில் ஊதி உருக்குவ தற்காகக் குகைக்குள் சேர்க்கிறது போல, நான் என் கோபத்தினாலும் என் உக்கிரகத்தினாலும் உங்களைச் சேர்த்து வைத்து உருக்குவேன். (எசே 22:20)**

**நான் உங்களைக் கூட்டி, என் கோபமாகிய அக்கினியை உங்கள் மேல் ஊதுவேன்; அதற்குள்ளே நீங்கள் உருகுவீர்கள். (எசே 22:21)**

**குகைக்குள் வெள்ளி உருகுமாப் போல, நீங்கள் அதற்குள் உருகுவீர்கள்; அப்பொழுது கர்த்தராகிய நான் என் உக்கிரத்தை உங்கள்மேல் ஊற்றிவிட்டேன் என்று அறிந்து கொள்வீர்கள் என்றார். (எசேக் 22:22)**

பச்சைக்கு பாவம் செய்து பச்சைக்கு நீலப் படங்களையும் பார்த்து மகிழ்ந்து சுகித்திருந்து விடியற்காலை எழும்பி நீ ஸ்தோத்திரபலி இட்டாலும் பாடி துதித்தாலும் உனக்குள்ளே கர்த்தர் கேன்சர் ஆவிகளை அனுப்புவார். நீ நிச்சயம் அழிந்தே போவாய்! இனியும் நீ ஆண்டவரை ஏமாற்றாதே. உருப்படவே மாட்டாய்! ஜாக்கிரதை!

கடைசி காலத்தில் கடைசி நிமிடத்தில் இருக்கிறாய். மனந்திருந்திவிடு!



இல்லையேல்

**அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக் காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும். (எரே 31:30)**

**மகா கொடிய வியாதிகளால் சாவார்கள்; அவர்களுக்காகப் புலம்புவாரும், அவர்களை அடக்கம் பண்ணுவாருமில்லை, நிலத்தின்மேல் எருவாவார்கள்; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் மடிந்து போவார்கள்; அவர்களுடைய பிரேதம் ஆகாசத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும். (எரே 16:4)**

**பிதாக்களும் பிள்ளைகளுமாகிய அவர்களை ஒருவர் மேல் ஒருவர் மோதி விழும்படிப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவதுமில்லை, இரங்குவதுமில்லையென்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். (எரே 13:14)**

**இதோ, கோராவாரிக் காற்றாகிய கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடித்து, துன்மார்க்கருடைய தலையின்மேல் மோதும். (எரே 30:23)**

நீ ஜாக்கிரதையாய் இருந்து கடந்த காலத்தைப் பார். உன் பாவப் புழுக்கள் எத்தனை என்று உங்களுக்கே புரியும்.

**மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். (ரோமர் 8:13)**

**மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (எசே 18:32)**

**நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின் படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப் படுவதில்லை. அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான். (எசே 18:24)**

உன் வீட்டில் கொள்ளை நோய் இருக்கிறது என்றால் அது பிசாசினால் வந்ததல்ல! உன் ஆண்டவர் அனுப்பியது. ஆனாலும் நீ மனந்திருந்த மாட்டாயே! உன் பாவத்தைக் குறித்து வெளியிட்டால் நான் அந்நியபாஷை பேசுகிறவள் என்று சொல்லி மார்தட்டி பேசுகிற சுபாவம் உடையவர்களை கர்த்தர் சோதிக்கும் பொருட்டு கொள்ளிவாய் சர்ப்பங்களை அனுப்பி உன்னை அழிப்பார்.

**மெய்யாய், இதோ, தடை கட்டப்படாத சர்ப்பங்களையும், கட்டு விரியன்களையும் உங்களுக்குள் அனுப்புகிறேன், அவைகள் உங்களைக் கடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 8:17)**

நீ பாவம் செய்ய சிலுவை உனக்கு ஒரு அடையாளமா?

நிறைய ஊழியக்காரங்க உங்களை ஏமாற்றுகிறார்கள். உன் பாவத்தை இயேசு கல்வாரி சிலுவையில் சுமந்து தீர்த்தார் என்கிறார்கள்?

உன் சாபத்தையெல்லாம் கல்வாரியில் சுமந்து கொண்டார் என்று சொல்லுகிறார்கள்?

உன் காயங்களையெல்லாம் அவர் காயத்தால் உன்னை சொஸ்தமாக்கினார்

என்று சொல்லுகிறார்கள்! நீயும் நம்புகிறாய் உன் மூளைக்கு அறிவு வேண்டாமா!

நீ நாளைக்கு ஒரு பெண்ணிடம் தவறாய் நடந்து கொள்வாய். அடுத்த மாதத்தில் நீ புருஷனுக்கு துரோகம் செய்வாய்! நீ விக்கிரகத்திற்கு ஒரு நாள் பலியிடுவாய். இவைகளையெல்லாம் செய்துவிட்டு நீ சொல்வாய்!

எப்படி என் பாவங்களையெல்லாம் என்இயேசு சுமந்தார் என்று சொல்லி தப்பிப் போவதா கிறிஸ்தவம்? பாவத்துக்கு மேல் பாவம் செய்கிறாய்?

நீ பாவம் செய்ய சிலுவை ஒரு லைசன்ஸ்சா? நீ பாவம் செய்யாமல் இருக்க தடுக்கிற சிலுவை? நீ பாவம் செய்தால் கொன்று போடுகிற சிலுவை! நீ நியாயப் பிரமாணத்தை கைக்கொண்டு வாழ உனக்கு போதிக்கிற சிலுவை! நீ பாவம் செய்யாமல் வாழவைத்து உன்னை பரலோகம் கொண்டு போகிற சிலுவை! நீ பாவம் செய்தால் உன்னை நரகத்திற்கு தள்ளிவிடுகிற சிலுவை! நீ விக்கிரகத்தை தேடினால்- இந்த பாவத்திற்கும் அவர் சுமந்து தீர்த்தாரா?

நீ சாகும் வரைக்கும் மந்திரத்தையும் குறியையும், கள்ள தீர்க்கதரிசனத்தையும் கேட்பாய். இந்த பாவங்களுக்கும் சிலுவையில் மரித்தாரா?

சகல பாவத்தையும் அவர் சுமந்து தீர்த்தார் என்றால் சரியா? சரி என்றால் இயேசுவைத் தேடுகிறவர்கள் எல்லோரும் பரலோகத்தில் சென்று விடுவார்களே!

அப்படியானால் ஒருத்தருக்கும் நரகமே இல்லை! ஞானஸ்நானம் எடுத்தவர்கள் எல்லாரும் பரலோகத்திற்கு சென்று விடுவார்களா? நெவர்.

நீ ஞாஸ்நானம் என்ற பெயரில் மொட்டையடித்தாலும், வெள்ளை சட்டை போட்டு காலரை வெட்டினாலும், விதவிதமா? கலர் கலரா கோட்டுகள் போட்டாலும் நகைகளை கழற்றினாலும் நீ பரலோகத்தில் போவதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

பரலோகத்தில் பிரவேசிப்பவன் கீழ்க்கண்ட காரியங்களுக்கு கீழ்ப்படிவான்.

1; நியாயப்பிரமாணத்தை அப்படியே பின்பற்றுவார்கள்.

2. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்று ஒதுக்காதவன்.

3. இச்சைப்பாவம் இல்லாதவன்.

4. பொய் சொல்லாதவன், கொள்ளையிடாதவன்.

5. மனைவிக்கும் புருஷனுக்கும் துரோகம் செய்யாதவன்.

6. கர்த்தருக்கு சொல்லப்பட்ட காணிக்கைகளை செலுத்துகிறவன்.

7. பொருத்தனைகளை செலுத்துகிறவர்கள்.

8. தன் தாயையும் தகப்பனையும் சகோதரனையும் கனப்படுத்துகிறவர்கள்.

9. அன்பு செய்கிறவன்.

10. விக்கிரகங்களுக்கும் அதன் கிரியைகளுக்கும் கீழ்ப்படியாதவன்.

11.மூழ்கி ஸ்நானம் எடுக்கிறவன்

12. பரிசுத்தமுள்ளவன், இயேசுவைக் கண்டு பயப்படுபவன், உலக கட்டளைகளைக் கண்டு பயப்படாதவன், அந்திக்கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாதவன், இயேசுவின் சோதனைகளுக்கு உட்படுத்தப் படுபவன், கர்த்தரின் கட்டளைகளையும் நியமங்களையும் கைக்கொள்பவன்.

உபாகமம் 28:1ன் படி நடக்காதவன் சபிக்கப்பட்டவன்.

உனக்கு எத்தனை மனைவி எத்தனை புருஷர்கள்

உன்னை நீ சோதித்துப்பார்! நீ தொட்ட பெண்கள் எத்தனை என்று கணக்குப் போட்டுப்பார்! திருமணத்திற்கும் முன்னும் பின்பும்? அப்படியானால் இருக்கிற மனைவி முதல் மனைவியா?

சகோதரியே உன்னை தொட்டவர்களின் எண்ணிக்கையை பரிசோதித்துப் பார்த்தாயா? உன் கடந்த



காலத்திலும் இப்போது இருக்கிற காலத்திலும் கணக்கு போட்டுப்பார். உன் புருஷன் எத்தனை என்று புரியும்.

முதல்ல தொட்டவன் தான் உனக்கு புருஷன்! ஆனால் உன் வாழ்க்கையை பரிசோதித்துப் பார்! நீ செய்து வரும் துரோகம் உனக்குப் புரியும். அப்படியானால் நீ புருஷன் என்ற பெயரில் ஒருவனை வைத்திருக்கிறாய்.

நீ மனைவி என்ற பெயரில் திருமணம் என்ற பெயரில் ஒருத்தியை வைத்திருக்கிறாய்... இது தான் சின்ன வீடு.

சகோதரனே! சகோதரியே உன் பாவகணக்கு நீ மறந்து போகலாம். உன் தேவன் உன்னை மறந்து போவதுமில்லை, உன் பாவங்களையும் மறந்து போவதில்லை ஒருநாளும்.

ஆமோஸ் 9:10, ஓசியா 4:7, ஓசியா 5:4, ஓசியா 5:10, எரே 34:18, நாகூம் 3:5, ஆபகூக் 2:16,, நாகூம் 3:6, சங் 7:11, 12, 13, 14 எரேமி 13:26 லேவி 26:21 எரே 16:17, எசேக் 25:17, எரேமி 29:18, 19, எரேமி 30:23 எரேமி 16:4

மேற்கண்ட இந்த வசனங்களின்படி உன்னை கொடுமையாய் தண்டிப்பார்! என்பதனையும் மறந்து விடாதே!.

பாவத்தை தூண்டுகிற சாத்தானை நீ அழிக்க முன்வராவிட்டால் உன்னை கர்த்தர் அழிப்பார்!

ஞானஸ்நானம் பாவத்திற்கு பாதுகாப்பல்ல! நீ ஞானஸ்நானம் எடுத்தாலும் உன் பழைய பாவங்களுக்கு தக்கதாய் இரட்டிப்பாய் ஏழத்தனையாய் வாதிப்பார்.

புறஜாதி மக்களுக்கு வராத கொள்ளை வியாதிகள் எல்லாம் ஏன் கிறிஸ்தவர்களுக்கு வருகிறது? நீ சரியில்லை! என்பது தான் உண்மை. நீ இயேசுவை ஏற்றுக் கொண்டாய் இது மட்டும் தான் உண்மை. அவரது கட்டளைகளைக் கைக்கொள்ளாதவன் கிறிஸ்தவனே அல்ல! நியாயத்தீர்ப்பில் நீ பிசாசு ஓட்டினேன்! உமது நாமத்தை அறிவித்தேன் என்று சொல்வாய்! அன்று என் இயேசு சொல்வார்! நான் உன்னை அறியேன்....

**முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன். (வெளி 4:7)**

**அவைகளுடைய முகங்களின் சாயலாவது, வலது பக்கத்தில் நாலும் மனுஷ முகமம் சிங்கமுகமும், இடது பக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிரந்தன. (எசேக் 1:10)**

இந்த வசனத்தின் படி தான் நம் தேவன் இருக்கிறார். இச்சையோடு பார்த்தாலே பாவம் என்றார் இயேசு. நீ படுத்தாலும் பாவமில்லை என்கிறாய்! தேவை என்கிறாய்.

படுபாவி! உன்னை செத்த பிறகா நரகத்தில் இயேசு போடுவார் என்று நினைக்கிறாய். அது தவறு! இந்த ஜென்மத்திலே அனேக நரக நெருப்புகள் வரும்.

ஏன்? உன் மனைவியே வாடா நாயே போடா நாயே என்பாள்! ஏனென்று கேட்டால் உன்னை செருப்பாலே அடிப்பாள்.... அடி வாங்கிவிட்டு கூனி குறுகி நிற்கிறாயே வெட்கமா தெரியவில்லையா?

மனைவிமார்களும், புருஷர்களும் அனேகருக்கு வாதையும் பேயுமாகத் தெரிகிறார்களே! ஒருநாள் சந்தோஷமா இருக்க முடிகிறதா? சந்தோஷத்தைப் பார்த்தே ரொம்ப நாள் ஆச்சே என்றுச் சொல்லி குடித்து குடித்து சாகிறாயே! நீ செய்த பாவம்!

உன் கண்களுக்கு முன்னே மனைவி பிறரிடம் சென்றுவிட்டு... யோவ் வேணும்னா அடங்கி கிட! இல்ல போலீஸ்ல புடிச்சு கொடுப்பேன் என மிரட்டுகிறாளே.....

உன்னால் என்ன செய்ய முடிகிறது?

நிறை புருஷர்கள் மனைவிகளுக்கு சேவை செய்கிற அடிமைகளாக கிடக்கிறார்களே.... நீ செய்த பாவம்.

நிறைய ஸ்திரீகள் புருஷர்களின் அன்புக்காக தேவனிடத்தில் அழுது கொட்டுகிறார்களே..... நாகர்கோவிலில் ஒரு சகோதரி சொல்கிறாள் 14 வருடமாச்சு! என்னை அவர் தொட்டு என்கிறாள். அவர் என்னிடம் அன்பாயிருக்க ஜெபியுங்கள் என்கிறாள்.

என்னத்தை சொல்லி நான் அழ.... அனேக ஸ்திரீகள் என்னிடத்தில் அன்புக்கு பதிலாக கணவன் குறட்டை விட்டு தூங்குகிறான் என கதறி கதறி அழுகிறார்கள்!

என் தேவனே பெண்களின் வாழ்க்கை இப்படி அழுகிறார்களே என்று நானும் கதறி அழுகிறேன் ஜெபத்தில். பெண்களின் வாழ்க்கையை சாத்தான் பட்டமரமாக்கி விட்டானே....

ஏதேன் தோட்டத்தில் நுழைந்த கொடிய சாத்தான் ஆகிய சற்பம் இப்பொழுது உங்கள் இருதயத்தில் நுழைந்து தேவனைப்போல் கிரியைகளை நடப்பிக்கிறான் எச்சரிக்கையாயிருங்கள்.

**எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. (2தெச 2:3)**

**அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப் படுவதெதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ அவையெல்லா வற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். (2தெச 2:4)**

பாவத்தில் வாழ வைக்கிற இவன்தான் இந்த சற்ப சாத்தான் தான் குற்றவாளி.

இவனை கர்த்தர் அழிப்பார். ஆகவே பயப்படாமலும் திகிலடையாமலும் இருங்கள். இந்த சாத்தானை கீழ்க்கண்ட வசனங்களின் படி தான் அழிக்க முடியும்.

**இயேசு சொன்னார் இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார். (மத் 17:21)**

சோ இந்த ஜாதி பிசாசுகள் இயேசு என்ற பெயரைச் சொன்னாலும் போகாது. கூடவே உபவாசமும் ஜெபமும் தேவை.

இதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்றால் கீழே தேவனால் சொல்லப்படுவதை நான் உங்களுக்கு எழுதுகிறேன்!

ஜாதி பிசாசுகளை துரத்த உபவாச ஜெபம், தேவர்களை பொருத்தனை செலுத்தி ஜெபித்தால் மட்டுமே உன்னை விட்டு அகன்று போகும். மற்றபடி போகவும் போகாது. நீ எப்படி ஜெபித்தாலும் கர்த்தர் விடுதலை தரமாட்டார்.

ஐந்து வகை ஜெபங்கள்

1. விண்ணப்ப ஜெபம், 2. கண்ணீர் ஜெபம், 3. ஆராதனை ஜெபம், 4. உபவாச ஜெபம், 5. பொருத்தனை ஜெபம்

நீ ஒரு வியாதி நீங்கி பிழைக்க இந்த 4 வகையான ஜெபத்தை நீ ஏரெடுத்தும் அதில் நீ விடுதலையாக்கப் படவில்லை என்றால் நீ பிரவேசிக்க வேண்டிய ஜெபம் பொருத்தனை ஜெபம்.

அன்னாள் எப்படி பிள்ளை பெற்றுக் கொண்டாள்?



**அன்னாளை சிநேகித்த படியினால், அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான்; கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார். (1சாமு 1:5)**

**கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்த படியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப் படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள். (1சாமு 1:6)**

**சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன்; அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத் தனை பண்ணினாள். (1சாமு 1:11)**

பொருத்தனையை நிறைவேற்றுவாள் என்று அறிந்து தேவன் பிள்ளையைக் கொடுத்தார்.

நீயும் பொருத்தனையை அன்னாள் மாதிரி நிறைவேற்றுவேன் என்று சொல்லி எனக்கொரு பிள்ளை கிடைத்தால் ஊழியத்திற்கு அனுப்புவேன் என்றுச் சொல்லி மெட்ரிக்குலேசன் ஸ்கூலுக்கு அனுப்பி படிக்க வைச்சு பிள்ளையை வைத்து வேலை வாங்கி கொடுத்து மாதச்சம்பளம் பெற்று அதை எண்ணி எண்ணி ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் சொல்லவாய்.

ஊழியத்திற்கு அனுப்பு என்றால் பிள்ளை சம்பாதிக்கட்டும் என்று சொல்லி மறுதலிப்பாய். இப்படிப் பட்டவர்களை கர்த்தர் புடமிடப் போகிறார்.

பிள்ளை பிரசவிப்பதற்கு தடையே கர்த்தரின் சாபம்.

**அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்; அவன் உன்னை ஆண்டு கொள்வான் என்றார். (ஆதி 3:16)**

இந்த சாபம் நீங்கி வாழ பொருத்தனை செலுத்தி தான் பிள்ளையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி. (சங் 50:14)**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப் படுத்துவாய். (சங் 50:15)**

**என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவிப்பேன். (எரே 33:3)**

அனேக ஸ்திரீகளுக்கு சற்பத்தால் சாபம் உண்டு. இந்த சற்பம் பிள்ளை பேற்றை தடுக்கும். இதனை அழிக்க

**பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்; அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டு வரக் கடவர்கள். (சங் 76:11)**

**பிரபுக்களின் ஆவியை**

**அடக்குவார்; பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர். (சங் 76:12)**

இந்த வசனத்தின் படி பொருத்தனை செலுத்துங்கள்.

உன் வீட்டில் வாதை நடமாடகிறதா? பிசாசுத் தொல்லையா?

**கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார். (சங் 95:3)**

**இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப் பட்டான். (நாகூம் 1:15)**

இந்த வசனங்களின் படி பொருத்தனை நிறைவேற்ற வேண்டும்.

நீ ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா? முதலில் உன்னை நீ சுத்திகரிக்க வேண்டும்.

**நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன், என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். (சங் 51:7)**

**உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி பண்ணும்படி நீங்கள் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தும்போது, ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம். (யாத் 30:15)**

**அந்தப் பாவநிவிர்த்திப் பணத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்கு கொடுப்பாயாக. அது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாயிருக்கும் என்றார். (யாத் 30:16)**

இதன்படி நீ கர்த்தருடைய சுவிசேஷ திருப்பணிகளுக்கு கட்டாயம் காணிக்கை கர்த்தர் சொல்லகிறபடி நீ செய்ய வேண்டும்.

## உனக்கு ஆசீர்வாதம் வீட்டில் தங்க வேண்டுமா?

**உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு; (நீதி 3:9)**

**அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். (நீதி 3:10)**

**சகலவித முதற்கனிகளில் எல்லாம் முந்தின பலனும், நீங்கள் காணிக்கையாய்ச் செலுத்தும் எல்லா விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக . உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும் படிக்கு நீங்கள் பிசைந்த மாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள். (எசேக் 44:30)**

**என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள்**



**கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (1சாமு 2:30)**

## நீ பலுகி பெருக வேண்டுமா?

**என் சந்நிதியில் வெறுங் கையாய் வரவேண்டாம். (யாத் 23:15)**

**உன் தானியத்திலும் உன் திராட்ச ரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்து கொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும் உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்க வேண்டாம். (உபாக 12:17)**

**உங்களுக்கு உண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையைக் கொண்டு வந்து செலுத்துங்கள்; மனமுள்ளவன் எவனோ, அவன் அதைக் கொண்டுவரட்டும்; (யாத் 35:5)**

## நீ சரியில்லாவிட்டால் உனக்கு வரக்கூடியது

**அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும் படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும் படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார். (மல்கியா 3:3)**

**அப்பொழுது பூர்வநாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்ததுபோல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். (மல்கியா 3:4)**

## நீ கீழ்ப்படிந்தால்

**அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவஆவியினாலே அவனை நிரப்பினார். (யாத் 35:33)**

**கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே தேவர்களுக்கு பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக் கடவன். (யாத் 22:20).**

ஆகவே நீ கர்த்தருக்கு மாத்திரம் கீழ்ப்படிந்து கர்த்தருக்கு உன் பொருத்தனைகளை செலுத்தி தேவனை நீ மகிமைப் படுத்து. நீ நேர்ந்து கொண்ட பொருத்தனை களையும் நீ கர்த்தரை ஏமாற்றின பொருத்தனைகளையும் இனி உன்னுடைய சகல காரியங்களையும் வாய்க்கச் செய்யும் படி சங்கீதம் 50:14,15-ன் படி இந்த புத்தக ஊழியத்திற்கு நீ செலுத்தி தீர்ப்பாயாக. குறைந்த பட்சம் 1000 பிரதிகளாவது நீ அச்சிட்டு உன் தேசத்தில் நீ கொடு. பரலோகத்திற்கு தேவன் சென்றபோது சகல தேசத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிக்க சொன்னார். நீயும் அதைச் செய்யலாமே. உன் ஜென்மபாவம் நீங்கி நீ பிழைப்பாய். உன் இல்லத்தில் கிரியை செய்கிற சகல பிசாசுகளையும் நாகூம் 1:15-ன் படி அழிப்பார். இந்த புத்தக சுவிசேஷபணி சகல இடங்களுக்கும் கடந்து செல்ல உங்கள் பொருத்தனைகளை இந்த ஊழியத்திற்கு செலுத்துங்கள்..

# அதிசய திருமணமும் பயத்தின் ஆவியிலிருந்தும் விடுதலை



நான் செறுதிக்கோணம் குலசேகரத்திலிருந்து வருகிறேன். 40 வருடங்களாக நான் ஆவிக்குரிய சபை (சி.பி.எம்) சென்று வருகிறேன். ஆனாலும் எனக்குள்ளே பயங்கரமான பயமுறுத்தும் ஆவி இருந்து வந்தது. இரவில் தூக்கமே இல்லை மற்றும் கால் வலியும் இருந்து வந்தது. எனது மகள் அரசு வேலையிலும் இருக்கிறாள். ஆனால் மாப்பிள்ளை அமையாது. நல்ல வசதியில் இருக்கிறோம்.

ஆனால் வீட்டிலே உள்ள் போராட்டத்தில் மிகவும் கலங்கி அழுது வந்தேன். எந்த திருமணமும் வந்தாலும் என் வீட்டுக்காரருக்கு பிடிக்காது. அவர் எஸ்.பி ஆபீசில் வேலை பார்த்து ரிட்டயர்டு ஆனவர். நாங்கள் அனேக பாஸ்டர்களை பயன்படுத்தி ஜெபித்தோம். ஒரு பிரயோஜனமும் இல்லை. வெறுத்துப் போய் அமர்ந்திருந்த வேளையில் ஜீவஒளி ஜெபக்கோபுரம் புக் ஒன்று கிடைத்தது. நான் அதைப் படித்துப் பார்த்தேன்.

உடனே நான் ஊழியக்காரரை சந்தித்தேன். அப்பொழுது ஊழியக்காரன் ஜெபித்துச் சொன்னார், நாகூம் 1:15 ன் படி நீ கீழ்ப்படிவாயானால் உனக்குள் இருக்கிற பயத்தின் ஆவியை அழித்து உன் மகளுக்கு திருமணத்தை கட்டளையிடுவேன் என்றுச் சொல்லி வீட்டிலே நடமாடுகிற அசுத்த ஆவிகளை பார்த்து பார்த்து சொன்னார். நான் விசுவாசித்தேன், ஏன் என்றால் பாஸ்டர் சொன்ன பிசாசுகளை நானும் பார்த்திருக்கிறேன். ஆனாலும் நான் ஆயிரம் புக்கின் பிரின்டிங் காசை பொருத்தனையாகச் செலுத்தினேன். அந்த மாத்திரத்திலே எனக்குள்ளிருந்த பயத்தின் ஆவியை கர்த்தர் அழித்து எனக்குள்ளே சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தந்தார். 10 வருடங்களுக்கு மேலாக என் மகள் டாக்டர் ஆக இருக்கிறாள்.

எப்படி பார்த்தாலும் திருமணம் மட்டும் அமையாது. சற்பத்தின் தோஷத்தை கர்த்தர் அழித்து மகளுக்கு திருமணத்தை அமைத்து தந்தார். என் தேவன் மகாபெரிய அதிசயங்களை எனக்குச் செய்தார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

குலசேகரம்,



# முடங்கி கிடந்த கால்களும் நடந்தன 35 வருடமாக இருந்த இருமல் நீங்கியது



எனது பெயர் ஜாண் பிரிட்டோ, நாகர்கோவில். எனக்கு ஸ்ரோக் ஏற்பட்டு இரண்டு கால்களும் நடக்க முடியாத படிக்கு செயல் இழந்தது. அப்போது 475 இருந்தது.

நான் இயேசுவை நம்பி பிரதருக்கு போன் பண்ணி ஜெபித்தேன். அவர் ஜெபித்து செயலிழந்த கால்கள் நடக்கும் தேவன் கட்டுகளை உடைத்தார் என்றார். ஜீவஒளி ஜெபக்கோபுரத்திற்கு நடந்து வருவீர்கள் என்றார். மருத்துவ மனையில் ஒரு நள்ளிரவில் எனக்கு எழும்பி நடக்கணும் போல் இருந்தது. நான் எழும்பி நின்றேன். நடந்தேன். இன்று ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் மாடிபடியேறி வந்து உங்கள் முன் சாட்சி சொல்கிறேன். இன்னும் எனக்கு கொடூரமான வியாதி ஒன்று இருந்தது. அதாவது 35 வருடமாக ஒரு விதமான இருமல் இருந்தது. இந்த இருமல் வரும்போது தொடர்ந்து பேச முடியாது. இருமி இருமி உடல் தளர்ந்து போவேன். பல ஊழியங்களை பயன்படுத்தினேன். ஆனால் இருமல் தீரவில்லை. பலவிதமான மருத்துவமனைகளை பயன் படுத்தினேன்.

நான் ஊழியக்காரரிடம் சொன்னேன். அவர் என் இருமலுக்காக ஜெபித்தார். என் இரட்சகர் இயேசு என்னை பரிபூரணமாக சொஸ்தமாக்கினார். இந்த சாட்சியையும் இன்று உங்கள் முன் வைக்கிறேன்.

ஜாண்பிரிட்டோ, நாகர்கோவில்.

# ஹோமாவிலிருந்து அதிசய விடுதலை மருத்துவர்கள் கைவிட்டார்கள். ஆனால் கர்த்தர் ஜீவனைக் கொடுத்த அதிசயம்



சகாயராஜ், சுனிதா

எனது பெயர் சுனிதா. கணவர் பெயர் சகாயராஜ். நான் கோடி முனையிலிருந்து வருகிறேன். எனது கணவராங குவைத்தில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் பாத்ரூமில் கீழே விழுந்து தலை மண்டை உடைந்து தலையில் இரத்தம் உறைந்து சுயநினைவு இழந்த கிடந்தார். சுமார் 6 மணி நேரம் தாண்டி ஒரு சகோதரர் கண்டு பிடித்து மருத்துவ மனையில் சேர்த்தார். மருத்துவர் சிகிச்சை அளித்தும் பயனில்லை என்றார்கள்.

அப்பொழுது உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு என் கணவருக்காக ஜெபியுங்கள் என்றேன். அப்பொழுது செய்தியின் நடுவில் ஊழியக்காரர் பேசினார், உன் புருஷன் 3 நாளில் உன்னோடு பேசுவான் என்றார்.

எனக்கு நம்பிக்கை துளிர் விட்டது. மூன்றாவது நாளில் அவர் கை கால் அசைந்தது. கண்களைத் திறந்து பார்த்திருக்கிறார். மாலை வேளையில் என்னோடு திக்கி திக்கி பேசினார். பிரதரும் டெலிபோனில் ஜெபித்தார். எழுந்து நிற்பாய்! நடப்பாய் என்றார்! இன்னும் ஏழே நாட்களில் கர்த்தரின் மகிமையைக் காண்பாய் என்றார். அந்த அற்புதமும் நடைபெற்றது. ஏழாவது நாளில் முழு பெலனடைந்து எழுந்து உட்கார்ந்தார். மெல்ல நடந்தார்! அப்பொழுது இடுப்பு வலி அதிகமாக இருந்தது. முழு ஆரோக்கியம் ஏற்படவில்லை. அப்பொழுது சொந்த தேசத்தில் வருவான் அழைத்து வாருங்கள். அப்பொழுது விடுதலையாக்கப் படுவான் என்றார்.

சற்று எழும்பி உட்கார்ந்தாலும் மெல்ல நடந்தாலும் பரிபூரணடாகவில்லை! ஆனாலும் இந்தியாவிற்கு கொண்டு வர நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அப்பொழுது சரியாக எழும்பி உட்கார முடியாததால் படுத்த நிலையில் தான் கொண்டு வர வேண்டும். இதிலும் அனேக தடைகள் உருவாயின.

அப்பொழுது மருத்துவர்கள் கிட்னிகள் இரண்டும் பழுதடைந்து விட்டன. இவர் இனி உயிரோடிருக்கப் போவதில்லை இந்தியாவிற்கு கொண்டு போங்கள் என்று அவசரப் படுத்தினார்கள். தீவிரமாக நடவடிக்கை எடுக்கப் பட்டது. பிரதர் ஜெபித்தார். காலூன்றி நடப்பான், உட்கார்ந்து வருவான், கிட்னிகள் இரண்டும் சொஸ்தமாயின என்று சொன்னார்.

இந்தியாவிற்கு வர டிக்கட் கிடைத்ததுமே அவர் சொஸ்தமடைந்தார். இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டது. திருவனந்தபுரம் விமான நிலையத்திலிருந்து கிம்ஸ் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். அவரை எல்லாவிதமான மருத்துவ சிகிச்சைக்கும் உட்படுத்தி னார்கள். எல்லாமே நார்மல் என்று சொல்லும்படியாக கர்த்தர் மகா பெரிய அற்புதம் செய்தார்.

வீட்டிலே கொண்டு வந்தோம். அடிக்கடி பயங்கரமாக தலை வலிக்கும். அதற்கும் ஜெபித்நதார். அந்த உட்காயத்தையும் கர்த்தர் சரி செய்தார். இப்பொழுது கண் பார்வை குறைந்து வந்தது. அதிலும் கர்த்தர் அற்புதம் செய்தார்! மறுபடியும் கடலுக்கு சென்று மீன் பிடிக்கும் அளவுக்கு அவர் சுகத்தையும் பெலத்தையும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கட்டளையிட்டார்!

என் இயேசுவிற்கு உயிரோடிருக்கும் என் ஜீவனுள்ள தேவனுக்கு மகாபெரிய என் நல்ல தேவனுக்கு கோடானு கோடியாய் நன்றி செலுத்துகிறேன்.

சுனிதா, கோடிமுனை.



# தீராத கால் வலி நீங்கியது



எனது பெயர் அந்தோணியம்மாள். எனது ஊர் குளச்சல் கோடிமுனை. எனக்கு பயங்கரமான கால் வலி இருந்து கொண்டு இருந்தது. என்னால் நிற்கவும் முடியவில்லை, நடக்கவும் முடியவில்லை, படுக்கவும் முடியவில்லை. நான் மாடிபடி ஏறி வர முடியாமலும் இருந்தேன். நான் அழுது கொண்டு இருந்தேன். ஊழியக்காரர் ஜெப வேளையில் தீராத கால் வலி நீங்குகிறது என்று சொன்ன மாத்திரத்தில் என் கால் வலி மாறியது. இப்போது ஒரு மாதமாக எந்த வலியும் எனக்கு இல்லை. கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

அந்தோணியம்மாள், கோடிமுனை.

# அதிசய அட்மிசன் கிடைத்தது



எனது பெயர் ஆஷிக். எனது சொந்த ஊர் மேல்புறம். நான் +2 வில் 341 மதிப்பெண்கள் எடுத்தேன். நான் மேற்படிப்பு படிப்பதற்காக பிரதர் அவர்களிடம் ஆலோசனை கேட்டேன். நான் பி.இ, இன்சினியரிங் படிப்பதை விருப்பம் தெரிவித்தேன். நீ சட்டக்கல்லூரியில் சட்டம் படி கர்த்தர் உன்னை உயர்த்துவார் என்றார். எனது அப்பா ஒரு கூலித் தொழிலாளி. சாதாரண படிப்பு படிக்கவே எங்கள் குடும்பத்தில் வசதி இல்லை. மதிப்பெண்ணோ குறைவு

இது எப்படி சாத்தியம் என்று பிரதரிடம் கேட்டேன். அவர் சொன்னார்

**அவர் சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார் (1சாமு 2:8)**

ஆகவே நீ சட்டக் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பத்தைப் போடு என்றார். நானும் வண்ணப்பத்தைப் போட்டேன். கல்லூரிகள் திறந்த பிறகும் எனக்கு அட்மிசன்

கிடைக்கவில்லை. மிகுந்த மன வருத்தத்தோடு மறுபடியும் பிரதர் அவர்களைச் சந்தித்தேன். மறுபடியும் சொன்னார் நீ சட்டக் கல்லூரியில் படிக்கப் போகிறாய் என்று சொல்லி நீ கர்நாடகா மாநிலத்தில் அரசு கல்லூரியில் விண்ணப்பத்தை அனுப்பு என்றார்.

விண்ணப்பித்தேன். கல்லூரி நிர்வாகம் உடனே வந்து பீஸ் கட்டச் சொன்னது. உடனே பேங்களூர் பறந்தேன். 52,000/- ரூபாய் பீஸ் கட்டி கல்லூரியில் சேர்ந்தேன். மேலும் 6500 ரூபாயில் சாப்பாடும் மாத வாடகையுமாக சேரந்து தங்கும் இடத்தையும் கர்த்தர் ஆயத்தப் படுத்தினார்.

கல்லூரிகள் திறக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு பின்பு தான் எனக்க இந்த அற்புதங்கள் நடைபெற்றது. கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லையென்று நானும் என் குடும்பத்தாரும் அறிந்து கொண்டோம். தகுந்த நேரத்தில் கர்த்தர் ஊழியக்காரர் மூலம் ஆலோசனை தந்து இந்த ஏழை மாணவனை சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்க உதவி செய்தார். இந்த ஜீவனுள்ள ஆண்டவருக்கு இந்த சபை முன்பாக சாட்சி பகர்ந்து நன்றி கூறுகிறேன்.

**கர்த்தர் தரித்திரம் அடையச் செய்கிறவரும் ஐசுவரியம் அடையப் பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர்; (1சாமு 2:7)**

கர்த்தர் என் குடும்பத்தை உயர்த்த தீர்மானித்தார்.

# மூளையில் இரத்தக்கட்டி கர்த்தர் செய்த மகா அதிசயம்

எனது மகன் பெயர் சுமன். எனது பெயர் சாந்தா. எனது ஊர் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த முள்ளங்கனாவிளை. எனது மகன் பைக் விபத்தில் தலை மண்டை உடைந்து மூளையில் இரத்தம் உறைந்து பைத்தியக்காரனைப் போல் பிதற்றிக் கொண்டிருந்தான். மருத்துவமனைக்கு அழைத்தால்



வரமாட்டான். அடிக்கடி வெட்டும் விறையலும் வரும். இனி பிக்ஸ்



வந்தால் அவனை உயிரோடு பார்க்க முடியாது என்று மருத்துவர்களும் சொன்னார்கள். உடனடியாக ஆப்பிரேசன் செய்ய வேண்டும் என்றுச் சொன்னார்கள். ஆப்பரேசனுக்குரிய பணம் என்னிடத்தில் இல்லை.

நான் ஜீவஒளி ஜெபக்கோபுரம் புத்தகம் 1000 பிரதிகள் அச்சிட்டு வெளியிட காணிக்கை செலுத்தினேன். அவர் ஜெபித்து கர்த்தர் மருத்துவமனையில் அற்புதம் செய்கிறார் என்று சொல்லி திருவனந்தபுரத்திலுள்ள கிம்ஸ் மருத்துவமனைக்கு போகச் சொன்னார்.

அரசு ஆஸ்பத்திரிக்கு போகவே எங்களுக்கு பணமில்லை. ஆனால் ஊழியக்காரர் அவர்கள் கிம்ஸ் மருத்துவமனைக்குப் போகச் சொன்னார்கள். கர்த்தரை அங்கு நீ காண்பாய் என்றுச் சொன்னார். வெறும் 26,000 ரூபாய் கொண்டு திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவ மனைக்குச் சென்றோம். மருத்துவர்கள் பல லட்சங்கள் கேட்டார்கள். கட்ட முடியாததால் எங்களை திருப்பி அனுப்பினார்கள். என் மகனை உள்ளே எடுக்கவில்லை.

உடனே ஊழியக்காரருக்கு தெரியப்படுத்தினோம். உடனே அவர்கள் அங்கு தான் ஆப்பிரேசன் நடக்கும். அங்கே வெயிட் பண்ணுங்கள் என்றுச் சொன்னார். நாங்கள் காத்திருந்தோம். உடனே ஒரு மருத்துவர் வந்தார். கையில் எவ்வளவு ரூபாய் இருக்கிறது என்று கேட்டார். நாங்கள் 26,000 ரூபாய; இருக்கிறது என்று சொன்னோம். அதில் 10,000 ரூபாய் கவுண்டரில் கட்டச் சொன்னார். உடனடியாக என் மகனுக்கு அவர்கள் தலையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். கர்த்தர் பெரியக் காரியத்தைச் செய்தார். இன்று என் மகன் வெளிநாடு போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை என்றும் வேறு ஒரு தெய்வம் இல்லை என்றும் அறிந்து கொண்டேன்.

# மறுமணமும் அதிசய திருமணமும்

எனது பெயர் ஜோபின், நாகர்கோவில் . எனக்கு திருமணம் நடந்து விட்டது. இருவருக்கும் பிடிக்காத படியினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விவாக ரத்து வாங்கினோம்.

இனிமேல் திருமணமே செய்யக்கூடாது என்று பிடிவாதமாக இருந்தேன். ஆனால் அனேக திருமண வரண்கள் வந்தன. எந்தப்

பெண்ணையும் பார்க்க மாட்டேன். இதனால் அடிக்கடி குடும்பத்தில் சண்டை.

ஒருநாள் எங்கள் வீட்டுக்கு ஊழியக்காரர் வந்தார். அதிசயமும் ஐசுவரியம் நிறைந்த எனது மகளை உன் மடியில் போடுவேன் என்றார்!

6 மாதங்களுக்குப் பின் புரோக்கர் மூலம் வரண் வந்தது. இந்தப் பெண்தான் உனக்கு கர்த்தர் தந்தது. ஒழுங்காக கோய் பாரு என்றார்.

வேறு வழியில்லாமல் குடும்பத்தின் நச்சரிப்பு தாங்காமல் போய் பார்த்தேன். ஆனால் அந்தப் பெண் திருமணமே வேண்டாம் என்றுச் சொல்லி வீட்டுக்குள்ளே முடங்கினாள். வெளியே வரவில்லை. நாங்கள் வீட்டிற்குள்ளே கிச்சன் பகுதிக்கே சென்று மறைந்து நன்றவளைப் பார்த்தேன். எனக்குப் பிடித்தது.

அவளுக்கு திருமணமே வேண்டாம் என்று மூஞ்சியில் அடித்ததுபோல் சொன்னாள்.

மிகுந்த மனப்பாரத்துடன் திரும்பி வந்தேன். அம்மா மறுபடியும் ஊழியக்காரரை தொடர்பு கொண்டார்கள்.

கர்த்தர் இந்த மகளை அவன் மடியில் போட்டேன் என்றுச் சொல்லி அந்த பெண் வீட்டாரின் சாபத்தையும் திருமணத் தடையையும் உடைத்துப் போட்டு ஜெபித்தார்.

அவளே வருவாள்! திருமண நிச்சயம் நடக்கும்! காத்திருங்கள் என்றார்! வேறு வரண்கள் வந்தாலும் பிரதர் நடத்தவோ பார்க்வோ அனுமதிக்காமல் தடுத்து வந்தார்! அந்த பெண் தான் இவனுக்கு மனைவி என்று அடித்துப் பேசினார். அவள் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஆனபடியினால் கொஞ்சமல்ல நிறைய சந்தேகம் இருந்தது.

இந்த திருமணம் நடக்குமா? என்ற கேள்விக்குறி எழும்பியது. முன்று மாதங்கள் கூட கடந்தது. அந்தப் பெண் என்னிடம் வலிய வந்து பேசினாள். இருவரும் மனம் விட்டுப் பேசினோம்.

கடந்த 1-9-2019 அன்று எங்களுக்கு திருமண நிச்சயம் நடைபெற்றது. எங்களுக்கு இரட்டை மகிழ்ச்சியை தந்தார் என் இயேசு.

ஜோபின், நாகர்கோவில்



# அதிசய திருமணமும் பிரம்மிப்பூட்டும் ஆசீர்வாதமும் என் இயேசுவால் கூடாதது ஏதுவும் இல்லையே

எனது ஊர் தக்கலை. நான் எனது வாழ்க்கையை இழந்து பட்ட மரமாய் வாழ்ந்து வந்தேன். திருமணம் ஆன இரண்டே மாதத்தில் புருஷனை விட்டு விட்டு வெளியே வந்தேன்.

கர்த்தருக்கு எது பிடிக்காதோ அதையெல்லாம் புருஷன் செய்து வந்தான்! நான் நம்பின வாழ்க்கை எனக்கு கிடைக்கவில்லை. நான் எதிர் பார்த்த குணாதியங்களுடைய புருஷன் எனக்கு கிடைக்கவில்லை. பிற பெண்களுடன் தகாத உறவுகளை ஏற்படுத்திக் கொண்டவனை நான் விட்டு விட்டேன். 14 வருடமாக தனிமையில் வாழ்ந்து வந்தேன். இரண்டு மாத குடும்ப வாழ்க்கையில் எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வைராக்கியமாக வளர்த்தி வந்தேன். எனக்கொரு தனியார் பள்ளியில் டீச்சராக வேலை கிடைத்ததால் தனிமையானாலும் கர்த்தரோடு வாழ்ந்து சுகித்திருந்தேன்.

இந்த வேளையில் எனது அம்மா ஜீவஒளி ஜெபக்கோபுரத்திற்கு எங்கள் குடும்ப சூழ்நிலையை தெரியப் படுத்தி ஜெபித்திருக்கிறார்கள்.

சொத்துப் பிரச்சனையில் எங்களுக்கு பல ஆயிரம் மந்திரங்களும் நீதிமன்ற வழக்குகளும் உண்டு. இதனால் சமாதானம் இழந்து தவித்தோம். நான் மட்டுமல்ல என் குடும்பமே பாலைவனமாகியது. வேதனையும் கண்ணீரும் பெருகியது. அப்பொழுது கர்த்தர் அம்மாவிடம் பேசியிருக்கிறார், பட்ட மரம் துளிர்விடும்! அத்தி மரம் கனி கொடுக்கும்! உன் மகள் வாழ்க்கையை ஆசீர்வதிக்கப் போகிறேன். அவள் ஆசீர்வாதமாய் இருப்பாள் என்று ஊழியக்காரர் சொல்லியிருக்கிறார்.

அம்மா என்னிடத்தில் சொன்னார்கள். நான் திருமண வாழ்க்கையில் பிரியப்படாததால் நான் இந்தக் காரியங்களை சீரியசாக எடுத்துக் கொள்ளவில்லை! என் ஜீவிதம் இவ்வளவு தான் என்று எண்ணி வாழ்ந்து வந்தேன்.

பிரதர் ஒருநாள் என்னை வற்புறுத்தி ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ள வற்புறுத்தினார். நான் முதன் முதலாக உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அன்றும் ஏசாயா 43:19 வசனத்தைக் கொடுத்து உனக்கொரு புதிய வாழக்கையை ஆசீர்வாதமாய் தருகிறேன் பெற்றுக் கொள் என்றார்!

3 மாதங்கள் கடந்தன! என்னா ஆச்சரியம் நம்ப முடியாத படிக்கு தேவனின் குமாரனை என்னிடத்தில் அனுப்பினார் இயேசு. என் மனளை நேசித்தார்! என்னை விரும்பினார்! ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் அற்புதமாய் ஆச்சரியமாய் திருமணம் நடைபெற்றது. என் கர்த்தருக்கு கோடான கோடி நன்றியைச் செலுத்துகிறேன்.

இவண், பெயர் வெளியிட விரும்பாத சகோதரி, தக்கலை.

# குடி உன் உயிரைக் குடித்து விடும்.

# குடிகாரன் மனைவி செத்த சம்பவம்

தாலுகா அலுவலகத்தில் பணியாற்றி வந்தார் சேகர். இவனுக்கு அழகான மனைவி லதா. சேம், காவியா என்ற இரண்டு பிள்ளைகள். 1-ம் வகுப்பும் 2-ம் வகுப்பும் படித்து வருகிறார்கள்.

சேகருக்கு குடிக்கும் பழக்கம் உண்டு. மிதமான குடிதான். அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வரும்போது பாட்டிலோடு தான் வருவான். இவன் குடிப்பது இவனைத் தவிர யாருக்கும் தெரியாது. பகலிலே குடிக்க மாட்டான். ஆகவே மனைவிக்கு சந்தோஷம். ஆனால் நித்தமும் குடிப்பான். குடித்து விட்டு ஒரு மணி நேரமாவது மனைவியின் அழகை புகழ்ந்து தள்ளுவான். அதிலே இவளுக்கும் சந்தோஷம்.

இவர்களுடைய வாழ்க்கையில் சாத்தான் மெல்ல மெல்ல புக ஆரம்பித்தான். திடீர் என லதாவுக்கு நெஞ்சுவலி அனாலும் புருஷனுக்கு சொல்லாமல் ஜெபத்திலிருந்தாள். சபை போதகர் வந்து ஜெபிப்பார். அதிலே கொஞ்சம் மனத்திருப்தி. ஆனாலும் அடிக்கடி இந்த வலி வரும். வரும்போது உடம்பு சோர்ந்து போய் ஒரு வியர்வை வரும்....

இப்படியே கொஞ்சம் நேரம் திண்டாடுவாள். இந்த வலி ஏற்படும்போது இரவில் 2 மணிக்குத்தான் வரும்.

ஊழியக்காரர் சங் 50: 14,15 ஐ படிக்கச் சொல்லி கீழ்ப்படியச் சொல்லுவார்.

**நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப் படுத்துவாய்.**

நாகூம் 1:15ஐயும் படித்து கர்த்தரை மகிமைப் படுத்துங்கள் என்பார்.

**இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.**

வாசித்தாள் ஆனாலும் கீழ்ப்படியவில்லை. அப் 5:29 தேவனுடைய கட்டளைகளை இவள் பின்பற்றவில்லை. ஆனாலும் எப்பொழுதும் ஸ்தோத்திரம் இருக்கும்.



கர்த்தரை மிகவும் நம்புவாள். ஆனால் கர்த்தரின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் இவளது நம்பிக்கை செத்ததாயிருந்தது. அன்று டிசம்பர் 31 வருடத்தின் கடைசி நாள்! இன்னொரு வருடத்தின் துவக்க நாள்! சேகருக்கு தாசில்தாராகவும் பதவி உயர்வு கிடைத்தது. இரட்டிப்பான சந்தோஷத்தில் நண்பர்களுக்கு பகலில் சென்று பார்ட்டி வைத்து விசேஷமாய் தானும் குடித்து விட்டு காரில் வீட்டிற்கு பறந்தான்.

வரும் வழியில் ஜவுளிக் கடைக்குச் சென்று மனைவிக்கு பட்டுச் சேலையும் உள்ளாடைகளையும் வாங்கினான். பிள்ளைகளுக்கும் வாங்கி மல்லிகைப்பூ வாங்கிவிட்டு போற்;டிகோவில் காரை நிறத்தினான். கையிலே ஒரு புல் பாட்டில் இருந்தது.

பதவி உயர்வு கிடைத்த செய்தியை மனைவிக்கு சொல்லியிருந்த படியால் அவள் குடித்து வந்ததை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள். பிள்ளைகள் தூங்கியிருந்தார்கள். பட்டுப் புடவையைப் பார்த்ததும் இவளுக்கு சந்தோஷம் தலைவிரித்தாடியது. புடவையை உடுத்திக் கொண்டாள். உன்னதப்பாட்டின் 4-ம் அதிகாரத்தின் படி மனைவியை கவிதையாய் வர்ணித்தான். முதலிரவு அறைக்குள் பிரவேசித்தது போல் பிரவேசித்தார்கள். சேகர் அடுத்த ரவுண்டுக்கு போய் கொஞ்சம் அதிகமாக குடித்தான்.

புத்தாண்டு பிறக்க இன்னும் கொஞ்சம் நேரம் தான்... சேகர் நல்ல குடிபோதையில் வீழ்ந்தான். மனைவிக்கு திடீரென நெஞ்சு வலி வந்தது. உடல் வியர்த்துக் கொட்டியது. அவளோ வலியைக் குறித்து சொல்லவில்லை. அவன் போதையின் உச்சகட்டத்திற்கு சென்று குறட்டைவிட்டு தூங்க ஆரம்பித்தான். அவளால் முடியவில்லை. என்னங்க... என்றாள்! அவன் செத்தது போல் கொஞ்சநேரம் தான்...

நன்றாக உருட்டிப் பார்த்தாள்! நெஞ்சுக்குள் அடைத்தது! கதறினாள்....அவன் நெஞ்சுப் பகுதியில் கையை வைத்து தல்லி தல்லி கதறினாள். எருமைமாடு மாதிரி அசையாமல் தூங்கினான். பாழாய் போன குடி அவனை பயங்கரமாக தூங்க வைத்தது. அவளால் முடியவில்லை! கதறி கதறி அழுதாள். அவளின் அழுகை அவனை எழுப்பவில்லை. அவள் உணர்ந்தாள் மரணம் தன்னை நெருங்கியது இயேசுவே என்றாள்! பதில் இல்லை! வசனத்துக்கு கீழ்ப்படியவில்லையே! எங்கே கேட்பார்! கையளித்தார்!

அவள் மெல்ல நகர்ந்து அவன் மேல் நேராக படுத்தாள்! சுமை அவனை உணர்த்தவில்லை. அவன் அசையவே இல்லை அவன் உதட்டில்

கடைசியாய் முத்தமிட்டாள் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் வழிந்தது.... அப்படியே அவள் உயிர் பிரிந்தது....

விடியற்காலை வெகுநேரம் தாண்டியது. தன் சரீரம் கனமானதை உணர்ந்து கண் விழித்தான் சேகர். போதை கலைந்தது. மனைவியின் உயிர் பிரிந்திருந்தது. முத்தமிட்ட மனைவியின் வாயிலிருந்து இரத்தம் கசிந்து அவன் கழுத்து வழியாய் உறைந்திருந்ததைக் கண்டான்...

தன் சரீரத்தின் மேல் படுத்த-ருந்த மனைவி வெறும் சடலமாக இருந்ததைக் கண்டு அலறினான்! கதறினான். புத்தாண்டு பூத்தது. பூத்த மலரோ காய்ந்து போனது. சுவரில் முட்டினான்! தன் கையால் நெஞ்சை பதம் பார்த்தான்!


பாழாய் போன குடியால் என் மனைவியை இழந்தேனே என்று கதறி கதறி அழுதான். பிள்ளைகளோ அப்பா என்று அழுகு கொண்டே பக்கத்து அறையில் கதறிக் கொண்டிருப்பதைக் கேட்டான். ஏ.சி அறையைத் திறந்து பிள்ளைகளை வாரிக் கொண்டான். நான் குடித்து குடித்து உங்க அம்மாவை கொன்று விட்டடேனே... என்று தகறினான் சேகர்.

இவன் சப்தத்தைக் கேட்க யாருமில்லை. சந்தோஷத்திற்காக குடித்த குடி இவர்களின் சந்தோஷத்தை எடுத்துச் சென்றது. பட்டமரமானான் சேகர்!

**மூடனை உரலில் போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாகக் குத்தினாலும், அவனுடைய மூடத்தனம் அவனை விட்டு நீங்காது.**
**(நீதி 27:22)**

# ஒப்பன் சர்ஜரி இல்லாமல் கர்த்தர் தந்த அற்புத விடுதலை

எனது பெயர் மெல்பா. குலசேகரம் அருகாமையில் திருநந்திக்கரையில் குடியிருந்து வருகிறேன். மகன் பெயர் ஜெஸ்வந்திரையான். என்னுடைய மகனுக்கு 4 வயது ஆகிறது. அவன் நிமோனியாவால் பாதிக்கப் பட்டான். 2 மாதமாக நாகர்கோவிலில் உள்ள பிரபலமான மருத்துவமனையில்



சிகிச்சை அளித்தோம் ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை.



குழாய் போட்டு சளி எடுப்பார்கள். சளிக்குப் பதிலாக ரத்தம் வரும். எப்பொழுதும் பயங்கரமான ஜொரம் இருக்கும் என் பிள்ளை படும் பாடு பார்த்து கதறி அழுதேன். மருத்துவர்கள் கைவிட்டார்கள். அப்பொழுது ஒரு ஆன்றி மூலம் ஜேப்பியார் ஊழியக்காரரின் போன் நம்பர் கிடைத்தது. அவர் டெலிபோனில் ஜெபித்து சர்ப்பத்தின் வாயில் பிள்ளை இருக்கிறான். எந்த மருந்தும் அவன் உடம்பில் சேரவில்லை. ஆனாலும் கர்த்தர் விடுதலை தந்து ஜீவனைக் கொடுக்கிறார். ஆகவே மரணம் இனி இல்லை என்றுச் சொன்னார்.

ஜெபித்து எண்ணெய் தருகிறேன். யாராவது வந்து வாங்கிக் கொண்டு சென்று பிள்ளையின் உடம்பில் பூசுங்கள் அப்பொழுது அவன் சொஸ்தமாவான் என்று சொன்னார். மரணம் இனி இல்லை என்றுச் சொன்ன வார்த்தை எனக்கு என் தேவன் பேசினது போல் என் செவிகளில் விழுந்தது. தேவன் ஊழியக்காரர் மூலம் பேசினார் என்பதனை உணர்ந்தேன்.

நான் உடனே 2 பேரை அனுப்பி ஜெப எண்ணெய் வாங்கி வந்து பிள்ளையின் மேல் பூசினேன். அப்பொழுதே ஜொரம் வற்ற ஆரம்பித்தது. இயேசு என் பிள்ளையை எனக்கு திரும்ப தருகிறார் என்ற விசுவாசம் எனக்கு வளர்ந்தது. ஊழியக்காரர் ஜெபிப்பதற்கு முன்பு என் குழந்தையை நான் பியமாகத் தான் கொண்டு போவேன் என உணர்ந்து கலங்கி அழுதேன்.

இதன் பிறகு பிள்ளையை திருவனந்தபுரத்திலுள்ள கிம்ஸ் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றேன். கிம்ஸ் மருத்துவமனையும் சகலவிதமான பரிசோதனைகளையும் செய்துவிட்டு சளியை எடுப்பதற்கு ஊசியும் குழாயும் செலுத்தினார்கள். சளிக்கு பதிலாக ரத்தம் தான் வந்தது. வேதனை சகித்துக் கொள்ள முடியவில்லை,. அப்பொழுது மருத்துவர்கள் ஒன்று கூடி ஒப்பன் சர்ஜரி செய்து சளியை அப்புறப்படுத்த தீர்மானித்தார்கள். பிள்ளையை காப்பாற்ற வேறு வழியே இல்லை என்றுச் சொன்னார்கள்.

ஆனாலும் சர்ஜரிக்கு பின் பிள்ளை உயிரோடு இருக்குமா என்று எங்களால் சொல்ல முடியாது என்றுச் சொன்னார்கள். ஊழியக்காரரிடம் ஜெப ஆலோசனைக் கேட்டேன். அவர் சொன்னார் சங்கீதம் 50:14, 15-ன் படி நாகூம் 1:15-ன் படி கர்த்தருக்கு ஒரு பொருத்தனையை செலுத்திவிட்டு பிள்ளையைக் கொண்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறு என்றார். கர்த்;தர் பிள்ளையை தொடுகிறேன் என்றார். அப்பொழுது மருத்துவர்கள் இந்த நிலையில் மருத்துவமனையை விட்டு அனுப்ப மறுதலித்தார்கள். நான் கர்த்தரின்

சத்தத்திற்கு செவி கொடுத்தேன். என்னுடைய தனிப்பட்ட முயற்ச்சியில் நான் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறினேன். அப்பொழுது குழநங்தைக்கு 102 டிகிரிக்கு மேல் காய்ச்சல் இருந்தது. பிள்ளைக்கு எண்ணெய் பூசி வீட்டுக்கு கொண்டு வந்தேன். மருந்துக்கு பதிலாக எண்ணெய் பூசினேன். ஜொரம் வற்றினது. மறுநாள் பிள்ளை துள்ளிக் குதித்து விளையாடினான். காய்ச்சல் பறந்தது. உள்ளுக்குள் கிடந்த மொத்த சளியையும் காணவில்லை. இப்போது மருத்துவ பரிசோதனை செய்தோம் நுரையீரல் செம்மையாக இரக்கிறது. இப்போது சளியே இல்லை என்று அதே டாக்டர்கள் சொன்னார்கள். ஓப்பன் சர்ஜரி செய்ய வேண்டும் என்றுச் சொன்ன டாக்டர்கள் அதிசயப்பட்டார்கள். இயேசுவின் இரத்தத்திற்கு வல்லமை உண்டு என்பதை நன்கு அறிந்து உணர்ந்து இந்த சாட்சியை உங்கள் முன் கூறுகிறேன்.

**வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அனேக தேவர்களும் அநேகக் கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும்,**

**பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். (அப் 8:5,6)**

## மருத்துவமனை கைவிட்ட நிலையில் ஒரு ரூபாயில் சுகரை சொஸ்தமாக்கிய அதிசய தேவன்

## சுகர் என்பது ஆவியா? வியாதியா?

நாகர்கோவிலைச் சார்ந்த ஒரு விசுவாசி (பெயர் வெளியிட விரும்பவில்லை) இவருக்கு வயது 55, குஸ்டத்திற்கொப்பான வியாதி. கால் விரல்கள் அழுகி கைகளின் விரல் இடுக்குகள் அழுகி ஆங்காங்கே புண்கள் பிடித்த நிலையில் ஒரு சகோதரி ஜெபத்திற்கு வந்தாள். பிறப்பிலும் வளர்ப்பிலும் தேவர்களுக்கு பலியிட்டு வந்த இவளை கர்த்தர் தொட விரும்பினார்.

பி சா சு க ளி ன் கட்டுகளிலிருந்தும் வியாதியின் கோரப்பிடியிலிருந்தும் தேவன் விடுவிக்க விரும்பி அவள் பாவங்களை கழுக ஆரம்பித்தார்.



(யாத் 30:15-18ன் படி) இவளால் சாப்பிட முடியாது. வாய்ப்புண் குடல் புண்ணால் பாதிக்கப் பட்டவள். இறைச்சி, மீன் சாப்பிட்டால் புண்கள் இன்னும் அதிகமாக பழுத்து வீங்கும்.

இதினிமித்தம் எரிச்சல் உண்டாகும். சொறிந்து சொறிந்து இன்னும் அதிகமாக புண் சீழ் வடியும். பெற்ற பிள்ளைகளே அருவருப்பாக பார்த்தார்கள். அனால் கர்த்தரோ பொல்லாத ஆவிகளின் கிரியைகளிலிருந்து விடுதலை கட்டளையிட்டார்.

பரிபூரணமாக்கப்பட்டாள். ஜெபக் கூடாரத்தில் வைத்தே சாப்பிட வைத்தும், இறைச்சி, மீன் வகையான உணவு வகைகளை சாப்பிட வைத்து அற்புதம் செய்தார். இந்த தாய்க்கு ஒரு மகன் சென்னையில் இருந்தான். இவன் சுகர் வியாதியினால் கடுமையாக பாதிக்கப் பட்டு சென்னை பிரபலமான மருத்துவமனையிலேயே இனி இவனுக்கு சிகிட்சை பலனில்லை என்று கூறி உறுப்புகள் சகலமும் பழுதடைந்து விட்டது என்று சொல்லி கைவிட்டார்கள்.

வீட்டிலே கொண்டு வரப்பட்டு நாட்டு மருத்துவம் செய்யப்பட்டது. ஒன்றும் பலனுமில்லாமல் இருந்து மரணத்தை தழுவ வேண்டிய சுழ்நிலையில் கர்த்தர் இவள் குமாரனுக்கு விடுதலை கொடுக்க விரும்பினார்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஆராதனை முடித்து நான் சற்று தூங்கிய வேளையில் கர்த்தர் பேசினார், என் மகன் அங்கே மரித்து கோபிறான். ஆகவே நீ அங்கு சென்று அவன் சிரசில் கரம் வை. அப்பொழுது நான் பிழைக்க வைப்பேன் என்றார்.

நான் கர்த்தருக்கு வெசி கொடுக்கவில்லை.ஏன் எனில் 60 கி.மீ தொலைவில் தான் வீடு இருக்கிறது. மேலும், அது புறஜாதி மக்கள் இருக்கிற பகுதி. கலைக்டர் உமாசங்கரையே விளக்குமாற்றால் அடித்து துரத்தின தேசம். மட்டுமல்லாமல் ஞாயிற்றுக்கிழமையில் தான் பெண்கள் குழு கூட்டம் நடத்துகிற இடம். இப்படிப்பட்ட இடத்தில் நான் எப்படி இந்த ஊழியத்தை செய்ய முடியும் என்று கர்த்தரிடம் எதிர் கேள்வி கேட்டேன். அதற்கு கர்த்தர் நான் இருக்கிறேன் ஒருவனும் உன்மேல் கையைப் போடுவதில்லை என்று சொன்னார்.

நான் உடனே பைக்கில் பயணமானேன். அங்கு சென்றபொழுது பெண்கள் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. திடீர் என ஊழியக்காரனைக் கண்டதும் அந்த அம்மா சைகையில் வரவேண்டாம் என்று சொன்னது. ஆனால் நான் கர்த்தரின் நாமத்தில் குழுவைத்தாண்டி வீட்டிற்குள் நுழைந்தேன்.

சகோதரி பயந்து நடுங்கி வீட்டிற்குள் வந்து வெளியேறச்

சொன்னாள். நான் சொன்னேன் இவனை குணமாக்காமல் வெளியேற மாட்டேன் என்று சொன்னேன். அதன் பிறகு அவன் கொடுத்த மருத்துவ சான்றிதழ்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். முழுவதும் சீறோ. எல்லாம் முடிந்திருந்தது.

கர்த்தர் அந்த சகோதரனுக்கு சில சத்தியத்தை விளக்கினார். என்னால் செய்யக் கூடாத காரியம் ஏதாகிலும் உண்டோ என்று கேட்டார். சகோதரனுக்கு ஒரு சகோதரி உண்டு. படித்து பட்டம் பெற்றவள். உடனே என்னை கிண்டல் அடித்தாள். ஏன் எனில் பல தெய்வங்களை ஆராதிக்கிறவள்.

நான் சொன்னேன் இவனை சொஸ்தமாக்காமல் திரும்பவே மாட்டேன். கர்த்தர் இன்று இவனுக்கு ஜீவனைக் கொடுப்பேன் என்றார். இவன் உறுப்புகள் இப்பொழுதே இயங்கும் என்றேன் விசுவாசத்தால்.

இப்போது பார் இந்த வியாதி நீங்கி இவன் பிழைப்பான். சுகர் வியாதியே அல்ல! இது ஒரு சபிக்கப் பட்ட ஆவி. அதிலும் சுகர் வியாதியினால் கைகால் முடங்கி படுத்த படுக்கையில் கிடந்து செத்துப் போன ஒரு அசுத்த ஆவிதான் இவன் உறுப்புகளையும் சேதப் படுத்தியிருக்கிறது என்றேன்.

ஆனால் யாரும் சரியாக கேட்பதில்லை. ஆனாலும் கர்த்தர் செய்யப் போகிற அதிசயத்தை சொல்லிக் கொண்டே இருந்தார்.

சகோதரி வெளியே பெண்கள் எழும்பி ஊழியக்காரனை அடிக்க போகிறார்களோ என பயந்து நடுங்கி பதறி என்னை வெளியே போங்கள் என்று சொன்னார்கள். நானோ ஒன்றுக்கும் அசையவில்லை. கர்த்தர் அந்த பெண்களை கட்டி வைத்திருக்கிறார் என்பதளை நான் அறிவேன்.

கடைசியில் கர்த்தர் அவனுக்கு Glynace M.F. என்ற மாத்திரையை எடுத்து ஒரு கப் தண்ணீரில் ஜெபித்துக் கொடுத்தேன். அவன் விசுவாசமில்லாமல் குடித்தான். ஏன் எனில் சுகரின் அளவு அதிகமாகி இரத்த கலரில் தான் இருக்கும். எல்லா மருத்துவ சிகிச்சையும் படு தோல்வியைத் தான் கண்டது. இந்த ஒரு ரூபாய் மாத்திரை என்ன செய்யப் போகிறது என்று எல்லோரிடமும் கேளிவி.

நான் 2 மணி நேரம் அவன் மாத்திரையை உட்கொண்டபின் அங்கேயே சுவிசேஷம் சொல்லிக் கொண்டிருந்தேன். 2 மணி நேரம் தாண்டியதும் யூரின் எடுத்து டெஸ்ட் பண்ணிப் பார். கர்த்தரின் விடுதலையை இப்பொழுது நீ காண்பாய் என்றேன்.

அவனும் ஆர்வமாய் டெஸ்ட் பண்ணிப் பார்த்தான். என்னா ஆச்சரியம்! சுகரின் அடையாளமே இல்லை. உடனே ஆனந்தக் களிப்பில்



ஒரு அல்லேலூயா சொன்னான். சென்னையே நடுங்கும்படி சொன்னான். ஏதாவது பெரிய மருத்துவமனையில் சென்று உன் சகல உறுப்புக்களையும் பரிசோதித்துப் பார் என்றார்! எல்லாம் பரிபூரண சுகம் அடைந்திருப்பதைக் காண்பாய் என்றார்.

மறுநாள் சகல டெஸ்ட்டும் எடுக்கப் பட்டது. எந்தெந்த உறுப்புகள் சேதமடைந்திருந்ததோ அதெல்லாம் சொஸ்தமடைந்திருந்தது. கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றும் இல்லையே.

# தேசத்தில் கர்த்தாக்களின் ஆவிகள்!
# கொக்கரிக்கும் பொய் அபிஷேகம்!
# உனக்குள் இருப்பது எந்த ஆவி?

**வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அனேக தேவர்களும் அநேகக் கர்த்தாக்களும் உண்டாயிருந் தாலும்,**

**பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். (அப் 8:5,6)**

இது கடைசி காலமான படியினால் தேசத்தில் அந்திக்கிறிஸ்துவின் ஆவிகளும் சர்ப்பத்தின் ஆவிகளும் பொல்லாத தீர்க்கத்தரிசனம் சொல்லுகிற தவளையின் ஆவிகளும் தேசத்தில் அதிகமாய் கிரியை செய்து வருகிறது.

இந்த ஆவிகள் இன்று அதிகமாய் கிரியை செய்வது விசுவாசிகளிடத்தில் தான். இந்த விசுவாசிகள் இதை கர்த்தரின் ஆவி என்றும், கர்த்தர் என்னோடு பேசுகிறார் என்றும் பெருமை பாராட்டிக் கொண்டிருப்பார்கள். இந்த ஆவியின் கிரியைகளைப் பெற்றவர்கள் சொப்பனங்களையும், தரிசனங்களையும், தீர்க்கதரிசனங்களையும் உரைப்பார்கள்.

தேவன் என்னோடு இருக்கிறார் என்ற இறுமாப்போடு வேண்டுமென்றால் ஊழியக்காரர்களுக்கே ஊழியம் செய்வார்கள். இவர்கள் முந்தைய நாள் மழைக்கு முளைத்த காளான்கள். இவர்களை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்றால் இவர்கள் ஜெபிக்க உட்கார்ந்த உடன் அந்நிய பாஷையில் பேசி கர்ச்சிப்பார்கள். என்ன பேசினார்கள் என்று இவர்களுக்கே

தெரியாது.

இவர்களுடைய புருஷன்களை இவர்கள் அடிமைத்தனமாய் வைத்து நடத்துவார்கள். ஆகவே இவர்களிடம் இருப்பது பொய் அபிஷேக ஆவி என்பதை அறிந்து கொள்ளலாம்.

மேலும் இவர்கள் தங்களுடைய கடமைகளை மறந்து 24 மணி நேரம் ஜெப ஆலயங்களில் பிரவேசிப்பார்கள். சபைகளில் சென்றாலும் ஊழியக்காரன் அபிஷேகத்தில் நனைவதை வி அதிகமாய் அபிஷேகத்தில் நனைவார்கள். இது ஒரு வலு சர்ப்பத்தின் ஆவி. இவர்கள் வசனத்திற்கு கீழ்ப்படியாத அடங்கதவர்களாகவும் காணப்படுவார்கள்.

தேவ பிரமாணத்தை பேசுவார்கள், ஆனால் கீழ்ப்படிய மாட்டார்கள். இவர்கள் மிகவும் பண ஆசை பிடித்தவர்களாகவும் இருப்பார்கள். பணத்திற்காக எதையும் செய்யக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இப்படிப் பட்ட அபிஷேகம் பெற்றவர்கள் மெய்யான ஞானஸ்நானத்தை எடுத்திருக்க முடியாது. சபையிலே கையைத் தூக்கினதும் உடனே ஆற்றிலோ, குளத்திலோ போய் முங்கினவர்களாகத் தான் இருப்பார்கள். இவர்களிடத்தில் மூர்க்க கோபம் இருக்கும். இவர்கள் சுயம் உணராமல் இருப்பார்கள். இவர்களிடத்தில் எப்பொழுதும் சர்ப்பமும், தேவர்களும் குடியிருப்பார்கள்.

2தெச 2 : 3,4

**எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.**

**அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.**

1கொரி 8-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட டூப்ளிக்கேட் கர்த்தர் இவர்களை ஆளுகை செய்வார். இவர்களுடத்தில் நம் மெய்யான கர்த்தர் ஒரு போதும் இருக்க மாட்டார். இவர்களிடம் தான் மொத்த பேய்களும் குடியிருக்கும். எத்தனை பாவம் செய்தாலும் இயேசு மன்னிப்பார் என்ற வாதத்திலேயே இருப்பார்கள்.

இவர்கள் செத்தால் பரலோகம் செல்வோம் என்று பிதற்றிக் கொண்டிருப்பார்கள். தன்னைத்தான் பரிசுத்தவான் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

இவர்கள் இரு மனம் உள்ளவர்களாயிருப்பார்கள். வேதத்தை நன்றாக அறிந்தவர்கள் போல்



பேசுவார்கள். இவர்கள் காசுக்காக கர்த்தரை தேடுகிற கூட்டம். விசுவாச ஸ்தானத்தில் இருந்து கொண்டே தீர்க்கத்தரிசிகளுக்கே ஊழியம் செய்வார்கள். இவர்கள் ஒருவருக்கும் எந்த நன்மையும் செய்வதில்லை.

நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப் பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபி 13:16

நீங்கள் பணஆசை இல்லாதவர்களாயிருந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். எபிரே 13:5

இவர்கள் இலவசம் கிடைக்கும் என்றால் எவ்வளவு மணி நேரம் ஆனாலும் ரேசன் கடையில் க்யூவில் நிற்பார்கள்.

## பாட்டுபாடி ஜெபித்த பொய் அபிஷேகத்தின் ஆவி

நான் ஒரு இடத்தில் ஜெபிக்கச் சென்றேன். அந்த வீட்டின் ஸ்திரீ பலவீனப்பட்டிருந்தாள். அவளுக்கு தேவ ஆலோசனைகளை சொல்லிக் கொண்டிருந்தேன். திடீரென்று அந்த சகோதரி அபிஷேகம் பெற்றவளைப் போல் அந்நிய பாஷை பேசி பிதாவே உம்மை ஆராதிக்கின்றோம் என்ற பாடலை முழுமையாக பாடி தீர்க்கத்தரிசி ஜெபிப்பது போல் கட்டவிழ்த்து ஜெபித்தாள்.

என் இயேசு என்னிடம் சொன்னார், என் நாமத்தை சொல்லி பொய்யாய் ஜெபிக்கிற இந்த ஆவியை கட்டவிழ்த்து ஜெபம் ஏரெடு. நான் இவளுக்குள் இருக்கிற மொத்த ஆவியையும் அக்கினியில் போடுவேன் என்றார். அவள் சிரசில் கை வைத்தேன். ஆக்ரோசமாய் அந்நிய பாஷை பேசியது. போலி வல்லமையால் சரீரம் துள்ளியது.

இயேசுவின் பெயரால் நான் பொய்யாய் ஜெபிக்கிற அந்தகார அந்திக்கிறிஸ்துவின் ஆவியை இதோ கட்டவிழ்க்கிறேன் உன்னை அக்கினியில் போடுகிறேன் என்று சொன்னேன். உடனே அவள் பொத்தென்று கீழே விழுந்து பாம்பு போல் நடந்தாள். பாம்பு நடனமானாள்.

உடனே இவள் சொல்லுகிறாள் நானும் ஞானஸ்நானம் எடுத்தேன். யெகோவா சபையிலே எடுத்தேன் என்று சொன்னாள். உடனே கர்த்தர் பொய்யாய் ஞானஸ்நானம் எடுத்த தற்கொலை ஆவியை அக்கினியில் போடுகிறேன் என்றுச் சொன்னார்.

உடனே தேகம் எரிகிறது என்று சொல்லியே அந்த பிசாசு அழிந்து போனது. விடுதலை பெற்ற அந்த சகோதரி சொன்னாள் என் வீட்டருகில் யெகோவா சபையில் சென்று ஞானஸ்நானம் எடுத்த சகோதரி சமீபத்தில் தான் தற்கொலை செய்து கொண்டாள். அந்த ஆவிதான் எனக்குள் இருந்து பொய்யாய் ஜெபித்து வந்திருக்கிறது என்று சொல்லி வேதனைப் பட்டாள்.

அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கத்தரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக் கண்டேன். (வெளி 16:13)

# ஒரு சர்ப்பத்தினிமித்தம் சிவகங்கையில் வானத்தில் பறந்த 80 கிலோ எடையுள்ள பெண்மணி கர்த்தர் விடுதலை கொடுத்த அதிசயம்

ஒரு கடற்கரை தேசத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமை ஒரு ஏழை பெண்மணியின் வீட்டிற்குள் அவளுடைய அழைப்பின்படி சென்றோம். அவள் ஏற்கெனவே டெலிபோனில் சொல்லியிருந்தாள் 27 வருடமாய் ஒரு சர்ப்பத்தின் பிடியில் இருக்கிறேன். நான் போகாத சபை இல்லை. தேடாத ஊழியம் இல்லை என்று சொல்லி வருத்தப் பட்டாள்.

நான் அந்த வீட்டில் பிரவேசித்த போது எங்களை வரவேற்று ஸ்தோத்திரம் சொன்னாள். ஸ்தோத்திரம் சொன்னதுமே அவள் நின்ற நிலையிலேயே சர்ப்பத்தைப் போல் வளைந்து நெளிந்தாள்.

அவளுடைய சிவந்த சரீரம் நீல நிறமாக மாறிக் கொண்டிருந்தது. அப்படியே தலையில் பாம்பைப் போல் வளைந்து நெளிந்தாள். அவளுடைய சரீரத்தில் எலும்புகள் இல்லாததைப் போல் அவள் வளைந்து கொண்டிருந்தாள். அவளுடைய நாவை வெளியே போட்டு என் கால்களை நக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள். இதைப் பார்த்ததும் நான் அதிர்ந்து பிரமித்துப் போனேன். கர்த்தர் அவள் சிரசில் கரம் வை என்று சொன்னார். நான் தலையில் கை வைத்த போது தலை நெருப்பு போல் கொதித்துக் கொண்டிருந்தது. நான் சற்று பயந்து போனாலும் கர்த்தர் தமது முழு வல்லமையினால் நிரப்பினார். பிசாசு பேசியது. நான் நாகராணி. என்னுடன் நாகராஜா உண்டு உன்னால் ஒன்றும் செய்யமுடியாது. எத்தனை ஊழியக்காரர்களை துரத்தினேன் தெரியுமா? நீயும் உன் பொண்டாட்டியைக் கூட்டிக் கொண்டு ஓடி விடு. இவளையும் இவள் மகனையும் நான் கொண்டு தான் போவேன்.

கர்த்தர் அந்த பிசாசின் கூட்டங்களையும், சர்ப்பங்களின் கூட்டங்களையும் அக்கினியில் போட்டு எரித்து காண்பித்தார். அந்நேரமே அவள் சொஸ்தமானாள்.

பின்பு விடுதலை பெற்ற சகோதரி பேசினாள், இந்த சர்ப்பத்தின் ஆவி எனக்குள்ளே புகுந்து சிவகங்கை பகுதியில் விடுதலைக்காக சென்றபோது இரண்டரை கிலோமீட்டர் என்னை பறக்க வைத்து ஒரு மலையில் என்னை கொண்டு போய் போட்டது.

எந்த சபையில் நான் சென்றாலும் பாம்பைபோல் நான் ஊர்ந்து செல்வேன். இதனால் ஊழியக்காரர்களே பயப்பட்டார்கள். இன்று உங்கள் மூலம் கர்த்தர் எனக்கு பரிபூரண விடுதலை தந்தார் கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்



# நடக்க முடியாதிருந்த என்னை தேவன் நடக்க வைத்தார்.



மது

எனது பெயர் மது. ஊர் மேற்கு பரசேரி, நகர்கோவில். திடீரென எனக்கு கால் வலி ஏற்பட்டு படுத்த படுக்கையானேன். நிற்க முடியாது, உட்காரமுடியாது, ஒரு நிமிடம் கூட வலியினால் தூக்கம் கிடையாது. என் கை கால்களை யாராவது தொட்டாலோ பயங்கரமான வலி எடுத்து அழுவேன்.

நாகர்கோவில் அரசு மருத்துவமனையில் 15 நாள் சிகிச்சை பெற்றேன். சிறிதளவு வலி கூட குறையவில்லை. அக்குபஞ்சர் மருத்துவரை வீட்டில் வர வைத்து எனக்கு சிகிச்சை செய்தார்கள். எனது தலை, கை, கால் பாதம் என குத்தி குத்தி என் வியாதியை பெரிதாக்கினார்களே தவிர வியாதி குறையவில்லை. என் படுக்கையில் விறகு கட்டையைப் போல் கிடந்தேன்.

ஒரு குழந்தையைப் பார்ப்பது போல் என் அம்மா என்னைப் பார்த்தார்கள். பாத்ரூம் போனாலும் என் அம்மா தான் சுத்தம் பண்ணி தருகிற அளவில் இருந்தேன். மரணம் சம்பவிக்கும் என்ற பயம் எனக்கு வந்து விட்டது. எத்தனையோ ஜெபம் ஊழியக்காரர்கள் மூலம் ஏரெடுத்தோம். விடுதலையாக வில்லை. இறுதியில் ஊழியக்காரர் ஜேப்பியார் அவர்களை போணில் தொடர்பு கொண்டு ஜெபித்தோம்.

இது வியாதியல்ல, மந்திரக்கட்டு, பூர்வீக சாபம் என்று சொன்னார். அவர் ஜெபிக்கும் போது சற்று ஆறுதலாக இருந்தது. ஆனாலும் வியாதி தீரவில்லை. வாரங்கள் கடந்தன. கர்த்தருக்கென்று பொருத்தனை செலுத்தச் சொன்னார். வறுமையின் உச்ச கட்டத்தில் இருந்த நாங்கள் ஒரு பொருத்தனையை கர்த்தருக்கென்று செலுத்தினோம்.

நான் ஒரு பெயின்டர். நான் வேலைக்கு போகவில்லை என்றால் சாப்பிட முடியாது. ஆனாலும் கர்த்தருக்கென்று செலுத்தினபோது கர்த்தர் ஊழியக்காரர் மூலம் பேசினார்.

என்னை வண்டியில் தூக்கிப் போட்டு ஜெபக்கோபுரத்தின் மூன்றாவது மாடியில் என்னை படுக்க வைத்தார்கள். ஊழியக்காரர் சொன்னார், எழும்பி நடப்பாய், 41 நாளில் பூரண சுகம் அடைவாய். மறுபடியும் வேலைக்கு செல்வாய்என்று சொல்லி ஜெபித்து அனுப்பினார்.

இந்த 41 நாளும் நான் மிகவும் துயரப்பட்டேன். ஊழியக்காரர் ஜெபிக்கும்போது வலி குறையும். மற்றபடி வலி பெருகும். வீட்டிற்கு ஜெபத்திற்கு அழைத்தால் வர மாட்டார். ஆனால் இந்த 41 நாளில் விசுவாசத்தில் போனில் ஜெபித்து என்னை உருவாக்கினார்.

41 நாளுக்கு பிறகு ஒரு நாள் ஊழியக்காரரும் மனைவியும் திடீரென்று வந்தார்கள். அப்பொழுது நான் விறகு கட்டைபோல் கிடந்தேன். அவர் கட்டவிழ்த்து ஜெபித்தார். எழும்பி நட என்று சொன்னார். நீ சொஸ்தம் என்றார்.

வலி குறைந்தது, மெல்ல எழும்பினேன். நடந்தேன். இன்று மறுபடியும் மிக உயரமான கட்டிடங்களில் பெயின்டிங் வேலை செய்து கொண்டிருக்கிறேன். அல்லேலூயா! கர்த்தருக்கே மகிமை.

மது, பரசேரி.

# வெந்து அழுகிப்போன தொடைப்பகுதி ஒரே ராத்திரியில் சொஸ்தமான அதிசயம்



எனது பெயர் சுதா. எனது ஊர் கழுவன்திட்டை. கொதித்த சுடுநீர் என் தொடைப்பகுதியில் கொட்டியதால் பயங்கரமான எரிச்சலும் காந்தலுமாக இருந்தது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டேன். தொடைப்பகுதி அழுகியதே தவிர எந்த சுகத்தையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

மருத்துவர்கள் குழும்பி தவித்தார்கள். இனி எங்களால் முடியாது என்றுச் சொன்னார்கள். இப்படியே போனால் உயிருக்கும் ஆபத்து என்றுச் சொன்னார்கள். மருத்துவர்களும் ஆண்டவரும் என்னை கைவிட்டார்களே என்று கதறி அழுதேன்.

அப்பொழுது என் அப்பாவுக்கு தெரிந்த ஊழியக்காரர் ஜேப்பியார் அவர்களிடம் விபரத்தைச் சொன்னார்கள். உடனே அவர் என் காதில் போனைக் கொடுக்கச் சொல்லி ஜெபித்தார்கள். ஜெபித்த உடன் உடனடியாக கர்த்தர் உன்னை சொஸ்தமாக்குகிறார் என்று சொன்னார்கள். வியாதி குணமாகாத படி தடை செய்து கொண்டிருந்த பிசாசுகளை கட்டவிழ்த்து ஜெபித்தார். அன்று ராத்திரியே நான் சொஸ்தமானேன். வலி காந்தல் எல்லாம் மாறியது. சிகிச்சையே செய்ய முடியாது என்று கைவிட்ட மருத்துவர்கள் உற்சாகத்துடன் வந்து சிகிச்சையை தொடர்ந்தார்கள். 3-வது நாளில் நான் சொஸ்தமாகி வீட்டிற்கு கடந்து சென்றேன். இவ்விதமாக சுகமாக்கின கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

**உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது.**

**(சங்கீதம் 103:4,5)**



# கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து 3 பெரும் அதிசயங்களைச் செய்தார்.

## ஒரு கோடி கடன் அடைத்த கர்த்தர்



எனது பெயர் கிலேடீஸ். எனது சொந்த ஊர் குளச்சல். நான் ஒரு சாதாரண டெயிலர் தொழிலாளி. எனது மகன் எம்.பி. பி. எஸ். படித்து ஒரு பரீட்சையில் தோல்வி அடைந்தான். கடந்த வருடம் எழுதி அதிலும் தோல்வி அடைந்தான். திகுந்த மனவேதனையில் என் குடும்பம் இருந்து வந்தது.

ஒரு கோடி ரூபாய் கடன் பிரச்சனையால் நான் தினமும் அன்னாளைப் போல மனதுருகினேன். கடன்காரர்கள் எல்லாம் என்னை கசக்கி பிழிந்தார்கள். இன்னொரு மகன் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தான்.

இந்த வேளையில் ஜீவஒளி ஜெபக்கோபுரம் புத்தகத்தின் மூலம் நான் ஊழியக்காரர் அவர்களை சந்தித்தேன். என்னுடைய பிரச்சனைகளை நான் சொல்லவில்லை. ஆனால் அவர் ஜெபிக்க ஆரம்பித்தார்.

ஜெபித்த உடனே கர்த்தர் பேசினார். உனக்கு மூன்று அற்புதத்தைச் செய்வேன். எசாயா 45:4 ன் மூலம் வெண்கலக் கதவுகளை உடைத்து இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து உனக்கு கோடி கோடியாய் கொடுப்பனே. நீ அனேக ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய் என்றார். உன் மகன் இந்த முறை உன் மகன் பரீட்சையிலும் வெற்றி பெறுவான் என்றார். இந்த மூன்றையும் ஜீன் மாதக் கூட்டத்தில் என்னை எழுப்பி விட்டு எல்லோர் மத்தியிலும் உனக்கு எவ்வளவு கடன் என்று கேட்டு ஒரு கோடி என்று நான் பதில் சொன்னதுமே கோடி கோடியாய் தருவேன் என்று சொல்லி 3 அதிசயங்களை நான் உனக்கு செய்திருக்கிறேன் என்று சொன்னார். மகன் பரீட்சை எழுதினான். இதுவரைக்கும் எழுதியதை விட மிக மோசமாக எழுதினான். என் மகன் உள்ளம் உடைந்து கதறினான். ஊழியக்காரரிடம் சொன்னேன். கர்த்தர் சொன்னது நடக்கும் என்று சொன்னார். அப்படியே அவன் வெற்றி பெற்றான்.

கர்த்தர் சொன்னபடியே எனக்கு கடன் அடைக்க ஒரு கோடி ஒரு புராஜக்ட் மூலம் கிடைத்தது. நான் ஒரு நகை கடை துவங்குவதற்கு இன்னொரு கோடியை கர்த்தர் ஆசீர்வதித்தார். மகன் பரீட்சையில் வெற்றி பெற்றான். ஆகவே இந்த கூட்டத்தில் இந்த சாட்சியை நான் உங்கள் முன் சொல்கிறேன்.

# மொத்த கொள்ளை நோய்களையும் ஒத்தநாளில் மொத்தமாய் தீர்த்து தந்த என் இயேசு தெய்வம்.

எனது பெயர் ஜெயசஜினி. எனது கணவர் பெயர் ஸ்டாலின். எனது ஊர் செல்லம்கோணம் பக்கத்திலுள்ள வட்டவிளை. **எனக்கு நெடுங்காலமாக தீராத வயிற்றுவலி, கருப்பையில் புண், சிறுநீரில் பழுப்பு, தீராத தலைவலி, கண்வலி, மூலவியாதி, கழுத்துவலி என அனேக நோய்கள் எனக்கு இருந்து வந்தது.**

எனக்கு சிறுநீர் போகும் வழி எல்லாம் புண்ணாக இருந்தது. யூரின் போக ரொம்க கடினமாக இருக்கும். தண்ணீர் பட முடியாது. மோசன் போகும் போது வலி. கழுவும் போது புண் இருந்ததால் வலி. இப்படி பல கஷ்டங்கள் பட்டேன். மருத்துவமனையில் அட்மிட் ஆனேன். ஆனாலும் வயிற்று வலி குறையவில்லை. நெடுங்காலமாக இருந்து வந்தது.

என் பெரியம்மா மூலமாக ஜீவஒளி ஜெபக்கோபுரம் புக் எனக்கு கிடைத்தது. அதை படித்ததும் எனக்கு ஒரு நம்பிக்கை வந்தது. நான் 2020 பிப்ரவரி 1-ம் தேதி நடந்த உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். எனக்கு ஊழியக்காரரை தெரியாது. என்னுடைய பிரச்சனைகள் அவருக்கு தெரியாது. ஆனால் ஜெபத்தில் என்னுடைய எல்லா வியாதிகளையும் வெளிப்படுத்தி ஒவ்வொன்றாக அழித்தார். மூன்றே



நாளில் அதிசயமான விடுதலையை நான் பெற்றேன்.

**மொத்த வியாதிகளும் இயேசு எனக்கு மொத்தமாக திர்த்து தந்தார். என்னுடைய வியாதிகளுக்காக குலசேகரம், தக்கலை, குளச்சல், நாகர்கோவில், திருவனந்தபுரம் அனந்தபுரி ஆகிய மருத்துவமனைகளுக்கு சென்று தங்கியும் சிகிச்சை பெற்றேன். ஒரு பலனும் எனக்கு கிடைக்கவில்லை. எத்தனையோ வைத்ததி சாலைகளுக்கு சென்றோம். குறி கேட்க சென்றோம். பாகால்களை தேடினோம்.** இருந்த சமாதானத்தையும் இழந்தோமே தவிர ஒரு விடுதலையும் கிடைக்கவில்லை. நாங்கள் சம்பாதித்த பணம் எல்லாம் மருத்துவமனைக்கு செலவு பண்ணி தீர்த்தோம். **ஆனால் ஜீவஒளி ஜெபக்கோபுரத்தில் ஒரே நாளில் எனக்கு எல்ல விடுதலையையும் கர்த்தர் தந்தார். என் தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.**

**ஜெயசஜினி, வட்டவிளை.**



# நீங்கள் பலுகி பெருகி பூமியிலே திரளாய் வர்த்தித்து விருத்தியாகுங்கள் என்றார். [ஆதி 9:7]

எனக்குப் பிரியமானவர்களே!

இந்த வாக்குத்தத்த செய்தியை வாசிப்பவர்களுக்கும், இயேசு பெரியவர் வருகையின் ஊழிய விசுவாசிகளுக்கும், ஜீவஒளி ஜெபக்கோபுரம் பொருத்தனை ஊழிய விசுவாசிகளுக்கும் இது பொருந்தும். மட்டுமல்லாமல் நியாயப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கிற யாவருக்கும் எந்த சபையானாலும் எந்த ஊழியங்கள் ஆனாலும், இதை வாசித்து விசுவசித்து வசனத்தின்படி நடக்கிற எவருக்கும் இந்த வாக்குத்தத்தம் கிரியைச் செய்யும்.

நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியாத யாவருக்கும் இந்த வாக்குத்தத்தம் **கட்டாயம் கிரியைச் செய்யாது.**

**இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப் பட்டவன் என்பார்களாக.**
(உபா 27:26)

நியாயப்பிரமாணத்தின்படி நடக்காத எந்த விசுவாசியும் தேவ ஆசீர்வாதத்தை பெற முடியாது! உதட்டளவில் இருக்கிற கிறிஸ்தவர்களும் வெறும் ஸ்தோத்திரபலி சொல்லி நேரத்தையும் காலத்தையும் ஓட்டி, பொன்னுக்கும், வெள்ளிக்கும் கடனுக்கும் வியாதிக்கும் ஸ்தோத்திரபலி இடுகிறவர்களுக்கும் இந்த வாக்குத்தத்தம் கிரியைச் செய்யாது.

**கர்த்தரின் பிரமாணங்களைக் கண்டு நடுங்கி வாழ்கிற யாவருக்கும் இந்த வாக்குத்தத்தம் கிரியைச் செய்யும்! கட்டாயம்! நிச்சயம்! நீ இந்த ஆண்டிலே இப்போது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உன்னைக் கர்த்தர் பலுகி பெருக கிருபை செய்வார்.**

**அவர் அதிசயமான கர்த்தர்.**

நீ எந்த நிலையிலிருந்தாலும் சரி!
கோடி கடன்களில் நீ இருந்தாலும் சரி!
எவ்வளவு துன்பத்தில் நீ இருந்தாலும் சரி!
எவ்வளவு வெட்கத்தில் நீ இருந்தாலும் சரி!
எப்பேற்பட்ட நோயில் நீ பாதிக்கப் பட்டிருந்தாலும் சரி!
இனி வாழ்வே இல்லை சாவே தான் என நீ மனம் கசிந்து அழுது கொண்டிருந்தாலும் சரி!
புருஷனிடம் சந்தோஷமில்லையே! புருஷன் என்னை நேசிக்கவில்லையே.... எப்பவும் அடிச்சு துன்புறுத்துகிறானே என்று கலங்கி வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி!

வறுமையின் கோரப்பிடியில் சிக்கி உண்ண உணவுமில்லாமல் நொறுங்கிக் கிடந்தாலும் கர்த்தர் உன்னை உபாகமம் 1:11-ன் படி ஆசீர்வதிக்கப் போகிறார் அல்லேலூயா!

**ஆகவே இந்த செய்தியை முதலில் நீ நம்பு! இது கர்த்தரால் வருகிற பரலோகத்தின் மன்னா!**

## நியாயப்பிரமாணம் எது!

உபவாசமிருப்பதும் ஆராதனையில் கலந்து கொள்வதும் உபவாசக் கூட்டங்களில் கலந்து கொண்டாலும் ஆசீர்வாதம் வரும் என்று சொன்னால் அது பொய்!

நீ நியாயப்பிரமாணத்தை விட்டு விட்டு எங்கு அலைந்தாலும் நோ யூஸ்.

நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறது?

**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன் தேசத்தில் நீ பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம்**

முந்தின பலனை எடுத்து ஒரு கூடையிலே வைத்து உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப் போய் (உபா 26:2)

உன் முதற்பலன்களை எல்லாம் கர்த்தருக்கென்று செலுத்த வேண்டும். ஆனால் ஒழுங்காக நீ செலுத்துவதில்லையே....

தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்த பின்பு (உபா 26:12)

நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் போய் அவரை நோக்கி: தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லா கட்டளைகளின் படியும், நான் பரிசுத்தமான பொருட்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்து, லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்; உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை. (உபா 26:13)

இந்த வசனத்தின்படி நீ நடந்து கொள்கிறாயா? உன்னை நீ சோதித்துப் பார்.

கண்ட இடங்களிலெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. (உபா 12:13)

நீ கர்த்தருக்கு பிரியமான இடத்தில் காணிக்கை கொடுக்காமல், கர்த்தருக்கென்றே பயன்படுகிற இடத்தில் காணிக்கை கொடுக்காமல் உன் புகழுக்கும் பெருமைக்கும் நீ காணிக்கை செலுத்தினால் கர்த்தருடைய சமுகத்தில் அந்த காணிக்கை ஏற்றுக் கொள்ள படாமல் இருக்கும் ஆதலால் நீ ஜாக்கிரதையாயிரு.

## வேதம் என்ற நியாயப்பிரமாணம் உனக்கு என்ன எசால்லுகிறது?

உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்து கொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும் உன் உற்சாகக் காணிக்கைகளையும் உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்க வேண்டாம். (உபா 12:17)

நீ அதை என்ன செய்கிறாய்? நீ இந்த வசனத்துக்கு கீழ்படிகிறாயா? இல்லை. கர்த்தருக்கு கொடுக்க வேண்டியதை கொடுக்காமல் நீயே உன் தேவைக்கு பயன்படுத்திக் கொண்டு கர்த்தருக்கு முன்பாக சாபமாக கிடக்கிறாய்?

உங்கள் நிலத்தில் முதல் முதல் விளைந்த முதற்பலத்தை உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்துக்குக் கொண்டு வாருங்கள். (யாத் 34:26)

ஆனால் நீ முதல் விளைந்த முதற்பலத்தை சந்தைக்கு கொண்டு போய் விற்று காசாக்கி உன் தேவைக்கு பயன்படுத்தி சாபமாகிறாய்.

ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன். (எண் 30:2)

ஆனால் நீ உன் கடந்த காலத்தை நினைத்துப் பார். கர்த்தருக்கு எத்தனை பொருத்தனை பண்ணி விட்டு அதை செய்யாமல் ஏமாற்றி வந்திருக்கிறாய். நீ இப்படி இருக்கும் போது உனக்கு கடன் தான் பெருகும். ஆசீர்வாதம் பெருகாது.



நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: யாதாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் உன் மதிப்பின்படி கர்த்தருக்கு உரியவர்கள். (லேவி 27:2)

அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தானாகில், உன் மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன். (லேவி 27:13)

ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், ஆசாரியன் அதின் நலத்துக்கும் இளப்பத்துக்கும் தக்கதாக அதை மதிக்கக்கடவன்; ஆசாரியன் மதிக்கிறபடி அது இருக்கக்கடவது. (லேவி 27:14)

தன் வீட்டைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், நீ மதிக்கும் திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன். அப்பொழுது அது அவனுடையதாகும். (லேவி 27:15)

ஒருவன் தன் காணியாட்சியான வயலில் யாதொரு பங்கைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத் தக்கதாய் இருக்க வேண்டும்; ஒரு கலம் வாற்கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்படவேண்டும். (லேவி 27:16)

யூபிலி வருஷ முதல் அவன் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால் அது உன் மதிப்பின் படி இருக்க வேண்டும். (லேவி 27:17)

மேற்கண்ட வசனங்கள் உனக்கு என்ன போதிக்கிறது? நீ பொருத்தனை பண்ணிக் கொண்டால் அந்த பொருத்தனை உயிரினங்கள் நீ வைத்துக் கொள்ள விரும்பினால் ஊழியக்காரனிடத்தில் போய் ஊழியக்காரன் நிர்ணயிக்கிற விலையை காணிக்கையாக கொடுத்து விட்டு நீ மீட்டுக் கொண்டு போக வேண்டும். இது தான் நியாயப்பிரமாணம். [வாசித்துப்பார் லேவியராகமம் 27-ம் அதிகாரம் முழுவதும்.]

நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்த தாமதஞ் செய்யாதே. உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும். (உபா 23:21)

நீ பொருத்தனை பண்ணாதிருந்தால், உன் மேல் பாவம் இல்லை. (உபா 23:22)

உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும். உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணிச் சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக. (உபா 23:23)

ஆகவே வசனங்களுக்கு நீ மிகவும் எச்சரிக்கையாயிரு.

ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன். (உபா 16:17)

தேவன் உங்களுக்கு ஆசீர்வாதங்களை தந்தால் என்னென்ன ஆசீர்வாதங்களை தந்திருக்கிறாரோ அதற்கேற்ற தசமபாகங்களை கர்த்தரிடத்தில் கொண்டு வர வேண்டும். கர்த்தர் தரும் ஆசீர்வாதங்களை மறைக்கக் கூடாது.

உங்கள் நிலத்தில் முதல் விளைச்சல்களில் முதற் கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருவாயாக. (யாத் 23:19)

நீ எந்த ஒரு சூழ்நிலையிலும் எந்த ஒரு நெருக்கத்திலும் எந்த ஒரு துக்கத்திலும் இந்த

வசனத்துக்கு நீ கீழ்ப்படிவாயாக. தசமபாகத்தை தடை செய்யும் தேவர்களுடைய கிரியைகளை உடைத்து போடுகிற மனுஷனாக ஜெப வீரனாக மாற வேண்டும்.

நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்து கொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம் பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப் போடுவாயாக. (யாத் 23:24)

ஆகவே இந்த வசனத்துக்கு நீ எச்சரிக்கையாயிரு.

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக் கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். (யாத் 23:25)

நீ இந்த காரியங்களுக்கு கவனமாய் செவிகொடுத்து கீழ்ப்படிந்து வாழ்ந்து வந்தால் கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. உன் ஆயுசு நாட்களைப் பூரணப் படுத்துவேன். (யாத் 23:26)

எனக்குப் பயப்படும் பயத்தை உனக்கு முன் செல்லும்படி செய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப் பண்ணுவேன். (யாத் 23:27)

உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன். (யாத் 23:28)

தேசம் பாழாய் போகாமலும், காட்டு மிருகங்கள் உனக்கு விரோதமாய்ப் பெருகாமலும் இருக்கும்படி, நான் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உன் முன்னின்ற துரத்தி விடாமல், (யாத் 23:29)

நீ விருத்தியடைந்து, தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளும் வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்தி விடுவேன். (யாத் 23:30)

பார்த்தீர்களா? எவ்வளவு அருமையான தேவன். நீங்கள் விருத்தியாகும் படிக்கு நீங்கள் பலுகி பெருகும் படிக்கு நீங்கள் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளும் படிக்கு உங்கள் சத்துருக்களை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விடுவேன் என்று கர்த்தர் உங்களிடத்தில் வாக்கு பண்ணுகிறார். ஆகையால் கர்த்தரையும் கர்த்தரின் வசனங்களையும் நம்புங்கள்.

இவைகளின்படி தேடாமல் இயேசு என்று உதட்டளவில் சொல்லி சொல்லி வாழ்கிறவன் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். இப்படிப்பட்டவனுக்கு என்ன நடக்கும் தெரியுமா?

## கர்த்தரின் மகா கோபம்

நீங்கள் எனக்கு செவி கொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத் தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள் மேல் வரப்பண்ணி, (லேவி 26:21)

உங்களுக்குள்ளே வெளியின் துஷ்ட மிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களை பிள்ளைகளற்றவர்களாக்கி, உங்கள் மிருக ஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப் பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய் கிடக்கும். (லேவி 26:22)

நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து



நடந்தால், (லேவி 26:23)

நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து, (லேவி 26:24)

என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளை நோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன். சத்துருவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவீர்கள். (லேவி 26:25)

உங்கள் அப்பம் என்னும் ஆதரவு கோலை நான் முறித்துப் போடும்போது, பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக் கொடுப்பார்கள்; நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடைய மாட்டீர்கள். (லேவி 26:26)

கீழ்படிந்து வாழ்ந்தால் லேவி 26:8 வாய்க்கும்.

உங்களில் ஐந்து பேர் ஐநூறு பேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறு பேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

அப்படியானால் தேவன் உங்களுக்குள் இருந்து இந்த யுத்தத்தை செய்வார் என்று அர்த்தம்.

அடுத்த படியாக நாம் தேவனுடைய சாபத்தினாலும் பெற்றோர்களுடைய பாவத்தினாலும் அவர்களுடைய இச்சையினாலும் தாயின் கர்ப்பத்தில் பாவத்தில் பிறந்திருக்கிறோம். பாவத்திலே பிறக்கிற படியினால் இந்த பூமியில் பரிசுத்தமாய் வாழ்வதற்கு ஒரு பாவநிவாரணம் நமக்குண்டு. கீழே படியுங்கள்.

# பாவ நிவாரண பலி

உங்கள் ஆத்துமாக் களுக்காகப் பாவ நிவிர்த்தி பண்ணும்படி நீங்கள் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தும்போது, ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம். (யாத் 30:15)

அந்தப் பாவ நிவிர்த்தி பணத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்குக் கொடுப்பாயாக;அது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் ஆத்துமாக் களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக் குறியாயிருக்கும் என்றார். (யாத் 30:16)

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த வார்த்தைகளை நீ எழுது; இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கை பண்ணினேன் என்றார். (யாத் 34:27)

உங்களுக்கு உண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையைக் கொண்டு வந்து செலுத்துங்கள்; மனமுள்ளவன் எவனோ, அவன் அதைக் கொண்டு வரட்டும்; கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்னவென்றால், பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், (யாத் 35:5)

செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டு வந்தார்கள். (யாத் 35:29)

ஆகவே கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரின் காணிக்கையைச் செலுத்துவார்கள்.

**காணிக்கை செலுத்த கணக்கு வாசிப்பவர்கள் தங்கள் தரித்திரத்தைச் அறுவடை செய்வார்கள். இவர்கள் கர்த்தரின் பிள்ளைகளாக இருக்கவே முடியாது. கர்த்தரின் பிள்ளைகளாய் இருக்கிறவர்கள் கர்த்தர் மோசேயின் முலம் ஏற்படுத்திக் கொண்ட இந்த காணிக்கை உடன் படிக்கைக்கு கீழ்ப்படிவார்கள்.**

**இந்த பிரமாணங்களை மீறுகிறவர்கள் கீழ்கண்ட வசனம் வந்து சேரும்.**

**என் முகத்துக்கு முன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாகக் கடந்து போகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப் போல் ஆக்குவேன். (எரே 34:18)**

உன் கையின் பிரயாசத்தை ஆசீர்வதிக்க வேண்டுமானால் நீ கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டும்.

**இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மை யாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிக ளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். (உபா 28:1)**

வசனத்தை உற்றுப்பார்! கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால் கவனமாய் கேட்டு அதைப் பின்பற்றினால் தான் உன்னை மேன்மையாய் வைப்பேன் என்கிறார்.....

அப்படியானால் நீ ஏன் கீழ்ப்படியவில்லை. தசமபாகத்தில் சாப்பிடுகிறாய். தசமபாகத்தில் உடுக்கிறாய்! நீ எப்பொழுதும் சாபமாய் தான் இருப்பாய்!

**சாபமானால் சகல சாத்தானும் உன்னிடத்தில் வருவார்கள்! கடன் வாங்கினால் கூட தசமபாகம் கர்த்தருக்கு கொடுங்கள்! உங்க கடனை கர்த்தரே அடைப்பார்! இல்லையேல் கடன் உன்னை கொல்லாமல் கொல்லும்.**

வட்டி கொடுக்க வட்டிக்கு எடுக்கிறாய். கடன் அடைக்க நிலத்தை விற்கிறாய். தசமபாகம் கர்த்தருக்கு வரவில்லை என்றால் கர்த்தர் உன்னை காறி உமிழ்ந்து போடுவார்.

**கர்த்தர் உன் வேலைக்காரன் அல்ல! நீ சொல்லுகிறதை அவர் கேட்க! அவர் வைத்த பிரமாணம் இருக்கிறது. அதன் படி நடக்க உனக்கு என்ன கலக்கம். கீழ்ப்படிந்து பாரு! கர்த்தர் உன்னை உயர்த்துவார்!**

**என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவரா யிருக்கிறேன். (உபா 5:10)**

## யாக்கோபை ஆசீர்வதித்த தேவன் உன்னை ஆசீர்வதிக்க மாட்டாரோ?

ஒருவன் ஆசீர்வதிக்கப்பட தாய் தகப்பன் ஆசீர்வாதம் மிகவும் முக்கியம். தாய் தகப்பன் ஆசீர்வாதம் இல்லாமல் தேவன் உங்களை ஆசீர்வதிக்கப் போவதில்லை.

தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப் பட்டவன். (உபா 27:16)

தூஷக்கப்பட்டவனாய் சபிக்கப் பட்டவனாய் நீ இருக்கும் போது எவ்வளவு கோடி காணிக்கை கொடுத்தாலும் கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கப் போவதில்லை. இதுவும் நியாயப்பிரமாணம் தான்.

ஆபிரகாமுடைய சகல சொத்துக்களுக்கும் ஒரே வாரிசு ஈசாக்கு. ஈசாக்கின் சகல சொத்துக்களுக்கும் வாரிசு ஏசா, யாக்கோபு.



ஈசாக்கு வயது முதிர்ந்த வேளையில் தன் மூத்த குமாரன் ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினான். இதை அறிந்த தாய் ரெபேக்காள் யாக்போபை ஆசீர்வதிக்க விரும்பி ஏசாவைப் போல் வேசம் போட்டு யாக்கோபு தகப்பனின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறான்.

இதற்கு தாய் உடந்தையாக இருக்கிறாள். இந்த ஆசீர்வாதத்தை கொடுப்பதற்காக ஏசாவிடத்தில் ஈசாக்கு சொல்கிறான்.

ஆகையால், நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத் தூணியையும் உன் வில்லையும் எடுத்துக் கொண்டு வனத்துக்குப் போய், எனக்காக வேட்டையாடி, (ஆதி 27:3)

அதை எனக்கு பிரியமாயிருக்கிற ருசியுள்ள் பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டு வா என்றான். (ஆதி 27:4)

**சோ ஒரு ஆசீர்வாதத்தை பெறுவதற்கு சொந்த தகப்பன் மகனிடத்தில் உணவு பதார்த்தங்களைக் கேட்கிறார்.**

**கர்த்தரோ உங்களை ஆசிர்வதிக்க உங்கள் முதற்பலன்க ளையும் காணிக்கைகளையும் கேட்கிறார். புரிந்து கொள்ளுங்கள்.**

உணவு பதார்த்தங்களை சாப்பிட்டு திருப்தியான ஈசாக்கு, ஏசா வேஷம் போட்டு வந்த யாக்கோபை ஏசா என நம்பி யாக்கோபை கீழ்கண்ட வசனங்களின்படி ஆசீர்வதித்தான்.

**அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனை நோக்கி: என் மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய் என்றான். (ஆதி 27:26)**

**அவன் கிட்ட போய், அவனை முத்தஞ் செய்தான்; அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து: இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப் போல் இருக்கிறது. (ஆதி 27:27)**

**தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமை யையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்ச ரசத்தையும் தந்தருள்வாராக. (ஆதி 27:28)**

**ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னை சபிக்கிறவர்கள் சபிக்கப் பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான். (ஆதி 27:29)**

**யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித் தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்று போடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான். (ஆதி 27:41)**

**யாக்கோபு தகப்பனின் ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தாலும் ஏசாவின் கொலை வெறியைக் கண்டு சகல ஆஸ்திகளையும் விட்டு விட்டு வெறும் தகப்பனின் வாக்குத்தத்தங்களை மட்டும் சொந்தமாக்கிக் கொண்டு புறப்பட்டான் கர்த்தரை மட்டும் நம்பி.**

**ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து நீ கானானிய ருடைய குமாரத்திகளில் பெண் கொள்ளாமல், (ஆதி 28:1)**

**எழுந்து புறப்பட்டு, பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின்**

**குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான். (ஆதி 28:2)**

**யாக்கோபு தன் தாய்க்கும் தகப்பனுக்கும் கீழ்ப்படிந்து ஏசாவைக் கண்டு பயந்து ஓடிப்போனான்.**

**ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்த படியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின் கீழ் வைத்து; அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான். (ஆதி 28:11)**

**அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது; அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது; அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். (ஆதி 28:12)**

**அனாதையாய் கைவிடப்பட்ட நிலையில் இருந்த யாக்கோபு கர்த்தர் கைவிடாமல் காக்கும் படி மனதுருகி கீழ் கண்ட வாக்குத்தத்தங்களை யாக்கோபுக்கு கொடுக்கிறார்.**

**அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.**
**(ஆதி 28:13)**

**உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக் குள்ளும் பூமியின் வம்சங்களெல் லாம் ஆசீர்வதிக்கப்படும்.**
**(ஆதி 28:14)**

**நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். (ஆதி 28:15)**

**யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான். (ஆதி 28:16)**

**அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான். (ஆதி 28:17)**

**அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்து, (ஆதி 28:18)**

**நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொண்டான். (ஆதி 28:22)**

**யாக்கோபு ஆதியாகமம் 28:22ன் படி பொருத்தனை பண்ணினான். கர்த்தரும் அவனை நம்பி எல்லா காரியத்திலும் எல்லா சூழ்நிலைகளிலும் ஆசீர்வதித்து நடத்தி வந்தார். யாக்கோபு பலுகி பெருகினான். கர்த்தர் கூட இருந்தபடியினால் ஆதி 30:43**

**நாமும் மிகவும் வறுமையில் இருக்கும் போது கர்த்தருக்கு கொடுப்போம் என்று பொருத்தனை பண்ணுவீர்கள். ஆனால் பொருத்தனை நிறைவேற்ற மாட்டீர்கள்.**

இதனால் கர்த்தரின் கோபத்திற்கு ஆளாகுவீர்கள். ஆகவே கர்த்தர் உங்கள் மேல் விசுவாசம் இழந்து உனக்கு ஒரு அற்புதம் செய்ய



வேண்டுமானால் நீ முதலில் பொருத்தனை கொடு என்று உங்களுக்கு கட்டளையிடுகிறார். வாசியுங்கள் சங்கீதம் 50:14, 15 சங்கீதம் 76:11,12 சங்கீதம் 96:8 சங்கீதம் 66:14 சங்கீதம் 65:1 நாகூம் 1:15 சங்கீதம் 116:14,18,19

(யாக்கோபு)இவ்விதமாய் அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான்.

தேவன் யாக்கோபுக்கு வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றினார். உங்களையும் இவ்விதமாய் கர்த்தர் இந்த ஆண்டிலே ஆசீர்வதிக்கப் போகிறார் நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் நியாயப்பிரமாணத்துக்கு கீழ:ப்படிந்து நடந்தால் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வீர்கள்.

**நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக. [உபா 1:11]**

**உங்களுக்கு சத்துருக்கள் எவ்வளவு பெருகினாலும் கர்த்தர் அவர்களை சங்கரித்து உங்களை ஆசீர்வதிப்பார்.**

லாபான் யாக்கோபுக்கு எதிராக கிளம்பின போது கர்த்தர் யாக்கோபுக்காக யுத்தம் செய்தார்.

20 வருடங்களுக்குப் பிறகு யாக்கோபு பலுகி பெருகி பலத்த ஜாதியாகி தன் மாமனார் லாபானுக்குத் தெரியாமல் தன் சொந்த தேசத்துக்குப் புறப்பட்டான் இதைக் கேட்ட லாபான் யாக்கோபை பின் தொடர தீர்மானித்தான்.

**அன்று ராத்திரி தேவன் சீரிய தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார். (ஆதி 31:24)**

பத்துமுறை யாக்கோபின் சம்பளத்தை லாபான் மாற்றின போதும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருந்த யாக்கோபுக்கு பட்சமாய் இருந்தார்.

# தசினமான கர்த்தர்

நீ தூணுக்கு அபிஷேகஞ் செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே. இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தை விட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார் என்றான். (ஆதி 31:13)

கர்த்தருடை திட்டப்படி பலுகி பெருகி சொந்த தேசத்திற்கு புறப்பட்டுப் போனான். யாக்கோபை துரத்தின லாபானை கர்த்தர் கடிந்து கொண்டு யாக்கோபை பாதுகாத்தார்.

## ஏசாவைக் கண்டு பயந்த யாக்கோபு

யாக்கோபு போகும் வழியில் யாக்கோபை பிடிக்க ஏசா புறப்பட்டு வருவதைக் கண்டு நடுங்கினான்.

நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய் வந்தோம்; அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள். (ஆதி 32:6)

**இந்த இடத்தில் சற்று கவனிக்கவும். ஆதியாகமம் 31:13ன் படியும் ஆதியாகமம் 28:22ன் படியும் யாக்கோபு கர்த்தருக்கு பயந்து பொருத்தனைகளையும் தசமபாகத்தையும் செலுத்தி பலிபீடத்தை கட்டியிருக்க வேண்டும். ஆனால் அவன் கர்த்தரை ஏமாற்றினான். ஆனால் கர்த்தரைக் கண்டு நடுங்காமல் எதிரே வந்த ஏசாவைக் கண்டு பயந்து ஏசாவுக்கு பொருத்தனைகளை செலுத்தினான்.**

**நீங்களும் அப்படிதான். உங்களுக்கு ஒரு ஆபத்துக் காலம் வரும் போது உலகத்தையும் உலகத்தாரையும் கண்டு பயப்படுகிறீர்கள்.**

அவர்களுக்கு நடுங்குகிறீர்கள். நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் எவ்வளவோ கொடுக்கிறீர்கள். இவர்களை எல்லாம் உண்டாக்கின கர்த்தருக்கு நீங்கள் ஒன்றும் கொடுப்பதில்லை. கொடு என்று சொன்னால் என்னிடத்தில் எதுவும் இல்லையே? இல்லை என்ற கணக்கை வாசிக்கிறீர்கள்.

நோய் தீர்க்கும் தேவனை விட்டு விட்டு நோய் தீர்ப்பேன் என்று மேற் பூச்சாய் சொல்கிற மருத்துவருக்கு அள்ளி அள்ளி கொடுப்பீர்கள். வட்டிக்கு எடுத்து கொடுக்கிறீர்கள். கர்த்தருக்கோ பிச்சை இடுகிறீர்கள். [நுள்ளி போடுகிறீர்கள்]. ஆகவே தான் கர்த்தரும் அடிக்கடி உங்களை கிள்ளிப் போடுகிறார்.

இங்கேயும் யாக்கோபு கர்த்தரைக் கண்டு பயப்படாமல் கர்த்தருக்கு பொருத்தனை செலுத்தாமல் உலகப்பிரகாரமான ஏசாவுக்கு பொருத்தனை செலுத்த தீர்மானிக்கிறான்.

யாக்போபு, தன் கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனாகிய ஏசாவிக்கு வெகுமானமாக (ஆதி 32:13)

அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து: (ஆதி 32:7)

இருநூறு வெள்ளாடு களையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடு களையும், இருபது ஆட்டுக் கடாக்களையும், (ஆதி 32:14)

பால் கொடுக்கிற 30 ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக் குட்டிகளையும் பிரித்தெடுத்து, (ஆதி 32:15)

யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடே கூட நானூறு மனிதரும் வருகிறதைக் கண்டு, பிள்ளைகளை லேயாளிடத்திலும் ராகேலிடத்திலும் இரண்டு பணிவிடைக் காரிகளிடத்திலும் வெவ்வேறாகப் பிரித்து வைத்து, (ஆதி 33:1)

ஏசாவுக்கு ஒவ்வொரு மந்தை மந்தையாய் தனித்தனியாய் அனுப்பினான். இந்த மந்தைகளை யாருக்கு கொண்டு செல்கிறீர்கள் என்று யாராவது கேட்டால்

இது உமது அடியானாகிய யாக்கோபுடையது; இது என் ஆண்டவனாகிய ஏசாவுக்கு அனுப்பப் படுகிற வெகுமதி. (ஆதி 32:18)

இவ்விதமாய் மூன்று கூட்ட மந்தைகளை ஏசாவுக்கு முன்பாக அனுப்பினான். வசனம் ஆதியாகமம் 32:20 சொல்கிறது, மன்னே வெகுமதி அனுப்பி அவனை சாந்தப் படுத்திக் கொண்டு பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன். அப்பொழுது ஒருவேளை என் பேரில் தயவாய் இருப்பான் என்றான் யாக்கோபு.

பணிவிடைக் காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலிலும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் இடையிலும், ராகேலையும் யோசேப்பையும் கடையிலும் நிறுத்தி: (ஆதி 33:2)

தான் அவர்களுக்கு முன்னாக நடந்து போய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். (ஆதி 33:3)

அப்பொழுது ஏசா எதிர் கொண்டு ஓடி வந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தை கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ் செய்தான்; இருவரும் அழுதார்கள். (ஆதி 33:4)

அவன் தன் கண்களை ஏறெடுத்து, ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் கண்டு:



உன்னோடிருக்கிற இவர்கள் யார்? என்றான். அதற்கு அவன்: தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள் என்றான். (ஆதி 33:5)

அப்பொழுது பணிவிடைக் காரிகளும் அவர்கள் பிள்ளைகளும் சேர்ந்து வந்து வணங்கினார்கள். (ஆதி 33:6)

லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர்ந்து வந்து வணங்கினார்கள்; பின்பு யோசேப்பும் ராகேலும் சேர்ந்து வந்து வணங்கினார்கள். (ஆதி 33:7)

அப்பொழுது அவன்: எனக்கு எதிர் கொண்டுவந்த அந்த மந்தையெல்லாம் என்னத்துக்கு என்றான். அதற்கு அவன்: என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்கிறதற்கு என்றான். (ஆதி 33:8)

பிரச்சனை ஒன்று வருமானால் கர்த்தருக்குத் தான் பொருத்தனை செலுத்த வேண்டும். ஆனால் இங்கு உதட்டளவில் ஜெபம் கர்த்தருக்கு ஏறெடுத்து ஏசாவுக்குத்தான் தன் மந்தைகளில் சிலவற்றைக் கொடுத்தான். கர்த்தருக்குக் கொடுக்கவில்லை. இதனால் கர்த்தர் தன் ஒரே மகளை கையளித்தார்.

லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள். (ஆதி 34:1)

அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுமாகிய சீகேம் என்பவன் கண்டு, அவளைக் கொண்டு போய், அவளோடே சயனித்து, அவளைத் தீட்டுப் படுத்தினான். (ஆதி 34:2)

கர்த்தருக்கு கோபம் வந்தால் சில காரியத்தை நமக்கு சொல்லாமலே அவர் செய்து முடிப்பார். பிதாக்களின் அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் விசாரிப்பார். அப்படியானால் இங்கு யாக்கோபு என்ன அக்கிரமம் செய்தான். ஆண்டவர் சொன்னபடி நான் பலுகி பெருகினால் நான் தூணான நட்ட இந்த இடத்தில் நான் பலிபீடம் கட்டுவேன். (ஆதி 28:22)

இவன் சொன்னபடி பொருத்தனை பண்ணாமல் ஏசாவுக்கு தான் பொருத்தனைகளை கொடுத்தான் . ஆகவே கர்த்தருக்கு முன்பாக இது அக்கிரமமாக பட்டது அதனால் தான் இங்கு தீனாளும் கையளிக்கப் பட்டாள்.

தீனாளை கர்ப்பளித்த வனே திருமணம் செய்ய முன் வந்த போது கூட கர்த்தர் சகலத்தையும் நாசமாக்க அனுமதித்திருக்கிறார். எப்படியெனில்

சீகேமும் அவள் தகப்பனையும் அவள் சகோதரரையும் நோக்கி: உங்கள் கண்களில் எனக்குத் தயவு கிடைக்க வேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன்;
(ஆதி 34:11)

பரிசமும் வெகுமதியும் நீங்கள் எவ்வளவு கேட்டாலும் தருகிறேன்; அந்தப் பெண்ணை மாத்திரம் எனக்கு மனைவியாக கொடுக்க வேண்டும் என்றான்.
(ஆதி 34:12)

உடனே விருத்த சேதனம் இல்லாதவனுக்கு எங்கள் சகோதரியை தரமாட்டோம் என்று மறுதலித்தார்கள். ஆனாலும் உங்களுக்குள் இருக்கும் எல்லா ஆண்மக்களும் விருத்த சேதனம் பண்ணினால் எங்கள் சகோதரியை திருமணம் பண்ணித் தருவோம் என்று சொன்னார்கள்.

உடனே அந்த பட்டணத்தில் உள்ள ஆண் மக்கள் எல்லாரும் தீனாளுக்கு வேண்டி விருத்த சேதனம் பண்ணப்

**பட்டார்கள்.**

**மூன்றாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களுக்கு நோவு எடுத்தபோது தீனாளின் சகோதரர்கள் சிமியோன், லேவி இரண்டு பேரும் தங்கள் பட்டயத்தால் அந்த பட்டணத்திலுள்ள ஆண் மக்களை எல்லாம் கொன்று போட்டு சீகேமையும் கொன்று போட்டார்கள். இதற்கு பெயர் தான் சர்வ நாசமும்.**

**இது மாதிரிபட்ட நாசங்கள் உங்கள் வீடுகளில் நடப்பதற்கு காரணம் உங்கள் பொருத்தனை களும், தசமபாக குறைகள் தான்.**

**நாசத்திற்கு மேல் நாசம் வருகிறதாக கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது; அசுப்பிலே என் கூடாரங்களும் ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப் படுகிறது. [எரே 4:20]**

**இந்த விதமான நாசங்கள் நமது குடும்பத்தில் நடக்காமல் இருக்க கர்த்தருக்கு உத்தமமாயிருங்கள். தேவன் ஒரு முறை தான் கட்டளையிடுவார் உங்களுக்கு கீழ்ப்படியுங்கள். இந்நாள் வரைக்கும் கர்த்தருக்கு கொடுப்பேன் என்று ஏமாற்றின பொருத்தனைகளையும் தசமபாத்தையும் முதற்பலன்களையும் நன்றி பலிகளையும் பாவ நிவாரண பலிகளையும் செலுத்தி தீர்ப்பாயாக .**

**தேவன் ஒரு விசை சொல்லயிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே. [யோபு 33:14]**

**தீனாளுக்கு ஏற்பட்ட இந்த கொடுமைக்கு பிறகு யாக்கோபு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறான். உடனே யாக்கோபுக்கு தேவன் பதில் கொடுக்கிறார்.**

**தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார். [ஆதி 35:1]**

**கர்த்தருடைய கட்டளையை ஏற்று யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடு கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை மாற்றி விட்டு உங்களை சுத்தம் பண்ணி உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் என்றான். [ஆதி 35:2]**

**நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள்; எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச் செய்து நான் நடந்த வழியிலே, என்னோடே கூட அருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு வேன் என்றான். [ஆதி 35:3]**

**அப்பொழுது அவர்கள் தங்கள் கையில் இருந்த அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும், யாக்கோபிடத்தில் கொடுத்தார்கள். யாக்கோபு அவைகளை சீகேம் ஊர் அருகே இருந்த ஒரு கர்வாலி மரத்தின் கீழ் புதைத்துப் போட்டான். [ஆதி 35:4]**

**அதன்பின் பிரயாணப்பட்டு**

**அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்குத் தப்பி ஓடினபோது, அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான். [ஆதி 35:7]**

**ப லி பீ ட த் தை யாக்கோபு கட்டின பின்பு தான் தேவன் தரிசனமாகி யாக்கோபை ஆசீர்வதித்தார்.**

**யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்தபின்பு தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி, அவனை ஆசீர்வதித்து: [ஆதி 35:9]**

**இப்பொழுது உன் பேர் யாக்கோபு, இனி உன் பேர் யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேல் என்று உனக்குப் பேர் வழங்கும் என்று சொல்லி, அவனுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டார். [ஆதி 35:10]**

நம்முடைய வாழ்க்கையின் துயரங்களுக்கு நமது பொருத்தனைகளின் குறைபாடுகளே! காணிக்கைகளின் குறைபாடுகளே–

யாக்கோபின் வாழ்க்கையில் எவ்வளவோ துயரங்கள். ஆனாலும் பெத்தேலில் செலுத்தாமல் ஏசாவுக்கு செலுத்தபடியினால் கர்த்தரின் கோபம் தீனா மேலும் யாக்கோபின் மனைவி மேலும் வந்தது.

சிறியவனாய் இருந்த யாக்கோபை கர்த்தர் தெரிந்து கொண்டு ஏசாயா 60:22-ன் படி ஆசீர்வதித்தார்.

சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.

ஒன்றுமில்லாமல் வெறும் எண்ணெய் குப்பியோடு ஏசாவை விட்டு ஓடிப் போன யாக்கோபு கர்த்தரின் கட்டளைகளுக்குப் பயந்து தூணாக நிறுத்தி எண்ணெய் அதன்மேல் பூசி பொருத்தனை செலுத்துவேன் என்றான்.

நான் தூணாக நிறுத்தின இந்த கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொண்டான். (ஆதி 28:22)

இந்தப் பொருத்த னையைக் கேட்டு புழுதியில் கிடந்த யாக்கோபை கர்த்தர் உயர்த்த ஆரம்பித்தார். 20 வருடம் ம னை வி க ளு க் கா க வு ம் சம்பாத்தியத்திற்காகவும் வேலை செய்த யாக்கோபை பலுகி பெருகச் செய்தார். இவனை கர்த்தர் உபாகமம் 1:11ன் படி ஆயிரமடங்கு ஆசீர்வதித்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது

கட்டளைகளுக்கு நீ பயந்து நடந்தால் கர்த்தர் உன்னை நிச்சயமாக ஆயிரமடங்கு ஆசீர்வதிப்பார்! நீ நிச்சயமாய் வாலாகாமல் தலையாவாய்.

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின் படி நடக்கவும் அவைகளுக்குச் செவிகொடுத்து வந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய். (உபா28:14)

உன் கூடையும் மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும். (உபா 28:5)

எனக்குப் பிரியமானவர்களே! கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் கடந்து வரவில்லை என்றால் நிச்சயம் நீங்கள் பட்ட மரம் போல் ஆவீர்கள்.

கர்த்தர் உங்களை ஆயிரம் மடங்கு பலுகி பெருகும் படி ஆசீர்வதிப்பார். அவர் நல்லவர், அவர் வல்லவர். யாக்கோபின் சந்ததியைக் கூட அவர் ஆசீர்வதித்தவர்.

வெறும் 70 பேர்தான் எகிப்து தேசத்திற்கு கடந்து போனார்கள். இவர்களோடு கர்த்தர் இருந்தபடியினால் இவர்களை எகிப்து தேசத்தார் நெருக்கி ஒடுக்கினபோதும் கூட இவர்களுடைய கர்ப்ப பிறப்புகளை பார்வோன் கொலை செய்ய முயற்சித்த போது கூட எகிப்து தேசம் முழுவதும் இவர்கள் பலுகி பெருகினார்கள். **இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர் களால் நிறைந்தது. [யாத் 1:7]**

**உங்கள் அனைவருக்கும் ஜீவஒளி ஜெபக் கோபுரத்தின் சார்பில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்ளை தெரிவித்து நீங்களும் பலுகி பெருக தொடர்ந்து நான் ஜெபிக்கிறேன். என் தேவன் உதவி செய்வாராக. ஆமென்.**

**ஆசிரியர் ஜே. ஜேப்பியார்.**

9442131629.

# மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்! ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். எது வேண்டும் உனக்கு?

இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல, பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும் படிக்கும் அப்படியாயிற்று. (ரோமர் 7:13)

பிரியமானவர்களே! நமக்கு மரணம் உண்டு என்று நன்றாகத் தெரியும். அதிலும் மிகவும் நன்றாகத் தெரியும் உனக்கு உன் பாவம் உன் கண் முன் இருப்பதை. ஆனாலும் கொஞ்சமும் நீ பயப்படாமலும் திகையாமலும் இருக்கிறாய்! சாத்தான் அந்திக்கிறிஸ்து உனக்குள் குடியிருந்து உன் வாழ்வை பாதாளத்ததிற்கு அழைத்துச் செல்கிறான்.

நீ படிக்காத காலத்தில் அதிக பாவம் உன்னிடத்தில் இல்லை. மேலே நாடுகளிலும் பட்டணங்களிலும் நீ குடியேறிய நாட்களிலும் 60 வயது ஸ்திரீ பெற்ற குடும்ப வாழ்க்கையை ஒரே மாதத்தில் பார்த்து ரசித்து புசித்து விடுகிறாய். மாம்ச வாழ்க்கையினால் உன் ஆவியின் வாழக்கை தீட்டுப் படுகிறது. சாராள் கூட ஒரு நாள் மீறுதல் பாவம் செய்தாள். கர்த்தர் செய்வேன் என்று சொன்னதை நினைத்து எனக்கு இனி பிள்ளை பிறக்குமோ என்று கர்த்தருக்கு விரோதமாகப் புலம்பினாள்.

இன்று இயேசுவை விசுவாசித்த நீ தினம் தினம் இயேசுவை எதிர்த்து நிற்கிறவர்களாய் மாறி இயேசுவின் முகத்தில் காறி காறி துப்பி மகிழ்கிறாய்!

பைபிளை படிக்காத நம் முன்னோர்கள் சரீர பாவம் அதிகமில்லாமல் வாழ்ந்தார்கள்! படிக்காதவர்களாக இருந்தாலும் அதிக பண்புள்ளவர்களாக வாழ்ந்தார்கள்! ஆனால் நீயோ அந்நிய பாஷை பேசி பேசி விபச்சாரத்தை செய்வதுபோல் பாவத்தில் குளித்து எழும்புகிறாய்! பாவி உன்னை கர்த்தர் என்னச் செய்யப் போகிறார் தெரியுமா?

மகா கொடிய வியாதிகளால் சாவார்கள். அவர்களுக்காகப் புலம்புவாரும், அவர்களை அடக்கம் பண்ணுவாருமில்லை. நிலத்தின்மேல் எருவாவார்கள்; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் மடிந்து போவார்கள்; அவர்களுடைய பிரேதம் ஆகாசத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும். (எரே 16:4)

நீ என்னை விட்டுப் பின்வாங்கிப் பேனாய்; ஆகையால் என் கையை உனக்கு விரோதமாய் நீட்டி, உன்னை அழிப்பேன்; நான் பொறுத்துப் பொறுத்து இளைத்துப் போனேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 15:6)

இதோ, நான் பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப் பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (எரே 29:17)

இதினிமித்தம் உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக் கொள்ளப்படும்; நீயோவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப் போவாய்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டு போகப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (ஆமோஸ் 7:17)

இதன் படி உன்னைத் தள்ளி விடுவார். இம்மட்டுமா தண்டிப்பார்?

உனக்கு விரோதமாக என் எரிச்சலை விளங்கப் பண்ணுவேன்; அவர்கள் உன்னை உக்கரமாய் நடப்பித்து, உன் மூக்கையும் உன் காதுகளையும் அறுத்துப் போடுவார்கள்; உன்னில் மீதியாயிருப்பவர்கள் பட்டயத்தால் வெட்டுண்டு போவார்கள்; அவர்கள் உன் குமாரரையும் உன் குமாரத்திகளையும் பிடித்துக் கொள்வார்கள்; உன்னில் மீதியாயிருப்பவர்கள் அக்கினிக்கு இரையாவார்கள். (எசேக் 23:25)

மனுபுத்திரனே, இதோ, நான் உன் கண்களுக்கு விருப்பமானவளை ஒரே அடியினாலே உன்னைவிட்டு எடுத்துக் கொள்ளுவேன்; ஆனாலும் நீ புலம்பாமலும் அழாமலும் கண்ணீர் விடாமலும் இருப்பாயாக. (எசேக் 24:16)

பாவத்தைவிட பைபிள் வாசிக்கிறோம். ஆனால் நீ பாவத்தை செய்ய பைபிள் வாசிக்கிறாய்? உன்னையும் உன் குடும்பத்தையும் கர்த்தர் வேரோடு பிடுங்கிப் போடுவார்.

உன் மானம் காணப்பட அனேகங் காரியங்களுக்குக் கையளிப்பார்.

உன் மானம் காணப்பட நான் உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டாக எடுத்துப் போடுவேன். (எரே 13:26)

பிரியமானவர்களே! பாவத்தை

விதைக்கும் சாத்தானை அழிக்கவே கர்த்தர் வந்தார். ஆனால் சாத்தானுக்குள் வாழ்ந்து இயேசுவையே நாம் பாவம் செய்து சிலுவையில் அறைகிறோம்?

× வள்ளியூரிலே ஒரு சகோதரி சொல்லுகிறாள் என்னை விட 16 வயது இளையவன் என்னை திருமணம் செய்ய விரும்புகிறான். எனக்கு 2 பிள்ளைகள் உண்டு. வாழ்க்கை தருகிறேன் என்கிறான். இவன் கிடைக்க எனக்கு ஜெபம் ஏறெடுக்க விண்ணப்பிக்கிறாள்!

× பாளையங்கோட்டையிலே இன்னொரு சகோதரி ஜெபிக்கச் சொல்லுகிறாள் அதாவது புருஷன் ஊழியக்காரன். ஒரு வாலிபனோடு மூன்று முறை அபார்சன் பண்ணிவிட்டேன்! எனக்கு அவன் கிடைக்க ஜெபியுங்கள் என்கிறாள்!

தாறுமாறான வாழ்க்கை! தாறுமாறான எண்ணங்கள். தாறுமாறான ஜீவிதத்தை ஜீவிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆணும் பெண்ணும் மொத்தம் பாவத்தில் விழுந்து விட்டார்கள்.

பிறனுடைய மனைவியினிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும், ஆக்கினைக்குத் தப்பான். (நீதி 6:29)

ஆகவே 40 நாள் மழையினால் பேரழிவிற்கு கர்த்தர் இந்த தேசத்திற்கு கட்டளையிட்டு மூன்றிலே 2 பங்கு அழித்துப் போடுவார்!

தேசமே நீ கதறுவாய்!

லில்லிப்புட்டன்ஸ்கள் தேசத்தில் சகல பட்டணங்களிலும் இறங்கி மாமிசமான மனிதர்களை கொன்று போடுவார்கள்.

பாழாக்குகிறவன் எல்லாப் பட்டணங்களின் மேலும் வருவான்; ஒரு பட்டணமும் தப்பிப் போவதில்லை. பள்ளத்தாக்குகளும் கெட்டுப் போகும்; சமனான பூமியும் அழிக்கப்படும் என்று கர்த்தர் சொன்னார். (எரே 48:8)

தேசத்தில் மகாபெரிய பஞ்சம் ஏற்பட்டு தாய்மார்கள் பாலுக்கு பதிலாக இரத்தத்தையும் தான் பெற்ற பிள்ளைக்கு கொடுத்து சாகிற கொடுமை தேசமெங்கும் உண்டாகும்!

நீ சேர்த்து வைத்த பணமும் பொன்னும் வீண் ஆகும். இதனை நீ சாப்பிடவும் முடியாது இதனை வைத்து உணவு பொருட்கள் வாங்க முயற்சித்தாலும் அது உனக்கு தூரமாய் போகும்.

சவத்தையே தின்பீர்கள் பசியினால்!

தண்ணீர் தாகத்திற்கு அவனவன் தன் தன் மூத்திரத்தையும் குடிப்பீர்கள்! மகா பெரிய பஞ்ச கொடுமை இந்த தேசத்தில் உண்டாகப் போகிறது.

நித்தம் நீ மினுக்கிற உன் சரீரம் அழுகிய புண்களால் பருக்களால் நாறும். கிட்டேயே புருஷன் வராத படிக்கு



துர்நாற்றத்தை உன் சரீரத்தில் கர்த்தர் ஏற்படுத்தப் போகிறார்.

சொந்த சகோதரனிடத்தில் ஸ்திரீயும் பெற்றதாயிடம் ஈன்றெடுத்த மகனும் படுக்கையை பங்கிடும் மகாப்பெரிய கொடுமை இன்னொரு பக்கம் காட்டுத்தீப் போல் தீவிரித்தாடும்.

அழிவு அழிவு அழிவே தான் இனி அழிவு. நீ இனியாவது வாழ மனந்திரும்பு. பாவத்தை நிறுத்து. வேதத்தை வாசி எதிர்த்து நிற்காதே!

இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப் பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். (உபா 27:26)

வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகு. (தீத்து 3:10)

செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தியை பாழாக்குவேன். (எரே 6:2)

இரத்தஞ் சிந்தும்படிக்குப் பரிதானம் வாங்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்; நீ வட்டியையும் பொலிசையையும் வாங்கி, பொருளாசையினால் உன் அயலானுக்கு இடுக்கண் செய்து, என்னை மறந்து போனாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எசேக் 22:12


உன்னில் ஒருவன் தன் அயலானுடைய மனைவியோடே அருவருப்பானதைச் செய்கிறான்; வேறொருவன் முறைகேடாய்த் மருமகளைத் தீட்டுப் படுத்துகிறான்; வேறொருவன் தன் தகப்பனுக்குப் பிறந்த தன் சகோதரியைப் பலவந்தம் பண்ணுகிறான். (எசேக் 22:11)

**தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவர்கள் அவளுடைய வாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னிமையின் கொங்கைகளைத் தொட்டு, அவளிடத்தில் தங்கள் வேசித்தனத்தை நடப்பித்தார்கள். (எசேக் 23:8)**

இனியும் நீ திருந்தாவிட்டால் **உன் மூக்கையும் உன் காதுகளையும் அறுத்துப் போடுவார்கள்; உன்னில் மீதியாயிருப்பவர்கள் பட்டயத்தாலும் வெட்டுண்டு போவார்கள்; அவர்கள் குமாரரையும் குமாரத்திகளையும் பிடித்துக் கொள்வார்கள். உன்னில் மீதியாயிருப்பவர்கள் அக்கினிக்கு இரையாவார்கள். (எசே 23:25) ஜாக்கிரதை.**

# 2003-ல் கர்த்தர் அறிவித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி வருகிறது

## 2043-க்குள் தேசத்தில் 3-ல் இரண்டு பங்கு அழிந்து போகும்



1. தேசத்தில் மகாபெரிய கொடிய பஞ்சம் உண்டாகும். 7 ஆண்டுகள் நீடிக்கும்.
2. தேசம் இருளில் மூழ்கிப் போகும்.
3. பெட்ரோல் பஞ்சம் ஏற்பட்டு வாகனங்கள் ஒழிந்து போகும்.
4. இனியும் தேசத்தின் ஜனங்கள் மிருகங்களையே பழையபடி பயன்படுத்தும் காலம் நெருங்கி வருகிறது.
5. வீடுகள் கேட்பாரற்று கிடக்கும். இவைகளை ஏன் ஜனங்களுக்குப் கொடுப்பேன்.
6. பொன்னும் வெள்ளியும் உங்கள் முன்பு மலைபோல் குவிப்பேன் இது அதிசயம் என்கிறார் கர்த்தர்.
7. வானத்தின் மதகுகள் திறக்கப்படும். ஜனங்கள் குடியற்றுப் போவார்கள். தீவிரவார செயல் கட்டுக்கடங்காமல் போகும்.
8. அந்திக்கிறிஸ்து இந்தியாவில் பிறந்து வளர்ந்து வருகிற படியினால் இந்திய தேசத்திற்கு மகா மகா பெரும் துக்கம்.
9. சவக்காடுகள் தோன்றும்.
10. அரசுகள் இருக்கும். ஆனால் அதிகாரிகள் செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் இருக்காது.
11. துக்கத்திற்கு மேல் துக்கம் சில பிரதேசங்களில் உணவுகள் மிஞ்சியிருக்கும். ஆனால் ஜனங்கள் இருக்கமாட்டார்கள்.
12. சில இடங்களில் ஜனம் இருக்கும். உணவு இருக்காது. பஞ்சத்திற்கு மேல் பஞ்சம்.
13. ஆவிக்குரிய ஜனம் பசியோடிருப்பதை நான் சகித்துக் கொள்ளமாட்டேன் என்கிறார் கர்த்தர்.
14. இனி வீட்டிற்கு தேவைப்படும் உணவு சாமான்களை இலவசமாக கொடுக்க முன்வரும் அரசியல் கட்சியை என்றென்றைக்கும் ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
15. ரோடுகளில் ஆறு ஓடும்! ரோடுகளில் தூண்டில் போட்டு மீன் பிடிக்கப்படும்.



16. தேசத்தில் பயங்கர அழிவுகள் பல வழிகளில் நடக்கும். புதிய உன்படிக்கையின் கதவுகள் திறக்கப்படும்;
17. பூமி திறவுண்டு போகும். வானமண்டலத்தில் அதிசய மாற்றங்கள் உண்டாகும். அதிசய கோள்கள் உண்டாகும். நட்சத்திரம் பூமியை நோக்கி வரும்.
18. அரசியலில் நம்ப முடியாத மாற்றங்கள் உண்டாகும்.
19. பிணங்களை ஆகாயத்துப் பறவைகள் தின்னும். எடுத்து புதைக்க அரசாங்கமே வராது. அப்பேற்பட்ட இயற்கை பேரழிவுகளை கர்த்தர் கட்டளையிட்டார்.
20. ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகும்.
21. நிலநடுக்கமும் வரும்! நீர் தேக்க அழிவுகள் வரும். ஜல பிரளயமும் வரும்! புயலும் வரும், பொல்லாத வியாதிகளும் வரும்.
22. பாலும் தேனுமல்ல! இனி பஞ்சமும் பட்டினியும் தான் தேசத்தில் வரும்.
23. கொள்ளை நோய்களும் கொடுமைகளும் நடக்கும்.
24. கர்த்தர் பிஞ்சுகளையும் சேர்த்தே அழிக்கிறார். அழித்து தன் புதிய உடன் படிக்கையை கர்த்தர் நிறைவேற்றுகிறார்.
25. பாவத்தை குறித்துள்ள ஊழியம் தேசத்தில் விதைப்பது குறைவு. ஆசீர்வாதத்தைக் குறித்துள்ள ஊழியம் அதிகம் என்கிறார். வருகையை குறித்துள்ள ஊழியம் மிக மிகக் குறைவு என்று குமுறுகிறார்
26. கடையோர பிரதேசத்திற்கு மகா பேரழிவு. ஜனங்கள் பெருமளவு அழிந்து போவார்கள். ஜலத்தால்.
27. உலகிலேயே இப்படி ஒரு அழிவா என கேட்கும்படி தேசம் பாழாய் போகும்! மரங்கள் வேரோடு புடுங்கப்படும்.
28. நோவாகாலத்து அழிவுகளுக்கு ஒப்பான பேரழிவு. அதே நாற்பது நாட்கள் ஜலம் வற்றிப் போகாது. கல்மழையினாலும் கர்த்தர் வாதிப்பார்.
29. கொடூரமான செயல்களால் அரசு இயந்திரம் முடங்கிப் போகும்.
30. சோதோமுக்கு நெருப்பால் அழிவு. இந்த தேசத்திற்கு ஜலத்தாலும் நிலநடுக்கத்தாலும் கடுமழையாலும் புயலாலும் பயங்கர அழிவு.
31. மனித நடமாட்டமே இருக்காது. மறுபடியும் செப்பனிடப் படாதபடிக்கு இடித்துப் போடுவார்.
32. இனி அந்திக்கிறிஸ்துவின் தாக்கத்தால் சபைகள் இடிக்கப்படும்! துன்மார்க்கர்கள் எழும்புவார்கள்.
33. வசனத்திற்கு பஞ்சமுண்டாகும். அந்திக்கிறிஸ்துவின் அக்கிரமங்கள் அதிகமாகும்.
34. உங்கள் ஊரை நீங்களே போட்டோ பிடித்து வையுங்கள். அழிவுக்கு பின் பார்க்க பிரயோஜனப்படும்.

35. இந்த தேசம் 200 ஆண்டுகளுக்கு முன்புள்ள நிலை ஏற்படும். ஆள் அரவமற்ற தேசமாகும். மிஞ்சியிருக்கிற கொஞ்ச ஜனம் ஏன்தான் வாழ்கிறோம் என்று சொல்லி தவிக்கிற அங்கலாய்க்கிய காலம் இதோ சமீபமாகும்.

36. சில பகுதிகளில் பிணங்கள் மீன்கள் போல் நெல்மணிகள் போல் கிடக்கும்.

37. குடும்ப கட்டுப்பாடு ஒழிந்து போகும். எங்கும் விபச்சாரம் வெளிப்படும். ஜாதிகள் அற்றுப்போகும்! மதங்கள் ஒழியும்!

38. ஒரு ஆணுக்கு அநேகம் பெண்கள் மனைவியாயிருப்பார்கள் என்பதை விட ஒரு பெண் அநேக புருஷர்களை வைத்துக் கொள்வாள்.

39. இனி அறுவடைதான்! விதைக்க நேரமில்லை!

40. ஒரே ஆட்சி உண்டாகும்!

41. சகல ஜாதிகளுக்கும் நானே தேவன் என்று காண்பிப்பேன்! இனி எந்நாளும் அழுகைதான்!

42. தேசத்தின் கொடிகள் அடிக்கடி அரைக்கம்பத்தில் பறக்கும்.

43. பெருமைக்குரிய ஊழியக்காரர்கள் காணாமல் போவார்கள். பெருமையுள்ள 12 தேசங்கள் விழும்.

44. விழுந்திருந்த 12 தேசங்கள் எழும். விற்றலும் கொள்ளலும் நடக்கும்.

45. அழிவுகள் குறித்து சகல ஜாதிகளுக்கும் சொப்பனங்களாலும், தரிசனங்களாலும் அறிவிப்பேன். இனி காலமில்லை!

46. உலகதிருச்சபை குமரியில் கட்டுவேன். புதிய எருசலேம் குமரிமாவட்டத்தில் உண்டாகும். இனி நான் வந்து வாசம் செய்வேன்.

47. நான் அநேகருடைய பந்தியில் அமர்ந்து போஜனம் பண்ணுவேன்.

48. சூரியன் சந்திரன் ஒழிந்து போகும். வால் நட்சத்திரம் தோன்றும்.

49. பெண்ணினம் பலுகி பெருகும். ஆணினம் முற்றிலும் குறைந்து போகும்.

50. திருமண பந்தங்கள் ஒழிந்து போகும். சட்டத்தின் கொடுமைகள் உண்டாகும்.

51. கர்த்தரின் ஜனம் சிறை பிடிக்கப்படும். நிலைநிற்கிறவனுக்காக கர்த்தர் யுத்தம் செய்வார்.

52. தீவுகள் காணாமல் போகும். வரைபடங்கள் சுருங்கிப்போகும்.

53. மதுரைக்கும் திருச்சிக்கும் நிலநடுக்கம் உண்டாகும்.

55. தேசத்தை இஸ்மவேல் ஆளுவான். அதாவது இந்தியாவை முஸ்லீம் ஒருவன் ஆளுகைக்கு கொண்டு வருவான். இது நடக்கும். இது அதிர்ச்சியாயிருக்கும் உங்களுக்கு.

56. இந்தியாவிலே இவன் கொடி பறக்கும்.

57. இவன் தான் 666.



58. இந்தியாவில் யுத்தம் உண்டாகும் என்பது நிச்சயம்.

59. சென்னை ஒழியும்.

60. ஜலத்தால் மூழ்கும்.

61. இலங்கை சமுத்திரத்தால் மூழ்கும்.

62. கடற்கரை ஜனங்களுக்கு ஐயோ!

63. புதிய சென்னை உருவாகும்.

64. கோவை குலுங்கும்.

65. விக்கரகங்கள் பூமியல் புதையுண்டு போகும்.

66. மலைகள் குன்றுகள் பெயர்த்துப் போடப்படும்.

67. ஜெபிக்கிறவர்களிடத்தில் அந்திக்கிறிஸ்து பொய் அபிஷேகத்தை ஊற்றுவான்.

68. அவன் வல்லமையாய் இருதயத்தை ஆளுவான்.

69. இச்சைகள் பெருகி சிறுபிள்ளைகள் கற்பம் தரிப்பார்கள்.

70. அநியாயம் தலைவிரித்தாடும்.

71. நீதி தேடினாலும் கிடைக்காது.

72. நீ எல்லா பக்கங்களிலும் கட்டப்படுவாய்.

73. சிறையிருப்புகள் உன்னை சூழ்ந்து கொள்ளும்.

74. பெற்றோருக்கு முன்பாக பிள்ளைகள் விபச்சாரம் செய்வார்கள். இதை கண்கள் காணும்.

75. தூய்மையான அன்பு வற்றிப் போகும்.

76. அவனவன் தன் சுய இச்சையின்படி நடப்பான்.

77. பாதாளங்கள் திறக்கும்.

78. சத்துரு சிங்கம் போல் எழுவான்.

79. பெருங்காற்று வீசி பூமியை பெயர்த்துப் போடும்.

80. உன் சமாதானம் எடுத்துப் போடப்படும்.

81. ஊழியக்காரர்கள் மேல் அரசு அம்புகளைத் தொடுக்கும்.

82. விக்கிரகங்களின் கொடி பறக்கும்.

83. வியாதி என்ற கொடி பறந்து தினம் தினம் செத்து வீழ்வார்கள்.

84. மருத்துவமே குழம்பி தவிக்கும் கொள்ளை வியாதிகளைக் கண்டு.

85. ஜனங்களை திகிலும் கலக்கமும் பிடிக்கும். காயீனைப்போல் நிலையற்றவனாய் அலைவாய்.

86. செங்கடல் மறுபடியும் பிளக்கும்.

87. குமரிக்கு ஐயோ!

88. கடையலுக்கு ஐயோ!

89. தேசத்தில் ஒரு பிடி ஜனங்கள் மீதியாயிருப்பார்கள்.

90. கிறிஸ்தவன் தமிழ்நாட்டை ஆளுவான்.

# கர்த்தரால் ஞானஸ்நானம் பெற்றேன்



நான் ஆர்சி. மதப்பிரிவில் பிறந்தவன். இந்த உலகத்தைக் குறித்தோ என் தாய் தகப்பன்மார் யார் என்றே எனக்கு தெரியாத காலத்தில் என் பெற்றோர்கள் எனக்கு ஞானஸ்நானம் சாமியார் மூலம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

உண்மையிலேயே நான் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. அன்று எனக்கு என்ன நடந்தது என்று எனக்கே தெரியாது.

ஆனால் என் கர்த்தர் எனக்கு தரிசனமாகி ஞானஸ்நானம் எடுக்க மறைபொருளோடு உணர்த்தினார்.

## நதியில் தரிசனமான இயேசு

6-02-2003 அன்று இரவு 10.55 மணிக்கு இயேசுவே இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு இடது பக்கமும் வலது பக்கமுமாக முகத்தை திரும்பி, திரும்பி பார்த்து என்னைத் தேடினார்.

நான் என்னைத் தாழ்த்தி ஒப்புக் கொடுத்தேன். அதற்காக 15 நாட்கள் உபவாசித்து ஜெபித்தேன். ஆண்டவரே எந்த ஞானஸ்நானம் உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. தண்ணீரால் தெளிக்கிறார்கள். தொட்டியில் முக்குகிறார்கள், குழந்தையிலேயே தண்ணீர் தெளித்து போ! ஞானஸ்நானம் பெற்றாச்சு என்று சொல்லி அனுப்புகிறார்கள், நான் என்ன செய்ய ஆண்டவரே! நீர் எனக்கு ஞானஸ்நானம் தர வேண்டும் என்று இரவும் பகலும் தியானித்து விண்ணப்பித்தேன்.

அதற்கும் கர்த்தர் உத்தரவு தந்தார். நான் நானே வருவேன்! நானே தருவேன் என்று பதில் தந்தார்.

இது நடக்கிற காரியமா? ஆனால் நடந்தது. 15-02-2003 எனக்கு மாறெும் அதிசயமான நாள்! ஞானஸ்நானம் எடுக்க (அதாவது மூழ்கிஸ்நானம்) முடிவு செய்து உபவாசித்திருந்து கர்த்தர் காண்பித்த தரிசன நதியை தேடி தேடி அலைந்து அதுவும் 14-02-2003 அடையாறு ஜேம்ஸ் என்ற நண்பர் மூலம் தெரிந்து கொண்டு 15-02-2003 அன்று காலையிலேயே சென்றோம்.... நான் மனைவி பிள்ளைகள் ஜேம்ஸ் நண்பருமாக கடந்து சென்றோம். அந்த நதி ஒக்கியம் துரைப்பாக்கம் பக்கத்தில் இருந்தது.

நான் தரிசனத்தில் இயேசுவை எப்படி கண்டேனோ அப்படியே இயேசு நதியில்



நிற்பதைக் கண்டேன். ஊழியக்காரர் ராய் அவரது தாய் தகப்பன் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஐக்கியமானவர்கள்.

ஆயத்த ஜெபத்திற்காக ஜெபித்தபோது அபிஷேக மழையிலும் வல்லமையான அக்கினியினாலும் நான் பயங்கரமாக நிரப்பப்பட்டேன்.

100 சதவீதம் அபிஷேகத்திற்குள் முழுமையாக நனைந்தபோது நான் உன்னை உலக அளவில் ஊழியத்திற்காக எடுத்துச் செல்வேன் என்று தீர்க்கத்தரிசனம் சொன்னார்கள். ஊழியக்காரர் எனக்காக ஜெபித்து பின் நதியில் இறங்கினோம்.

## அதிசயம்

எனக்கு அவர் சொன்னார் நான் ஜெபித்து விட்டு உன் சிரசில் கரம் வைத்து தண்ணீருக்குள் அமுத்துவேன். மூக்கில் தண்ணீர் ஏறாதபடிக்கு மூக்கை என்னைப் பிடிக்கச் சொன்னார்.

ஊழியக்காரர் ஜெபித்போது எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். வல்லமைக்குள்ளும் அக்கினிக்குள்ளும் அபிஷேகத்தால் நான் பயங்கரமாய் ஆட்கொள்ளப்பட்டேன்.

இருவருக்கும் இடைவெளி இருந்தது. அவர் ஜெபித்துக் கொண்டிருக்கும் வேளையில் கர்த்தருடைய கரம் இறங்கி என் மூக்கைப் பிடித்து இன்னொரு கரம் சிரசில் வைத்தும் சாய்ந்து நான் மெல்ல மெல்ல அபிஷேகத்தோடு மூழ்கினேன்! ஞானஸ்நானம் தர ஊழியக்காரர் கண் திறந்து பார்த்தார் என்னைக் காணவில்லை!

உடனே கர்த்தர் அவரிடம் பேசியிருக்கிறார். நானே கொடுத்தேன்! தூக்கிவிடு என்று கர்த்தர் கட்டளை கொடுக்க ஊழியக்காரர் கரத்தால் தண்ணீருக்குள் தேடி பிடித்து தூக்கி நிறுத்தினார்.

மறுபடியும் அவர் ஜெபிக்க மீண்டும் கர்த்தர் தரிசனமாகி ஆள்காட்டி விரலை நீட்டி பிறவிரல்களை மடக்கிய நிலையில் ஒரு கரம் மட்டும் என் நெற்றிப் பொட்டை நோக்கி ஒரு வட்ட ஒளிக்குள் பிரகாச மகிமையோடு கண்டேன்!

அவர் கரத்திலிருந்து வல்லமை புறப்பட்டு மறுபடியும் நீருக்குள் நெடுஞ்சான் கிடையாக அமிழ்ந்து போனேன். கர்த்தர் ஊழியக்காரரிடம் சொல்லியிருக்கிறார் வல்லமை கொடுத்தேன். தூக்கி விடு என்று சொன்ன போது தான் ஊழியக்காரர் இரண்டாவது முறையாக அமிழ்ந்து போன என்னை தூக்கி விட்டார்.

மூன்றாவது முறையாக ஜெபிக்கும் போது அதே படியாக அவர் கரம் எனக்கு முன்பாக வந்து பிரகாசித்தது. அதிலிருந்து புறப்பட்ட அபிஷேகத்தால் நான் மீண்டும்

நனைக்கப்பட்டு மீண்டும் சாய்ந்து அமிழ்ந்து கொண்டேன்.

கர்த்தர் ஊழியக்காரரிடம் மீண்டும் பேசி அபிஷேகம் கொடுத்தேன் தூக்கி விடு என்று சொல்ல அவர் மூன்றாவது முறையாக தூக்கி விட்டார். இப்படியாக கர்த்தர் ஞானஸ்நானம், வல்லமை, அபிஷேகம் தந்து என்னை புதிய மனிதனாக்கினார். இது உலக அதிசயம் என்று கர்த்தரின் ஊழியக்காரர் என்னை கட்டித்தழுவி அழுது பின்வாங்காதே என்று சொன்னார். கர்த்தர் இவ்விதமாக தரிசனம் தந்து ஞானஸ்நானம் கொடுத்தார். ஊழியக்காரர் ஜெபிக்கத் தான் செய்தார். அவர் கைநீட்டினாலும் எட்டாத தூரத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். நிஜத்தில் தேவன் எப்படியிரப்பாரோ அப்படியே நான் ஜலத்தில் கர்த்தரைப் பார்த்தேன். நான் பார்த்த இயேசுவை கரையில் நின்றவர்களும் பார்த்திருக்கிறார்கள்.

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லகிறேன். (யோவான் 3:5)

இந்த வசனத்தை கர்த்தர் உறுதிப்படுத்தி எனக்கு தரிசனமாகி ஞானஸ்நானம் தந்து மெய்யான ஞானஸ்நானம் மூழ்கிஸ்நானம் மற்ற ஞானஸ்நானம் செல்லாது என்றும் கர்த்தர் அறிவித்து இதை தேசமெங்கும் அறிவிக்கச் சொன்னார். நீங்களும் இயேசு சொன்ன வசனத்திற்கு கீழ்ப்படியுங்கள்.

**ஊழிய வாக்குத் தத்தம்**

**இதோ போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்திரமாக்குகிறேன். நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளை பதருக்கு ஒப்பாக்கி விடுவாய். (ஏசா 41:15)**

## அக்கினியில் படுத்தேன்

இந்நிகழ்ச்சியின் முன் 24-01-2003 அன்று சென்னை ஆவடியில் ஒரு இரவு முழுவதும் அக்கினியில் தனியறையில் படுத்தேன். ஒரு அக்கினி மென்மையான அக்னி என்ற கட்டிலில் படுத்தேன். அதாவது நிலத்திலிருந்து ஒரு இஞ்ச் மேலே என் உடல் அக்னியில் ஆடிக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில் இந்த பூமியை மறந்து கர்த்தரின் வருகை சம்மந்தமான தரிசனம் பார்த்துக் கொண்டேயிருப்பேன்.

இன்னொரு நாள் ஒரு இரவு முழுவதும் ஜீவ ஒளிக்கற்றை பரலோகத்திலிருந்து புறப்பட்டு தங்கிய அறைக்குள் வெளிச்சமாய் வந்து நின்றது. ஏற்கெனவே



விளக்குகளை அணைக்க சொல்லியிருந்தார். இருட்டில் எப்படி வெளிச்சம் என்று பார்த்தால் சுவிச் எல்லாம் ஆப். பேன் மட்டும் ஓடுகிறது. ஆனாலும் வெளிச்சம்....

எனக்கு சின்ன 1/4 மயக்கம்..... என் இயேசு பரலோகத்தில் நின்றார். நானே உனக்கு ஜீவஒளியாக இருக்கிறேன்! என்ற சப்தம்... என் வருகையை நீ அறிவி! இதோ சீக்கிரம் வருகிறேன் என்று கர்த்தர் தரிசனமாய் பேசினார். மேலும் எத்தனையோ கர்த்தரின் வருகையின் தரிசனங்களை நிஜம்போல் பார்த்தேன்.

### கர்த்தரின் மடியில் படுத்தேன்

இந்த நாளிலும் கர்த்தர் தனிமையில் படுக்க வைத்தார். அன்றும் வல்லமையினாலும் அபிஷேகத்தினாலும் என் உடல் துடித்துக் கொண்டிருந்தது. ஒரு இரவு முழுவதும் இந்த நிகழ்வு தொடர்ந்து கொண்டிருந்தது.

முழிப்பு வரும்போதெல் லாம் நான் அபிஷேகத்தில் நனைந்து கொண்டிருப்பேன். தரையிலிருந்து ஒரு இஞ்சு உயர்ந்த நிலையில் வல்லமையால் துடித்துக் கொண்டே படுத்தேன்!

என்ன ஆனந்தம்! இப்படி விடிய விடிய கர்த்தரின் மடியில் நான் படுத்தது போல் உணர்ந்தேன்.

இது கற்பனையல்ல! நிஜம்! நிஜ சாட்சி! நீங்கள் அவிசுவாசம் கொள்ள வேண்டாம். எத்தனை தரிசனங்கள் எல்லாமே இந்த உலகத்தைக் குறித்தும் அவர் வருகையைக் குறித்துமே தரிசனங்களைத் தந்தார்.

ஆகவே உங்களுக்குச் சொல்லகிறேன் கர்த்தருடைய வருகை குமரி மாவட்டத்தில் தான்.

ஏனெனில் குமரி மாவட்டத்தைக் குறித்து கர்த்தர் அனேகக் காரியங்களை பேசியிருக்கிறார். அதில் அவருடைய வருகை குமரி மாவட்டதில் தான் எதிர் பார்க்க முடியும்.


நான் வடக்கேயிருந்து ஒருவனை எழும்பப் பண்ணுவேன்; அவன் வருவான்; சூரியோதைய திசையிலிருந்து என் நாமத்தைத் தொழுது கொள்ளுவான்; அவன் வந்து அதிபதிகளைச் சேற்றைப் போலவும், குயவன் களிமண்ணை மிதிப்பது போலவும் மிதிப்பான். (ஏசா 41:25)

தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியில் சுட்டெரிப்பார். இது ஒரு நியாயத்தீர்ப்பின் அடையாளம்.

சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப் படுவதாக. (சங் 113:3)

**சூரியன் உதிப்பதும் மறைவதும் குமரி மாவட்டத்தில் தானே. உலகத்திலேயே எருசலேமுக்கு ஒப்பான ஒரு மாவட்டம் உண்டு என்றால் அது குமரி மாவட்டம் தானே. யோசியுங்கள். இடித்தலும் கட்டுதலும் இந்த குமரியில் தான் . ஆகவே நீ எச்சரிக்கையாயிரு.**

# ஆசிரியரின் அதிசய சாட்சி



**கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும், உயர்த்துகிறவரு மாயிரக்கிறார். (1சாமு 2:7)**

நான் சென்னை ஆவடியிலும், அம்பத்தூரிலும், சாலிகிராமத்திலும் குடியிருந்து வந்தேன். சாலிகிராமத்தில் பிரிண்டிங் பிறஸ் நடத்தி வந்தேன். காதல் அலை எனும் திரைப்படத்தையும் தயாரிக்கும் பணியில் களம் இறங்கினேன். அதற்கு முன்னால் உன் விழிகள் வாரபத்திரிகையை நடத்தி வந்தேன். தமிழகம் முழுவதும் பல லட்சம் பிரதிகளை அச்சிட்டு வினியோகித்து வந்தேன். அதனால் வியாபாரம் பெருகியது. அதனால் தினம் வரும் வருமானம் கணக்கில் அடங்காததாய் இருந்தது.

ஆனாலும் நான் கர்த்தருக்கென்று வாழாமலும் கர்த்தரின் பிரமாணங்களைக் கைக் கொள்ளாமலும் பீடி கிகரெட், மதுபானம் என்று வாழ்ந்து வந்தேன்.

எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் தேவனை தொழுது கொள்வதில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தேன். பெந்தேகோஸ்தே ஜெபங்களை கிண்டல் அடிப்பதும் கேவலமாக கேசுவதும் எனக்கு வாடிக்கையான ஒன்றாக இருந்தது. தேவன் மனுஷர்களோடு பேசுவாரா? ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளாத சுபாவமும் ஒத்துக் கொள்ளாத சுபாவமுமாக இருந்தேன்.

தேவனுடைய கோபம் என்மேல் இறங்கியது.

வெள்ளியையும் பித்தளையையும் இரும்பையும் ஈயத்தையும் தகரத்தையும் அக்கினியில் ஊதி உருக்குவதற்காகக் குகைக்குள் சேர்க்கிறது போல, நான் என் கோபத்தினாலும் என் உக்கிரத்தினாலும் உங்களைச் சேர்த்து வைத்து உருக்குவேன்.

நான் உங்களைக் கூட்டி, என் கோபமாகிய அக்கினியை உங்கள் மேல் ஊதுவேன்; அதற்குள்ளே நீங்கள் உருகுவீர்கள்.

குகைக்குள் வெள்ளி உருகுமாப்போல நீங்கள் அதற்குள் உருகுவீர்கள்; அப்பொழுது கர்த்தராகிய நான் என் உக்கிரத்தை உங்கள் மேல் ஊற்றிவிட்டேன் என்று அறிந்து கொள்வீர்கள் என்றார். (எசேக் 22: 20-22)

இந்த வசனத்தின்படி என்னை உருக்கினார்! கலக்கினார், அதம்பண்ணினார்! வேலையாட்கள் ஓடிவிட்டார்கள். தொழில் படுத்தது. திரைப்பட பணி நின்றது. வைத்தீஸ்வரர் பக்கத்திலுள்ள ஒருவர் பெருந்தொகையை திட்டமிட்: ஏமாற்றினார்?

அந்நாளில் தினம் 25000 ரூபாய் வட்டி கொடுக்கும் நிலையில் பாதாளத்தில் தள்ளப்பட்டேன். தொழில் நின்றது. வாடகை கொடுக்க முடியவில்லை! என் வருமானங்களை கர்த்தரே முடக்கினார். மந்திரங்கள் வந்தது!

சுருண்டு விட்டோம். நம்பிக்கையிழந்து விரத்தி வந்தது. சாவு ருசியாக இருந்தது. உற்றார் உறவினர்கள் கைவிட்டார்கள்! நண்பர்களும் என்னை ஏமாற்றினார்கள்! சகல நாசமும் எனக்குள் வந்தது.

நாசத்துக்கு மேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது; அசுப்பிலே என் கூடாரங்களும்; ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப்



படுகிறது. (எரேமி 4:20)

சமாதானத்தை குவாட்டர் சாராயத்தில் தேடினேன். கடைசியில் குவாட்டருக்கும் காசு இல்லாமல் தெருவில் நின்றேன். பீடி, சிகரெட் தினமும் 100க்கு மேல் ஸ்மோக் பண்ணுவேன். கதை கவிதை நாவல் கட்டுரைகள் எழுதி வரும்போது இவைகள் எனக்கு துணையாக வந்தது.

ஆகையால் இப்போ 1 பைசா இல்லை! சகல வாசல்களும் பூட்டப்பட்டன! கடன்காரர்களை கண்டு கலங்கினேன்! மறைந்து வாழ்ந்தேன்! பசியெடுத்தது

சென்னையில் உள்ள அனைத்து உயர்ரக ஓட்டல்களில் சாப்பிட்ட நான் பசிக்காக சென்னையில் நாய் மாதிரி அலைந்தேன்! 1 ரூபாய்க்கு 2 இட்லி ப்ளாட்பாமில் சாப்பிட்டேன். அதன்பின் அதுவும் இல்லாமல் இருந்தது.

40 நாட்கள் வரைக்கும் சாப்பாடே இல்லாமல் பச்சை தண்ணீர் குடித்து வாழ்ந்தேன். சிகரெட் குச்சங்களை பொறுக்குவதற்காக அதிகாலையில் நடப்பேன். ஒரு கர்ச்சிப்போடு பெரிய பெரிய குச்சங்களை கண்டால் கர்ச்சிப் கீழே போட்டு அதனை பொறுக்கி எடுத்து மறந்திருந்து கண்ணீரோடு ஸ்மோக் பண்ணுவேன்.

கடைசியில் அந்த குச்சங்களும் இல்லாமல் போனது. ஸ்மோக் பண்றவங்க கடைசி வரைக்கும் ஸ்மோக் பண்ணிடுவாங்க

பிரயோஜனமாக ஒரு குச்சம் கூட கிடைக்காது. வீட்டு ஓணர் வேளியே தள்ளினார். காரின் வீல்களை ஒன்றன் பன் ஒன்றாக விற்றோம். ஓடுகிற ஃபேனை கழற்றி சாப்பாட்டுக்காக 50 ரூபாய்க்கு ஆவடி மார்க்கெட்டில் ஒருவருக்கு கூவி கூவி விற்றோம்.... பஞ்சமும் பசியும் தலைவிரித்தாடியது.

நான் எழுதின நாவல்கள் பத்திரிகைகள் கட்டுரை புத்தகங்கள் எல்லாவற்றையும் என் மனைவி பேப்பர் கடைக்கு விற்றாள்.

18 வருட பத்திரிகையின் அடையாளச் சின்னங்கள் என் மனைவி மூலம் அழிக்கப்பட்டது. என் வரலாறு முடிந்தது! என்று கலங்கினேன்.

பிள்ளைகள் ஆவடி நாசரேத் பள்ளிக்கூடத்திலிருந்து துரத்தப் பட்டார்கள். சகலமும் போச்சு! சகலமும் அழிந்தது. வெறும் ஜடங்களாக மாறினோம். கிரடிட் கார்டு குண்டர்கள் எங்களைத் தேடினார்கள். ஊரிலும் போக முடியவில்லை. என் சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் 15 கி.மீ தொலைவில் உள்ள கடையாலுமூடு என்ற கடையல்.

தேவன் அளவுக்கு அதிகமாக நெருக்கினாலும் என் பாவங்கள் சாபங்கள் நிமித்தம் அடித்து உருக்கினாலும் அவர் என்னோடு இருக்க ஆரம்பித்தார். கலங்காதே என்றார்! கைவிடமாட்டேன் என்றார்! பயப்படாதே என்றார்!

எனக்கொரு அம்பாசிடர் கார் இருந்தது. பஞ்ச காலத்தில் ஒவ்வொரு கார் டயரை கழற்றி என் மனைவி அதை உருட்டிக் கொண்டு ஒவ்வொரு பஞ்சர் கடையாய் சுற்றித் திரிந்து அதை கிடைக்கிற விலைக்கு விற்று அரிசி வாங்கி கஞ்சி வைத்து சாப்பிட்டோம்.

இப்படி அம்பாசிடர் காரின் நாலு வீல்களையும் வாரமொன்றுக்கு ஒவ்வொன்றாக கழற்றி விற்றோம். 200 ரூபாய் வைத்து தருவார்கள்.

இப்போது கார் ஜாக்கியில் மட்டும் நின்றது. கார் ஏ.சி-யை கழற்றி 450 ரூபாய்க்கு விற்றோம். ஓடுகிற பேன்களை கழற்றி 50 ரூபாய்க்கு விற்று பேன் இல்லாமலே சென்னையில் வாழ்ந்தோம். இருக்கிற மேசை, செயர்கள் எல்லாம் இப்படியே விற்று விற்று வந்தோம்.

கடைசியில் 700 ரூபாயுடன் சென்னையிலிருந்து கர்த்தரே அபிஷேகம் செய்து ஞானஸ்நானம் தந்து உலகத்திருச்சபை கட்ட உன் சொந்த தேசம் போ என்றார்.

இருப்பதோ 700 ரூபாய். எப்படி

உலகத் திருச்சபையின் பணியை துவக்குவது. சொந்த ஊருக்கு கர்த்தர் கொண்டு வந்தார். 700 ரூயாயும் கட்டிடப் பணியின் அளவு எடுத்த மேஸ்திரிக்கு கொடுத்தோம்.

ஓப்பன் கிரண்ட், காம்பவுண்ட் இல்லை! பாத்ரூம் இல்லை, தண்ணீர் இல்லை. உடுக்க மாற்றுத் துணி இல்லை. மனைவிக்கு ஒரு சாரி செட். மழை பெய்யும் போது மறையக் கூட இடம் இல்லை! பெய்யும் மழையிலும் அடிக்கும் வெயிலிலும் குளிரிலும் காய வைத்தார்.

ஆனாலும் இரத்த கண்ணீர் வடித்தாலும் ஆவிக்குள் சந்தோஷம். கர்த்தர் ஒரு நாள் உயர்த்தப்போகிறார் என்ற நம்பிக்கையில் வளர்ந்தோம்!

இங்கு வந்தும் சுமார் 60 நாட்களுக்கு மேல் சாப்பிட வழியில்லாமல் றெம் பச்சத் தண்ணீரில் வாழ்க்கையை ஓட்டினோம்! பசி வந்தாலும் உள்ளுக்குள் அமுது கர்த்தரின் பாதபடியில் சுருண்டு கிடப்போம்.

என் மகன் 1 ரூபாய் மிட்டாய்க்காக அங்கிள் ஒரு ரூபாய் தாங்களன வருவோர் போவோரிடத்தில் பிச்சை கேட்பதுக்கு சமமாக கெஞ்சுவான். அந் ஒரு ரூபாயும் கூட கிடைக்காமல் போனது!

அன்று கதறினேன்! கர்த்தரிடத்தில் அழுதேன். கடந்த காலத்திற்காக அழுதது ஒரு விதம். இப்போ என் மகனின் நிலைக்காக அழுதேன். நீர் எங்கே என்றேன்.நீர் இருக்கிறீரா? என்று கேள்வி கேட்டேன்.

பச்சை தண்ணீரை பால் குப்பியில் என் மகனுக்கு பால் கொடுப்பது போல் கொடுத்து கதறினேன். இப்படி எத்தனை நாட்கள்......

தாங்க முடியவில்லை! இயேசுவே என்றேன் மனதுருகி அழுதோம். என் சத்தத்தை அவர் கேட்டார்! பதில் சொன்னார்! இருக்கிறேன் என்று எனக்கு வெளிப்பட்டார்! அவரைப் பார்த்தேன்! கண் குளிரப் பார்த்தேன்! உயிருள்ள தேவன் நின்றார்! இந்த பாவிக்கு தரிசனமானார்! புன்னகைத்தார்!

இந்த பஞ்ச காலம் இன்றோடு முடிந்து விடும் என்றார்! காயப்போட்ட என் சட்டை வெண்மையாக துலங்கியது.

சொன்னார்! பாக்கெட்டிலிருந்து எடு என்றார்! இன்றோடு உன் பசி தீர்ந்தது. இனி ஒரு நாளும் இல்லை என்று சொல்லவே மாட்டாய் என்றார். உலகத் திருச்சபை இங்கு கட்டப்படும் என்றார்.

உலகத்தை அசைக்கும் ஊழியத்தை கர்த்தரே நின்று செய்வேன் என்றார். ஊழியத்திற்கு ஜீவஒளி ஜெபக்கோபுரம் என்று பெயர் வைத்தார். இரண்டு பத்திரிகைகள் நடத்த பெயர் தந்தார். ஜீவஒளி ஜெபக்கோபுரம் மாதஇதழ், இயேசு பெரியவர் வார இதழ். உனக்கு தொழில்கள் உண்டாகும் என்றார். மகாபெரிய வெளிச்சத்திற்குள் நின்று பேசினார்! துலக்கமான சட்டையில் ரூபாய் இருந்தது.

எடுத்தேன்! என்னா ஆச்சரியம்! பரமபிதாவே எனக்கு தந்தார்! ஆண்டவரே என்று கதறினேன்! நம்ப முடியாத அதிசயம்!

மறுபடியும் சொன்னார்! இன்று முதல் போஜனத்தைக் கட்டளையிட்டேன் என்று சொல்லி மறைந்தார்!

நம்ப முடியாத அதிசயம்! ஆச்சரியப்படத்தக்கதான அதிசயம்! அவர் தரிசனத்தையும் செய்கையும் கண்டு சந்தோஷத்தில் தள்ளாடினேன்! என்னா ஆனந்தம்! அன்று முதல் இந்நாள் வரை கர்த்ததே எனக்கு வெளிச்சமானார்!

இன்று வரைக்கும் நான் பொருளாதாரத்தில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு கர்த்தர் விடவில்லை!

4 மாடி கட்டிடம் கட்டினோம். எல்லா மாடிகளிலும் ஏ.சி. வைத்தோம். இயேசு பெரியவர் வாரஇதழ், ஜீவஒளி ஜெபக்கோபுரம் மாதஇதழ் அரசு ஆணைப்படி வெளியிட்டோம். சீயோன் ரெக்கார்டிங் தியேட்டர் தந்தார். ஜீவஒளி கொலைக்காட்சி, விழிகள் தொலைக்காட்சி தந்தார்.

மற்றும் இழந்ததை எல்லாம் திரும்ப தந்தார். மறுபடியும் ஜே.பி. பிறஸ், ஜே.பி ஸ்டுடியோ, சீயோன் சூப்பர் மார்க்கெட், சீயோன் டிரேடேர்ஸ், சீயோன் ஆப்செட் பிறஸ், சீயோன் டிராவல்ஸ், மகிமை புரடக்சன்ஸ், சீயோன் மண்டபம் ஏ.சி. ஆகியவைகளை தந்து உர்த்தினார். தேவன் ஜீவன் உள்ளவர்!

இன்னும் நெருக்கத்திலும் நடத்தினார் நடத்துகிறார். இந்த கட்டிடம் கட்ட நன்கொகை வாங்கவில்லை! உண்டியல் எடுக்கவில்லை. காணிக்கை பிரிப்பதில்லை. ஸ்பான்சர் வாங்கவும் இல்லை. எல்லாமே கர்த்தரே ர நின்று செய்தார் இந்த ஊழிய பயணத்தில் சுமார் 20 ஆண்டுகளாக கர்த்தரே எனக்கு தெய்வமாக இருந்து வருகிறார்!

பிரியமானவர்களே! நீங்களும் வெட்கப்பட்டிருக்கலாம். நம்புங்க நம்ம இயேசுவை! உங்களையும் உயர்த்துவார்!.

## தேவனின் வேண்டுகோள்

இந்த ஜீவஒளி ஜெபக்கோபுரம் வழியாக தேசத்தில் கடைசிகால சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் சொல்லியிருந்தார். நாங்களும் இந்த இரண்டு பத்திரிகைகள் முலமாக எங்களால் முடிந்த சுவிசேஷத்தை பத்திகைகள் மூலமாகவும் தொலைகாட்சி மூலமாகவும், உபவாசக் கூட்டங்கள் மூலமாகவும் செய்து வருகிறோம். 2015 -க்கு பிறகு பொருத்தனைகள் மூலம் இந்த பத்திரிகைகளை லட்சக் கணக்கில் அச்சிட்டு நாங்கள் இலவசமாகக் கொடுத்து வருகிறோம்.

இந்த சுவிசேஷம் பல மொழிகளில், பல தேசங்களில் கடந்து போக உங்கள் காணிக்கைகளையும் , உங்கள் நன்கொடைகளையும் நீங்கள் விரும்பினால் அனுப்புங்கள்.

நீங்கள் நேர்ந்து கொண்ட உங்கள் பொருத்தனைகளை இந்த புத்தக ஊழியத்துக்க கொடுங்கள். நீங்கள் நோய் நீங்கிப் பிழைக்க உங்கள் வீடுகளில் ஆசீர்வாதம் தங்க, நீங்கள் பரிசுத்தம் ஆக உங்கள் பொருத்தனைகளை இந்த புத்தக ஊழியத்துக்க செலுத்துங்கள்.

உங்கள் கற்ப தடை நீங்க, உங்கள் கற்பத்தில் குழந்தை தங்க உங்கள் பொருத்தனைகளை இந்த ஊழியத்துக்கு செலுத்துங்கள். நிறைவேற்றுங்கள். நீங்கள் பரிசுத்தம் அடைய உங்கள் ஜென்ம சாபம் நீங்க இந்த ஊழியத்துக்கு உங்கள் பொருத்தனைகளை செலுத்துங்கள். கட்டப்படாத உங்கள் வீடுகள் கட்டப்படவும், கிடைக்காத வேலைகள் உங்களுக்கு கிடைக்கவும் உங்கள் பொருத்தனைகளை இந்த சுவிசேஷ ஊழியத்துக்கு செலுத்துங்கள்.

படுத்து கிடக்கிற உங்கள் தொழில்கள் எழும்பி பிரகாசிக்க உங்கள் பொருத்தனைகளை இந்த ஊழியத்துக்கு செலுத்துங்கள். உங்கள் மந்திரக்கட்டுகளும் உடைக்கப்;பட உங்கள் பொருத்தனைகளை செலுத்துங்கள்.

உங்கள் பிரிவினைகள் மாற உங்கள் பொருத்தனைகளைச் செலுத்துங்கள்.

**நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப் படுத்துவாய். (சங் 50:14,15)**

**இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.** (நாகூம் 1:15)

**பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்; அவரைச் சூழ்ந்திரக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டு வரக் கடவர்கள். (சங் 76:11)**

**பிரபுக்களின் ஆவியை அடக்குவார்; பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர். (சங் 76:12)**

மேலும் உங்கள் ஊழியங்கள் வளர பொருத்தனைகளை செலுத்துங்கள். இந்த ஊழியம் தேசமெல்லாம் பரவ உங்கள் தசமபாகங்களை இந்த சுவிசேஷ ஊழியத்துக்கு செலுத்துங்கள். மேலும் இந்த புத்தகத்தின் விலை 30 ரூபாய். இந்த புத்தகம் தேசமெங்கும் பரவ நீங்கள் விரும்பினால் 100, 500, 1000, 10000 புத்தகங்கள் 20000, 50000 என இதழ் ஒன்றுக்கு 30 ரூபாய் மூலம் நீங்கள் பணத்தை கட்டினால் நாங்கள் புத்தகங்கள் அச்சிட்டு தருகிறோம். நீங்கள் உங்கள் பட்டணங்களில் இலவசமாகக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்துங்கள்.

நீங்கள் இலவசமாய் கொடுப்பதற்கு தயங்கினால் புத்தகத்திற்குரிய பணத்தை கட்டுங்கள். நாங்களே அதை இலவசமாகக் கொடுத்து உங்கள் சுவிசேஷ அறிவிப்பை நாங்கள் நிறைவேற்றுகிறோம்.

ஆயுள் சந்தா கட்ட விரும்புகிறவர்கள். இயேசு பெரியவர் வாரஇதழுக்கு 30000 ரூபாயும் ஜீவஒளி ஜெபக்கோபுரம் மாதஇதழுக்கு 15000 ரூபாயும் கட்டுங்கள். உங்கள் வீடுகளுக்கு பத்திரிகைகளை அனுப்பி வைக்கிறோம்.

வருட சந்தா கட்ட விரும்புகிறவர்கள் இயேசுபெரியவர் வார இதழுக்கு 1000 ரூபாயும் ஜீவஒளி ஜெபக்கோபுரம் மாதஇதழுக்கு 500 ரூபாயும் கட்டுங்கள்.

இங்கு செலுத்தப்படுகிற எந்த காணிக்கைகளும் திரும்ப செலுத்தத் தக்கதல்ல. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி நம்பர் **9442131629.**



# அதிசயமாய் வீடு கட்டின கர்த்தர்

ரேசன் அரிசி கூட வாங்க காசு இல்லாமல் சுற்றித் திரிந்தேன். அந்த வேளையில் பிரதர் மூலம் ஒரு வாக்குத் தத்தம் வந்தது. அதிசயமாய் இரண்டு மாடி வீடு கட்டுவாய் என்று சொன்னார்.

அவர் வீடு கட்ட சுட்டிக் காட்டிய இடம் அனேக பிரச்சனைகளுக்குரிய இடமாக இருந்தது. நாங்களே அதிலே குடியிருக்க முடியாமல் சுமார் 10 ஆண்டுகளாக வாடகை வீட்டில் குடியிருக்கிறோம். வீடு கட்டுவதெல்லாம் எங்களுக்கு சூரியனை எட்டி பிடிப்பதற்கு சமமாக இருந்தது. ஆனாலும் பிரதர் ஓயாமல் வீடு கட்டுவாய் வீடு கட்டுவாய் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே இருந்தார்.

எங்களுக்கு காங்கேயத்தில் ஒரு வீட்டு மனை இருந்தது. அந்த நிலம் எப்படி இருக்கிறது என்று சுமார் 20 ஆண்டுகளாக எங்களுக்கு தெரியாது. இந்நிலையில் பிரதர் மூலம் வாக்குத்தத்தத்தை பெற்ற எங்களுக்கு ஒரு டெலிபோன் கால் வந்தது. அந்த போன் காலில் உங்கள் நிலத்தை அறியாமல் நாங்கள் எங்கள் நிலத்தோடு சேர்த்து கிரயம் செய்து விட்டோம்.

ஆகவே நீங்கள் கேட்கிற விலையை தருகிறோம் என்று சொன்னார்கள். இந்த தகவலை நாங்கள் பிரதரிடம் சொன்னோம். பரதர் ஒரு விலையைச் சொன்னார். அந்த விலையை அவர்களிடத்தில் சொன்னோம். அந்த விலையை அவர்களித்தில் சொன்னோம். அவர்கள் அந்த விலையைத் தந்தார்கள்.

அந்த பணத்தில் கர்த்தருக்கு காணிக்கை கொடுத்து விட்டு பழைய வீட்டை இடிக்க ஆரம்பித்தோம். பிரச்சனை வந்தது. காவல்நிலையம் வரைக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கர்த்தர் எங்களுக்காக யுத்தம் செய்தார். என் குடும்ப உறவினர்களே எதிராக நின்றார்கள். சண்டை கலவரம் எல்லாம் ஏற்பட்டது. ஆனாலும் பிரதர் சொன்னார் யுத்தம் கர்த்தர் செய்வார் என்று சொன்னார்.

வீடு கட்ட ஆரம்பித்தோம். வீடு மடமடவென உயர்ந்து. ஒரு அறையை கூட கட்டமுடியாத எங்களுக்கு இரண்டு மாடி வீடு கட்டித்தந்தார். 7-2-2020 அன்று பிரதிஷ்டை செய்து குடியேறியிருக்கிறோம். கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்

# மூக்கில் இருந்த கட்டி உடைந்து காணாமல் போனது

எனது பெயர் மேரி. எனக்கு இரண்டு பிள்ளைகள். எனக்கு திடீர் என மூக்கில் கட்டி வளர்ந்து பயங்கரமான வலியைக் கொடுத்துக் கொண்டு இருந்தது. இரத்தம் எப்பொழுதும் வந்து கொண்டே இருக்கும். நான் ஜீவஒளி ஜெபக்கோபுரம் புத்தகத்தைப் படித்து பாஸ்டர் ஜேப்பியாரிடம் தொடர்பு கொண்டு பேசினேன். அவர் போனிலே ஜெபித்தார்.அதன் பின் கட்டி காணாமல் போகும் பயப்படாதே என்றார். அதன் படி மறுநாளே இரத்தம் வடிவது நின்று விட்டது. கட்டியும் இல்லை. அற்புதமாய் நான் சொஸ்தமானேன்.

மேரி, நெல்லை.

# ஆதியில் தோன்றியதே கிறிஸ்தவ மதம் தான் ஆராட்சிக் கட்டுரை. பத்திரிகையாசிரியர்

வேதம் சொல்கிறது **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி 1.1)**

தேவன் தான் இந்த உலகத்தையே படைத்தார் என்று ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரம் தெளிவு படுத்துகிறது.

வெளிப்பாடு 1.8 சொல்கிறது

**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வல்லமை யுள்ள கர்த்தர்;**

**நான் அல்பாவும், ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்.**

துவக்கமும் முடிவும் நானே என்றும்- உயிரோடு இருக்கிறவரும் இருந்தவரும் இனியும் வருபவருமான தேவன் என்று தன்னை அறிமுகப்படுத்துகிறார். வேறு எந்த தேவர்களும் தெய்வமும் இப்படி ஒரு பிரகடனத்தை யாரும் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்தியுள்ளார். வேறு எந்த தெய்வங்களும் இப்படி சொல்லவில்லை. ஏசாயா 43:10. இந்த வசனத்தின்படி பார்க்கும் போது வேறு எந்த தெய்வங்களும் கர்த்தருக்கு முன்னும் பின்னும் இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறார்.

**எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை. எனக்கு பின் இருப்பதுமில்லை.(ஏசாயா 43:10)**

இந்த வசனத்தை உற்று பார்க்கும் போது கர்த்தர் தான் தெய்வம். சதாகாலமும் அவர் தான் இரட்சகர். இனி வரும் காலங்களிலும் வேறு தேவன் இருப்பதுமில்லை என்று அழுத்தம் திருத்தமாக சொல்லியிருக்கிறார். ஆகவே சதாகாலமும் தொழுது கொள்ள வேண்டிய தெய்வம் நம்ம இயேசு மட்டும் தான்.

வசனம் 11 சொல்லுகிறது. <u>நான், நானே கர்த்தர் என்னையல்லாமல் இரட்சகர் இல்லை என்று தேவன் எக்காளமிட்டுச் சொல்கிறார். இது தான் சத்தியம். 13-ம் வசனத்தில் சொல்கிறார் நாள் உண்டாவதற்கு முன்பும் நானே இருக்கிறேன்</u> என்று சொல்லுகிறார் கர்த்தர். ஏனெனில் ஆதியாகமத்தின் படி பார்கும் போது நாட்களை உண்டுபண்ணினதே கர்த்தர் தானே.

தேவன் 6 நாட்களில் உலகத்தைப் படைத்து 7-ம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று வேதம் சொல்லுகிறது. (ஆதி 1-ம் அதிகாரமும் , 2-ம் அதிகாரத்தில் 2,4 -ம் வசனமும்)

சோ- இரட்சிக்க வேண்டும் என்றால் நம்ம **தேவனை தவிர வேறு தெய்வம் இல்லை என்று தெளிவுபடுத்துகிறார். (ஏசாயா 43:15) என்று தன்னைத் தெளிவுபடுத்துகிறார்.**

பிற தெய்வங்களுக்கு திருமண பந்தமுள்ளதை பார்க்கிறோம். குடும்பம் உள்ளதை பார்க்கிறோம். இதிலிருந்து மெய்யான தேவன் நமது தேவன் என்று உணர்ந்து கொள்ள முடிகிறது. ஏன் என்றால் அவர் நமக்கு தகப்பன் நாம் அவருக்குப் பிள்ளைகள்.

தேவன் வெளிப்படுத்தின மரியாளை ஒரு பாத்திரமாக கருதினாரே தவிரே சொந்தமாக கருதவில்லை, ஆகவே



தான் கல்யாண வீட்டில் தாயாக இருந்த மரியாளை நோக்கி **<u>ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன,</u>** என்று கேட்டு நான் தேவன் என வெளிப்படுத்தியுள்ளார். இந்த உலகத்தை உருவாக்கிய ஓரே தேவன் இயேசு தான் என்று வேதம் தெளிவுபடுத்துகிறது.

**நானே கர்த்தர்; வேறொருவர் இல்லை என்னைத் தவிர தேவன் இல்லை.**

**என்னைத் தவிர ஒருவரும் இல்லை என்று சூரியன் உதிக்கிற திசையிலும் அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியும் படிக்கும் நீ என்னை அறியாதிருந்தும் நான் உனக்கு இடைக் கட்டுக் கட்டினேன். நானே கர்த்தர் வேறொருவரும் இல்லை. (ஏசாயா 45:5,6)**

சோ நம்மை காக்கிற தேவன் ஒரே தேவன் இயேசு தேவன் தான்.

மேலும் கர்த்தர் சொல்கிறார் -

# யார் இந்த தேவர்கள்

**வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் எனப் படுகிறவர்கள் உண்டு. இப்படி அனேக தேவர்களும் அனேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் (1 கொரி 8:5)**

**பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் <u>நாமும் உண்டாயிருக்கிறோம்.</u>**

**(1 கொரி 8:6)**

நம் ஆண்டவர் சொல்கிறார் வானத்திலேயும் பூமியிலும் தேவர்களும் கர்த்தாக்களும் உண்டு என்று சொல்கிறார்.

இந்த தேவர்களை தான் பல ஜாதி மக்கள் பின்பற்றுகிறார்கள்.

இதிலும் அநேக கிறிஸ்தவர்கள் மெய்யான தேவனை உணர்ந்து கொள்ளாமல் அநேக கர்த்தாக்களை அதாவது அநேக கிறிஸ்தவர்கள் ஆராதித்து வருகிறார்கள். இவர்கள் மறைமுகமாக அந்தி கிறிஸ்தவர்களாய் வழி மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் ஒருவரே வானத்திற்கும் பூமிக்கும் தேவன். இந்த தேவர்கள், கர்த்தாக்கள் தான் இந்த உலகத்திலிருப்பவர்கள்.

ஆனால் தேவர்களையும் கர்த்தாக்களையும் உண்டாக்கினது ஓரே கர்த்தர் தான் என்பதை வேதத்தின்படி ஆராய்ந்து பார்ப்போம்.

# மெய்யான கர்த்தரின் மெய்யான அபிஷேகம். கர்த்தாக்களை ஆராதிக்கிறவர்களுக்கு பொய் அபிஷேகம்!

இந்த கர்த்தாக்களை ஆராதிப்பவர்கள் அவர்கள் யாரை ஆராதிக்கிறோம் என்று அறியாமல் இயேசுவின் பெயரால் ஆராதனை செய்வார்கள். நன்றாக பாடுவார்கள், நன்றாக துதிப்பார்கள். ஆனால் இயேசுவின் சுபாவம் மட்டும் இவர்களிடம் இருக்காது. அது தான் ஒரே அடையாளம்.

**நன்மை செய்யப் பழயுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் விதவையின்**

**வழக்கையும் விசாரியுங்கள்.** ஏசாயா 1:17-ன் படி

ஒரு கிறிஸ்தவன் செயல்பட வேண்டும். ஆனால் இவர்கள் இந்த கைம் பெண்களையும் கைவிடப் பட்டவர்களையும், விதவைகளையும் கொள்ளையிட்டு பிழைத்துக் கொள்வார்கள்.

காணிக்கை என்ற பெயரால் இவர்களை கசக்கிப் பிழிவார்கள். தசமபாகம் கர்த்தருக்கு கொடுக்க வேண்டியது தான். ஆனால் இவர்கள் கர்த்தருக்கு கொடுக்காமல் பிடிங்கி தங்களை வாழ்க்கையை அழகுபடுத்திக் கொள்வார்கள். வேலையே செய்ய மாட்டார்கள்.

2தெசலோ 3:7 முதல் 15 வரைக்கும் வாசியுங்கள். இதில் ஒரு ஊழியக்காரன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

வேலை செய்ய மனதில்லாதவன் சாப்பிடவும் கூடாது என்று சொல்லுகிறது.

ஆனால் இவர்கள் கர்த்தருக்கு 24 மணி நேரமும் வேலை செய்கிறேன் என்று சொல்லி விசுவாசகளை ஏமாற்றி சொத்துக்கள் விற்பனை செய்வது, மறைமுகமாய் பணம் ஈட்டும் தொழிலை செய்வது திருமண பந்தத்தை ஏற்படுத்தி புரோக்கர்களாக அலைந்து திரிந்து கமிசன் அடிப்பது தன் திராணிக்கு அதிகமாய் சொகுசு காரில் அலைந்து திரிதல் மறைமுகமாய் அரசியலில் பணியாற்றுதல் இவ்விதமாய் இவர்கள் வெளிப்படுவார்கள்.

இரவு நேரங்களில் விசுவாசிகளுக்காக ஊழியக்காரன் ஜெபம் பண்ண வேண்டும். மாறாக விசுவாசிகளை இரவு வேளைகளில் சபைகளில் வர வைத்து அமாவாசை ஜெபம், பௌர்ணமி ஜெபம், முழு இரவு ஜெபம் என்று சொல்லி விசுவாசிகளின் சுதந்திரத்தை பறித்து ஜெபம் என்ற பெயரில் கூத்தடிப்பார்கள். இதனால் அனேக குடும்பங்களில் பிரிவினைகளை இவர்கள் ஏற்படுத்தி விடுவார்கள்.

இவர்களிடத்தில் சர்ப்பத்தின் அபிஷேகம் இருக்கும்.

வேதம் சொல்லுகிறது

**நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12)**

ஆனால் இந்த வசனத்துக்கு விரோதமாய் செயல்படுவார்கள். வெளிவேஷமாய் பக்திமானாய் நடந்து கொள்வார்கள். இவர்களிடத்தில் லௌகீக இச்சை இருக்கும். இவர்களிடத்தில் இருக்கிற பொய் அபிஷேகம் இதை செய்யத் தூண்டும். இவர்களிடத்தில் பாவ சிந்தனை இருக்கும். பரிசுத்தம் சுத்தமாக இருக்காது. இவர்களிடத்தில் அன்னிய பாஷை இருக்கும் தேவனுடைய அன்னிய பாஷை இருந்தால் இவர்களிடத்தில் இச்சை அடக்கமும் நன்மை செய்யும் சுபாவமும் பிறரை நேசிக்கும் ஆவியின் கனிகளும் பெருமை இல்லாத ஒரு வாழ்க்கையும் இருக்கும்.

இவர்களிடத்தில் பொய் அன்னிய பாஷை இருக்கிற படியினால் ஆவியின் கனிகள் இவர்களிடத்தில் இருக்கவே இருக்காது. சகிப்புத்தன்மை சுத்தமாக இவர்களிடத்தில் இருக்காது. தனக்குப் படிக்காத விசுவாசிகளை சபையின் மத்தில் வசனத்தின்படி அடிப்பார்கள்.

**கர்த்தருக்கு பயப்படுதலே அதன் பொக்கிஷம். (ஏசா 33:6)**

ஆனால் இவர்கள் கர்த்தர் கர்த்தர் என்று சொல்லுவார்களே தவிர கர்த்தரைக் கண்டு கொஞ்சமும் பயம் இருக்காது.

**இவர்கள் மறை முகமாய் தங்கள் தேவைகளுக் காய் மந்திர**



**வாதத்தையும் நம்புவார் கள். ஏன் மந்திரமும் வைப்பார்கள்**

பரிகாரியாகிய தேவனை விட்டுவிட்டு இவர்கள் தேவர்களையும் நம்புவார்கள்.

**வேறே தேவர்களுக்கு பலியிடுகிறவன் சங்கரிக்கப் படக்கடவன்.** (யாத் 22:20)

ஆகவே இவர்கள் இடைஇடையாக தேவர்களுக்கும் பலியிடுவார்கள். தன் சபையிலுள்ள விசுவாசிகள் வேறு சபைகளுக்கு கடந்து சென்றால் சகித்துக் கொள்ள மாட்டார்கள். விசுவாசிகள் தன் சபைகளை விட்டுப் போகாதபடிக்கு மந்திரம் வைத்தே கட்டுவர்கள். பிற ஊழியக்காரர்களை மந்திரம் வைத்து அடக்குவார்கள். இவர்கள் வசனத்தை திருடுவார்கள். தீர்க்கதரிசனங்களை திருடி பிரசங்கிப்பார்கள்.

**ஒவ்வொருவராய் தன் தன் அயலாரிடத்தில் என் வார்த்தையை திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 23:30)**

**தங்கள் நாவின் சொல்லையே வழங்கி அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 23:31)**

**அந்த தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்; அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். (எரே 23:21)**

இந்த வசனத்தின்படி இவர்கள் நடந்து கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களிடம் இருந்து விசுவாசிகள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

ஒரு ஊழியக்காரன் ஜெபக் காணிக்கையில் பிழைத்துக் கொள்ளலாம். அதை கர்த்தர் அனுமதிக்கிறார். கர்த்தருடைய தசமபாகங்களும் பொருத்தனைகளும் நன்றி காணிக்கைகளும் அது கர்த்தருக்கென்றே நிறைவேற்றப் பட வேண்டியது.

அது ஆலயத்திலுள்ள களஞ்சியத்தில; வர வேண்டியது. அது ஏழைகளுக்குரியது. ஆனால் இன்றைய பெரும்பாலான ஊழியக்காரர்களுடைய தனிப்பட்ட களஞ்சியத்தில் போய் சேர்கிறது.

அதனால் இவர்கள் பெயரில் சொத்துக்களாகவும், கட்டிடங்களாகவும், வங்கி கணக்குகளாகவும் குவித்துக் கொள்வார்கள். பண ஆசை ஒருநாளும் இவர்களை விட்டு மாறிப் போகாது.

1யோவான் 2:27 சொல்கிறது

**நீங்களங் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது; ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை. அது சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது; அது பொய்யல்ல, அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.**

ஆனால் பொய் அபிஷேகத்து உரியவர்கள் கர்த்தரிடத்தில் நிலைத்து நிற்பதில்லை. பிரமாணத்தை இவர்கள் கைக் கொள்வதுமில்லை. இவர்கள் நிச்சயமாய் ஒரு மனைவியின் கீழ் அடங்கி இருக்க மாட்டார்கள்.

**கர்த்தரில் நிலைத்திருக்கிற எவனும் பாவம் செய்கிறதில்லை. பாவம் செய்கிற எவனும் அவரை காணவும் இல்லை, அவரை அறியவுமில்லை. (1யோவான் 3:6)**

**பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான். (1யோவான் 3:8)**

**தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்த படியினால் பாவம் செய்யமாட்டான். (1யோவா 3:9)**

ஆகவே விசுவாசிகளே பொய்யிக்கும் மெய்க்கும் தேவனுக்கும் தேவர்களுக்கும், கர்த்தருக்கும் கர்த்தாக்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கண்டு கொள்ளுங்கள். எச்சரிக்கையாயிருந்து மெய்யான ஊழியங்களை நீங்கள் பயன்படுத்துங்கள்.

**தேவனுடைய பிள்ளைகள் இன்னார் என்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னார் என்றும் வெளிப்படும். நீதியைச் செய்யாமல் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. (1யோவான் 3:10)**

இப்படிப்பட்ட கர்த்தாக்களின் ஊழியக்காரர்களையும் இவ்விதமாய் மறைமுகமாய் அந்திக்கிறிஸ்துவுக்கு பணியாற்றுகிற ஊழியக்காரர்களையும் இயேசு இயேசு என்று சொல்லி ஒரே கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் அனேக கர்த்தாக்களுக்கு கீழ்ப்படிகிற ஊழியக்காரர்களையும் தேவர்களின் இருப்பிடங்களையும் சேர்த்தே ஒரு நாள் கர்த்தர் அழித்துப் போடுவார்.
(ஏரேமியா 10 :10,11) சொல்கிறது.

**கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜவனுள்ள தேவன், நித்திய ராஜா, அவருடைய கோபத்தினால் பூமி அதிரும் அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்க மாட்டார்கள். (எரே 10:10)**

**வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள் பூமியிலும் இந்த வானத்தின் கீழும் இராதபடிக்கு அழிந்து போகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள். (எரே 10:11)**

இந்த வசனங்கள் தேவன் தான் உண்மையுள்ள தேவன் என்று நாமும் புறமதத்தாரும் நம்பும்படி உள்ளது.

**ஆகாய மண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்? பலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்?** (சங்கீதம் 89 : 6)

**தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனை சபையில் மிகவும் பயப்படத்தக்கவர். தம்மை சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத் தக்கவர்.** (சங்கீதம் 89 : 7)

**சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே உம்மைப் போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மை சூழ்ந்திருக்கிறது.** (சங்கீதம் 89 : 8)

இந்த வசனங்களை உற்றுப் பார்க்கும் போது பொய்யான கர்த்தர் இந்த பூமியில் உண்டு என்று சுட்டிக் காட்டுகிறது. ஆகவே நீங்கள் இந்த வித்தியாசங்களைக் கண்டு கொள்ள வேண்டும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றுச் சொன்னால் இந்த பூமியில் தேவர்களும் கர்த்தாக்ககும் உண்டு என்று கர்த்தர் தெளிவு படுத்துகிறார்.

நம்ம தெய்வமாகிய இயேசு தான் உண்மையான தெய்வம் என்று வசனம் நிருப்பிக்கிறது. வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்களை குறித்து நம்ம தெய்வமாகிய கர்த்தர் சொல்வதைப் பாருங்கள். (ஏசாயா 14:12,13,14,15,16,17).

உன்னதமான தேவனின் படைப்புகளாகிய இந்த தேவர்களை இந்த பூமியில் கீழே தள்ளினார். ஏன் என்றால் தன்னை உயர்த்தி தேவனைப் போல் உன்னதத்தில் சிங்காசனம் போட நினைத்த இந்த தேவர்களை கீழே தள்ளினார். பிற மதம் சொல்கிறது பூமியிலே கர்த்தரால் தள்ளப்பட்ட



இந்த தேவர்கள் பூமியிலும் வானத்திலும் நடுவே திரிசங்கு சொர்க்கம் அமைத்திருக்கிறது. இந்த திரிசங்கு சொர்க்கம் பற்றி பிற மதம் விரிவுரைக்கிறது.

நான் சொல்கிறேன் கர்த்தரின் நாமத்தில் : நம் ஆண்டவரால் தள்ளப்பட்ட இந்த கர்த்தாக்களும் இந்த தேவர்களும் தனி சொர்க்கம் அமைத்து கர்த்தரால் ஏற்கெனவே வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி இந்த பூமியை ஆளுகை செய்கிறார்கள். உண்மையான பரலோகத்துக்கு விரோதமாய் இவர்கள் யுத்தம் செய்கிறார்கள். இவர்கள் நம்முடைய ஜெபத்தை செய்ய விடாமல் தடுப்பார்கள். நம் ஜெபத்தையும் வஞ்சிப்பார்கள். ஆகவே தான் இயேசு சொன்னார்

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்.** (யோவான் 10:10) **நானே நல்ல மேய்ப்பன். ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான். (யோவான் 10:11)**

ஆகவே மெய்யான தெய்வம் இயேசு ஒருவர் தான்.

உன்னதத்திலே இருக்கும் ஓரே தேவன் நம்ம தேவன் தான்.

சற்பத்தை உண்டாக்கியது கர்த்தர் தான் ஆதியாகமம் 3 ம் ஆதிகாரம் 1 ம் வசனம் சொல்கிறது

தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ள தாயிருந்தது;

இதன்படி சர்பத்தை உண்டாக்கினது கர்த்தர் என்பது தெளிவாகிறது.

இந்த சர்ப்பத்தை தான் சில மதத்தினர் தெய்வமாக கொண்டாடி வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் சர்ப்பத்தையே உண்டாக்கின இயேசுவை மாத்திரம் தொழுது கொள்ளுகிறார்கள்.

## சர்ப்பம் பெரியதா? சர்ப்பத்தை உண்டாக்கின நம்ம தெய்வம் பெரியவரா?

இந்த சர்ப்பம் தான் ஆதியிலே தேவன் உண்டாக்கின ஏவாளை வஞ்சித்தது. இன்றும் பெண்கள் எளிதாக வஞ்சிக்கப்படுகிறார்கள்....

அன்று சர்ப்பம் இன்று சர்ப்பத்தின் ஆவி.

ஆதியாகமம் 3:14 சொல்கிறது

**தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும், சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப் பட்டிருப்பாய். நீ உன் வயிற்றினால் நகர்ந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்.**

இவ்விதமாய் நம்ம தேவன் சர்ப்த்தை சபித்தார், இன்றும் இந்த வசனம் சர்ப்பத்திற்கு மிகவும் பொருந்துகிறது. சர்ப்பத்தை உண்டாக்கினவரால் தான் சர்ப்பத்தை சபிக்க முடியும்.

தைரியமாக ஏதேன் தோட்டத்தில் நுழைந்த சர்ப்பத்தை தேவன் சபித்த போது மிகவும் பயந்த பிராணி சர்ப்பம் தான்... என்பதை நாம் உணர முடியும். ஆதியாகமம் 6ம் அதிகாரம் 1,2,3,4 சொல்கிறது.

**மனுஷர் பூமியின் மேல் பெருகத் துவக்கி, அவர்களுக்கு குமாரத்திகள் பிறந்த போது**

**தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்.**

(சில மத தெய்வங்கள் பூமியிலுள்ள பெண்களை காதலித்து திருமணம் செய்திருக்கிறார்கள் . இப்படி செய்தவர்களை தெய்வங்களாக பலவகை மக்கள் தொழுது கொள்ளுகிறார்கள்.

இதை சரி என்று புராணங்கள் சொல்கிறது.)

இதனால் கோபமடைந்த கர்த்தர்

**என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடு போராடுவதில்லை. அவன் மாம்சம் தானே. அவன் இருக்கப் போகிற நாட்கள் 120 வர்ஷம் தானே.**

**அந்நட்களில் இராட்சதர் பூமியில் இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால் இவர்கள் அவர்களுக்கு பிள்ளைகளைப் பெற்றபோது இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.**

தேவர்கள் பூமியிலுள்ள ஸ்திரிகளை திருமணம் செய்திருப்பதை தெளிவுபடுத்துகிறது.

தேவர்களின் அக்ரமம் பெருகியதால் தேவன் பூமியை அழிக்க தீர்மானித்தார். அழித்தும் காண்பித்தார்,

எப்படியெனில் தேவன் உண்டாக்கின மனுஷர்கள் தேவனால் தள்ளப்பட்ட தேவர்களோடு சயனித்த படியினால் ஜனங்கள் பரிசுத்தத்தை இழந்து இராட்சத மனிதர்களையும் பலவான் புத்திரரையும் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்விதமாய் ஜனங்கள் தீட்டுப் பட்டார்கள். தேவனை விட்டுத் தூரம் போனார்கள். சர்ப்பம் ஏவாளை வஞ்சித்ததினிமித்தம் ஜனங்கள் சீர் கெட்டுப் போனார்கள்.

சங்கீதம் 73 : 27 சொல்கிறது

**இதோ உம்மை விட்டுத் தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டு சோரம் போகிற அனைவரையும் சங்கரிப்பீர் .** என்று வேதம் சொல்கிறது.

**தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன். ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை. (சங் 50:22)**

செப்பனியா சொல்கிறார்

**கர்த்தரை விட்டுப் பின் வாங்குகிறவர்களையும் கர்த்தரைத் தேடாமலும் அவரைக் குறித்து விசாரியாமலும் இருக்கிறவர்களையும் இவ்விடத்தில் இராதபடிக்கு சங்காரம் பண்ணுவேன் (செப் 1:6)**

**மறுபடியும் செப்பனியா சொல்கிறார்**

**தேசத்தில் உண்டானதையெல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (செப் 1:2)**

**மறுபடியும் செப்பனியா சொல்கிறார்**

**மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தபடியால் அவர்கள் குருடரைப் போல் நடக்கும் படி நான் அவர்களை வருத்தப் படுத்துவேன். அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும். அவர்கள் மாம்சம் எருவைப் போல் கிடக்கும். (செப் 1:17)**

இந்த வசனங்களின்படி அவர் உண்டாக்கின உலகத்தையே அழிக்கத் தீர்மானித்தார்.



**அப்பொழுது கர்த்தர் நான் சிருஷ்டித்த மனுஷனை பூமியின் மேல் வைக்காமல் மனுஷன் முதற்கொண்டு மிருகங்கள் ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாப மாயிருக்கிறது என்றார். (ஆதி 6:7)**

ஆனால் அதற்கு முன்பு நோவாவையும் ஏழு பேரையும் காப்பாற்ற தீர்மானித்தார்.

**நோவாவினிடத்தில் ஒரு பேழையைச் செய்யச் சொன்னார். அந்த பேழையில் சுத்தமான சகல மிருயங்களிலும் ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும் , சுத்தமில்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும் (ஆதி 7:2)**

**ஆகாயத்துப் பறவைகளிலும் சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில் சேர்த்துக் கொள் என்று கட்டளையிட்டார். (ஆதி 7:3)**

**இன்னும் ஏழு நாள் சென்ற பின்பு 40 நாள் இரவும் பகலும் பூமியின் மேல் மழையை வருஷிக்கப் பண்ணி நான் உண்டாக்கின ஜீவ ஜெந்துக்கள் அனைத்தையும் பூமியின் மேல் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவேன் என்றார். (அதி 7:4)**

கர்த்தர் சொன்னபடியே செய்தார். பேழைக்குள் நுழைந்த 8 பேரையும் மிருக ஜீவன்களையும் கர்த்தர் பாதுகாத்து கதவைப் பூட்டினார். 40 நாள் மழை பெய்தது. சகல நாசமும் அன்று வந்தது.

வாசிக்கவும் ஆதி 7, 8-ம் அதிகாரம்.

எட்டுபேரை கொண்டு பேழை 40 நாள் மிதக்க ஆரம்பித்த போது வேறு ஒருவராலும் இந்த பேழைக்குள் நுழைய கதவை திறக்க முடியவில்லை என்பதை தெளிவாக உணரமுடிகிறது. சோ – கர்த்தர் ஒரு வாசலை பூட்டினால் இன்னொரு நபரால் திறக்கமுடியாது.

**ஒருவரும் பூட்டக்கூடாத படிக்கு திறக்கிறவரும் ஒருவரும் திறக்கக்கூடாத படிக்கு பூட்டுகிறவருமாகிற கர்த்தர் என்று வெளிப்பாடு சொல்கிறது.** கர்த்தர் காப்பார் என்றால் அது நிறைவேறும். மலைகளுக்கு மேலாய் பேழை மிதந்த போது எந்த ஆபத்தும் பேழைக்கும் பேழையில் இருப்பவர்களுக்கும் எந்த சேதமும் இல்லை என்பதை நினைக்கும் போது நம்ம தெய்வம் தான் உண்மையான தெய்வம் நம் கர்த்தர் என்று கெம்பீரமாக உணரமுடிகிறது.

இந்த அழிவை நடப்பித்தது கர்த்தர். இதை தடுப்பதற்கு சர்ப்பங்களுக்கோ தேவர்களுக்கோ அதிகாரம் இல்லாமல் இருந்தது. இவர்களின் அதிகாரமே இவர்களை காத்துக் கொள்ளவில்லை.

இப்படி அதிகாரம் இல்லாத இவர்களை நீங்கள் ஏன் தொழுது கொள்ள வேண்டும். அதிகாரம் இல்லாத இவர்கள் உங்களை காப்பார்கள் என்று நீங்கள் ஏன் இவர்களை நம்ப வேண்டும். இவர்களை எல்லாம் உண்டாக்கினவரை தொழுது கொண்டால் உங்கள் வாழ்க்கை சுபிட்சமாய் மாறும்.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்கிறேன்

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்தில் பற்பல அற்புதங்களைச் செய்து வானத்தையும் பூமியையும் உண்டாக்கினது தேவனா? தேவர்களா? என்று சகல ஜாதிகளும் காணும்படி மோசே மூலம் பார்வோனுக்கு அறிவித்து மகாபெரிய சங்காரத்தைச் செய்து செங்கடல் வழியாய் ஜனங்களை மீட்டு விடுவித்து நடத்தி வந்தார்.

**நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப் பிள்ளை முதல் காவல் கிடங்கில் இருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருக ஜீவன்களின் தலையீற்று அனைத்தையும், கர்த்தர் அழித்தார். இவ்விதமாய் அழிப்பேன் என்று யாத்திராகமம் 12:12-ன் படி பார்வோனுக்கு அறிவித்து யாத்திராகமம் 12:29-ன் படி நிறைவேற்றியிருக்கிறார்.**

30வது வசனம் சொல்கிறது

**பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் எழுந்திருந்தார்கள். மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று. சாவு இல்லாத ஒரு வீடும் இருந்ததில்லை.**

ஏசாயா 43:10 சொல்கிறது

**எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை. எனக்கு பின் இருப்பதுமில்லை.**

வசனம் 11 சொல்கிறது

**நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.**

சோ இதிலிருந்து என்ன தெரிகிறது மெய்யான தெய்வம் நம்ம தேவன் என்று புரிகிறது.

## சோதனையும் வேதனையும்

ஜனங்களை பாலைவனத்தில் கர்த்தர் கம்பீரமாய் நடத்தி வரும் போது இந்த ஜனங்கள் மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாய் பேசி

**இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை. இந்த அற்பமான உணவு எங்கள் மனதிற்கு வெறுப்பாய் இருக்கிறது என்றார்கள். (எண் 21:5)**

**அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார். அவைகள் ஜனங்களை கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அனேக ஜனங்கள் செத்தார்கள். (எண் 21:6)**

**அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய் பேசினதினால் பாவம் செய்தோம்; சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றார்கள். மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். (எண் 21:7)**

**அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை. கடிக்கப் பட்டவன் எவனோஅவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார். (எண் 21:8)**

**அப்படியே மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான். சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைப்பான். (எண் 21:9)**

ஆக கர்த்தர் சொல்லி மோசே உண்டாக்கின வெண்கல சர்ப்பத்தை இன்றைக்கும் சில மதங்கள் தெய்வமாக பின்பற்றி வருகிறார்கள்.

ஆனால் சர்ப்பத்தை செய்ததே கர்த்தர். நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்று சொன்ன மெய்யான கர்த்தரை அனேகர் விட்டு விட்டார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது மெய்யான தெய்வம் எங்கள் தெய்வம் தான்.



எரேமியா 8:17 சொல்கிறது

கீழ்ப்படியாத ஜனங்களைப் பார்த்து கர்த்தர் சொல்கிறார் மெய்யான கர்த்தரை தொழுது கொள்ளாத ஜனங்களைப் பார்த்து கர்த்தர் சொல்கிறார்

**மெய்யாய், இதோ, தடைகட்டப் படாத சர்ப்பங்களையும், கட்டு விரியன்களையும் உங்களுக்குள் அனுப்புகிறேன்; அவைகள் உங்களைக் கடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது ஒன்று கர்த்தரின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு கர்த்தரால் பாதுகாப்பு உண்டு.

சர்ப்பத்தையும் விக்கிரகத்தையும் தொழுது கொள்ளுகிறவர்களுக்கு அவைகளாலே அழிவும் உண்டு.

**என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள். (எரே 2:13)**

மெய்யான தேவனை விட்டு விட்டு பொய்யான தேவர்களை தங்களுக்கென்றே தெரிந்து கொண்டார்கள் என்று மெய்யான தேவன் உங்களைப் பார்த்து மனமது உருகுகிறார்.

ஜீவதண்ணீராகிய கர்த்தரைத் தேடுகிறவர்களை ஒருபோதும் கர்த்தர் கைவிடுவதுமில்லை. மழை வந்தால் என்ன? ஜலம் பெருகினால் என்ன? புயல் வந்தால் என்ன? நோவாவைக் காத்த கர்த்தர் உன்னைக் காக்கும் படி உன்னோடு கூடவே இருப்பார்.

ஏசாயா 49:15,16 சொல்கிறது

**அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை. இதோ உன்னை என் உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறேன். உன்மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.**

ஏசாயா 41:10-ல் சொல்கிறார்

**நீ பயப்படாதே: நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னை பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்** என்று கர்த்தர் உன்னைப் பார்த்துச் சொல்கிறார்.

மேலும் ஏசாயா 44:24-ல் **சொல்கிறார்**

**உன் மீட்பரும் தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர். நான் ஒருவராய் வானங்களை விரித்து நானே பூமியைப் பரப்பினவர் என்று சொல்லுகிறார்.**

**ஏசாயா 45:5-ல் சொல்லுகிறார்**

**நானே கர்த்தர் வேறொருவர் இல்லை, என்னைத் தவிர தேவன் இல்லை.**

**6-ல் சொல்லுகிறார்**

**என்னைத் தவிர ஒருவருமில்லை என்று சூரியன் உதிக்கிற திசையிலும் அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும் படிக்கு நீ என்னை அறியாதிருந்தும் நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன். நானே கர்த்தர் வேறொருவர் இல்லை.**

**தேவன் உன்னைப் பார்த்து இன்னொன்றையும் சொல்கிறார்**

**யாக்கோபே, இஸ்ரவேலே நீ என் தாசன், நான் உன்னை உருவாக்கினேன்;**

**நீ என் தாசன் இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப் படுவதில்லை. (ஏசாயா 44:21)**

பிரியமானவர்களே நாம் நம் தேவனை மறந்தாலும் நம்மேல் பிரியமுள்ள ஒரு தேவன் உண்டு என்றுச் சொன்னால் அது கிறஸ்து இயேசு தான். நம் பாவங்களை மன்னிப்பதற்காகவே இந்த உலகத்தில் மகிமையாய் வெளிப்பட்ட ஒரு தேவன் தேவன் உண்டு என்று சொன்னால் அது இயே,ச தெய்வம் மாத்திரமே.

அவர் உனக்கு மறுபடியும் சொல்கிறார்

**உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும் உன் பாவங்களை கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன். என்னிடத்தில் திரும்பு, உன்னை நான் மீட்டுக் கொண்டேன். (ஏசா 44:22)**

பார்த்தீர்களா? நம் பாவங்களை மன்னித்த நம் தேவனை இன்றும் என்றும் தொடர்ந்து அவருக்குள் கீழ்ப்படிந்து அவரையே ஆராதிப்போம்.

**இப்படி ஆராதித்தால் உன்னை நிச்சயமாய் இந்த ஆண்டிலே வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய். (உபா 28:14)**

மேலும் கர்த்தர் சொல்லுகிறார்

**நீ பசியாயிருப்பதும் இல்லை, தாகமாயிருப்பதுமில்லை, உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள் மேல் படுவதுமில்லை. அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி அவர்களை நீரூற்றுகளிடத்திற்கு கொண்டு போய் விடுவார். (ஏசா 49:10)**

**என் மலைகளை யெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த்தப்படும். (ஏசா 49:11)** ஆமென்.

ஆகவே மெய்யான கர்த்தரை தொழுது கொள்ளுங்கள். பொய்யானவைகளை விட்டு விடுங்கள்.

# நீ ஆசீர்வதிக்கப் பட வேண்டுமா? மனந்திருந்து, கீழ்ப்படி, கர்த்தரையே தொழுது கொள்

நோவாவை கர்த்தர் ஆசீர்வதிப்பதற்கென்று 40 நாள் ஜலப்பிரளயத்தில் காத்துக் கொண்டார்.

நோவா குடும்பம் 8 பேர் தான். இந்த ஒரு கும்பத்தை வைத்து தேவன் ஜனங்களைப் பலுகி பெருகச் செய்தார்.

ஜலப்பிரளயத்தால் ஜனங்கள் அழிக்கப்பட்ட பின்பு தேவனால் காப்பாற்றப் பட்ட மனிதர்கள் 8 பேர் தான். இவர்கள் தேசத்தை பலுக்கி பெருக்கினார்கள்.

நோவாவிற்கு உலகத்தை அழிப்பதற்கு முன்பு தேவன் கட்டளையிட்டிருந்தார் எப்படியெனில் 40 நாட்களில் உலகத்தை அழிக்கப் போகிறேன். நீ ஒரு பேழையை செய்து கொள் என்றார். கர்த்தரின் சத்தத்துக்கு செவி கொடுத்து அவன் ஒரு பேழையை செய்து கொண்டு தன் குடும்பத்தைக் காத்துக் கொண்டான்.

கர்த்தர் நோவா சந்ததியிலிருந்து ஆபிரகாமை கீழ்ப்படிதல் மூலம் தெரிந்துகொண்டார்.

ஆபிரகாமை நோக்கி கர்த்தர் சொன்னார்

நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு, புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. (ஆதி 12:1)

**நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன்**



**பேரைப் பெருமைப் படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி 12:2)**

**கர்த்தரின் சத்தத்துக்கு கீழ்ப்படிந்து ஆபிரகாம் புறப்பட்டுப் போனான். (ஆதி 12:5)**

ஆபிரகாமை சகல தேசங்களிலும் நடத்தி சகல தேசங்களையும் சொந்தமாக்கி ஆசீர்வதித்துக் கொண்டேயிருந்தார். பிள்ளையில்லாமல் இருந்தாலும் கர்த்தர் ஈசாக்கை கொடுத்து முதிர்வயதிலும் வாக்குத்தத்தத்தின் படி ஆசீர்வதித்தார்.

ஈசாக்கிடமிருந்து ஏசா, யாக்கோபு வந்தார்கள்; இவர்களில் யாக்கோபை தேவன் தனக்கென்று தெரிந்து கொண்டார். தேவன் யாக்கோபை வழிநடத்தி பலுகி பெருகச் செய்தார். யாக்கோபிடமிருந்து 12 கோத்திரமுண்டாயிற்று, யாக்கோபு சந்ததி எகிப்திற்கு 400 வருடம் அடிமைத்தனமாய் வாழும் என்று தேவன் ஆபிரகாமிற்கு சொன்னபடியே நடந்தது. ஆதியாகமம் 15:13 வசனத்தின் படி –

யாக்கோபின் குமாரரில் ஒருவரான யோசேப்பு எகிப்திற்கு தன் சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்டான்,

தேசத்தில் பஞ்சம் வந்த போது யாக்கோபு வம்சம் 70 பேர் எகிப்திற்கு கடந்து சென்றார்கள் (யாத்திராகமம் 1:7).

எகிப்து தேசத்தில் யாக்கோபின் வம்சம் பலுகி பெருகியதும் ஆத்திரமடைந்த பார்வோன் இஸ்ரவேலில் பிறக்கின்ற ஆண் குழந்தைகளை கொலை செய்ய உத்தரவிடுகிறான் (யாத்திராகமம் 1:16). ஆனாலும் கர்த்தர் ஒரு மோசேயை எழுப்பினார், (யாத்திராகமம் 2: 2,3,5,10)

கர்த்தர் மோசேயை பார்வோனின் அரண்மனையிலே திட்டப்படி வளர்த்தார், அதன்படி மோசே மூலம் எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்க திட்டமிட்டார்.

# மோசே செய்த கொலை

மோசே, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு, எகிப்தியனை வெட்டி மணலிலே புதைத்துப் போட்டான்.

இதைக் கண்ட எபிரேயர்கள் மோசேயிடம் கேள்வி கேட்க மோசே மிகவும் பயந்தான். இதைக் கேள்விப்பட்ட பார்வோன் மோசேயை கொலை செய்ய வகை தேடினான்.

மோசே மீதியான் தேசத்திற்கு தப்பி ஓடினான். அங்கு ரெகுபேலிடத்தில் வந்து தங்கினான். ரெகுபேல் தன் மகள் சிப்போராள் என்பவளை மோசேக்கு கொடுத்தான்.

மோசேக்கு கெர்சோம் என்ற குமாரனைப் பெற்றாள் (யாத் 2:11-24)

மோசே ஆடுகளை மேய்த்து வந்தான். அப்போது முட்செடியின் நடுவிலிருந்து அக்கினி ஜுவாலையைக் கண்டான்.

**அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானானர். அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தான். முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது. (யாத் 3:2)**

**அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப் போய் இந்த அற்புத காட்சியைப் பார்ப்பேன் என்றான். (யாத் 3:3)**

**அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார்.**

**முட்செயின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி மோசே என்று கூப்பிட்டார். அவன், இதோ அடியேன் என்றான். (யாத் 3:4)**

**அப்பொழுது கர்த்தர் உன் கால்களில் இருக்கிற பாதரட்சையை**

**கழற்றிப் போடு. நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். (யாத் 3:5)**

6-வது வசனத்தில் கர்த்தர் தேவன் என்று அறிமுகப் படுத்துகிறார். 8-வது வசனத்தில் எகிப்தியரின் கைக்கு இஸ்ரவேலரை விடுவிக்கப் போகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

10-வது வசனத்தில் மோசேயை பார்வோனிடத்தில் அனுப்புவேன் என்கிறார். மோசே பயப்படுகிறான். அதற்கு கர்த்தர் நான் உன்னோடு இருப்பேன் என்று சொல்லுகிறார்.

அப்பொழுது மோசே தேவனின் நாமம் எது என்று கேட்டால் எகிப்தியருக்கு நான் என்ன சொல்லுவேன் என்று கேட்டான்.

**அதற்கு தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லியிருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்வாயாக என்றார். (யாத் 3:14)**

இதிலிருந்து மெய்யான தேவன் கர்த்தர் என்று அறிந்து கொள்ள முடிகிறது.

## கோலை பாம்பாக மாற்றிய கர்த்தர்

**மோசே என்னை நம்பார்கள் என்றான். உடனே கர்த்தர் அவனை நோக்கி: உன் கையில் இருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான். (யாத் 4:2)**

**அதை தரையில் போடு என்றார். அவன் அதை தரையில் போட்டபோது அது சர்ப்பமாயிற்று. மோசே அதற்கு விலகியோடினான். (யாத் 4:3)**

**அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: உன் கையை நீட்டி அதின் வாலைப் பிடி என்றார். அவன் தன் கையை நீட்டி அதைப் பிடித்தபோது அது அவன் கையிலே கோலாயிற்று. (யாத் 4:4)**

**ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்கு தரிசனமானதை அவர்கள் நம்புவதற்கு இதுவே அடையாளம் என்றார். (யாத் 4:5)**

6-ம் வசனத்தில் மோசேயின் கையை மடியில் போடச் சொல்லுகிறார். அதை வெளியே எடுத்த போது அவன் கை வெண் குஷ்டம் பிடித்திருந்தது.

7-ம் வசனத்தில் திரும்பவும் கையை மடியில் போடு என்றார். அப்படி செய்த போது கை சுத்தமானது.

பிரியமானவர்களே இதிலிருந்து மெய்யான தேவன் இயேசு என்று நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

அவர் கட்டளையிட்டால் ஆகும் என்று நிரூபணமாகிறது. இதிலிருந்து ஆக்கவும் அழிக்கவும் உருவாக்கவும் வல்லமையுள்ள தேவன் நம் தேவன் என்று நிரூபணமாகிறது.

பிற மதத்தினர் கொண்டாடுகிற சர்ப்பத்தை உருவாக்கியவர் கர்த்தர் தானே.

## உண்மையான தெய்வம் யார்? தேவனா? இந்த தேவர்களா?

யாத் 7-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் பார்வோனுக்கு முன்பாக ஆரோன் தன் கோலைப் போட்டான் அது சர்ப்பமாக மாறிற்று.

11-ம் வசனத்தில் எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் தங்கள் கோல்களை பாம்பாக மாற்றினார்கள்.



12-ம் வசத்தில் ஆரோனுடைய கோல்களோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று.

17-ம் வசனத்தில் மோசே இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க மறுத்த பார்வோனுக்கு முன்பாக தன் கோலினால் நதியை அடித்தான். இப்பொழுது தண்ணீர் இரத்தமாக மாறியது,

18-ம் வசனத்தில் நதியில் இருக்கிற மீன்கள் செத்து நாறியது. நதியின் தண்ணீரை எகிப்தியர் குடிக்க கூடாமல் போயிற்று.

19-ம் வசனத்தில் கர்த்தர் மோசேயை நோக்கி நீ ஆரோனிடத்தில் உள்ள உன் கோலை எடுத்துக் கொண்டு சகல நீர்த்தேக்கங்களும் இரத்தமாகும் படிக்கு கையை நீட்டு என்றார்.

20-ம் வசனத்தில் அவர்கள் அப்படியே செய்தார்கள். எங்கும் தண்ணீர் இரத்தமாக மாறியது. நதியின் மீன்கள் செத்தது. எகிப்து தேசம் எங்கும் இரத்தமாக மாறியது.

<u>ஆனால் 22-ம் வசனத்தில் மோசே செய்த அற்புதங்களை எகிப்தின் மந்திரவாதிகளும் தங்களின் மந்திர வித்தைகளின்படி அப்படியே செய்தார்கள்.</u>

8-ம் அதிகாரத்தில் இனியும் ஜனங்களை நீ விடாவிட்டால் உன் எல்கையெல்லாம் தவளைகளால் வாதிப்பேன் என்று கர்த்தர் எச்சரித்தார்.

யாத் 8-ம் அதிகாரம் 5-வது வசனத்தில் கர்த்தர் மோசேயினிடத்தில் உன் கையிலிருக்கிற கோலை சகல நீர்த்தேக்கங்களிலும் நீட்டி தவளைகளை வருவி என்றார்.

6-ம் வசனத்தில் அப்படியே செய்தார்கள் தவளை வந்தது.

7-ம் வசனத்தில் மந்திரவாதிகளும் தவளைகளை வர வைத்தார்கள்.

10-ம் வசனத்தில் மோசே பார்வோனிடத்தில் சொல்லுகிறான் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை அறிவிக்கிறார்.

11-வது வசனத்தில் தவளைகள் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரரையும் உம்முடைய ஜனங்களை விட்டு நீங்கி நதியில் மாத்திரம் இருக்கும் என்றார்,

13-வது வசனத்தில் மோசேயின் சொற்படி கர்த்தர் செய்தார். தவளைகள் நதியை தவிர மீதியெங்கும் செத்து நாறியது.

மேலும் கர்த்தர் மோசேயிடம் ஆரோனின் கோலை நீட்டி பூமியின் புழுதி மேல் அடி. அப்போது எகிப்துதேசம் எங்கும் பேன்களாய் மாறும் என்றார்.

17-வது வசனத்தின்படி எகிப்தின் புழுதி எல்லாம் பேன்களாய் மாறியது.

18-ம் வசனத்தில் எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் பேன்களை பிறப்பிக்கும்படி பிரயத்தனம் செய்தார்கள். செய்தும் அவர்களால் கூடாமற்போயிற்று.

## தோற்றுப்போன மந்திரவாதிகள்

**பேன்கள் மனிதர்கள் மேலும் மிருக ஜீவன்கள் மேலும் இருந்தது. (யாத் 8:18)**

## தேவனை ஏற்றுக் கொண்ட மந்திரவாதிகள்

**அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள். (யாத் 8:19)**

**அதற்கு பின்பும் இஸ்ரவேல் ஜனங்களை தேவனை ஆராதிப்பதற்கு அனுப்பாமல் இருந்தான். கர்த்தர் மோசேயிடம் பார்வோன் என் ஜனங்களை போக விடாயாகில் சகல வீடுகளிலும்**

தேசம் முழுவதும் வண்டுகளால் நிறையும் என்று சொல் என்றார். (யாத் 8:21)

பூமியின் நடுவில் நானே கர்த்தர் என்பதை நீ அறியும்படி என் ஜனங்கள் இருக்கிற கோசேன் நாட்டில் அந்நாளிலே வண்டுகள் வராதபடிக்கு அந்த நாட்டை விசேஷப் படுத்தி (8:22)

என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன். இந்த அடையாளம் நாளைக்கு உண்டாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார். (யாத் 8:23)

அப்படியே கர்த்தர் செய்தார். மகா திரளான வண்டு ஜாதிகள் பார்வோன் வீட்டிலும் அவன் ஊழியக்காரர் வீடுகளிலும் எகிப்து தேசம் முழுவதிலும் வந்தது. வண்டுகளினாலே தேசம் கெட்டுப்போயிற்று. (யாத் 8:24)

இச்சம்பவத்திற்குப் பிறகு பார்வோன் தேவனுக்குப் பயந்து போய் உங்கள் தேவனுக்கு தேசத்திலே பலியிடுங்கள் என்றான். அதற்கு மோசே எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்கு பலியிடுவோம் என்றான்.

அதற்கு பார்வோன் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்திலே பலியிடுங்கள். ஆனாலும் அதிக தூரம் போக வேண்டாம் என்றான்.

மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பித்து சகல வண்டுகளையும் நீங்கும்படி வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவிவிதமாகவே அற்புதம் செய்தான்.

ஆனால் பார்வோன் தன் இருதயத்தை கடினப்படுத்தி ஜனங்களைப் போக விடாமல் தடுத்தான். (யாத் 8:25-32)

உடனே மோசே இனியும் ஜனங்களை நீ விடாவிட்டால் உன் மிருக ஜீவன்களின் மேல் மகாபெரிய கொள்ளை நோய் உண்டாகும் என்று எச்சரித்தான். (யாத் 9:3)

கர்த்தர் இஸ்ரவேலின் மிருக ஜீவன்களுக்கும் எகிப்தியரின் மிருக ஜீவன்களுக்கும் வித்தியாசம் செய்வார்; இஸ்ரவேல் புத்திரருக்கு உரியவைகள் எல்லாவற்றிலும் ஒன்றும் சாவதில்லை என்றான். (யாத் 9:4)

நாளைக்கு கர்த்தர் இந்த காரியத்தை தேசத்தில் செய்வார் என்று பார்வோனிடத்தில் சொல் என்று கர்த்தர் சொன்னார். (யாத் 9:5)

கர்த்தர் அந்த காரியத்தைச் செய்தார். எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப் போயிற்று. இஸ்ரவேல் புத்திரரின் மிருக ஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை. (யாத் 9:6)

பார்வோன் விசாரித்து இஸ்ரவேலரின் மிருக ஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை என்று அறிந்தான். ஆனாலும் பார்வோன் ஜனங்களைப் போகவிடவில்லை. (யாத் 9:7)

அப்பொழுது கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: உங்கள் கைப்பிடி நிறைய சூளையின் சாம்பலை அள்ளிக் கொள்ளுங்கள். மோசே அதை பார்வோனுடைய கண்களுக்கு முன்பாக வானத்திற்கு நேராக இறைக்கக்கடவன். (யாத் 9:8)

இதனிமித்தம்

எரிபந்தமான கொப்பளங்களை எழும்பப் பண்ணும் என்றார். (யாத் 9:9)

10-ம் வசனத்தின்படி

பார்வோனுக்கு முன்பாக அதை வானத்துக்கு நேராக இறைத்தான்; அப்பொழுது மனிதர் மேலும் மிருக ஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்பளங்கள் எழும்பிற்று. (யாத் 9:10)



அந்த கொப்பளங்கள் மந்திரவாதிகள் மேலும் எகிப்தியர் எல்லார் மேலும் உண்டானதினால் அந்த கொப்பளங்கள் நிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்கக் கூடாதிருந்தது. (யாத் 9:11)

இப்பொழுது தெரிகிறதா உங்களுக்கு உண்மையான தெய்வம் யார் என்று. இதற்குப் பிறகும் பார்வோன் இருதயத்தைக் கடினப்படுத்தினதால் மோசேயை மறுபடியும் பார்வோன் அரண்மனைக்கு கர்த்தர் அனுப்புகிறார்.

## மெய்யான தேவன் இயேசுவே

இனியும் ஜனங்களை விடாதிருந்தால், பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும் படிக்கு இந்த முறை நான் சகல வித வாதைகளையும் உன் இருதயத்திலும் உன் ஊழியக்காரர் மேலும், உன் ஜனங்கள் மேலும் அனுப்புவேன். (யாத் 9:14)

நீ பூமியில் இராமல் நாசமாய் போகும்படி நான் என் கையை நீட்டி, உன்னையும் உன் ஜனங்களையும் கொள்ளை நோயினால் வாதிப்பேன். (யாத் 9:15)

என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும் படியாகவும் என் நாமம் பூமிலெங்கும் பிரஸ்தாபமாகும் படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன். (யாத் 9:16)

நீ என் ஜனங்களைப் போகவிடாமல் இன்னும் அவர்களுக்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயா? (யாத் 9:17)

எகிப்து தோன்றிய நாள் முதல் இதுவரைக்கும் அதில் பெய்யாத மிகவும் கொடிய கல்மழையை நாளை இந்நேரம் பெய்யப் பண்ணுவேன். (யாத் 9:18)

இப்பொழுதே ஆள் அனுப்பி உன் மிருக ஜீவன்களையும் வெளியில் உனக்கு இருக்கிற யாவையும் சேர்த்துக் கொள்; வீட்டிலே சேர்க்கப் படாமல் வெளியில் ஒவ்வொரு மனிதனும் மிருகமும் செத்துப் போகத் தக்கதாய் அந்த கல்மழை பெய்யும் என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல் என்றார். (யாத் 9:19)

பார்வோன் பயந்து மிருக ஜீவன்களை ஒடி வரப் பண்ணினான்.

எவன் கர்த்தருடைய வார்த்தையை மதியாமற் போனானோ அவன் தன் வேலைக்காரரையும், தன் மிருக ஜீவன்களையும் வெளியிலே விட்டு விட்டான். (யாத் 9:21)

கர்த்தர் மோசேயை நோக்கி: கல்மழை பெய்ய உன் கையை வானத்துக்கு நேராக நீட்டு என்றார். (யாத் 9:22)

அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது கர்த்தர; இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்பினார்; அக்கினி தரையின் மேல் வேகமாய் ஓடிற்று. எகிப்து தேசத்தின் மேல் கர்த்தர் கல்மழையைப் பெய்யப் பண்ணினார். (யாத் 9:23)

கல்மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாய் இருந்தது. எகிப்து தேசம் குடியேற்றப்பட்ட நாள் முதல் அதில் அப்படி ஒருபோதும் உண்டானதில்லை. (யாத் 9:24)

எகிப்து தேசமெங்கும் மனிதரையும் மிருக ஜீவன்களையும் வெளியிலே இருந்தவைகள் எவைகளோ

**அவைகள் எல்லாவற்றையும் அந்த கல்மழை அழித்துப் போட்டது. அது வெளியின் பயிர் வகைகளை எல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப் போட்டது. [யாத் 9:25]**

**இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலே மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.** (யாத் 9:26)

**அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நான் இந்த முறை பாவம் செய்தேன், கர்த்தர் நீதியுள்ளவர். நானும் என் ஜனமும் துன்மார்க்கர். [யாத் 9:27]**

இதிலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது? யார் தேவன் என்று உங்களுக்குப் புரிந்திருக்கும். தேவர்களை ஆராதித்த பார்வோனே கர்த்தருக்கு விரோதமாக நான் பாவம் செய்தேன். நானும் என் ஜனமும் துன்மார்க்கர் என்று பதறுகிறான்.

அதற்குப் பிறகு பார்வோன் நான் உங்களை போக விடுவேன் என்று மோசேயிடம் வாக்குறுதி அளிக்கிறான்.

அதற்கு மோசே சொல்கிறான் என் கைகளை கர்த்தருக்கு நேராக விரிப்பேன். அப்பொழுது இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை நின்று போகும். அதனால் பூமி கர்த்தருடையது என்பதை நீர் அறிவீர். (யாத் 9:28-29)

**ஆகிலும் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னும் தேவனாகிய கர்த்தருக்கு பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன் என்றான். [யாத் 9:30]**

உடனே சணலும் வாற்கோதுமையும் அழிக்கப்பட்டது. கோதுமையும் கம்பும் கதிர் விடாதிருந்ததால் அவை அழிக்கப் படவில்லை. கல்மழை நின்றுபோனதை பார்வோன் கண்டபோது அவனும் அவன் ஊழிக்காரரும் பின்னும் பாவம் செய்து தங்கள் இருதயத்தைக் கடினப் படுத்தினார்கள். மறுபடியும் இஸ்ரவேல் ஜனங்களை பார்வோன் போகவிட வில்லை.

மறுபடியும் மோசே நீ என் ஜனங்களை போகவிடமாட்டேன் என்பாயாகில் நான் நாளை உன் எல்கைகளுக்குள்ளே வெட்டுக் கிளிகளை வரப்பண்ணுவேன். அது துளிரவிடுகிற செடிகளையெல்லாம் தின்றுபோடும்.

**உன் வீடுகளும் உன் ஊழியக்காரரின் வீடுகளும் எகிப்தியரின் வீடுகளும் எல்லாம் அவைகளால் நிரம்பும். உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக்களும் தாங்கள் பூமியில் தோன்றின நாள் முதல் இந்நாள் வரைக்கும் அப்படிப்பட்ட வைகளை [வெட்டுக்கிளிகளை] கண்டதில்லை என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று சொன்னான். [யாத் 10:6]**

**அதற்கு பதிலாக மோசே எங்கள் இளைஞரோடும் எங்கள் முதியோரோடும் எங்கள் குமாரரோடும் எங்கள் குமாரத்திகளோடும் எங்கள் ஆடுகளையும் எங்கள் மாடுகளையும் கூட்டிக் கொண்டு போவோம். நாங்கள் கர்த்தருக்கு பண்டிகை கொண்டாட வேண்டும் என்றான். [யாத் 10:9]**

**அதன்பிறகு பார்வோன் ஜனங்களை போகவிடத் தீர்மானித்தான். ஆனாலும் கர்த்தருக்கு ஆராதனை செய்ய புருஷர்கள் மட்டும் தான் போக வேண்டும் என்று சொன்னான்.**

**அப்பொழுது கர்த்தர் கல்மழையினால் அழியாத பூமியின் பயிர்வகைகளையெல்லாம் பட்சிக்கும் படிக்கு எகிப்து தேசத்தின் மேல் உன் கையை நீட்டு என்றார். [யாத் 10:12]**



**மோசே தன் கோலை நீட்டினான். அப்பொழுது கர்த்தர்: அன்று பகல் முழுவதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றை தேசத்தின் மேல் வீசப்பண்ணினார். விடியற்காலத்திலே கீழ்க்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டு வந்தது. [யாத் 10:13]**

**அவைகள் [வெட்டுக்கிளிகள்] பூமியின் முகம் முழுவதையும் மூடிற்று. [யாத் 10:15]**

**உடனே பார்வோன் பயந்து மோசேயையும் ஆரோனையும் தீவிரமாய் அழைப்பித்து உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவஞ்செய்தேன். [யாத் 10:16]**

**இந்த ஒரு முறை மாத்திரம் நீ என் பாவத்தை மன்னிக்க வேண்டும். உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்த சாவை மாத்திரம் என்னை விட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள் என்றான். [யாத் 10:17]**

**அப்பொழுது கர்த்தர் : மகாபலத்த மேல்காற்றை வீசும்படி செய்தார். அது வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டு செங்கடலில் போட்டது. [யாத் 10:19]**

**மறுபடியும் பார்வோனின் இருதயம் கடினமானது. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: தடவிக் கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்து தேசத்தின் மேல் உண்டாகும் படிக்கு உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார். எகிப்து தேசமெங்கும் மூன்று நாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று. [யாத் 10: 21,22]**

**மூன்று நாள் மட்டும் ஒருவரையொருவர் காணவுமில்லை, ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்திருக்கவுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களில் வெளிச்சம் இருந்தது. [யாத் 10:23]**

## தீர்க்கத்தரிசனம்

எகிப்து தேசத்தில் ஏற்பட்ட காரிருள் இந்திய தேசத்தை மூடும். நான் இதை ஏன் சொல்லி வருகிறேன் என்றால் எகிப்து தேசத்தில் ஏற்பட்ட சகல அழிவுகளும் இந்திய தேசத்தில் உண்டாகும்.

பார்வோனிடத்தில் எப்படி தேவன் யார் என்று காண்பித்தாரோ அதற்கு ஒப்பான அழிவிகளை கர்த்தர் அனுப்பி இந்திய தேசத்தில் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினது நம் தேவன் தான் என்று புறஜாதி அறியத்தக்கதாய் கெம்பீரமான அழிவுகள் உண்டாகும், உண்டாக்குவார்.

**ஆகவே இருளில் சிக்கின பார்வோன் நீங்கள் போய் கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகள் மாத்திரம் நிறுத்தப்பட வேண்டும் என்றான் [கொண்டுபோகக் கூடாது]. [யாத் 10:24]**

**25, 26 வது வசனத்தின்படி நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு படைக்கும் பலிகளையும் சர்வாங்க தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்க வேண்டும். எங்கள் மிருக ஜீவன்களும் எங்களோடு கூட வர வேண்டும் என்றான்.**

**பார்வோன் ஜனங்களை போகவிட மனதில்லாதிருந்தான். பார்வோன் மோசேயை நோக்கி: என்னைவிட்டு அப்பாலே போ, இனி என் முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு. நீ இனி என் முகத்தை காணும் நாளில் சாவாய் என்றான். [யாத் 10:28]**

**அப்பொழுது மோசே நீர் சொன்னது சரி. இனி நான் உமது முகத்தைக் காண்பதில்லை என்றான். (யாத் 10:29)**

**கர்த்தர் மோசேயை நோக்கி: இன்னும் ஒரு வாதையை பார்வோன் மேலும் எகிப்தின் மேலும் வரப்பண்ணுவேன்; அப்பொழுது சமூலமாய் உங்களை போகவிடுவதுமல்லாமல் உங்களை இவ்விடத்தை விட்டு துரத்தியும் விடுவான். (யாத் 11:1)**

**இப்பொழுது ஒவ்வொருவனும் அவனவன் அயலானிடத்திலும் ஒவ்வொருத்தியும் அவளவள் அயலாளிடத்திலும் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும் கேட்கும்படி ஜனங்களுக்கு சொல் என்றார். (யாத் 11:2)**

**அப்படியே கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்தார். (யாத் 11:3)**

**அப்பொழுது மோசே : கர்த்தர் நடுராத்திரியிலே நான் எகிப்தின் மத்தியில் புறப்பட்டுப் போவேன். (யாத் 11:4)**

**அப்பொழுது சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் இயந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத்தும் மிருக ஜீவன்களின் தலையீற்று அனைத்தும் சாகும் என்று உரைக்கிறார் என்று சொல் என்றார். (யாத் 11:5)**

**ஆனாலும் கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணும் வித்தியாசத்தை அறியும் படிக்கு இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதர் முதல் மிருக ஜீவன்கள் வரைக்கும் தன் நாவை அசைப்பதில்லை. (யாத் 11:7)**

**நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவல்கிடங்கில் இருக்கும் சிறைபட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறனைத்தையும் மிருக ஜீவன்களின் தலையீற்று அனைத்தையும் கர்த்தர் அழித்தார். (யாத் 11:29)**

**மகாகூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று. சாவில்லாத ஒரு வீடுமு; இருந்ததில்லை. (யாத் 11:30)**

## தீர்க்கத்தரிசனம்

இந்த அழிவுக்கொப்பான அழிவு இனி நம்முடைய தேசத்திலும் கேட்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். மெய்யாய் மனந்திருந்தி பாவமன்னிப்பை பெற்று வாழ்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் காப்பார். மற்றவர்களை கர்த்தர் விட்டு விடுவார்.

**உடனே பார்வோன் கர்த்தரின் செய்கையைக் கண்டு நடுங்கி நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடுமாடுகளையும் ஒட்டிக் கொண்டு போங்கள். என்னையும் ஆசீர்வதியுங்கள் என்றான். (யாத் 11:32)**

பிரியமானவர்களே நீங்களும் அறிந்தோஅறியாமலோ பார்வோனைப் போல் தேவர்களை ஆராதித்திருந்தால் பார்வோனே என்னையும் ஆசீர்வதியுங்கள் என்று கெஞ்சினது போல ஆசீர்வாதம் வேண்டும் என்று சொன்னால் நீங்கள் மெய்யான தேவனைத் தேடித்தான் ஆக வேண்டும்.

மோசே சொல்லியிருந்த படி **இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில்**



**வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள். (யாத் 12:35)**

**கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள். (யாத் 12:36)**

இவ்விதமாய் அவர்கள் எகிப்தியர்களைக் கொள்ளையிட்டார்கள்.

430 வருடம் முடிந்த அன்றைய தினமே கர்த்தருடைய சேனைகள் அனைத்தும் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது.

## கர்த்தரின் கட்டளை

கர்த்தர் மோசேயை நோக்கிச் சொன்னார்

**இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப் படுத்து. அது என்னுடையது என்றார். (யாத் 13:2)**

ஆனால் இன்று இந்த வசனத்தை பின்பற்றாத சகல கிறிஸ்தவர்களுடைய குடும்பங்களிலும், சகல தொழில் ஸ்தாபனங்களிலும் கடன் என்ற சாபம் இருந்து கொண்டே இருக்கும்.

**உங்கள் நிலத்தில் முதல் முதல் விளைந்த முதற்பலத்தை உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்துக்குக் கொண்டு வாருங்கள். (யாத் 34:26)**

இந்த வசனத்தை பின்பற்றாதவர்களுக்கும் குடும்பத்தில் சமாதானம் இழக்க வேண்டியது நேரிடும்.

மறுபடியும் கர்த்தர் சொல்லுகிறார்

**உங்களுக்கு உண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கை கொண்டு வந்து செலுத்துங்கள். (யாத் 35:5)**

மறுபடியும் கர்த்தர் சொல்லுகிறார்

**உன் தானியத்திலும் உன் திராட்ச ரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் நீ நேர்ந்து கொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும் உன் உற்சாகக் காணிக்கைகளையும் உன் கை ஏரெடுத்துப் படைக்கும் படைப்புகளையும் நீ உன் வாசல்களில் புசிக்க வேண்டாம். (உபா 12:17)**

**இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன். (உபா 27:26)**

ஆகவே உங்களுக்கு உண்டாகிற யாவற்றிலும் தசமபாகத்தை கர்த்தருக்கென்றே செலுத்துங்கள். ஏனெனில் நீங்கள் ஆசீர்வதிக்கப்படவே கர்த்தர் வைத்திருக்கிற பிரமாணம் இதுவே.

**மறுபடியும் கர்த்தர் சொல்லுகிறார் சகலவித முதற்கனிகளிலெல்லாம் முந்தின பலனும் நீங்கள் காணிக்கையாய் செலுத்தும் எவ்விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக. உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும் படிக்கு முதற்பாகத்தை ஆசாரியனுக்குக் கொடுக்கக் கடவீர்கள். (எசேக் 44:30)**

நீதிமொழிகள் சொல்லுகிறது

**உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு. (நீதி 3:9)**

**அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். (நீதி 3:10)**

மறுபடியும் 2-ம் அதிகாரம் 30-ம் வசனம் சொல்கிறது

என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்.

இதுதான் கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கிற கட்டளைகள். இதை பின்பற்றுகிறவர்களுக்கு ஒரு குறையும் இராது என்று தான் வேதம் சொல்லுகிறது.

பிரசங்கி 8:5-ல் சொல்லுகிறார்

**கற்பனையை கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான்.**

**யாக்கோபு 2:10 சொல்லுகிறது**

**ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.**

புதிய ஏற்பாட்டில் இயேசு சொல்லுகிறார்

இயேசு குஷ்டரோகியை குணமாக்கிவிட்டு சொல்லுகிறார் உன்னை ஆசாரியனுக்கு காண்பித்து நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டபடியே அவர்களுக்கு சாட்சியாக பலி செலுத்து என்று கட்டளையிட்டார். (லூக்கா 5:16)

இயேசு மறுபடியும் சொல்லுகிறார்

**இயேசு காணிக்கை பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து ஜனங்கள் காணிக்கை பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஐசுவரியவான்கள் அனேகர் அதிகமாய் போட்டார்கள். (மாற் 12:41)**

**ஏழையான ஒரு விதவையும் வந்து ஒரு துட்டுக்கு சரியான இரண்டு காசைப் போட்டாள். (மாற் 12:42)**

**அப்பொழுது இயேசு, காணிக்கை பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மாற் 12:43)**

ஏனெனில் அடுத்த வேளை சாப்பாடுக்கு இல்லை என்று தெரிந்தும் தனக்கு இருந்ததை எல்லாவற்றையும் கர்த்தருக்கென்றே கொடுத்து கர்த்தரைக் கனப்படுத்தினாள்.

ஆகவே காணிக்கை கர்த்தருக்கென்றே கொடுத்தால் நீங்கள் ஆசீர்வதிக்கப் படுவீர்கள் என்று தான் இந்த வசனங்கள் போதிக்கிறது.

**இன்னும் இயேசு சொல்லுகிறார் கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்; அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். (லூக் 6:38)**

நீங்கள் எப்படி கொடுக்கிறீர்கள் என்று சிந்தித்துக் பாருங்கள். நீங்கள் கடனாளியாயிருப்பதன் அர்த்தம் உங்களுக்குப் புரியும்.

அப்போஸ்தலர் 20:35 சொல்கிறது

பலவீனரைத் தாங்கவும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

ஆகவே கொடுப்பது தான் பாக்கியம் என்பது தான் பிரமாணம்.

# சாறிபாத் விதவை



1 ராஜாக்கள் 17: 10-14 வரையுள்ள வசனங்கள் தெளிவு படுத்துகிறது எலியா பசியோடு சாறிபாத் விதவையிடம் வந்து தண்ணியும் அப்பமும் கேட்கிறாள்.

அதற்கு அவள் ஒரு பிடி மாவும் கொஞ்சம் எண்ணெயுமல்லாமல் என்னிடத்தில் வேறு இல்லை. நானும் என் குமாரனும் சாப்பிட்டு செத்துப் போக விறகு பொறுக்கிக் கொண்டிருக்கிறேன்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் பசியினால் அடுத்த வேளைக்கு சாப்பிட வழியல்லாமல் தற்கொலைக்கு ஆயத்தமாயிருக்கிற விதவை ஸ்திரீயிடத்தில் தன் பசிக்கு அப்பம் கேட்கிறான் எலியா.

ஏன் கேட்கிறான்? இவள் ஆசீர்வதிக்கப் பட வேண்டும் என்பது கர்த்தரின் சித்தம். ஆனாலும் பிரமாணத்தின் படி இவள் முதலிலே கொடுக்க வேண்டும்.ஃ

இவள் கொடுத்தால் தான் ஆசீர்வதிக்கப் படுவாள் என்று எலியாவுக்கு தெரியும்.

இவள் ஆசீர்வதிக்கப் பட வேண்டிதான் கேரீத் ஆற்றண்டையில் ஒளிந்து கொண்டிருந்த எலியாவை கர்த்தர் பசியேளாடு இவள் முன் கொண்டு வந்து சேர்த்தார்.

உனக்கு சாப்பிட அடை இல்லை நானும் என் குமாரனும் சாப்பிட்டு சாகப் போகிறோம் என்று சொன்னவளிடத்தில் எலியா சொல்லுகிறான்

பயப்படாதே, நீ போய் உன் வார்த்தையின் படி ஆயத்துப் படுத்து. (அப்படியானால் தற்கொலை செய்ய தயாராகிக் கொள். ஆனால் நீ சாகிறதுக்கு முன்பாக) ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா. பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் .

அப்படியானானல் கர்த்தருக்கு நீ கொடுத்தால் நீ சாகப் போவதில்லை என்று எலியா அறிந்திருந்த படியினால் கர்த்;தரின் சார்பில் எலியா அடையை கேட்டுப் (வற்புறுத்தி புடுங்கி வாங்கினான்) பெற்றுக் கொண்டான்.

14-ம் வசனத்தில் எலியா தீர்க்கத்தரிசனம் உரைக்கிறார்

**உன் பானையின் மா செலவழிந்து போவதுமில்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்து போவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.**

15-ம் வசனத்தின் படி எலியாவின் சொற்படி செய்தாள்.

**அவளும் இவனும் அவள் வீட்டாரும் அனேக நாள் சாப்பிட்டார்கள்.**

**கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவுமில்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. (1 ராஜா 17:16)**

பிரியமானவர்களே நீங்கள் பிரமாணங்களை கைக்கொள்ளாததினால் தான் கர்த்தரின் காணிக்கைகளை நீங்கள் வஞ்சிக்கிறதினால் தான் உங்கள் வீடுகளில் வறுமையும் கொள்ளை வியாதியும் சமாதானக் கேடுகளும்.

**மந்திரவாதிக்கு கொடுப்பீர்கள், மருத்துவருக்கு கொடுப்பீர்கள், ஏழைக்கு 10ரூபாய் பிச்சை கொடுக்க யோசிப்பீர்கள். வட்டிக்கு எடுத்து ஊதாரித்தனமாய் வாழ்வீர்கள். வட்டிக்கு எடுத்து விபச்சாரம் செய்வீர்கள், மதுபானத்துக்கு செலவு செய்வீர்கள்.**

ஆனால் கர்த்தருக்கு கொடுக்க ஏன் கொடுக்கணும்? எதற்கு கொடுக்கணும்? நான் கொடுத்தால் ஊழியக்காரன் கொழுத்து போவான் என்று விதண்டாவாதம் பேசுவாய்.

கர்த்தரின் ஊழியக்காரர்களை திட்டித் திட்டித் தீர்ப்பாய்.

பைபிளின் துவக்கம் முதல் முடிவு வரைக்கும் கர்த்தருக்கு கொடு என்று தான் சொல்லுகிறது. ஆதலால் கொடுக்காதவன் எதையும் பெற்றுக் கொள்ள முடியாது.

## 40 ஒட்டகத்தில் காணிக்கை

**வியாதி நீங்கி பிழைப்பேனோ பிழைக்க மாட்டேனோ என்று தெரிந்து கொள்ள ஒரு ராஜா தீர்க்கத்தரிசிக்கு 40 ஒட்டகங்களில் காணிக்கை எடுத்துக் கொண்டுச் செல்கிறான். ( 2 ராஜா 8:9)**

**நாகமான் எலிசாவிடம் வரும்போது தன் கையிலே 10 தாலந்து வெள்ளியையும் ஆறாயிரம் சேக்கல் நிறை பொன்னையும் பத்து மாற்று வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டுப் போனான். ( 2 ராஜா 5:5)**

இப்படிப்பட்ட பிரமாணங்களை கர்த்தர் மோசே மூலம் கொடுத்து செங்கடல் வழியாய் மகாபெரிய அற்புதத்தையும் மகா பெரிய சங்காரத்தையும் செய்து கானான் தேசத்திற்கு தேவன் ஜனங்களை நடத்தி வந்திருக்கிறார் என்பதனை வசனம் யாத்திராகமம் 14:12-22 என்ன அதிசயம் பாருங்கள்.

செங்கடலில் ஜலமே அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவருக்கு ஜலம் கீழ்ப்படிந்தது. இதிலிருந்து மெய்யான தேவன் நம்ம தேவன் என்று தெளிவாய் தீர்க்கமாய் வெளிப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஜலம் விலகி மதிலாக நின்றது இவர்கள் கடந்து போக. அதே வேளையில் பார்வோன் ரதங்களையும், குதிரை வீரர்களையும் அவர்கள் பின்னால் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய ராணுவம் அனைத்தையும் மூடிக் கொண்டது. அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை.

இவ்விதமாய் தேவர்களின் ஜனங்களாகிய எகிப்தியரை கர்த்தர் அழித்து இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் தப்புவித்து இரட்சித்தார். எகிப்தியர்கள் கடற்கரையிலே செத்துக் கிடந்ததை இஸ்ரவேலர் கண்டார்கள்.

இவ்விதமாய் கர்த்தர் வெளிப்பட்டு வாக்களித்த இஸ்ரவேல் ஜனங்களைக் காத்தார். காக்கும் தெய்வம் உனக்கு வேண்டுமா? காக்காத உன் தெய்வங்கள் வேண்டுமா? தெய்வங்களை உண்டாக்கின தேவன் உனக்கு வேண்டுமா?

நாங்கள் மெய்யான தேவனை ஆராதிக்கிறோம், மெய்யான தேவனைத் தேடுகிறோம். எங்களுக்கு தடைகளை ஏற்படுத்தினால் எகிப்தின் கதி இந்த தேசத்திற்கு உண்டாகும் என்று தேவன் எச்சரிக்கிறார்.

**கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன்; நித்திய ராஜா. அவருடைய கோபத்தினால் பூமி அதிரும் அவருடைய உக்கிரகத்தை ஜாதிகள் சகிக்க மாட்டார்கள். (எரே 10:10)**

**வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள் பூமியிலும் இந்த வானத்தின் கீழும் இராதபடிக்கு அழிந்து போகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள். (எரே 10:11)** இதன்படி நடக்ககும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



# 18 வருடங்களாக பிசாசின் பிடியிலிருந்து அற்புதமாய் விடுதலை கொடுத்து கர்த்தர் சுகம் தந்தார்

எனது பெயர் மரியா, எனது கணவர் பெயர் சேகர். நாங்கள் தலங்கை என்கிற கிராமத்தில் வசித்து வருகிறோம். எங்களுக்கு திருமணமாகி 10 வருடங்களாக குழந்தையில்லாமல் இருந்து பத்து வருடங்களுக்கு பிறகு ஒரு மகன் பிறந்தான்.

நாங்கள் விவசாய கூலி வேலை செய்து வருகிறோம். ஒரு நாள் திடீரென்று என் கணவருக்கு உடல் நலம் சரியில்லாமல் மருத்துவ மனையில் சேர்த்தோம். அப்பொழுது மருத்துவர்கள் இவருக்கு உடலில் எந்த வியாதியும் இல்லை என்று கூறி விட்டார்கள்.

அப்பொழுது அங்குள்ள ஒரு ஊழியக்காரரிடம் அழைத்துச் சென்று ஜெபித்தோம். ஊழியக்காரர்கள் நீங்கள் விசுவாசத்தோடு ஜெபியுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

முக்கியமாக என் கணவர் ஒரு இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நானோ கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து திருமணமாகி இங்கு வந்தேன். ஆகையால் விசுவாசத்தோடு வைராக்கியமாக என் ஆண்டவர் சுகம் தருவார் என்று ஜெபித்து வந்தேன்.

ஆனாலும் என் கணவரின் உடன் பிறந்தவர்கள் விக்கிரக ஆராதனை செய்தால் சுகம் ஆகும் என்று கூறினார்கள். ஆகையால் என் கணவரின் உடல் நலத்திற்காக இயேசப்பாவுக்கு விரோதமாக விக்கிரக ஆராதனை செய்தேன். எல்லாரும் எங்களை கைவிட்டார்கள். அவருடைய சரீரத்தில் அசுத்த ஆவி பேசுவதைப்போல எப்பொழுதும் பேசிக் கொண்டும் அழுது கொண்டும் தூங்காமல் இருப்பார். ஏன் அழுகிறாய் என்றுக் கேட்டால் நான் யார் தெரியுமா? நான் பேய் நான் மோடி வித்தை காட்டுகிற மோகனா என்று சொல்லுவார். இதனால் வீட்டில் நிம்மதி இல்லை. இன்னும் சிலர் இது மனநோய் என்று கூறினார்கள்.

ஆகையால் வேலூர் பாகாயம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காண்பித்து 2 1/2 வருடங்களாக மாத்திரை வாங்கி கொடுத்தோம். ஆனாலும் ஒரு மாற்றமும் இல்லை. இப்படி இருக்கும் பொழுது குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருந்தோம்.

அப்பொழுது தான் தற்செயலாக டி.வி-யில் ஜீவஒளி சேனலில் ஒளிபரப்பாகும் ஜெபத்தைப் பார்த்தோம். அதிலிருந்த ஜெப உதவிக்கு இருந்த போன் நம்பர் பார்த்து போன் செய்தேன். அப்பொழுது ஊழியக்காரர் பேசினார். என் கணவருக்காக ஜெபியுங்கள் என்று கேட்டேன். ஜெபித்துவிட்டு அவர் உங்கள் கணவர் பெயரில் பொருத்தனை செய்யுங்கள் என்று கூறி சங்கீதம் 50:14,15 வசனங்கள் வாசியுங்கள் என்று சொன்னார். நானும் வாசித்தேன். வாசித்து விசுவாசத்தோடு பொருத்தனை பண்ணினேன். அதன்படி ஆண்டவர் என் கணவருக்கு அற்புத சுகம் தந்தார்.

பிறகு ஒரு நாள் போன் செய்தேன். எண்ணெய் ஜெபித்துக் கொடுத்தார். என் கணவர் சுகமாக இருக்கிறார். இப்போது மாத்திரை சாப்பிடுவதில்லை. அதிகாலையில் 5 மணிக்கு எழும்பி எங்களோடு ஜெபத்தில் உட்காருகிறார். பொருத்தனை செய்வதாக கூறிய பொருத்தனையை கர்த்தருக்கு நிறைவேற்றினோம். இப்படி என் கணவருக்கு சுகத்தையும் என் குடும்பத்துக்கு சமாதானத்தையும் தந்த கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். சேகர்/ மரியா

## சில வருடங்களாக தூங்காமல் இருந்த எனக்கு தூக்கத்தை தந்த கர்த்தர், இரண்டு வருடங்களாய் இருந்த மாதவிடாய் பிரச்சனையிலிருந்து விடுதலை.

எனக்க்கு இரண்டு வருடங்களுக்கு மேலாக இரவு தூக்கம் வராது. தூக்கம் வருகிற நேரத்தில் கெட்ட சொப்பனம் வரும். பிறகு ஏப்பம், பரானம், நெஞ்சுவலி இருக்கும். ஊழியக்காரர் எனக்காக ஜெபித்த பின் நான் நன்றாக தூங்குகிறேன்.

எனக்கு மாதவிடாய் பிரச்சனை 2 வருடங்களாக இருந்தது. அந்த நேரத்தில் தலை சுற்றுதல், வாந்தி, ஒற்றைத் தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி, அதிகமான இரத்தப் போக்கு இருக்கும். இந்த சமயத்தில் மருத்துவமனைக்குப் போய் குளுக்கோஸ் ட்டிறிப், மெடிசின் ஏற்றிய பிறகு தான் நார்மல் ஆகும்.

இந்த உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த பிறகு எனக்கு முழு விடுதலை கிடைத்தது. என்னுடைய அப்பாவுக்க இந்த ஆராதனையில் கலந்து கொண்ட பிறகு நல்ல சுகமும், பெலனும், சமாதானமும் கிடைத்திருக்கிறது.

என்னுடைய சகோதரி வீட்டில் மாமியார் சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டுப் போனார்கள். அந்த நேரத்தில் ஜெபிப்பதற்கு உங்களிடம் கேட்டுக் கொண்டேன்.

நீங்கள் ஜெபித்த பிறகு அவளுடைய மாமியார் இரண்டு அண்ணிகள், இரண்டு அத்தான்கள் யாருமே என்னுடைய சகோதரியிடம் இதைப்பற்றி எதையும் கேட்கவே இல்லை. பிரச்சனை முடிந்தது. ஜெபித்த உங்களுக்கு நன்றி. அற்புதங்கள் அதிசயங்கள் செய்த இயேசப்பாவுக்கு கோடி கோடி நன்றிகள்.

## கழுத்து வலியும் முதுகு வலியும் ஒரே வினாடியில் மாறிய அதிசயம்



எனது பெயர் சுசீலா. எனது ஊர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்க்குளம். நான் ஆசிரியராக இருக்கிறேன். எனக்கு தீராத கழுத்து வலியும் முதுகு வலியுமாக இருந்தது. தேவ சமூகத்தில் அழுது கொண்டிருந்தேன். ஆனால் இப்படியொரு வலி இருப்பதை இந்நாள்வரைக்கும் ஊழியக்காரரிடம் சொல்லி ஜெபிக்கச் சொல்லவில்லை.

ஆனால் கர்த்தர் என் வலியை அறிந்திருக்கிறார். ஊழியக்காரருடைய ஜெப வேளையில் ஊழியக்காரர் ஜெபிக்கும்போது இங்கிருக்கிற ஒரு நபருக்கு தீராத கழுத்து வலியும் தீராத முதுகு வலியும் இப்பொழுதே கர்த்தர் சொஸ்தமாக்குகிறார் என்றார். அப்பொழுதே என் வலி என்னை விட்டு மாறியது இப்பொழுது ஒரு மாதம் வரைக்கும் ஆகிறது. இன்று வரைக்கும் எனக்கு அந்த வலி இல்லை. கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

**சுசீலா, கீழ்க்குளம்.**

## 84 வயதில் அற்புதம் செய்த தேவன்



எனக்கு வயது 84. என் குடும்பத்தில் நிந்தைகளும் பாடுகளும் இருந்தன. என்னுடைய இரண்டு மகன்களும் இறந்து விட்டனர். கடன்பாரம் உண்டு. நான் வட்டிக்கு 72 லட்சம் ரூபாய் கொடுத்து திரும்ப கிடைக்கவில்லை. ஆனாலும் பஞ்சாயத்து பண்ணி கொஞ்சம் பணம் கிடைத்தது. இன்னும் 22 லட்சம் கிடைக்க வேண்டும்.

என் குடும்பத்தில் ஒருவருக்கு கேன்சரும் இன்னொருவருக்கு முதுகில் கட்டியும் இருக்கிறது. என் கணவருக்கு 102 வயது ஆகிறது. படுத்த படுக்கையாயிருக்கிறார். சாப்பிட்டாலோ தண்ணீர் குடித்தாலோ நெஞ்செரிப்பு உண்டாகும். எனக்கு கை கால் விறையல் உண்டு. என் தேவாதி தேவன் வெறும் பச்சை தண்ணீர் குடித்து என் கணவனை உயிர் வாழச் செய்திருக்கிறார். என் தேவன் எத்தனையோ அற்புதம் செய்து எனக்கு சமாதானத்தை தந்தார். இன்று கூட சாட்சி சொல்வதற்காக கணவருக்கு பேம்பஸ் எல்லாம் வைத்துவிட்டு வந்தேன். இந்த ஜீவஒளி ஜெபக்கோபுர புத்தகத்தை வாசிக்க வாசிக்க மனமகிழ்ச்சியும் சமாதானமும் எனக்குள் வந்தது. பல முறை ஊழியக்காரரை பார்க்க ஜெபகோபுரத்திற்கு வந்தேன். ஆனால் பார்க்க முடியவில்லை. ஆனாலும் ஊழியக்காரரிடம் போனில் பேசி ஜெபித்தேன். எனக்கு எல்லா விடுதலையும் தேவன் தந்தார், எல்லா வேளைகளிலும் ஜெபிக்க தேவன் கிருபை செய்தள்ளார். இந்த இடத்தில் சாட்சியாய் நிறுத்தின தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

# 18 வருட பைத்தியத்திலிருந்து விடுதலை! ஒரே பொருத்தனை! ஒரே வினாடியில் விடுதலை!



எனது பெயர் மரியாள், எனது கணவர் பெயர் சேகர். எனது கணவருக்கு ஒரு சத்ரு கிரியை செய்து கொண்டிருந்தது. தனக்குத்தானே பேசுவார், தனக்குத் தானே சண்டை போடுவார். ஊரெல்லாம் சேகருக்கு பைத்தியம் பிடித்தது என்று கேவலமாகப் பேசுவார்கள். பாகாய்-ல் 3 வருடம் பைத்தியத்திற்கு 3 வருடம் மருந்து எடுத்தோம். நோய் குறைந்து போகவில்லை! ஊர் எல்லாம் அவமான சின்னங்களாய் அலைந்து திரிந்தோம்.

எனது மாமியார் குடும்பம் இந்து குடும்பம். நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவள். மாமியார் குடும்பம் குலதெய்வத்தை கும்பிட்டார்கள். அவர்கள் சொல்வார்கள் நீ கிறிஸ்தவ மதத்தை பின்பற்றினதினால் தான் உன் புருஷனுக்கு இப்படி ஆகி விட்டது என்று எங்களை ஏசி திட்டினார்கள்.

நான் என் இயேசு அப்பாவை விட்டு பின்வாங்கி குலதெய்வங்களைக் கும்பிட்டேன். தேவனுக்கு பிரியமில்லாத செயல்களை எல்லாம் செய்தேன். எனது புருஷனுக்கு எதுவும் நடக்கவில்லை. கண்ணீர் விட்டேன்.; எனக்கொரு வழியை காட்டும் என்று இயேசப்பாவிடம் மறுபடியும் மன்னிப்பு கேட்டு அழுதேன்.

என் கணவருக்கு கொடுக்கப்பட்ட பைத்திய மருந்தினால் எந்த பயனும் இல்லை! தூங்கவேமாட்டார்! குழந்தையைப் போல் அழுவார்! தூக்க மாத்திரை போட்டாலும் தூக்கமே வராது. 18 வருடமாக உபத்திரவப் பட்டோம். இயேசப்பா எனக்கு ஒரு வழியைக் காட்டும் என்று கதறினபோது ஏதேச்சையாக ஜீவஒளி டி.வி-யைப் பார்த்தேன். உடனே ஜேப்பியார் ஐயாவிடம் பேசினேன். அவர் அட்றஸ் அனுப்பச் சொல்லி சங்கீதம் 50:14, 15 வசனத்தைச் சொல்லி புருஷன் பெயரில் பொருத்தனை செலுத்தினேன். 1000 புக் பிரின்ட் போட பொருத்தனையை நிறைவேற்றினேன். அந்த மாத்திரத்திலே என் புருஷன் சொஸ்தமானார். 18 வருட உபத்திரவத்தை கர்த்தர் மாற்றினார்! என் தேவனுக்கு முன்பாக இந்த சாட்சியைச் சொல்கிறேன். நாங்கள் இப்போது சந்தோஷமாக இருக்கிறோம். இயேசப்பாவுக்கு நன்றி!

**மரியாள் சேகர், வேலூர்.**



# பிளட் கேன்சர் வியாதியிலிருந்து விடுதலை



எனது பெயர் கவிதா. மகன் தெர்ஷோம். எனது மகனுக்கு 6 வயது. இவனுக்கு கேன்சர். பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று கடைசியில் வெல்லூர் சி.எம்சி-யிலும் சிகிச்சை பெற்று சொந்த ஊராகிய இரணியலுக்கு வந்தோம். இரவும் பகலும் ஜொரத்தில் அவதிப்படுவான். நாங்கள் இவனைத் தூக்கிக் கொண்டு ஜீவஒளி ஜெபக்கோபுரத்திற்கு வந்தோம்.

அவர் ஜெபித்துவிட்டு கேன்சர் கேன்சல்டு என்றார். ஒரு பாட்டில் எண்ணெய் ஜெபித்து தந்தார். நாங்கள் கேன்சர் கட்டியில் எண்ணெயைப் பூசினோம். கட்டியின் வீக்கம் குறைந்து உடைந்து இல்லாமலே போய் விட்டது. கர்த்தர் என் பிள்ளைக்கு பயங்கர அற்புதத்தை செய்தார். என் மகன் இப்போது நன்றாக இருக்கிறான். கர்த்தரால் கூடாதது ஒன்றும் இல்லை.

# இரத்த புற்று நோய் குணமான அதிசயம்



எனது மகன் ஹென்றி ஜேக்கப். இவன் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு பாண்டிச்சேரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் பல்வேறு மாதங்களாய் சிகிச்சை செய்தும் ஒரு பலனும் இல்லாமல் இருந்தது. தாங்களை ஜெபிக்க டெலிபோனில் கேட்:டுக் கொண்டேன். நீங்களும் ஜெபித்தீர்கள். பாண்டிச்சேரிக்குச் சென்று மகனிடம் சென்று போனை அவன் கையில் கொடுக்கச் சொன்னீர்கள்.

நானும் டிசம்பர் மாதம் என் மகனிடம் சென்று டெலிபோனை டிசம்பர் 15-ம் தேதி இரவு 7 மணிக்கு கொடுத்து ஜெபித்தீர்கள்.

ஜெபித்து முடித்து விட்டு நீங்கள் சொன்னீர்கள் 15 நாட்களுக்குப் பின் மருத்துவ பரிசோதனை செய்து பாருங்கள் என்றீர்கள்.நாங்களும் இந்த தீர்க்கத்தரிசனத்தை நம்பி 31-ம் தேதி மருத்துவ பரிசோதனை செய்து பார்த்தோம். என்னா ஆச்சரியம்! கர்த்தர் நாமத்திற்கு ஸ்தோத்திரம். எல்லா டெஸ்டிலும் அவன் நார்மல் என்று ரிப்போர்ட் சொல்லியது.

இ வ் வி த ம ா ன தீர்க்கத்தரிசனம் உரைத்து என் மகன் சொஸ்தமாவான் என்றுரைத்து அப்படியே என் தேவன் சொஸ்தமாக்கியிருக்கிறார். கர்த்தர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்.